
# திருமந்திர விருந்து

1



திருமந்திரப் பணிமன்றம், கொழும்பு

11-08-2019

# திருமந்திர விருந்து

## 1

**திருமூலர் திருமந்திரம் –**

***எங்களுக்கு எட்டாக் கனியல்ல***
***உள்ளங்கை நெல்லிக்கனி***
***விருந்தாக அருந்துவோம்***
***மருந்தாகி வாழ்வு தரும்.***


*மலர் ஆசிரியர் :*
**கலாபூஷணம் - சைவப்புலவர்**
**சு. செல்லத்துரை**
திருமந்திர ஆர்வலர்


இணுவில் - இளவாலை
திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின்
ஒன்பதாவது ஆண்டு நினைவு


வெளியீடு :
திருமந்திரப் பணிமன்றம் – கொழும்பு
11-08-2019

உ
சிவமயம்

# திருமந்திரப் பணிமன்றக் கீதம்

இராகம் - ஹம்சத்வனி

**பல்லவி**

வாழ்த்தி வணங்கிநாம் போற்றிடுவோம் - ஞான
வள்ளல் திருமூலர் தந்ததிரு மந்திரத்தை - வாழ்த்தி

**அனுபல்லவி**

திருமந்திரப்பணி மன்றத்தினர் நாங்கள்
தேசமெலாம் திரு மந்திரம் செழிக்க வைப்போம் - வாழ்த்தி....

**சரணம்**

சைவம் சிவம் முத்தி சித்தாந்த தத்துவம் என்று
வையத்தில் முதற்சொன்ன மூத்ததமிழ் மந்திரம்
தெய்வத்தை உள்ளத்தின் உள்ளே கண்டின்புறும்
சிவயோக நெறிகாட்டும் தெய்வத்தமிழ் மந்திரம் - வாழ்த்தி....

அமுதான சிவஞானம் அருளும் சிவமந்திரம்
ஆகமப் பொருள்கூறும் அரியதமிழ் மந்திரம்
தவமாகப் பொருளுணர்ந்து தினம் ஓதுவோம் - நல்ல
சாந்தி செழிப்புற சிவ கதிகாணுவோம் - வாழ்த்தி....

**பாடல் : கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை**
**இசை : திரு. வைத்திலிங்கம் கணேசலிங்கம்**

திருமந்திரப்பணிமன்றம் - கொழும்பு
பதிவு இல : HA / 4 / CBO / 179 (04-12-2018)


| | | |
|---|---|---|
| நூல் | : | திருமந்திர விருந்து - 1 மலர் |
| ஆசிரியர் | : | கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை |
| முதற்பதிப்பு | : | 2019-08-11 |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | 134 + XXX |
| வெளியீடு | : | திருமந்திரப் பணிமன்றம் - கொழும்பு |
| அச்சுப் பதிப்பு | : | அம்மா அச்சகம் - இணுவில் |
| ISBN | : | 978-624-5150-00-7 |

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

என்னுள்ளே இருந்தென்னை வாழவைக்கும்
என்துணையே சிவகாமி நீபோயின்று
ஒன்பதாண் டாயிற்றே ஆண்டுதோறும்
உன்நினைவாய் நூலொன்று தருதல்போல

என்சிந்தை கவர்ந்ததிரு மந்திரத்தை
என்னிடத்தில் பயின்றெந்தன் வழிவளரும்
என்னினிய பயிலுநரின் சிந்தனையை
ஒன்றாக்கித் திருமந்திர விருந்துதந்தேன்

என்பணிகள் என்னுடனே நின்றிடாமல்
என்பின்னும் இவர்தொடர வழிசமைத்து
உன்னுடைய இணுவிலூர் மண்ணிலேதான்
உன்னினைவாய்த் தந்தேனின் றுலகுவாழ.



இணுவில் - இளவாலை
திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை
ஒன்பதாவது ஆண்டு நினைவு
1944-03-24 - 2010-07-03


மலர் அனுசரணை :
கணவனும் மைந்தர்களும்
சு. செல்லத்துரை
நாவரசன், மாவிரதன்



**எழில் ஞான பூசை**

"ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்றாம்
ஈனம் இல்லாப் பொருளதனை சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை..........."

(சித்தியார் - 275)



**திருமந்திர ஆர்வலர்**

**சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்**





உ

சிவமயம்

குருபதம்






நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்:- ஸ்ரீலஸ்ரீ சுவாமிதேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீன குரு முதல்வர்:- ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமகா சந்நிதானம்

021 22 22870 ஸ்தாபிதம்: 1966 பருத்தித்துறை வீதி , நல்லூர் , யாழ்ப்பாணம் , இலங்கை




# ஆசியுரை

**நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**

**சிவசிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினைமாளும்**
**சிவசிவ என்றிடத் தேவருமாவர்**
**சிவசிவ என்னச் சிவகதிதானே.** என்பது திருமூலர் திருமந்திரம்.

சிவபெருமானுடைய அருள்பெற்ற சந்தானாசாரியர்களும், சமயாசாரியர்களும் கட்டி வளர்த்த சைவசமயத்தின் காலத்தால் முந்திய தமிழ் ஞானக் களஞ்சியம் திருமந்திரம் ஆகும்.

ஆழமான தத்துவங்களை இலகுவான இனிய தமிழ்ச் சொற்களில் சொல்வது திருமந்திரம் - எனினும் இது ஏனைய திருமுறைகள் போல நம்மவர் மத்தியில் அறியப் படாதிருக்கின்றது.

"சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" என்பது திருமூலர் சுவாமிகளின் மந்திரம். இன்று நம் மத்தியில் பல்வேறு சமய தத்துவ ஊடுருவலகளால் நம் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும், நமது சமயப் பெயர் சைவசமயம் என்பதையும் பலர் அறியாமல் தடுமாறுகின்றார்கள்.

இவ்வேளையில் திருமந்திரப் பணிமன்றம் தோன்றிப் பல மாணவர்களுக்குத் திருமந்திரத்தைக் கற்பித்தும் திருமந்திரத்தை இனிய இசை உரை ஒலிப்பேழையாக வெளியிட்டும் வருவது காலத்தின் தேவையாகும்.

திருமந்திரத்தைப் படித்தவர்களுக்குத் "திருமந்திரச் செல்வர்" விருது கொடுத்தும், "திருமந்திர விருந்து மலர்" வெளியிட்டும் "திருமந்திரக் கலை விருந்து" அளித்தும் இந்த விழாவை எழுச்சி விழாவாகக் கொண்டாடுவது போற்றத்தக்கது. இந்த நற்பணியில் சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் இதனை முன்னின்று செயற் படுத்தும் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களுக்கும் சிவபெருமானை வேண்டி நல்லாசி கூறுகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்**



# ஆசியுரை

**சித்தாந்தரத்தினம்**
**சிவஸ்ரீ. சி. குமாரராசக் குருக்கள்**

மந்திரமும், தந்திரமும் மருந்துமாகி நிற்பவன் இறைவன். அவ் இறைவனைப் பற்றிய தமிழ் மந்திரமாக ஒன்பது சிவபேத ஆகமங்களின் பிழிவாகத் திருமந்திரம் திகழ்கின்றது. இது மனிதரின் பிறவிப் பயனாகிய ஆன்ம ஈடேற்றம் பற்றிக் கூறுகின்றது. எளிமையான சொற்களால் ஆழமான கருத்துக்களைக் கொண்டு அமைந்துள்ளது. அப்படி இருந்தும் இதன் பரவல் குறிப்பிடப்படும்படியாக இல்லை. சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும் விளங்கும் இதன் கருத்தைப் பலரினதும் மனங்களில் பதிய வைக்கும் நோக்குடன் திருமந்திரப் பணிமன்றம் அதன் பயிலுநர்களால் ஆக்கப்பட்ட கட்டுரைகளை வெளிக்கொணர்தல் மகிழ்ச்சிகரமானதாகும்.

குறிப்பாக இதன் தலைவரும், பயிலுநர்களின் பொறுப்பாசிரியருமான சைவப் புலவர் சு. செல்லத்துரை அவர்களின் வழிகாட்டல் உற்றுநோக்கத்தக்கது. தொடர்ந்தும் திருமந்திரம் கற்க உறுதிபூண்ட பயிலுநர்களைப் பல்வேறு ஊர்களில் இருந்தும் ஒன்று திரட்டி, அவர்களது ஆக்கங்களை வெளிக்கொணரும் இவ் ஆரம்பச் செயற்பாடு சிறப்பானதாகும்.

சைவம் சிவனுடன் சம்பந்தமானதென முதன்முதற் கூறிய திருமூலரின் திருமந்திரம் பற்றிய தெளிவைப் பரவலாக்கல் செய்ய வேண்டியது நம் கடமையாகும். எமது சமயம் பல்வேறு வகைக் கோட்பாடுகளால் குழம்பியுள்ள இக்காலத்தில் அத்தியாவசியமானது சைவமாகும். இவ்வண்ணம் சைவசமயத்தின் உண்மைத் தன்மையை தெளிவுபடுத்தல் சிவத்தொண்டாகும். இத்தொண்டு மென்மேலும் இனிதே தொடர செகராசசேகரப் பிள்ளையாரினதும், நொச்சியோலைக் கந்தனதும் பாதாரவிந்தங்களைப் பணிந்து ஆசி வழங்குகின்றேன்.

## விழாச் சபையினர்





உ
திருச்சிற்றம்பலம்
திருமூலர் திருமந்திரம்
உரையும் இசையும்
ஒலிப்பேழை
முதல் தந்திரம்
திருக்குறள்வேள் வி. வரதராஜன் உரையைத் தழுவியது
உரை : சைவப்புலவர் சு. செல்லத்துரை (தலைவர்)
இசை : திரு. வை. கணேசலிங்கம் (செயலாளர்)
வயலின் : திரு. ச. திபாகரன் (உறுப்பினர்)
மிருதங்கம் : திரு. வை. வேனிலான் (உறுப்பினர்)
நெறியாள்கை : திருமதி கலைமகள் மகேந்திரன் (பொருளாளர்)
அனுசரணை : அமரர் கந்தையா நீலகண்டன் குடும்பத்தினர்
வெளியீடு : திருமந்திரப் பணிமன்றம் - கொழும்பு

திருவாவடுதுறை ஆதீனம் சைவத்திருமுறை சைவசித்தாந்தப் பயிற்சி மையம்
இணுவில் கிளை - பயிலுநர்கள் - 2018



இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை மண்டபம்

திருவாவடுதுறை ஆதீனம் சைவசித்தாந்தப் பயிற்சி மையம்
இணுவில் கிளை - பயிலுநர்கள் - 2018



இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை மண்டபம்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com

T.P No : 021 - 3213151

திகதி:..............................

Fax:- 021 2241909

தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511




# செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை

சைவத் தமிழர்களின் உன்னதமான தத்துவ நூலாக திருமந்திரம் விளங்குகின்றது. திருமுறைகளில் 10ஆம் திருமுறையாக எம்முன்னோர்கள் போற்றிய அரும்பொக்கிசத்தை என்றும் காக்க வேண்டியது எம் தலையாய கடமையாகும். திருமந்திரத்துள் அனைத்தும் அடங்கியுள்ளது. இறைதத்துவம், ஆன்ம தத்துவம், பிரபஞ்ச தத்துவம் அனைத்தையும் அற்புத வார்த்தைகளால் திருமூலர் சுவாமிகள் படைத்தருளியுள்ளார். இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரக்கூடிய உண்மை திருமந்திரத்தில் உரைக்கப்பட்டுள்ளது. மூவாயிரம் பாடல்களால் இவ்வையகத்தை திருமூலர் சுவாமிகள் சிந்திக்க வைத்தார். சித்தர்களின் மகா வாக்கியங்கள் சிந்தித்து உணரப்பட வேண்டியவை திரிகரண சுத்தியோடு இத்தகைய நூல்களைக் கற்றால் தெளிவு பெறலாம். திருமந்திரத்தை விளங்கிக் கொள்வதற்கு புண்ணியம் வேண்டும். மெஞ்ஞான அறிவின் கதவு திறந்தால் அஞ்ஞானம் அகல வழியுண்டு.

ஈழத்தில் இன்று திருமந்திரத்தை அறிவதற்கு அரியதோர் முயற்சி நடைபெற்று வருகிறது. அகவை 80 நிறைந்த, ஆயிரம் பிறை கண்ட சைவப்புலவர், மூதறிஞர் சு. செல்லத்துரை அவர்களின் முயற்சியால் திருமந்திரப் பணிமன்றம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுவது அறிந்து ஆனந்தம் அடைகிறேன். திருமந்திர வகுப்பில் கற்றவர்களும் கற்பித்தவர்களுமாக 47 பேர் படைத்த “திருமந்திர விருந்து” என்னும் தலைப்பிலான இக்கட்டுரை நூல் வெளிவருவது கண்டு பேருவகை கொள்கிறேன்.

இந்த அரிய முயற்சியில் ஈடுபட்ட மூதறிஞர் சு. செல்லத்துரை அவர்களுக்கும் ஏனைய கட்டுரையாளர்களுக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமூலர் சுவாமிகள் திருமந்திரத்தில்

"பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின்றேன்"

எனக் குறிப்பிட்டது போல் எல்லையில்லாச் சிறப்பை எப்படி எடுத்துரைத்து முடிக்க இயலும். திருமந்திரம் கற்றவர்கள் தாம் அறிந்த அற்புதத்தைத் தத்தம் பாணியில் இந்நூலில் தந்துள்ளார்கள். இம்முயற்சி என்றும் தொடர மீண்டும் வாழ்த்தித் துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை

# திருமந்திரப் பணிமன்றம் – கொழும்பு
## நிர்வாகிகள்


காப்பாளர்
உடுவை தில்லைநடராசா


காப்பாளர்
திருமதி சாந்தி நாவுக்கரசன்


காப்பாளர்
திரு. அ. உமாமகேஸ்வரன்


தலைவர்
சைவப்புலவர்
சு. செல்லத்துரை


செயலாளர்
திரு. வை. கணேசலிங்கம்
சங்கீத ஆசிரிய ஆலோசகர்


பொருளாளர்
திருமதி. ம. கலைமகள்
இலங்கை வானொலி
நிகழ்ச்சி தயாரிப்பாளர்


இணைப்பாளர்
சைவப்புலவர்
சா. பொன்னுத்துரை


உபதலைவர்
திரு. வை. வேனிலவன்
மிருதங்க வித்துவான்


உபதலைவர்
திரு. ச. திவாகரன்
வயலின் வித்துவான்


மத்தியகுழு உறுப்பினர்
திருமதி த. ஹம்சானந்தி


மத்தியகுழு உறுப்பினர்
திரு.கா. வைத்தீஸ்வரன்


மத்தியகுழு உறுப்பினர்
திரு. செ. நவநீதகுமார்

## சுகவாழ்க்கைப் பேரவை – இணுவில்
## திருமந்திர ஆசிரியர்களும், திருமந்திரச் செல்வர்களும்



## வெள்ளவத்தை ஓம்கிரியா பாபாஜி யோக ஆரணியத்தின்
## திருமந்திர ஆசிரியர்களும் திருமந்திரச் செல்வர்களும்





# திருமந்திர விருந்து தித்திக்கத் தந்தார் வாழி

சிவநெறித்தேசிகர்,
பண்டிதர் வ. பேரின்பநாயகம்
(தலைவர், அகில இலங்கைத் திருமுறை மன்றம்)


வெண்பா

திருமந் திரவிருந்து தித்திக்கக் கண்டோம்
அருமருந் தாயெமக் காக்கித் - தருகின்றார்
பாயிரத் தோடுமுதற் றந்திரத் துள்ளனவும்
மாயிரு ஞாலத் துவந்து

திருமந் திரவாசான் செல்லத் துரையர்
திருமதிக் காமெனு மிந்தத் - திருநூல்
திருமந் திரவகுப்பிற் கற்றவை காட்டும்
திருமந் திரச்செல்வர்க் காட்டு.

கொழும்பிணுவிற் கற்றார்கள் கூட்டாகக் கூடி
கெழுதகைய ஆசானின் வாக்கோ - டெழுதரிய
எண்ணங்கள் எண்ணி எடுத்துரைத்தார் என்றும்நாம்
கண்டுவந்து வாழ்த்துவோம் காண்.

சொல்விற் பனத்துடனே சொல்லரிய சொன்னீர்காள்
நல்ல மகிழ்வுடனே நாம்காண - சொல்விருந்தாய்
இன்னும் இருக்கின்ற தந்திரங் கட்டுரை
பொன்போற் தருவீர் பொலிந்து.



# முன்னுரை

**கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை**
தலைவர், திருமந்திரப் பணிமன்றம் - கொழும்பு

தமிழர்களின் பக்தி இலக்கியப் பரப்பில் பன்னிரு திருமுறைகள் பெறற்கரிய பேரருட் செல்வமாகும். இவற்றில் முதல் ஒன்பது திருமுறைகளும் பண்ணொன்ற இசை பாடும் தோத்திரங்கள் ஆகும். பத்தாம் திருமுறையான திருமந்திரம் தோத்திரமும் சாத்திரமுமான அமைப்பு உடையது. பதினொராம் திருமுறை பிரபந்தங்களாகவும், பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுராணம் புராண வடிவினதாகவும் அமைந்துள்ளன.

இவற்றில் திருமூலரால் அருளிச் செய்யப்பெற்ற சாத்திரமும் தோத்திரமுமான அமைப்பில் உள்ள திருமந்திரம் தனித்துவம் மிக்கது. இதுவரை தமிழில் எழுந்த காலத்தால் முந்திய சைவ இலக்கியங்களில் சைவசித்தாந்தம், சிவபெருமான், சிவநெறி, முப்பொருள் பதிபசுபாசம், சித்தாந்தமுத்தி, சைவம் முதலான சொற்களை முதலில் சொல்லிய நூல் திருமந்திரம் ஆகும்.

## வானொலியில் திருமந்திரம்

இலங்கை வானொலியில் மூத்த சமயநிகழ்ச்சித் தயாரிப்பாளரான திருமதி. கலைமகள் மகேந்திரன் அவர்களது தயாரிப்பில் திருமந்திர இசையும் உரையும் எனும் நிகழ்ச்சி பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுவந்தது. நாம் அதனை மிக விரும்பிக் கேட்டுப் பயன்பெற்று வந்தோம். சங்கீத ஆசிரியர் திரு. எஸ். நாகராசா அவர்கள் இசையுடன் பாட முதலில் சிலகாலம் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்களும் பின் சிலகாலம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தக்குரு அவர்களும் உரைவிளக்கம் சொல்லிவந்தனர்.

2008இல் அவர்களுக்கு வசதியீனம் ஏற்பட்டதால் பணிப்பாளர் திரு. ஆர். கணபதிப்பிள்ளை அவர்களின் ஆலோசனைப்படி சங்கீத ஆசிரியர் வை. கணேசலிங்கம் பாட என்னை உரைவிளக்கம் சொல்லுமாறு கலைமகள் கேட்டார். அவரது வழிகாட்டலில் நாம் செய்து வந்தோம்.

## கொழும்பில் திருமந்திர வகுப்பு

இதனைக் கேட்டுவந்த பலரும் திருமந்திரவகுப்பு ஒன்று நடத்துமாறு என்னைக் கேட்டார்கள். அமரர் திருமதி. சத்தியவதனி மாணிக்கநடராசா அவர்களது முயற்சியால் வெள்ளவத்தை ஓம் கிரியாபாபாஜி ஆச்சிரமத்தில் அதன் தலைவர் ஆறுமுகம் ஐயா அவர்கள் முன்னிலையில் 2013இல் வகுப்பு ஆரம்பிக்கத் திருவருள் கைகூடியது.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை போதனையாகவும், சாதனையாகவும் வகுப்பு நடைபெற்றது. போதனையை நான் சொல்லச் சாதனையை ஆறுமுகம் ஐயா அவர்கள் காட்டிக்கொடுத்துச் செய்வித்தார்.

ஆச்சிரமத்தில் ஒரு தபோவனம் போல முழுநேர ஆன்மீகப் பயிற்சிகள் நடைபெற்று வந்தன. திருமந்திரம் படிப்போர் சைவாசாரசீலர்களாய் நிலத்தில் பாய் விரித்துச் சுகாசனத்தில் இருந்து பயின்றுவந்தார்கள். கொழும்பில் இயங்கிவரும் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த திருமுறைப் பயிற்சி மையத்தினரும் வந்து திருமந்திரம் பயின்றார்கள். நான் கொழும்பை விட்டு வந்தபின் சைவப்புலவர் சா. பொன்னுத்துரை அவர்களும், சித்தாந்தரத்தினம் ந. சிவபாலகணேசன் அவர்களும் அங்கு கற்பிக்கின்றார்கள்.

### இணுவிலில் திருமந்திர வகுப்பு

இதன் பயனை உணர்ந்த சுகவாழ்க்கைப் பேரவைச் செயலாளர், உளவளக் கல்வியாளர் திரு. கா.வைத்தீஸ்வரன் அவர்கள் இணுவில் மஞ்சத்தடி கிராமாபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அவர்களது அனுசரணையுடன் 2017-04-08இல் திருமந்திர வகுப்பைத் தொடக்கிவைத்தார்கள். இங்கும் நான் போதனையாளராகவும், திரு. வைத்தீஸ்வரன் அவர்கள் சாதனையாளராகவும் வகுப்பு நடக்கிறது. மாதத்தின் முதலாம் மூன்றாம் சனிக்கிழமைகளில் காலை 9.30 தொடக்கம் மாலை 3.30 வரை நடைபெறும் வகுப்பில் இணுவிலில் இயங்கும் திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்த, சைவத்திருமுறைப் பயிலுநர்களும் பயில்கிறார்கள். பயிலுநர்களுக்குச் சுகவாழ்க்கைப் பேரவையால் தேநீரும் மதிய உணவும் வழங்கப்படுகிறது. வருகை விரிவுரையாளராக மன வளக்கலைப் பேராசிரியர் டாக்டர். க. பாலசுப்பிரமணியம் அவர்கள் வந்து உதவுகின்றார்.

### திருமந்திரப் பணிமன்றம் உதயம்

2018-07-28இல் திருமந்திர ஆர்வலர்கள் கூடித் திருமந்திரப் பணி மன்றம் எனும் ஓர் அமைப்பினை உருவாக்கினர். இதன் தலைவராக நானும் (சைவப்புலவர் சு.செல்லத்துரை), செயலாளராகச் சங்கீத ஆசிரியர் திரு. வை.கணேசலிங்கமும், பொருளாளராக திருமதி கலைமகள் மகேந்திரன் அவர்களும், இணைப்பாளராகச் சைவப்புலவர் சா.பொன்னுத்துரை அவர்களும் தெரிவு செய்யப் பெற்றனர். இவர்களுடன் மத்திய குழு உறுப்பினர்களாக சுகநலக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரன் அவர்களும், சைவப்புலவர் செ.நவநீதகுமார் அவர்களும் சங்கீத ஆசிரியர் திருமதி. ஹம்சானந்தி தர்மபாலனும் உபதலைவர்களாக மிருதங்க வித்துவான் திரு. வை.வேனிலான், வயலின் வித்துவான் திரு. ச.திவாகரன் அவர்களும் தெரிவாகினர். காப்பாளர்களாக உடுவை தில்லைநடராஜா அவர்களும் இந்து கலாச்சாரத்திணைக்கள முன்னாள் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசனும், மேற்படி திணைக்கள இந்நாள் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

திருமந்திரத்தை மக்கள் பலரும் விரும்பிப் படிப்பதற்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் முயற்சிகளை முன்னெடுப்பதெனவும், முதற்பணியாகத் திருமந்திரத்தை எந்த வேளையிலும், எவ்விடத்திலும் வைத்துக் கேட்பதற்கு வாய்ப்பாக இசை உரை ஒலிப்பேழையாக வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### திருமந்திர இசை உரை ஒலிப்பேழை வெளியீடு

திருமதி. கலைமகள் மகேந்திரன் அவர்களின் நெறியாள்கையில் இசை உரை ஒலிப்பேழை திரு. வை. கணேசலிங்கம் அவர்கள் பாட, நான் உரைவிளக்கம் சொல்ல, திரு. ச. திவாகரனின் வயலின் இசையுடனும், திரு. வை. வேனிலானின் மிருதங்க இசையுடனும் Yaha Audioha, H. A. Chamaralelum Hapangama, Ahul Hote, Rayagiriaja எனும் தனியார் கலையகத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

பாயிரப்பகுதியுடன் முதலாம் திருமந்திரம் முழுவதுமாக 336 மந்திரங்கள் இரண்டு ஒலிப்பேழைகளாகக் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 2018.11.08ந் திகதி வெளியிட்டுத் திருமந்திரப் பெருவிழா நடைபெற்றது. இப்பணிக்கு இந்துமாமன்றத் தலைவராயிருந்து அமரத்துவம் அடைந்த கந்தையா நீலகண்டன் நினைவாக அவரது குடும்பத்தினர் அனுசரணை செய்து விழாவுக்கு முதன்மை விருந்தினராக வந்திருந்து சிறப்பித்தனர்.

இப்பணி பல பெரியவர்களால் பாராட்டப்பட்டதுடன் இதனைத் தொடர்ந்து முழு மந்திரங்களையும் ஒலிப்பேழையாக வெளியிடுவதற்குப் பலர் அனுசரணை புரிய முன்வந்தனர். திருவருள் துணையுடன் மீதி ஒலிப்பதிவு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

### திருமந்திரவிருந்து -1 சிறப்புமலர் வெளியீடும் விருது வழங்கலும்

இதேவேளையில் கொழும்பிலும் இணுவிலிலும் திருமந்திரம் பயில்பவர்களையும் ஏனையோரையும் ஊக்குவிக்கும் வகையில் இணுவிலில் ஒரு திருமந்திர விழா நடத்தவும் அதில் இதுவரை திருமந்திரம் பயின்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு “திருமந்திரச் செல்வர்” விருது வழங்கலுடன் திருமந்திரப் பணிமன்றத்தின் பணிகளைப் பிரதிபலிக்கும் வகையில் “திருமந்திர விருந்து-1” எனும் மலரும் வெளியிடப்படவுள்ளது. இதில் விருது பெறுபவர் களுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஒவ்வொருவரும் எழுதிய விளக்கக் கட்டுரைகளும் வெளிவர இருக்கின்றன.

விழா அரங்கில் திருமந்திரத்தைப் பற்றிய புராண படனம், கதாப்பிரசங்கம், வில்லிசை, மந்திர அந்தாதிப்போட்டி, வினாடிவினாப் போட்டி முதலான பல கலை நிகழ்ச்சிகளும் திருமந்திரச் செல்வர்களால் நிகழ்த்தப்படவுள்ளன. திருமந்திரத்தை விரும்புவோர் பாயிரத்திலிருந்து ஒழுங்காகக் கற்பதற்கு வசதியாக இலகுவான தமிழில் திருமந்திரக் கட்டுரைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மாணவர்க்குப் பயன்தரக்கூடிய விதமாக திருமந்திரக் கதாப்பிரசங்கம், வில்லுப் பாட்டு, பாடலும் ஆடலும், வினாவிடை, பொன்மொழிகள் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழில் உள்ள மிக மூத்த சைவ இலக்கியமான திருமந்திரத்தின் பெருமையை உணர்ந்து யாவரும் படித்துப் பயன்பெறவேண்டும் என அன்புடன் வேண்டுகின்றோம்.



# வாழ்த்துரை

**Dr. செ. பாலசுப்பிரமணியம்,**
**பேராசிரியர், மனவளக்கலை.**

தமிழர்களின் பக்தி இலக்கிய மரபில் பன்னிரு திருமுறைகள் தலைமுறை தலைமுறையாகப் போற்றப்பட்டும், பின்பற்றப்பட்டும் வருகின்றன. இவற்றில் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திரமாகும். இம்மந்திரம் ஒன்பது தந்திரங்களாக அமைந்துள்ளது. ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களின் சாரமாக அமைந்துள்ளன.

பதினான்கு சாத்திர நூல்கள் தோன்றுவதற்கு முன்னரே தமிழ் நாட்டில் சாத்திர நூலாகத் திகழ்வது திருமந்திரமேயாகும். முதல் இரண்டு சாத்திர நூல்களான திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் திருமந்திரத்தின் வழிவந்தவையேயாகும்.

சேக்கிழார் பெருமானால் புகழ்ந்து பாடப்பட்ட திருமூலர் ஒரு ஞானியாவார். இவர் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான நான்கு நெறிகளையும் தீந்தமிழ்ப் பாடல்களில் தெளிவுற விளக்கியுள்ளார். அதனால் சுந்தரமூர்த்தி நாயனார்,

**"நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்"**

என்று திருத்தொண்டத் தொகையில் பாடியுள்ளார்.

திருமந்திரம் தமிழர் சமயம், தமிழ்த்தத்துவம், தமிழ் அறம் பற்றியெல்லாம் பேசுகின்றது. ஆனால் பழந்தமிழ் இலக்கியங்கள், திருமந்திரம் போன்றவற்றைப் படித்துப் பயனடைய வேண்டும் என்ற நினைப்பு, ஆவல் பல நூற்றுக்கணக்கான தமிழ்ச் சைவ ஆர்வலர்களுக்கு இருந்தபோதிலும் அதன் செய்யுள் வடிவமும் பல்வேறுபட்ட சூட்சுமக் கருத்துக்களும் பலரை மிரளச் செய்துள்ளது.

நமது திருமந்திர ஆசான் கலாபூசணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை ஐயா அவர்கள், நவீன விஞ்ஞான காலத்திற்கு ஏற்ப பல புதிய யுக்திகளைத் தனது கல்வியூட்டல் முறையினூடாக, முதியோரை மட்டுமல்லாது இன்றைய இளைய சமுதாயத்தினரும் மிகுந்த ஆர்வத்துடன் திருமந்திரம் கற்றுப் பயனடையும் வண்ணம் விளக்க உரைகள் ஆற்றி வருகின்றார்.

மிக எளிமையான விளக்கங்களைப் பல உவமான உவமேயங்களுடன் விளக்கி வருகின்றார். திருமந்திரத் தொடர் வகுப்புக்களை நடாத்தி வருகின்ற அவரது ஆளுமை, இவ்வாறான ஆன்மிகக் கல்வியைக் கற்க வேண்டும் என்ற ஓர் உத்வேகத்தைப் பல்வேறுபட்ட வயதினர் மத்தியிலும் ஏற்படுத்தியிருப்பது மிகப்பெரிய சாதனையாக உணரப்படுகின்றது.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் இணைந்தேயாக வேண்டும் என்று தன்னுடைய இறுதி வாழ்நாட்களில் உணர்ந்துகொண்ட அணுவிஞ்ஞானி திரு. ஆல்ஃபிரட் ஐன்ஸ்டீன்

**"விஞ்ஞானம் இல்லாத மெய்ஞ்ஞானம் குருடு**
**மெய்ஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானம் நொண்டி"** என்றார்.

காலத்தின் கட்டாயமாக கலாபூசணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஐயா அவர்கள் திருமந்திரத்தை விஞ்ஞான உலகத்திற்கு ஏற்றவாறு புதியபாதையை வகுத்து எளிய நடையில், இனிய தமிழில் தனக்கே உரித்தான கம்பீரக் குரலில் விளக்கி, இளைய சந்ததியினரைக் கொழும்பிலும், இணுவிலிலும் பயிற்றுவித்து வருகின்றமை பாராட்டுக்குரியதாகின்றது.

ஆசானின் கற்பித்தல் திறனால் உருவாக்கப்பட்ட திருமந்திரச் செல்வர்களின் 47 கட்டுரைகளின் தரம், அவருடைய கற்பித்தல் திறனின் ஆளுமையை வெளிக் காட்டுகின்றது.

ஆசானின் ஒன்பது ஆக்கங்களும் இந்நூலினை மேலும் அணி செய்கின்றன. ஆசான் அவர்கள் முதுமையிலும் இளமை குன்றாமல் இவ்வாறான ஆன்மீக, இலக்கியத் தொண்டு ஆற்றி வருகின்றமையைப் பாராட்டுவதுடன், அவர் இதுபோன்ற இன்னும் பல நூல்களை ஆன்மிக ஆர்வலர்களுக்குத் தர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, அருட் பேராற்றல் கருணையினால், உடல்நலம், நீள் ஆயுள் நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றேன்.

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director } 2552643
පොදු / பொது / General } 2552641
ෆැක්ස් / தொலைநகல் / Fax } 2552825
ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail } hindudir@yahoo.com
වෙබ් අඩවිය / இணையதளம் / Website } www.hindudept.gov.lk



# வாழ்த்துச்செய்தி

**அ. உமாமகேஸ்வரன்**
**(பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)**

"தேவர் குறளுந் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் – கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்றுணர்"

என்ற ஔவையானரின் பாடல் மூலம் வாழ்வியலுக்கும் ஆன்மிகத்துக்குமான நிலைக்களனாகத் திருமந்திரந் திகழுந் திறனை நாமுணரும் அதேவேளை "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற சமூக நல்லிணக்கச் செய்தியை உலகிற்கு என்றோ உணர்த்திய திருமந்திரப் பொக்கிஷம் என்றும் நின்று நிலைக்கத் திருமந்திரப் பணி மன்றம் அமைத்து, "திருமூலர் திருமந்திரம் எங்களுக்கு எட்டாக்கனியல்ல; உள்ளங்கை நெல்லிக்கனியே விருந்தாக அருந்துவோம்; மருந்தாகி வாழ்வு தரும்" எனுந் தாரக மந்திரத்தோடு, வெள்ளவத்தை ஓம் கிரிஜா பாபாஜி ஆரணியத்திற் திருமந்திரம் பயின்ற திருமந்திரச் செல்வர்களின் திருமந்திரப் பாயிரப்பகுதி அறிமுகக் கட்டுரைகளையும், இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையிற் திருமந்திரம் பயின்ற திருமந்திரச் செல்வர்களின் திருமந்திரம் முதலாந் தந்திரப் பகுதி அறிமுகக் கட்டுரைகளையும், திருமந்திர ஆசான் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் திருமந்திரக் கட்டுரைகளையும், திருமூலர் தொடர்பான வில்லிசை, கதாப்பிரசங்கம் முதலான கலை ஆக்கங்களோடு கூடிய சீர்மிகு நூலாகவும், அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுச் சமர்ப்பணமாயும்அவர்தம் கணவரதும் மைந்தர்களதும் அனுசரணையாய் வெளிவருவதோடு மலராசிரியராய்க் கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களிலிருந்து, கொழும்பு திருமந்திரப் பணிமன்றம் வெளியிட மலரும் இந்நூல் வெளியீடு சிறப்புற்றமைய எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.



# சிந்தைக்குப் புத்துணர்ச்சி தரும் திருமந்திர விருந்து..

**உடுவை. எஸ். தில்லைநடராசா**

உலக முதல்வனான சிவபெருமானைப் பலவாறு போற்றிப்புகழும் ஆக்கங்கள் பல இந்நூலில் உள்ளன. ஒவ்வொரு ஆக்கமும் பெறுமதியானவை. பெரும் பயன் தரும் திருமந்திர வரிகள் வழியாக சிவநெறி தொடர்பான அறிவைப் பெறுவதோடு, வறுமையிலும் செழுமையாக வாழத்தக்க அநுபவத்தையும் அடையலாம்.

நூலின் ஆரம்பத்தில் "ஒன்றவன் தானே" என்னும் தலைப்பிலமைந்த ஆக்கத்தின் உட்பொருளான ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பதை எல்லோரும் தெளிவாக விளங்கிக்கொண்டால் விரும்பத்தகாத விளைவுகளைத் தவிர்த்து அழிவேதுமின்றி ஆனந்தமாக வாழலாம்.

"தாயினும் நல்லன்" என்றழைக்கப்படும் சிவனைப்போன்ற தெய்வம் வேறெங்கு தேடினும் இல்லை என்றுரைக்கும் திருமூலர், வேதத்தை விட மேலான அறம் வேறில்லை எனவும் புலனடக்கத்தைப் பின்பற்றி எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதோடு தானதருமம் செய்து சந்தோஷமாக வாழ வேண்டுமெனவும் கூறுகின்றார்.

தொடரும் கட்டுரைகளில், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் உடலில் நிலையாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறன்மனை நயவாமை, நல்லொழுக்கம் பேணல் ஆலயங்களில் வீண்விரயத்தை விலக்கிக்கொள்ளல் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக திருமந்திரச் செல்வர்கள் தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளமை வரவேற்கத்தக்க முயற்சியாகும்.

உத்தியோகபூர்வமாக சில பயிற்சி நெறிகளில் பங்கு பற்றிய வேளைகளில் பயிற்சித்திட்ட இணைப்பாளர்கள் பயிற்சியின் ஓரங்கமாக சில பொறுப்புகளை ஒப்படைத்து, பயிலும்போதே போதனைகளை உள்வாங்கி அவற்றை ஆற்றுகையாகப் பரீட்சித்து சான்றிதழ் வழங்குவார்கள். அது போல திருமந்திர ஆசான், சைவப் புலவர் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு ஆக்கத்தைப்பெற்று திருமந்திர விருந்தில் இணைத் திருப்பது வாசகர்களுக்குப் பெரு விருந்தாகவும் திருமந்திரச் செல்வர்களுக்கு நல்லதொரு ஊக்குவிப்பாகவும் அமைந்திருக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை.

மேலதிகமாக வில்லிசை, கதாப்பிரசங்கம், ஆடலும் பாடலும், வினாவிடை ஆகியன இந்நூலின் கனதியையும் பெறுமதியையும் கூட்டியுள்ளன. அதற்காக மலராசிரியரும் விடயதானம் செய்தோரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

எனது சிறு வயதிலிருந்தே சுவையான உணவு, நல்ல நல்ல ஆடை விருப்பமான விளையாட்டுப் பொருட்கள் என நிறைவானதும் மகிழ்வானதுமான வாழ்வைத் தந்த பெற்றோர் அதற்கு மேலதிகமாக அடிக்கடி ஆலயங்களுக்குச் செல்லவும் பொது விழாக்கள் நடைபெறும் மண்டபங்களுக்கச் செல்லவும் வழி விட்டனர். அதனால் ஆன்மீக அறிவையும், கலை இலக்கிய அனுபவங்களையும் பெற்று முன்னணியில் அமரக் கூடியதாக இருந்தது. கல்லூரி மாணவனாக ஆரம்பத்தில் பண்டிதர் வேலுப்பிள்ளை வித்துவான் கனகசபை ஆகியோரிடமும் தொடர்ந்து பண்டிதர் செல்லத்துரையிடமும் பல விடயங்களைப் படித்துத் தெரிந்து கொண்டேன். இத்தொடர்பினால் வித்துவான் க.ந.வேலன், சைவப்புலவர் வேந்தனார், பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, பண்டிதர். க. கி. நடராஜன், க. சி குலரத்தினம், பண்டிதர். க.வீரகத்தி, வித்துவான். பொன் முத்துக்குமாரன், வித்துவான். க.சொக்கன் ஆகியோரது அறிவூட்டலையும் பெறக்கூடிய அதிஷ்டம் அமைந்தது.

அறுபதுகளில் விஞ்ஞானப் பாடங்கள் படிப்பது உயர்வாக கருதப்பட்டதும் கலை வகுப்பு மாணவர்களைக் குறைவாக எடைபோடப்பட்டதும் உண்டு. என்னைப் பொறுத்தளவில் ஆன்மீக கலை இலக்கிய ஈடுபாட்டால் போட்டிப்பரீட்சை மூலம் மிகக் குறைந்த வயதில் அரச உத்தியோகத்தை பெற்றுக் கொள்ள முடிந்ததோடு, முப்பத்தொரு வயதிலேயே நிர்வாக சேவை உயர்வையும் பெற்று அதில் நிலைக்க முடிந்ததுடன் எழுபத்திரண்டு வயதிலும் அரசில் பழுதற்ற பணிகளைப் புரியும் வாய்ப்பும் தொடர்கிறது.

அறுபதுகளின் ஆரம்பத்தில் பாடசாலை மாணவனாக குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்குச் சென்ற போது கவிஞர். அம்பி, இ. நாகராஜன் சைவப்புலவர் .சு. செல்லத்துரை ஆகியோரது உரையாடலைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. சுமார் 55 ஆண்டுகளுக்குப் பின்பும் அவர்களது உரையாடலின் சில பகுதிகள் எனது நினைவில் உள்ளது என்பதால் அவர்களின் உரையாடல் கனதியாகவும் கல்மேலான எழுத்தை ஒத்ததாக இருந்ததும் என குறிப்பிடுவது மிகைப்படுத்தபட்ட கூற்றல்ல.

பொறுமையாக சிறிது நேரம் திருமந்திர விருந்தைச் சுவைத்தபோது, திருமூலர் ஆன்மீகம், மருத்துவம், விஞ்ஞானம், தத்துவம், உளவியல் என பல் வேறு துறைகள் தொடர்பாகவும் பாடல்களை இயற்றியுள்ளதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

திருமந்திரம் சைவ சமயத்திற்கு மட்டுமே உரியதொரு சமய நூலாக அமையாமல் உலக மக்களுக்கெல்லாம் அறத்தையும், ஆன்மீகத்தையும், தெளிவாகத் தெரிவிக்கும் பொது நூலாக அமைந்துள்ளதையும், நல்லதை எண்ணி நல்லதைச் சொல்லி நல்லதையே செய்ய வேண்டும் என்பதை நல்லெண்ணம் நல்லொழுக்கம் என எளிமையாகவும் இனிமையாகவும் சிறப்பாகச் சித்திரிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

உலக உயிர்கள் அனைத்தையும் அன்போடு நேசிப்பது, பசு மாட்டுக்கு இலை, குழை, புல் போடுவது, ஏழைக்கு சிறிது உணவு கொடுப்பது துன்பத்தில் உள்ளவருக்கு ஆறுதல் சொல்வது, பெற்றோரைப் பேணுவது மற்றவருக்கு உதவுவது ஆகியவற்றை புண்ணியம் என்கிறது திருமந்திரம்.

1962 ஆம் ஆண்டு ஆச்சியுடனும் வேறு பலருடனும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆலய தரிசனத்துக்காகக் கதிர்காம யாத்திரை சென்றபோது, பயண ஆரம்ப முதல் ஒருவரை மற்றவர் "சாமி" என அழைப்பதை அவதானித்தேன். அந்த வகையில் மற்றவர்கள் மட்டுமல்ல ஆச்சியும் என்னைச் சாமி என அழைத்தது புதுவிதமான அனுபவமாக அமைந்தது ஒரு புறமாக இருக்க, அந்த அழைப்புக்குப் பொருத்தமாக நல்லவனாக நடக்க வேண்டுமென்ற எண்ணத்தையும் எனது மனதில் ஏற்படுத்தியது. எல்லோரையும் சாமி என அழைத்த அந்த நினைவு இந்நூலிலுள்ள ஆக்கங்களை எழுதியவர்கள் பெயர்களோடு திருமந்திரச் செல்வர் என்பதையும் சேர்த்துப் பார்க்கையில் நினைவுக்கு வந்தது.

ஆன்மீகம் போதிக்கும் திருமந்திரத்தில் அறிவியல் அம்சங்களையும் காணலாம். கணவனும் மனைவியும் இணைவதால் உருவாகும் மகப்பேறு தொடர்பாக "கரு உற்பத்தி" என்னும் தலைப்பிலுள்ள பாடல்களைப் பார்க்கலாம்.

சேர்க்கையின்போது, பெண் வயிற்றில் மலம் மிகுந்திருந்தால் குழந்தை மந்த புத்தியுள்ளதாகப் பிறக்கும் எனவும் சிறுநீர் மிகுந்திருந்தால் குழந்தை ஊமையாகப் பிறக்கும் எனவும், மலமும் சலமும் இரண்டுமே மிகுந்திருந்தால் குழந்தை குருடாகப் பிறக்கும் என்றும் சொல்கிறார் திருமூலர். எனவே ஆணும் பெண்ணும் இணையும் போது தூய்மையுடனும், உயர்ந்த எண்ணங்களுடனும் தம்பதிகள் இணைந்தால் நல்ல பிள்ளை உருவாகும் என்கிறார்.

திருமந்திரத்தில் இன்னும் பல விஞ்ஞான விளக்கங்களைக் காணலாம். இறைவன் திருவருளால் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் திருமூலரின் மூவாயிரம் பாடல்களின் ஒரு சிலவற்றையாவது படிக்கக் கிடைத்த பாக்கியத்தடன் மலராசிரியருக்கும் திருமந்திரச் செல்வர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியுடன் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

මගේ අංකය
எமது இல.
My Number

ඔබේ අංකය
உமது இல.
Your Number

දුරකථන : 021-2222294
தொலைபன்னி : 021-2222483
Telephone : 021-2222006

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

තැ.පෙ.අංකය 57
තිරුනෙල්වේලි
යාපනය.

த.பெ.எண் 57
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

P.O.Box 57,
Thirunelvely,
JAFFNA



# அணிந்துரை

**கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்,**
**பதில் பீடாதிபதி,**
**இந்துக்கற்கைகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

இன்றைய உலகமயமாதற் சூழலில் மனிதப் பண்புகளும் விழுமியங்களும் சமயம் சார்ந்த நடத்தைகளும் காணாமற் போய்க்கொண்டிருக்கின்றன. இயந்திரமயப்பட்ட வாழ்வு சுயநலத்தையும் அதற்கான நடத்தைக் கோலங்களையுமே உடையதாக கட்டமைக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மனிதர்க்கும் உள, உடல் ரீதியான நலத்தைத் தரக் கூடிய விடயங்களுக்கு அப்பால் உடனடித் தேவைகளை ஆசைகளை நிறைவு செய்யும் அவசர நிலையே உணவு தொடக்கம் வாழ்க்கையின் அத்தனை கூறுகளிலும் விரவிக்கிடக்கிறது. இவற்றினின்றும் விடுபட சாந்தியும் சமாதானமும் ஆரோக்கியமும் நிறைந்த வாழ்வினை ஒவ்வொருவரும் பெற்றிடநாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டியுள்ளது.

அந்தத் தளத்திலான செயற்பாடுகளில் ஒன்றாகவே திருமந்திரவிருந்து(1) எனும் மலர் அமைகின்றது. கொழும்பு திருமந்திரப் பணிமன்றத்தின் வெளியீடாக கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களை ஆசிரியராகக் கொண்டு இம்மலர் வெளிவருகிறது. சைவ இலக்கியங்களில் திருமுறைகளில் ஒன்றாகவும், சாத்திரமாகவும், தோத்திரமாகவும், யோக நூலாகவும்,மருத்துவ நூலாகவும், ஆகம சாரமாகவும், சமய சமூக நல்லிணக்க வெளிப் பாடாகவும் எனப் பல்வேறு சிறப்புக்களை உடையது திருமந்திரமாகும். திருமந்திரத்தை சார்ந்து ஈழத்திலும் தமிழகத்திலும் அநேக நூல்கள் வெளிவந்துள்ளன. இது சிறப்புமலராக அமைகிறது.

யாழ்ப்பாண சைவசித்தாந்தப் பாரம்பரியத்தில் எஞ்சியிருக்கும் விழுதுகளில் ஒருவரே சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள். ஈழதேசமெங்கும் சஞ்சாரித்து சைவத்துக்கும் தமிழுக்கும் அர்ப்பணிப்போடு அரும்பணி செய்துவருபவர். அவரின்

வானொலியூடான உரை விளக்கமே இம்மலரின் அச்சாணி. அவ்வுரைகளின் வழி உந்தப்பெற்றபெருமக்கள் பலரிணைந்து ஓம் கிரிஜா பாபாஜி ஆச்சிரமத்திலும் இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையிலும் திருமந்திர வகுப்புக்கள் நடைபெற்று வருதலை அறியமுடிகிறது. இவ்விரு திருமந்திர வகுப்புக்களினதும் தனித்துவமான சிறப்புக்கள் யாதெனின் போதனையோடு சாதனையாகவும் திருமந்திரம் கற்பிக்கப்படுதலாகும். இவற்றின் வழி உருவான திருமந்திரப் பணிமன்றம் பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றது. அவற்றுள் ஒன்றே இம்மலர் வெளியீடு ஆகும்.

இம்மலரின் முதற்பகுதியான "திருமந்திரம் - பாயிரப்பகுதி அறிமுகக் கட்டுரைகள்" எனும் தலைப்பில் ஓம்கிரிஜா பாபாஜி ஆச்சிரமத்தின் திருமந்திர பயிலுனர்களின் "20" ஆக்கங்களைத் தாங்கி வருகிறது. இரண்டாம் பகுதி "திருமந்திரம் - முதலாம் தந்திரம்: அறிமுகக்கட்டுரைகள்" எனும் தலைப்பில் இணுவில் சுகவாழ்வுப் பேரவை திருமந்திரப் பயிலுனர்களின் 27 ஆக்கங்களைத் தாங்கி வருகிறது. மூன்றாம் பகுதி சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் "திருமந்திரக் கட்டுரைகளையும் திருமந்திரம் தொடர்பான அவரது ஏனைய கலை ஆக்க இலக்கிய வடிவங்களையும்" கொண்டமைந்துள்ளது. குறிப்பாக எமது மண்ணில் நலிவடைந்து செல்லும் வில்லிசை, கதாப்பிரசங்கம் எனும் வடிவங்களில் திருமந்திரத்தைக் கூறியிருப்பது பாராட்டத்தக்கதும் வரவேற்கத் தக்கதுமாகும். அத்தோடு மாணவர் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் நாவலர் வழியில் நின்று திருமந்திரம் தொடர்பான வினாவிடை வடிவத்தையும் கையாண்டுள்ளார்.

பல்வகை நோக்கு நிலையில், பல்வகை வடிவங்களில் திருமந்திரம் தொடர்பான கருத்தியல்களை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கொண்டமைந்ததாக இம்மலர் வெளிவருகிறது. இது முதல் முயற்சி. இம்முயற்சி பல்கிப் பெருகவேண்டும். மனித வாழ்வியலின் அர்த்தப்பாட்டை இளையவரும் முதியவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டிருப்பது சுட்டியுரைக்கத்தக்கதாகும். கட்டுரை ஆசிரியர்களுக்கு உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இவ்வாறான ஒன்றிணைவே இன்றைய எமது தேவையாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்க இவ்வாறான முயற்சிகளே உறுதுணையாகின்றன. இதில் பங்களித்த எல்லா சைவ உள்ளங்களினுள்ளும் எல்லாம் வல்ல பரம்பொருள் உறைந்திருந்து நல்லருள் புரிவாராக.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

நன்றி



# மதிப்புரை

**திருமதி. சாந்தி நாவுக்கரசன்,**
முன்னாள் செயலாளர்,
புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், இராஜாங்க அமைச்சு.

வேதாகமங்களின் வழிநின்று சைவநெறியினை உலகம் உய்ய இசைத்தமிழாலும், இயற்றமிழாலும் எடுத்தோதுவன திருமுறைகள். வான்வெளியில் உள்ள பன்னிரு இராசிகள் போலப் பன்னிரு திருமுறைகளும் விளங்குகின்றன. இவற்றை அருளிச்செய்த அனுபூதிமான்கள் இருபத்தேழு நட்சத்திரங்களுக்கு நிகரான இருபத்தெழுவராவர். இவர்களால் சைவசமயம் அவ்வப்போது சிறப்புப் பெற்று வளர்ந்துள்ளது. வேதாகமங்கள் பிரணவத்தின் விரிவாகும். அங்ஙனமே பன்னிரு திருமுறைகளும் அமைந்துள்ளன எனலாம்.

இவை ஓகார உயிரொலியில் (தோடுடைய என்று) தொடங்கி, மகர ஒற்றில் முடின்கின்றன. பன்னிரு திருமுறைகளும் உள்ளங்கசிந்துருகி ஓதுவதற்குரியன. திருமந்திரம் சாத்திர நூலாகவும், திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) காப்பியநூலாகவும் அமைந்திருந்தாலும், அவற்றுள்ளும் தோத்திரப் பாடல்கள் உண்டு. ஓதுவார் உள்ளத்தையும், கேட்பார் உள்ளத்தையும் உயர்த்தி, பக்குவ வெள்ளம் பெருகச் செய்யும் பான்மை பன்னிரு திருமுறைகளுக்கு உண்டு.

திருமுறைப் பாடல்கள் இறைவனுடைய பெருமைகளைப் பேசும், போற்றும், வாழ்த்தும், ஆன்மாவாகிய நம் குறை தீர்க்கும்படி வேண்டும். நமக்கு இன்ன இன்ன நற்பேறுகளைத் தருக எனப் பிரார்த்திக்கும். நம்மிடம் உள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கும். இப்படிப் பல விதத்தில் இவை அமைந்திருக்கின்றன.

திருமுறைகள் கூறும் பொருள் பற்றி நாம் நோக்கும்போது பதி, பசு, பாசங்களின் இயல்பும், தொடர்பும், பிறப்பறுக்கும் உபாயமும் (சரியை, கிரியை, யோக, ஞான வழிகள்) பேரின்ப நிலையமாகச் சைவசித்தாந்தம் கூறும் விடயங்களேயாம். இவ்விலக்கியங்களில் கண்ட கருத்தையே சைவசித்தாந்தம் நெறிப்படுத்தி இலக்கண மாகக் கூறியது பன்னிரு திருமுறை வகுப்பிற்கும், சிவஞானபோதத்து பன்னிரு சூத்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென ஆன்றோர் ஒப்பிட்டுக் காட்டுவர். சாத்திரங்களைப் படித்து மெய்யுணர்வு பெறுவதிலும் பார்க்க, திருமுறைப் பக்திப் பாடல்களை ஓதி இறைவன் அருளைப் பெறுவது எளிதென்பர்.

சைவநூல்கள் வேத ஆகம நூல்கள் என்று அமைவது போலவே முதலிலுள்ள ஒன்பது திருமுறைகளும், வேத மந்திரங்களும், தோத்திரங்களுமாயமைய, பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் ஆகமநூற் கருத்துக்களைக் கூறுவதாக அமைந்துநிற்கிறது. பதினொராம் திருமுறையில் தோத்திரங்களோடு, பிரபந்த வகைகளும் இடம்பெற்றுள்ளன.

பன்னிரு திருமுறைகளில் மிகவும் சிறப்புப் பெற்ற பத்தாம் திருமுறையாகிய திருமந்திர நூலில் தரப்படும் அரும் பெருஞ் செய்திகளைத் திரட்டி திருமந்திரவிருந்து என்ற இப்பெருநூல் ஆக்கம் செய்யப்பட்டு வெளியிடப்படுவது பாராட்டிற்கும் பெருமைக்கும் உரிய விடயமாகும். திருமந்திரப்பணி மன்றத்தினர் இவ்வெளியீட்டினைச் செயற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

மலராசிரியரான கலாபூசணம் சைவப்புலவர், திருமந்திர ஆசான் சு.செல்லத்துரை அவர்களின் நெறிப்படுத்தலில் திருமந்திரம் பயில்பவர்களின் கட்டுரைகள் பல இம்மலரின் ஆக்கங்களாக வெளிவருகின்றன. தரமுள்ள பல கட்டுரைகள் இடம்பெற்றுள்ளமை பாராட்டிற்குரியது. அதேசமயம் திருமந்திர ஆசானம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் திருமந்திரக் கட்டுரைகளும், கலை ஆக்கங்களும் நூலின் மணிமகுடமாக இடம்பெறுவது பெருமை சேர்க்கும் விடயமாகும். வில்லிசை, கதாப்பிரசங்கம், ஆக்கங்கள் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இன்று இவ்வாறு தரமான ஆக்கங்களை எழுதும் ஆற்றல் படைத்தவர்கள் மிகமிகக் குறைவு. பாடசாலை மாணவர்களும், அறநெறிப் பாடசாலை மாணவர்களும் அருகிவரும் கலைகளான கதாப்பிரசங்கம், வில்லிசை, ஆடலும் பாடலும் போன்ற கலைகளைப் பயின்று மேடை ஏற்றுவதற்கு இவ் ஆக்கங்கள் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

திருமந்திர வினா விடைத்தொகுப்பு திருமந்திர நூல் அனைத்து விடயங்களையும் மாணவர்களும், பெரியவர்களும் இலகுவில் படித்துத் தெளிவு பெறும் வகையில் சிறந்த ஒரு கலைக்களஞ்சியமாகத் திகழ்கின்றது என்றால் மிகையாகாது.

உலகியல் வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய அனைத்து நல்லறங்கள் பற்றிய செய்திகள் திருமந்திரத்தில் தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றையும் தேர்ந்து எடுத்து எளிதில் விளங்கிப் படித்து அதன் வழி ஒழுகி எம்மை நல்வழிப்படுத்தக்கூடிய பல ஆக்கக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்று இருப்பது பாராட்டிற்குரியது.

மலராசிரியர், திருமூலர் திருமந்திரம்,

"எங்களுக்கு எட்டாக் கனியல்ல
உள்ளங்கை நெல்லிக்கனி
விருந்தாக அருந்துவோம்
மருந்தாகி வாழ்வு தரும்"

என ஆரம்பத்தில் தரும் இலட்சிய வாசகத்துக்கு அமையத் திருமந்திரவிருந்து என்னும் இந்நூல் எமக்கு அருமருந்தாகக் கிடைப்பது நாம் செய்த பூர்வ புண்ணியமே. இந்நூலில் தரப்படும் செய்திகளை ஆழமாகப் படித்து எமது சிந்தையில் நிலைநிறுத்தி நல் ஒழுக்கவாழ்வு வாழ்ந்து, பிறர்க்கும் பயனுடையராகத் திகழ்ந்து முத்தியின்பம் பெறுவோம்.

இந்நூலை வெளியீடு செய்யும் திருமந்திரப்பணி மன்ற நிர்வாகிகள், கட்டுரை ஆக்கங்கள் எழுதிய திருமந்திரப் பயிலுநர்கள், மலராசிரியர் அனைவருக்கும் எனது மனமுவந்த பாராட்டுக்களும், நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக. மிக விரைவில் பல பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி திருமந்திரவிருந்து - 2 நூலும் வெளிவர இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

சீரிய முறையில் திருமந்திரக் களஞ்சியமாகத் திரட்டி வழங்கப்படும் இந்நூற் தொகுதியில் உள்ள ஆக்கங்களைப் படிக்கும் மாணவர்களும், ஏனையோரும் பெருநன்மை பெறுவர் என்பதில் ஐயமில்லை.

> "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு."



# அறிமுக உரை

**கலாபூஷணம்**
**கோகிலா மகேந்திரன்**

கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களை மலர் ஆசிரியராகக் கொண்டு 'திருமந்திர விருந்து' என்றொரு மலர் வருகிறது. அழகானது, வாசனை உள்ளது, பயன் மிக்கது! பன்னிரு திருமுறையில் முதன்மைத் திருமுறை என்று பேசப்படுவதும் சிவனுடைய அருள் என்று வியக்கத்தக்கதுமான திருமந்திரம் பொது மக்களிடை பரவிச் சென்றது குறைவு. மிக ஆழமான விடயங்களை எளிய சொற்களில் கூறும் திருமந்திரத்தைப் புரிந்துகொள்வது கடினம் என்பதே எனது தந்தையாரின் கருத்தாக இருந்தமை எனக்கு நினைவுண்டு.

மந்திரம் என்பது வேதவாக்கு என்று கொள்ளப்பட்டாலும், முன்னால் உள்ள திருமுறைகளும், பின்னால் அமைந்த திருமுறைகளும், மெய்கண்ட சாஸ்திரங்களும் எல்லாமே திருமந்திரத்தின் விளக்கம் என்று கருதப்பட்டாலும்கூட, முயன்றால் திருமந்திரத்தை விளங்கிக் கொள்ள முடியும் என்பதற்கான சான்றுகளாக இந்த மலரில் திருமந்திரச் செல்வர்களின் 46 கட்டுரைகளும் மலராசிரியரின் விசேட கட்டுரைகள் வில்லிசை, கதாப்பிரசங்கம், வினாவிடை, பொன்மொழிகள் போன்றனவும் அமைகின்றன.

மலரை மாந்தியபோது ஏற்பட்ட சில சிந்தனைகளை இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

"மாந்துதல் என்றால் அநுபவித்தல். இந்த உலகத்தைத் தமது புலன்களாலும் அறிவாலும் அநுபவிக்கக்கூடியவர்கள் மாந்தர்கள்.

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி"**

(தொல்காப்பியம்) மாந்திரம் அல்லது மந்திரம். உயர்ந்த மனிதர்கள் தமது அநுபவத்தின் பின் தருகின்ற உன்னத சொற்களே மந்திரங்கள்!" என்று முனைவர் சுதா சேஷாயன் அவர்கள் தனது உரை ஒன்றில் கூறுவார்.

திருமூலர் என்ற மிக உயர்ந்த முனிவர் தந்த திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கொள்கைகள் பரவலாக இருந்தாலும், இது ஒரு பக்தி நூல் என்றும் கூறலாம். "அன்பே சிவம்" என்று ஒற்றை வார்த்தையில் சைவசமயத்தை விளக்கும்போது ஏற்படுவதை விட உயர்ந்த பக்தி வேறு எப்போது ஏற்படும்? "பார்ப்பார் அகத்திலே" என்ற பாடலில் அத்வைத தத்துவம் எட்டிப் பார்ப்பதையும் காணலாம்.

"ஒன்றவன் தானே" என்று தொடங்கும் மந்திரம், ஒன்றான இறைவன் எப்படி இரண்டாகினான், மூன்றாகி நாலாகி, சூரியன், சந்திரன் போன்ற அட்ட மூர்த்திகளுள் கலந்து எட்டாகி, மேலும் விரிந்து உலகத்தைக் கடந்தனன் என்று கூறுகிறது. விஞ்ஞான உலகு இன்று கருத்திலெடுக்கிற "Big Bang" கொள்கையும், கூர்ப்புக் கொள்கையும் - காபன் என்ற ஒரே அணு எப்படி உயிரற்றதில் இருந்து "Primodial Soup" ஊடாக முதலாவது பற்றீரியாவாகி, இன்றைய அனந்த கோடி உயிர்களின் பல்வகைமைக்குள்ளும் வியாபித்து நிற்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முயலுகிறது. இந்த நடைமுறைக்குச் "சக்தியே" அடிப்படையாக இருந்தது. "பேரறியாத பெருஞ்சுடர்" எனப்படும் இந்த சக்தியை அறிவியல், இடி, முழக்கம், எரிமலை வெடிப்பு, கழியூதாக் கதிர்கள் என்று பிரித்துப் பார்த்து விளங்க எத்தனிக்கிறது.

இறைவன் என்ற மிகப்பெருஞ் சக்தி உலகத்தோடும் உயிர்களோடும் ஒன்றுபட்டுப் பிரிவின்றி நிற்கும் நிலையை நாம் உணரக்கூடிய வகையில், "தானொரு கூறு சதாசிவன்" என்ற பாடல் அமைக்கப்பட்டுள்ளது என ஒரு கட்டுரை இந்த மலரில் பேசுகிறது.

"ஊன் பற்றிநின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே"

என்று வரும் இடம் பற்றியும் இங்கு பேசப்படுகிறது. மனதை ஆற்றுப்படுத்தவும், அமைதிப்படுத்தவும், சந்தோஷப்படுத்தவும் தரப்படும் நவீன உளவியல் பயிற்சி முறைகளில் "உன்னிப்பாயிருத்தல்" (Mindfullness) பயிற்சிகள் மிகச் சிறந்தவை. சாதாரண காலங்களில் இறைநாமம் ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்லி அமைதிநிலையைப் பயிற்சிப்படுத்திக் கொள்ளும்போது அந்த அக அமைதிக்கும் மந்திரத்திற்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. பின்னர் உணர்வுகள் கொந்தளித்து அமைதி தேவைப்படும் நேரங்களில் இந்த மந்திரத்தைச் சொன்னவுடன், அமைதி நிலைக்கு மீளுவது சுலபமாகிறது. இது வேதனைகளைத் தாங்கும் சிறந்த உத்திமுறை (Distress tolerance) என்ற கருதப்படுகிறது. திருமூலர் சொன்னதைப் புரிந்துகொள்ள எமக்கு மிக விரிவான கற்றல் தேவைப்படுகிறது.

மனித மனத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் முதற்காரணி "நல்ல மனித உறவுகளே" என்று பல நவீன ஆய்வுகள் நிறுவியுள்ளன. (பணமோ, பட்டமோ, பதவியோ, பல்திறமையோ இல்லை). அந்த உறவுகளில் மிக முக்கியமானது தாய்-பிள்ளை உறவு. தனது குழந்தை அல்லது குட்டிமீது முழுமையான அக்கறை கொள்கின்ற சுயநலமற்ற தாய் அன்பை விலங்குகள் பலவற்றில்கூடக் காணமுடியும். மனிதக் குழந்தை அந்த அன்பின் பெறுமதியைத் தனது கபடமற்ற, உளப்பூர்வமான சிரிப்பால் வெளிப்படுத்தும் கணம் சொர்க்க அநுபவத்தைத் தருவது. இத்தகைய "தாயினும் நல்லவன்" ஒருவன் இருக்கும்போது, அந்த அன்பை நாம் பெற முயலாமல் போவது அல்லது முடியாமல் போவது எவ்வளவு துர்ப்பாக்கியம் என்பதைத் திருமூலர் சிறப்பாக உணர்த்தும் "தீயினும் வெய்யன்" என்ற மந்திரம் பற்றி இன்னொரு கட்டுரை பேசுகிறது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்பது மேடைப் பேச்சாளர் பலருக்கும் கைகொடுக்கிற உயர்வு மந்திரம். இறைவன் எமக்கு அள்ளி வழங்கியிருக்கும் பேறுகளை அல்லது கொடுப்பனவுகளை ஒவ்வொன்றாக எண்ணி, இறைவனுக்கு நன்றி சொல்வது போன்ற அற்புதமான அநுபவம் வேறு இருக்கமுடியாது. "என்ன இல்லை" என்பதைப் பற்றிக் கடுமையாகக் கவலைப்படுகிற நாம் "என்னவெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது" என்று எப்போது எண்ணிப் பார்த்தோம்?

"கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்று ஔவை எண்ணிப் பார்க்கவில்லையா? கேட்காமலே தரப்பட்ட ஆசீர்வாதங்களை நினைத்துப் பார்த்தல் என்ற செயற்பாடு, பிறர்மீது எமக்குப் பொறாமை என்ற மறை உணர்வு வருவதைத் தடுக்கும் உன்னத எதிர்வினை (Opposite action) என்று ஆதாரங்களூடாகவும், பரிசோதனைகளூடாகவும் நிரூபித்துள்ள மருத்துவ உலகு, 1940-1950களில் இதைப்பற்றித் தனது நூலில் குறிப்பிட்ட - தனது இரவுநேர வகுப்புகளில் கற்பித்த டேயில் கானேகி (Dale Carnegie) என்ற அறிஞரை வியந்து போற்றுகிறது. கி.பி 5ஆம் நூற்றாண்டிலேயே அல்லது அதற்கு முன்னரே திருமூலர் இது பற்றிக் குறிப்புணர்த்தியிருப்பதை எடுத்துக்காட்டுவது தமிழராகிய எம் கடன்.

அணுவைப் பிளக்க முடியும் என்ற கருத்து 20ம் நூற்றாண்டிலேயே மேற்குலகால் ஆராயப்பட்டது. "அணுவில் அணுவை ஆயிரம் கூறிட்டு" என்று கூறிய திருமூலர் செய்தது பெரிய விஞ்ஞான நூல் என்றாலும் தப்பில்லை.

"ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின்றாரே"

என்பதை விடச் சிறந்த கல்விச்சிந்தனை வேறு எது? பிள்ளைகள் "ரியூசன் ரியூசன்" என்று ஓடுவதைவிடச் சுயகற்றலில் ஈடுபடுவது அவசியம் என்று 21ம் நூற்றாண்டில் நாம் கத்தவேண்டி வரும் என்று தெரிந்து சொன்னாரா?

யோகத்தினுடைய எட்டு உறுப்புக்களையும் தெளிவாகச் சொல்கிறது திருமந்திரம். சுவாசப் பயிற்சியும், யோகாசனப் பயிற்சியும் எல்லோருக்கும் தேவை என்ற கருத்து இன்று உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 'சர்வதேச யோகாதினம்' அனுஷ்டிக்கப்படும் நிலைக்குப் பரவி எமது பாடசாலைகளின் வாசல்வரை வந்துநிற்பது வரவேற்கத்தக்க விடயமே. ஆயினும் அதைப் பயில்பவர்களும், பயிற்றுவிப்பாளர்களும் இந்த நூலின் இறுதிப் பகுதியில் மலர் ஆசிரியரால் எழுதப்பட்டுள்ள "அட்டாங்க யோகம்" என்ற கட்டுரையைக் கருத்தூன்றி வாசிக்க வேண்டும்.

திருமூலரின் கருத்துப்படி, குறிப்பிட்ட பத்துக் குற்றங்களும் அற்ற தூய வாழ்வு வாழ்பவனே இயமநெறி நிற்போன். அத்துடன் நியமநெறி நிற்பார் இன்னும் பத்து நற்குணங்களும், பத்து நற்செயல்களும் உடையோராய் இருக்க வேண்டும். இயமமும் நியமமும் உடையோரே மூன்றாவது அங்கமாகிய யோக ஆசனம் செய்யத் தகுதி உடையோர். அத்தகைய தகுதியை அமைத்துக்கொள்ளாமல் உடலை வருத்திப் பயன் வராது என்ற உண்மையை மனதில் பதிக்க வேண்டும்.

"இயமம்" என்ற ஒரு சொல்லைப் புரிந்துகொள்ள மிக நீண்ட காலம் தேவை என்பது எனது பணிவான கருத்து. "இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி" என்று கூறும் திருமூலர் மனிதகுலம் தோன்றிய நாள் முதல் கோடிக்கணக்கான வருடங்கள் கூர்ப்படைந்து, மூளையின் முன்நுதல் சோணை" (prefrontal cortex) மிக விருத்தியுற்று மேலும் மேலும் இவற்றைப் பற்றிச் சிந்திக்கும், சிந்திக்க வேண்டும் என்று எண்ணியிருப்பார். "அண்ணல் அருளால் அருளும் சிவாகமம் எண்ணி இருபத்தெண்கோடி நூறாயிரம்" என்ற அவர் பாடல், அவர் பாடிய கோடிக் கணக்கான பாடல்களில் எமக்குக் கிடைப்பது 3000 பாடல்களா? அல்லது 3000 பாடல்களையும் புரிந்துகொள்ள இன்னும் கோடிக்கணக்கான பாடல்கள் தேவையா? என்ற கேள்வியை என்னுள் எழுப்புகிறது.

திருமந்திர விருந்து அறிஞர்களைச் சிந்திக்க வைக்கும். இதற்கு "அறிமுகம்" எழுத நேர்ந்தமை எனது தவம். திருமந்திரச் செல்வர்களை வணங்குகிறேன்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்
07.07.2019

# திருமந்திரக் கலைச்செல்வர் விருது பெறும் கலைஞர்கள்

01. **திருமதி கலைமகள் மகேந்திரன்**
    இலங்கை வானொலி மூத்த சமய நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
    திருமந்திர உரை இசை ஒலிப்பேழை நெறியாள்கை செய்தவர்

02. **சங்கீத வித்வமணி வைத்திலிங்கம் கணேசலிங்கம்**
    திருமந்திர உரை இசை ஒலிப்பேழை பாடியவர்
    சங்கீத ஆசிரிய ஆலோசகர்

03. **மிருதங்க வித்வமணி வைத்திலிங்கம் வேணிலான்**
    திருமந்திர உரை இசை ஒலிப்பேழையில் மிருதங்கம் வாசித்தவர்

04. **வயலின் வித்வமணி சண்முகநாதன் திவாகரன்**
    திருமந்திர உரை இசை ஒலிப்பேழையில் வயலின் வாசித்தவர்

05. **திருநெறிய தமிழிசைவாணி ஹம்சானந்தி தர்மபாலன்**
    திருமந்திர இசை விருந்தளிப்பவர்

06. **Dr. செல்லையா பாலசுப்பிரமணியம்**
    மனவளக் கலைப் பேராசிரியர்
    திருமந்திர விரிவுரையாளர்

07. **H.A. Chamara Lelum - Yaha Audioha**
    திருமந்திர உரை இசை ஒலிப்பேழை ஒலிப்பதிவாளர்,
    இலங்கை வானொலி ஒலிப்பதிவுக் கலைஞர்

08. **திரு. செல்லத்துரை ஸ்ரீகிருஷ்ணராசா**
    மூத்த நூற் பதிப்புக் கலைஞர் - இணுவில்
    திருமந்திர விருந்து - 1 - பதிப்பாளர்

# பொருளடக்கம்

## 1. வாழ்த்தும் வருபொருளும்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. ஆசியுரை | - | நல்லை சுவாமிகள் | iii |
| 2. ஆசியுரை | - | சிவஸ்ரீ குமாரராசக் குருக்கள் | iv |
| 3. வாழ்த்துரை | - | கலாநிதி ஆறு. திருமுருகன் | v |
| 4. திருமந்திர விருந்து... | - | பண்டிதர் வ. பேரின்பநாயகம் | vii |
| 5. முன்னுரை | - | சைவப்புலவர் சு. செல்லத்துரை | viii |
| 6. வாழ்த்துரை | - | Dr. செ. பாலசுப்பிரமணியம் | xi |
| 7. மதிப்புரை | - | அ. உமாமகேஸ்வரன் | xiii |
| 8. மதிப்புரை | - | உடுவை எஸ். தில்லைநடராசா | xiv |
| 9. அணிந்துரை | - | கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன் | xvii |
| 10. மதிப்புரை | - | சாந்தி நாவுக்கரசன் | xix |
| 11. அறிமுகவுரை | - | கோகிலா மகேந்திரன் | xxii |


## 2. பாயிரப்பகுதி


| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பாயிரம் | - | திரு. கா. வைத்தீஸ்வரன் | 01 |
| 2 | ஒன்றவன்தானே | - | திருமதி. ர. புஸ்பகாந்தி | 05 |
| 3 | போற்றிசைத்து இன்னுயிர் | - | செல்வி ஐ. மனோறா | 07 |
| 4 | சிவனொடொக்கும் தெய்வம் | - | திரு. ஸ்ரீ. கார்த்திகைக்குமரன் | 09 |
| 5 | அவரை ஒழிய அமரரும் இல்லை | - | திருமதி. உ. கலைச்செல்வி | 11 |
| 6 | தாயினும் நல்லன் | - | திருமதி. ம. இராசகுமாரி | 13 |
| 7 | உலகமுதல்வன் | - | திரு. கி வெள்ளைச்சாமி | 15 |
| 8 | அந்திவண்ணன் | - | திருமதி. மி. தங்கேஸ்வரி | 17 |
| 9 | வேதச்சிறப்பு | - | திரு. சா. பொன்னுத்துரை | 19 |
| 10 | பெற்றநல் ஆகமம் | - | திருமதி பொ. இந்திராணி | 21 |
| 11 | ஆகமச் சிறப்பு | - | திருமதி இ. சந்திரகாந்தா | 23 |
| 12 | குருமரபு | - | திரு. செ. நவநீதகுமார் | 25 |
| 13 | சிவமங்கை பங்கன் | - | திருமதி க. செல்வதி | 27 |
| 14 | என்னை நன்றாக | - | திரு. க. இறைவன் | 29 |
| 15 | இயற்றிகழ் சோதி | - | திரு. த. இரவீந்திரன் | 31 |
| 16 | அண்ணல்பெருமை | - | திருமதி நி. குஞ்சரா | 33 |
| 17 | தமிழ் மூவாயிரம் | - | திருமதி இ. பத்மினி | 35 |
| 18 | வந்தமடம் ஏழும் | - | திரு. இ. சசீந்திரன் | 37 |
| 19 | தானொருகூறு சதாசிவம் | - | செல்வி வீ. கிருபாதேவி | 39 |
| 20 | இறைவனின் கருணை | - | திருமதி இ. லலிதாராணி | 41 |

## ૩. முதல் தந்திரம்


| | | | | |
|---|---|---|---|---|
| 21. | திருமந்திரம் முதல் தந்திரம் | - | சைவப்புலவர் சு. செல்லத்துரை | 43 |
| 22. | உபதேசம் | - | திரு. கா. தம்பிராசா | 45 |
| 23. | யாக்கை நிலையாமை | - | திருமதி சி. பரமேஸ்வரி | 47 |
| 24. | செல்வம் நிலையாமை | - | திருமதி. பொ. திலகவதியார் | 49 |
| 25. | இளமை நிலையாமை | - | திரு. கு. சிவபாலராஜா | 51 |
| 26. | உயிர் நிலையாமை | - | செல்வி ச. கஸ்தூரி | 53 |
| 27. | கொல்லாமை | - | திருமதி நா. மனோன்மணி | 55 |
| 28. | புலால் மறுத்தல் | - | திரு. விஸ்வ மகாதேவன் | 57 |
| 29. | பிறன்மனை நயவாமை | - | திரு. க. சிவப்பிரகாசம் | 59 |
| 30. | மகளிர் இழிவு | - | திரு. சு. கணேசமூர்த்தி | 61 |
| 31. | நல்குரவு | - | திருமதி. நி. சத்தியதேவி | 63 |
| 32. | அக்கினி காரியம் | - | திருமதி. ஜெ. கோமதி | 65 |
| 33. | அந்தணர் ஒழுக்கம் | - | திரு. அ. குகதாசன் | 67 |
| 34. | இராசதோஷம் | - | திரு. வை. ஸ்ரீஸ்கந்தவரோதயன் | 69 |
| 35. | வானச்சிறப்பு | - | திரு. வை. கனகநாயகம் | 71 |
| 36. | தானச்சிறப்பு | - | திருமதி இ. கிருஸ்ணானந்தி | 73 |
| 37. | அறம் செய்வான் திறம் | - | திரு. ஆ. திருநாவுக்கரசு | 75 |
| 38. | அறம் செய்யான் திறம் | - | திருமதி லி. கணேஸ்வரி | 77 |
| 39. | அன்புடைமை | - | திரு. நா. தில்லைநாதன் | 79 |
| 40. | அன்பு செய்யாரை அறிவான் | - | திரு. க. கனகராசா | 81 |
| 41. | கல்வி | - | திருமதி. பு. சிறீஸ்வரி | 83 |
| 42. | கல்வி கேட்டமைதல் | - | திரு. ஆ. திருநாவுக்கரசு | 85 |
| 43. | கல்லாமை | - | திரு. கா. மனோநாயகம் | 87 |
| 44. | நடுவு நிலைமை | - | திரு. கா. வைத்தீஸ்வரன் | 89 |
| 45. | கள்ளுண்ணாமை | - | திரு. சி. நடராசா | 91 |
| 46. | ஆரோக்கியமான உடலில்.... | - | திரு. கா. வைத்தீஸ்வரன் | 93 |
| 47. | Thirumanthiram | - | திரு. விஸ்வ. மகாதேவன் | 95 |

## 4. சைவப்புலவர் சு. செல்லத்துரையின் கட்டுரைகளும் கலைப் படைப்புக்களும்


| | | |
|---|---|---|
| 01. | திருமூலர் காட்டும் சிவநெறி | 97 |
| 02. | அட்டாங்க யோகம் | 101 |
| 03. | புலனடக்கம் | 106 |
| 04. | திருமூலரின் மறைபொருள் கூற்றுக் கவியின்பம் | 110 |
| 05. | திருமூலர் வில்லிசை | 112 |
| 06. | திருமூலநாயனார் கதாப்பிரசங்கம் | 118 |
| 07. | திருமந்திர வினாவிடை - I | 121 |
| 08. | திருமந்திர வினாவிடை - II | 124 |
| 09. | திருமந்திரம் பிறந்த கதை - பாடலும் ஆடலும் | 127 |
| 10. | திருமந்திரப் பொன்மொழிகள் | 129 |
| | அழைப்பிதழ் | 131 |
| | நன்றி | 134 |

# திருமந்திரச்செல்வர் விருதுக்குரியோர் பெற்ற தகைமைகள்

சிவதீட்சை பெற்று இயமநியமம் பூண்டு விபூதி உருத்திராக்கம் தரித்துச் சைவாசார சீலராக வாழ்தல்.

திருமந்திர வகுப்புக்களுக்கு ஒழுங்காக வந்து கற்றமை

ஒப்படைகளை அவ்வப்போது எழுதித் தந்தமை

ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தமை

திருமந்திரத்தில் புலனடக்கம் - திருமந்திரம் கூறும் அறவாழ்வு - அட்டாங்க யோகம்

திருமந்திரப் பொன்மொழிகள் தொகுத்து எழுதியமை

திருமந்திர விருந்து மலருக்குத் கொடுக்கப்பட்ட தலைப்பில் அறிமுகக் கட்டுரை சமர்ப்பித்தமை.

சிவவழிபாடு கூறும் மந்திரங்களைத் தொகுத்தமை

திருமந்திர விநாடிவினா, திருமந்திர வினாக்களுக்கு மந்திரம் கூறல். திருமந்திர அந்தாதித் தொடை எழுதித் தேர்ந்தமை.

மேற்படி ஆற்றுகை போட்டிகளில் பங்குபற்றியமை.

அரங்கக் கலைகளில் - புராணபடனம், கதாப்பிரசங்கம், வில்லிசை பங்குபற்றியமை.

அட்டாங்க யோக சாதனைகளில் ஈடுபட்டமை.

தொடர்ந்து திருமந்திரம் முழுவதையும் பயின்று சாதனை செய்ய உறுதி பூண்டமை.

இங்கு குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் திருமந்திரச் செல்வர் விருது பெறுகின்றனர்.

# வெள்ளவத்தை ஓம் கிரியா பாபாஜி யோக ஆரணியத்தில் திருமந்திரம் பயின்ற திருமந்திரச் செல்வர்கள்



அமரர் மா. சத்தியவதனி
வெள்ளவத்தை



கா.வைத்தீஸ்வரன்
தெகிவளை



செ. நவநீதகுமார்
தெகிவளை



சா. பொன்னுத்துரை
வெள்ளவத்தை



க. இறைவன்
தெகிவளை



இ. லலிதாராணி
தெகிவளை



வீ. கிருபாதேவி
வெள்ளவத்தை



இ. பத்மினி
வெள்ளவத்தை



ம. இராசகுமாரி
வெள்ளவத்தை



கி. வெள்ளைச்சாமி
நுகேகொட



ஸ்ரீ. கார்த்திகைக்குமரன்
தெமட்டகொட



ஜ.மனோறா
கொழும்பு - 15



பொ. இந்திராணி
வெள்ளவத்தை



இ. சந்திரகாந்தா
வெள்ளவத்தை



ர. புஸ்பகாந்தி
வெள்ளவத்தை



உ. கலைச்செல்வி
வெள்ளவத்தை



மி. தங்கேஸ்வரி
வெள்ளவத்தை



க. செல்வதி
மொறட்டுவ



த. ரவீந்திரன்
வெள்ளவத்தை




திருமந்திரப் பணிமன்றம்,
கொழும்பு
11-08-2019



இ. சசீந்திரன்
தெகிவளை






நி. குஞ்சரா
கொட்டாஞ்சேனை

# திருமந்திரம் – பாயிரப்பகுதி
# அறிமுகக் கட்டுரைகள்

வெள்ளவத்தை ஓம்கிரியா பாபாஜி
ஆரணியத்தில் திருமந்திரம் பயில்கின்ற
திருமந்திரச் செல்வர்களின்
ஆக்கம்

உ
சிவமயம்

# திருமந்திரம் – பாயிரம் 01



## திருமந்திரம் - பாயிரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
திரு. கார்த்திகேசு வைத்தீஸ்வரன்
செயலாளர், சுகவாழ்க்கைப் பேரவை
தெகிவளை

திருமூலர் திருமந்திரத்தில் முதலில் இருப்பது பாயிரம். பாயிரம் எனப்படுவது இக்காலத்து முன்னுரை எனப்படுவதாகும்.

"ஆயிரம் முகத்தால் அகன்றதாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே"

என்பது இலக்கணம். பாயிரம் என்பது மனிதனுக்கு முகம் போன்றது. ஒருவருடைய முகத்தைப் பார்த்ததும் இவர் மகிழ்ச்சியுடன் இருக்கிறாரா, கோபத்தில் இருக்கிறாரா, ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாரா, சோகத்தில் இருக்கிறார, விரக்தியில் இருக்கிறாரா, என்பதை முகம் காட்டிவிடும். இதனையே நம் முன்னோர் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" எனச் சொல்லிவைத்தார்கள்.

அதுபோலத்தான் ஒரு நூலின் பாயிரத்தை - முன்னுரையைப் பார்த்ததும் இந்த நூலில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அறியமுடியும். முன்னுரையைப் பார்த்தால் இது தமக்குத் தேவைதானா என்பதை அறிந்து வாசகன் தொடர்ந்து படிப்பான். அதன் பயனை நுகர்வான்.

திருமூலர் தன் திருமந்திரப் பாயிரத்தில் திருமந்திரநூல் பற்றிய தகவல்களைத் தருகின்றார்.

"தந்திரம் ஒன்பது சார்பு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே" - (101)

என்று சொல்கிறார். இதன் மூலம் இது ஒன்பது தந்திரங்கள் எனும் பகுப்பினை உடையது. இவை மூவாயிரம் மந்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அத்தனையும் ஒன்பது ஆகமச் கருத்துக்களை அழகிய தமிழில் மந்திரங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறியமுடிகிறது. இந்த நூல் எதைப்பற்றிச் சொல்கிறது எனும் வினாவுக்கு விடையாக,

"வைத்தபரிசே வகைவகை நன்னூலின்
முத்திமுடிவிது மூவாயிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவாயிரம் பொது
வைத்த சிறப்புத் தரும் இவைதானே. - (100)

இந்த நன்னூலில் வகை வகையாக ஒன்பது தந்திரங்களாகச் சொல்லப்பட்டிருப்பது வாழ்வின் முடிந்த முடிவாகிய முத்தியைப் பற்றியதே. இறையருளால் புத்திபூர்வமாகச் சொல்லப்பட்ட மூவாயிரம் மந்திரங்களில் முதற்பகுதி பொதுவும் இறுதிப்பகுதி சிறப்பும் ஆகும் என விளக்கமும் சொல்கிறார். இந்த நூலைப் பாடியவர் யார், இவரது குரு யார், இந்த நூலை எப்படிப் பயன்கொள்ள வேண்டும், இதன் நூற்பயன் யாது என்பதற்கு விளக்கமாக,

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே. - (99)

என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

திருமந்திரத்தைத் தந்தவர் திருமூலர். அவருக்கு நந்தியெம்பெருமான் ஆகிய சிவபெருமான் உள்நின்று இந்த உலகத்தவர் அறியும்படி உணர்த்த உரைக்கப்பட்டது. இதனைக் காலையில் எழுந்தவுடன் பொருளுணர்ந்து ஓதிவந்தால் இந்த உலகத்தின் தலைவனாகிய முழுமுதற்பொருளாம் சிவபெருமானை அடைந்து என்றும் பேரின்பத்தில் திழைத்திருக்கலாம் என நூற்பயனும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பாயிரம் கடவுள் வாழ்த்து தொடக்கம் திரிமூர்த்திகள் வரை ஒன்பது பகுதிகளாக 112 மந்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை,

1. கடவுள் வாழ்த்து
2. வேதச் சிறப்பு
3. ஆகமச் சிறப்பு
4. குரு பாரம்பரியம்
5. திருமூலர் வரலாறு
6. அவை அடக்கம்
7. திருமந்திரத் தொகைச்சிறப்பு
8. குருமட வரலாறு
9. திரிமூர்த்திகள்

இப்பாயிரத்தைக் கொண்டு திருமந்திரம் பற்றிய செய்திகள் யாவற்றையும் அறிய முடிகிறது. மேல்வரும் ஒன்பது தந்திரங்களும் இந்த நூலின் உட்பொருளாக அமைந்துள்ளன.

முதல் தந்திரத்தில் வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத அறங்கள் (ஒழுங்கங்கள்) கூறப்படுகின்றன.

இரண்டாம் தந்திரத்தில் இறைவனது இயல்பும் பெருமையும் கூறப்படுகின்றன.

மூன்றாம் தந்திரத்தில் இறைவனை அடைவதற்குரிய யோக நெறிகள் விளக்கப்படு கின்றன.

நான்காம் தந்திரத்தில் கிரியை முறையில் சக்கரங்களை வைத்து வழிபடும் முறைகள் காட்டப்படுகின்றன.

ஐந்தாம் தந்திரத்தில் சமய பேதங்களைக் கூறிக் குருநெறியே சிறந்த நெறியென உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆறாம் தந்திரத்தில் குருநெறி என்ன என்பதையும் சிவனே குருவாக வருவான் என்பதையும் கூறுகின்றார்.

ஏழாம் தந்திரத்தில் சீவர்களது உடலில் சூக்குமமாயுள்ள ஆறு ஆதாரங்களிலும் இறைவனைத் தியானித்து மேற்சென்று இறைவனை அடையும் நெறியையும் விளக் கங்களையும் பூசிக்கும் முறையையும் கூறுகின்றார்.

எட்டாம் தந்திரம் சாத்திரப் பகுதியாக அமைந்துள்ளது.

ஒன்பதாம் தந்திரத்தில் பஞ்சாட்சர செபத்தால் திருக்கூத்துத் தரிசனம் பெற்றுச் சத்திய ஞானானந்த நிலை கைகூடுவதைக் கூறுகின்றார்.

பாயிரத்துக்கு முன்னதாக விநாயகர் காப்புப்பாடல் அமைந்திருக்கின்றது. இது திருமூலரால் பாடப்பட்டதல்ல. பிற்காலத்தில் யாராலோ எழுதிச் சேர்க்கப்பட்டது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

திருமந்திர நூல்களிலே விநாயகர்காப்பு எனும் தலைப்பில் இந்தப் பாடல் உள்ளது. எனினும் இது திருமந்திர எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. இக்கால நூல் வழக்கப்படி நூலுக்கு ஏற்புடைக் கடவுள் வணக்கம் என்றவகையில் ஞானநூல் ஆகிய திருமந்திரத்துக்கு ஞானக் கொழுந்தாகிய விநாயகர் காப்பு பொருத்தமானதே என அறிஞர் உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது எனலாம்.

விநாயகர் காப்பு

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.**

துதிக்கையோடு கூடிய ஐந்து கைகளை உடையவனும், யானை முகத்தை உடையவனும், இளம் பிறைச்சந்திரனைப் போன்ற தந்தத்தை உடையவனும், சிவனது

குமாரனும், ஞானச் சிகரமாக விளங்குபவனும் ஆகிய விநாயகக் கடவுளை அறிவினில் வைத்து அவன் திருவடிகளைத் துதிக்கின்றேன்.

தொடர்ந்து இந்த ஒன்பது பகுதிகளுக்கும் இலகுவான விளக்கமாகக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. திருமந்திரச் செல்வர்கள் ஒவ்வொரு தலைப்பிலும் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்தும், ஒரு மந்திரப் பொருளை விரித்தும் கட்டுரையாக்கித் தந்துள்ளனர்.

எம்மவர்க்கு எட்டாக்கனியாக இருந்த திருமந்திரத்தை எல்லோரும் படித்துப் பயன்பெற வைக்க வேண்டும் எனும் நோக்குடன் பக்கவாத்தியங்களுடன் உரை இசை ஒலிப்பேழையாக வெளியிட்டுவரும் திருமந்திரப் பணி மன்றத்தின் மற்றுமோர் பணியே இந்தத் திருமந்திர விருந்து - 1 எனும் மலர் ஆகும்.

திருமந்திரப் பணி மன்றத்தின் தலைவரான சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் கொழும்பிலும், இணுவிலிலும் தான் நடத்தும் திருமந்திர வகுப்புக்களில் திருமந்திரம் பயிலும் பயிலுநர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களில் தேர்ந் தெடுக்கப்பட்டவர்களுக்கு "திருமந்திரச் செல்வர்" விருது கொடுத்து அவர்களால் எழுதப்பட்ட சிறு விளக்கக் கட்டுரைகளைத் தொகுத்து திருமந்திர விருந்து - 1 எனும் மலர் வெளியிடப்படுகின்றது. இந்த மலர் எல்லோர்க்கும் திருமந்திரம் எட்டாக் கனியல்ல "உள்ளங்கை நெல்லிக்கனி" ஆகும். சுவைத்துப் பயன்பெற வாரீர் என அழைக்கும் வகையில் அமைந்துள்ளது. இதை வாரியுண்ண வாரீர்.



உ
சிவமயம்

# ஒன்றவன்தானே

## 02



கடவுள் வாழ்த்தில் உள்ள ஐம்பது மந்திரங்களில் முதலாவதான "ஒன்றவன்தானே" எனத் தொடங்கும் மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி புஸ்பகாந்தி ரவி**
கொழும்பு

இறைவன் ஏகனாகவும், அனேகனாகவும் எங்கும் பரந்து இருக்கிறார். பரமசிவன் ஒன்றாயும், சிவனும் அவனுடைய இன்னருளும் எனும் இரண்டாயும் அவனும் அவனின் இன்னருள் என்று இரண்டும் சேர்ந்து இரண்டவன்தானே என்றும் ஒருவனாக இருப்பவன் தனது சிருட்டியின்மீது இன் அருளைப் பொழிவதற்காகத் தன்னில் இருந்து அருளைப் பிரித்து அதற்கு "சக்தி" எனப் பெயர் சூட்டி இருபொருளாய்த் தோன்றியுள்ளான். ஆதலினால் இரண்டவன் ஆகினான். அறக்கருணையும், மறக்கருணையும் என அவனருள் இரண்டெனவும் பொருள் கொள்ளலாம். கசக்கும் மருந்தும் இனிக்கும் மருந்தும் நோய் நீக்கமாகிய ஒரே பயனை அளிக்கின்றமையினால் மருந்து என்பது ஒன்றேயன்றி வேறாகாமை போல இருவகைக் கருணையும் ஒரே பயன் தருதலினால் அருளை இரண்டாகக் கூறலாம்.

"ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க" என மாணிக்கவாசகர் கூறியுள்ளார். இறைவன் இரு உருவாயினன். தனது உடலை இரண்டாகப் பிரித்து அதிலிருந்து சிவனும் சக்தியுமாகவும், நாதம் விந்து ஆகவும், ஒலி ஒளி ஆகவும் இரண்டும் தாதான்மியமாகச் சேர்ந்தே இருக்கும். இவை அனைத்தும் இரண்டவன் இன்னருள் என்பதை விளக்கும்.

"மூன்றினுள் நின்றான்" என்றது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் அவரவர் தொழிலாகிய படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யவும் இறைவன் மூன்றாகி நின்றான். மூவர்களின் குணங்கள் அனைத்தும் சிவத்துக்குள்ளே அடங்கும் எனவே சிவன் மூன்றினுள் நின்றான் எனப் பொருள் கொள்ளலாம்.

"நான்குணர்ந்தான்" என்பதற்கு "வேதங்கள் நான்கினும் "நாதன் நாமம் நமச்சிவாயவே" நான்கு வேதங்களாகிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய வேதங்களினால் உரைக்கப்பட்டவன். "ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" ஐயனே என அழைக்கவும் அவற்றுக்கெல்லாம் எட்டாத மேல் உயர்ந்தும் கீழ் ஆழ்ந்தும் பரந்தும் நுட்பமான பொருளாய் உள்ளவன்.

"ஐந்து வென்றான்" ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் ஆகியவற்றை வென்றவன். ஐந்து பொறிகளும் தத்தமது புலன்களில் சென்று உழலாமல் அவற்றை எல்லாம் அடக்கியவன். ஐம்புலக்கள்வரை அடக்கி வென்றவன்.

"ஆறு விரிந்தனன்" ஆறு ஆதாரங்கள் ஆகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை ஆகிய ஆதாரங்களையும் முறையே அவற்றுக்கு உரிய விநாயகர், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்ற மூர்த்திகளாகவும் விளங்குகின்றான். அங்ஙனம் அன்றி பிரத்தி, பிரத்யாகாரம், துல்யம், துல்யாதீதம், வித்தை, அவித்தை என்ற ஆறு பதங்களிலும் விரிந்தவன் என்றும் கொள்வர். மந்திரம், பதம், வன்மை, புவனம், தத்துவம், கலை என்ற ஆறு அத்துவாக்களாகவும் விரிந்துள்ளான் என்றும் பொருள் கொள்வர்.

"ஏழும்பர்ச் சென்றான்" மேற்கூறப்பட்ட ஆறு ஆதாரங்களையும் கடந்து ஏழாவதாகிய சகஸ்ராரத்தளத்தில் விளங்குபவனும் உலகத்தினையும் கடந்தவன் எனவும் பொருள் கொள்வர்.

"எட்டு உணர்ந்திருந்தான்" அட்ட மூர்த்திகளாகிய மண், புனல், அனல், கால், வெளி, சூரியன், சந்திரன், ஆன்மா என்கின்ற அட்டமூர்த்தி சொரூபமாக உணரப்பெற்று அவற்றுள் கலந்துள்ளான்.

இவ் எட்டுக்குள்ளும் இறைவன் வியாபித்துள்ளான் என்பதை எடுத்துக்காட்ட திருமூலநாயனார் முதலாவது திருமந்திரத்தில் இறைவன் எல்லாவற்றிற்கும் தலைவன் என்பதை அருளியுள்ளார். இம் மந்திரம்,

**ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. - 01**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. புஸ்பகாந்தி ரவி |
| விலாசம் | : | 18/2 ஹாமஸ் அவனியு - வெள்ளவத்தை |
| பிறப்பு | : | 1964.02.03 |
| தே.அ.அ | : | 645341295V |
| கல்வி | : | க.பொ.த உயர்தரம் |
| பணி | : | யோகா பயிற்றுவிப்பாளர், ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்யம்,<br>யோகர்சுவாமிகள் திருவடிநிலைய நிர்வாக உறுப்பினர்,<br>ஐஸ்வர்ய அம்மன் கோயில்<br>டோன் தெரப்பி உதவி ஆசிரியர் |

உ
சிவமயம்

# போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதன் 03



கடவுள் வாழ்த்தில் உள்ள ஐம்பது மந்திரங்களில் இரண்டாவதான "போற்றிசைத்து" எனத் தொடங்கும் மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**செல்வி. மனோறா ஐயாத்துரை**
கொழும்பு

திருமூலநாயனார் தனது திருமந்திரப் பாயிரத்தின் முதற்பாடலின் கடவுள் வணக்கத்தைக் கூறும்போது, அதில் இறைவனது வடிவம், ஆற்றல், தொழில் வியாபகம் முதலியவற்றைத் தெளிவுறத் தந்துள்ளார். அத்தகைய மேன்மைவாய்ந்த இறைவன் இனிமையான தூய உயிரில் பொருந்தி அதனிடத்தே உள்ள அஞ்ஞான இருளைப் போக்கி ஞானவொளியைக் கொடுப்பதினால் தானும் அவரைப் போற்றி இசைத்து வழிபடுவதாக இரண்டாம் பாடலில் பின்வருமாறு அமைத்துள்ளார்.

"போற்றிசைத்து இன்னுயிர் மன்னும்புனிதனை
நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதனைப்
மேற்றிசைக்குள் தென் திசைக்கொரு வேந்தனைக்
கூற்றுதைத்தானை யான் கூறுகின்றேனே" - 02

திருமந்திரத்தைக் கலிவிருத்த யாப்பிலே யாத்துள்ளார்.

நான்கு திசையொடும் பொருந்தி, அப்பெயரை முதற்கொண்டு திகழும் கோணத் திசை நான்கு. அவையாவன தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆகும். இறைவனானவன் இதன்கண் உயிர்களுடன் சேர்தல், செறிதல், அவைகளைச் செலுத்துதல் என்னும் முப்பண்புகள் முறையே புனிதன், நாதன், வேந்தன் என்று குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

ஒப்பில்லாத சிவபெருமான் ஒருவனே அனைத்து உயிர்களினாலும் போற்றுதற்குரியவன், தூயவுடம்பினன். அச்சிவன் அனைத்து உயிர்களுக்கும் இன்னருள் புரிகின்ற ஆதிசக்திக்குத் தலைவன்.

வடதிசை, தென்திசை இரண்டும் உயர்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன. அவற்றில் தென்திசையே சிறந்தது. உயிர்களுக்குப் போகத்தைக் கொடுக்கின்ற

புண்ணியனான சிவன் தென்திசைக்குத் தலைவனாகத் திகழ்கின்றார். இவனைத் தொன்மைத் தமிழர்கள் வேந்தன் என்று வழிபட்டனர்.

நாற்றிசைக்கும் என்றது உலகம் முழுவதற்கும் ; இறைவனுக்கு உலகத்தோடு தொடர்பு அவனது திருவருட்சக்தி வழியாதலின் "நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை" என்றார். அவளைக்கொண்டே அறக்கருணை, மறக்கருணையாகிய இரண்டு செயல்களையும் செய்விக்கின்றார்.

"அவன் கூற்றுதைத்தான்" என்று இறைவனைப் பொதுப்படக் குறிப்பிடப் பட்டுள்ளது. "மாதுக்கு நல்லான்" என்று சிவனைச் சிறப்பு வகையால் அழைக்கப் பட்டுள்ளது. "புனிதன், நாதன், வேந்தன்" என்பன சிவனது பெருமைகளைப் பேசுகின்றன. சிவனது பெருமையைக் கூறுவதற்காகவே இப்பாடலைத் திருமூலர் அமைத்துள்ளார். இதுவே அவரது நூலான திருமந்திரத்தின் நுதலிய பொருளாகும்.

போற்றிசைத்துக் கூறுகின்றேன் என்றமையால் கூறும் முறைமை பெறப்படு கின்றது. யமன் தன் கடமையைக் காலம் தவறாது செய்பவன். மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு என்று பிரமதேவனால் கால எல்லை வரையறுக்கப்பட்டே மிருகண்டு முனிவருக்கு மகனாகப் பிறந்தான். அவனுக்கு வயது பதினாறு நிரம்பியதும் தருமராசனின் கட்டளைப்படி யமன் தன் கடமையாகிய அவனது உயிரைக் கவரச் சென்று பாசக் கயிற்றை வீசியபோது சிவனது இடதுகாலால் உதைக்கப்பட்டான். மார்க்கண்டேயன் தன் தூய தவத்தால் என்றும் பதினாறு வயதுடைய சிரஞ்சீவி என்ற வரம் பெற்றான். அருளே வடிவான உமையம்மைக்குரிய சிவனின் இடதுகாலால் யமன் உதைக்கப்பட்டு வீழ்த்தப்பட்டாலும் அம்மையின் அருளுக்குப் பாத்திரமானான். இதனால் சிவனின் அறக்கருணையும் மறக்கருணையும் ஒருங்கே வெளிப்படையாக விளங்குகின்றன.

வாழ்த்து வணக்கம் வரும்பொருள் உரைத்தல் பாயிரத்திலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடலில் காணப்படுகின்ற முக்கிய அம்சங்களாகும். இவை "போற்றி இசைத்து கூற்றுதைத்தான்" என்ற தொடரினால் குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளமை திருமந்திரத்திற்குரிய தனிச்சிறப்பாகும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி. மனோறா ஜயாத்துரை |
| விலாசம் | : | 90/30 ஸ்ரீவிக்கிரமபுரம் - கொழும்பு -15 |
| பிறப்பு | : | 1946.10.09 |
| தே.அ.அ | : | 467830279V |
| தொ.பே | : | 0757614094 |
| கல்வி | : | க.பொ.த விஞ்ஞானம், பண்ணிசை வட. இல. சங்கீதசபை. 4ம் தரம் |
| தொழில் | : | வைத்தியசாரணி ஓய்வு |
| பட்டம் | : | சித்தாந்தரத்தினம், திருமுறை நெறிச்செல்வர், இளஞ்சைவப்புலவர், தமிழ்ப் பட்டயக் கல்வி ஊடகவியல் |
| பணி | : | அறநெறிப்பாடசாலை, பஜனை, சமூகசேவை |

உ
சிவமயம்

# சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை 04



கடவுள் வாழ்த்தில் உள்ள ஐம்பது மந்திரங்களில் "சிவனோடொக்கும் தெய்வம்" எனத் தொடங்கும் மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திரு. ஸ்ரீ கார்த்திகைக்குமரன் சரவணமுத்து**
கொழும்பு

சிவம் என்றால் என்றும் உள்ள நிலையான செம்பொருள். மங்களம், தன்மேல் ஒருவன் இல்லாதவன் எனும் கருத்துக்களுடன் சிறப்பாக அன்பு, இனிமை எனப் பொருள் தரும்.

சிவனைத் தலைவனாக, முதல்வனாகக் கொண்ட நெறி "சைவநெறி". இந்நெறியை 28 ஆகமங்கள் ஊடாக வகுத்தவர் சிவன். இவை சிவனை அடையும் வழிமுறைகளைக் கூறுகின்றன.

**சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை**
**புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னுந்**
**தவனச் சடைமுடித் தாமரை யானே** - (திருமந்திரம் 5)

இப்பாடலின் முதல் இருவரிகளிலும் சிவபரத்துவம் பேசப்படுகின்றது. மூன்றாம் வரி தடத்த நிலையும் நான்காவது வரி சொரூப நிலையும் கூறுகின்றன.

மேலே கூறிய சிறப்பு இயல்புகளைக் கொண்ட இறைவனை (சிவனை) "சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை அவனோடொப்பார் இங்கு யாவரும் இல்லை" என்னும் தன்மைகளைத் திருமூலர் இவ்வாறு கூறுகின்றார்.

சிவனின் ஒப்பார் மிக்கார் அற்ற செயற்பாட்டைச் சம்பந்தர் தமது திருப்பெருந்துறைப் பதிகத்தில் (1-42-2-4),

**"மூவரும் ஆகி இருவரும் ஆகி**
**முதல்வனுமாய் நின்ற மூர்த்தி**
**பாவங்கள் தீர்த்த நல்வினை நல்கிப்**
**பல்கண நின்று பணிய..."** என்கின்றார்.

**புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடை முடித்தாமரையானே!**

இவ் ஈற்றடிகளின் முதல் அடி மூலம் சிவப்பரம்பொருள் அனைத்துக்கும் அப்பாற்பட்டு நிற்கும் நிலையைக் கூறுகின்றார். ஈற்றடியில் இறைசிவத்தின் சொரூபம் பேசப்படுகின்றது. பொன்னொளி மின்னும் தவனச்சடை முடி என்கின்றார் இறை சடைமுடியை.

இறைவனது சடைமுடி ஞானத்தைக் குறிப்பது. இந்த ஞானமுடிக்கற்றை பொன்னொளிபோல் ஒளி விளங்குகின்றது. இறைவன் ஞான ஒளிவடிவத்தினன். திருமுறைகள் "சோதியே சுடரே" என்றும் "ஒளிவளர் விளக்கே" மற்றும் "கற்பனை கடந்த சோதி" எனவும் பலவாறாகச் சிவனைப் போற்றுகின்றன.

எனவே அத்தகைய ஞான ஒளிவடிவினனான இறைவன் தாமரையில் அமர்ந்துள்ளான் என்கின்றார். இத்தாமரை எங்குள்ளது? நம் சிரசில் உள்ளது. இதைத் திருமூலநாயனார்.

**"ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே"** - திருமந்திரம் 85

நிட்டைகொள்ளும் யோகியரும் ஞானியரும் குண்டலினியை ஆறு ஆதாரங்களினால் எழுப்பி நிலை நிறுத்திப் பின் ஏழாம் நிலையான ஆயிரம் தாமரை இதழ் கொண்ட சகஸ்ரதளம் அல்லது பிரமரந்திரத்திற் செலுத்தி ஒளிமயமான இறையோடு ஐக்கியப்பட்டு சமாதிநிலை நிற்பர். வாகீசப் பெருந்தகை தமது திரு அங்கமாலையில்,

**"தேடிக் கண்டுகொண்டேன் - திரு**
**மாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே**
**தேடிக் கண்டுகொண்டேன்"**

என்றும் மேலும் திருக்காளத்தி திருத்தாண்டகத்தில், "மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்" என்கின்றார்.

**செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா**
**அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.** - சிவஞானபோதம் 12


| | | |
|---|---|---|
| பெயர் | : | Dr. ஸ்ரீ கார்த்திகைக்குமரன் சரவணமுத்து |
| விலாசம் | : | ஸ்ரீசாய் இல்லம், 127/108 ஸ்ரீ தர்மராம வீதி - கொழும்பு - 9 |
| பிறப்பு | : | 1956.11.16 |
| தொ.பே | : | 0112691530 - 0777639554 |
| கல்வி | : | மருத்துவப் பட்டப்படிப்பு, உளவளத்துணை டிப்புளோமா |
| தொழில் | : | மருத்துவம் |
| பட்டங்கள் | : | சித்தாந்தரத்தினம், திருமுறை நெறிச்செல்வர், சைவப்புலவர் |
| பணி | : | சமயப் பிரசங்கம், கட்டுரை எழுதல் |

உ
சிவமயம்

# அவனை ஒழிய அமரரும் இல்லை

## 05



கடவுள் வாழ்த்தில் உள்ள ஐம்பது மந்திரங்களில்
"அவனை ஒழிய அமரரும் இல்லை" எனத் தொடங்கும்
மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி. கலைச்செல்வி உத்தமன் வைரவநாதன்**
கொழும்பு

சிவபெருமானே முழுமுதற்கடவுள். அவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைவன். அகத்திலும் புறத்திலும் அவரை மிஞ்சியோர் இல்லாத தலைவன்.

**"சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை"**

திருமாலும் பிரமனும் காணமுடியாத சிறப்பினை உடையது இறைவனின் வடிவம். பன்றி உருக்கொண்டு திருமாலும் அன்னப்பறவையாக பிரமனும் ஆணவத்துடன் அடி முடி தேடிக் காணமுடியாது போயிற்று. சிவன் அகண்ட வியாபகம் கொண்டவர்.

ஆறு ஆதாரங்களின் மேல் ஏழாவது இடமாகிய சகஸ்ரதளத்தில் விளங்குபவனும், மூவர்களையும் ஐவர்களையும் வேறாயும் உடலில் விளங்குபவனும் சிவன் ஒருவனே. தேவர்களுக்கெல்லாம் தலைவன் தேவாதி தேவன் சிவன்.

**"ஓடி வந்தெல்லாம் ஒடுங்கிய தேவர்கள்**
**வாடி முகமும் வருத்தத்துந் தாஞ் சென்று..."**

பாற்கடலைக் கடைந்தபோது வாசுகிப்பாம்பு நஞ்சை உமிழ அவ் ஆலகால விஷம் தேவர்களைத் துரத்தத் தேவர்கள் ஒருமைப்பட்டுச் சிவனிடம் ஓடிவந்து சரணடைய சிவன் அந் நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தான்.

சிவனுடன் சம்பந்தமாவது சைவம். இது சிவநெறி, சிவநெறி நின்று அகப்புற வழிபாடு செய்து சிவனுடன் கலந்து சாயுச்சிய முக்தி பெறுவதே வாழ்வின் பயனாகும். இது பரமுக்தி எனப்படும். தக்கன் சிவனிடம் பல வரங்களைப் பெற்றவன். சிவனை நிந்தித்துச் சிவனை இணையாமல் யாகம் செய்தான். யாகம் புண்ணியச் செயலென் றாலும் சிவனை இணையாமையினால் யாகம் அழிந்தது. எவ்வித வழிபாடும் முழுமுதற்

கடவுளாகிய சிவனை நினைத்துச் செய்தால் பயன் தரும். பரம்பொருளாகிய சிவனை நினையாமல் செய்யும் செயல் எவ்வளவு உயர்ந்ததாயினும் பயன் தராது. மார்க்கண்டேயர் சிவலிங்கத்தின் முன்னால் நின்று சிவபூசை செய்தார். இயமனாலும் அவர் உயிரை எடுக்க முடியவில்லை. பதினாறு வயதுடன் சிவனின் திருவடியின் கீழிருக்கும் பேறு பெற்றார். சண்டேஸ்வரர் இவர் விசாரசருமர், மணலில் சிவலிங்கமமைத்துச் சிவனை நினைத்துப் பாலாபிஷேகம் செய்து வழிபட்டார். இதனைத் தடுத்த தந்தையின் கால்களைத் துண்டித்தார். இது பாபச் செயலாயினும் சிவனிடம் அன்புகொண்டு செய்த பூசையினால் பயன் கிடைத்து சண்டேஸ்வரர் பதவியுடன், தந்தையின் கால்களும் திரும்பக் கிடைத்தன.

சிவபெருமானைத் தம் உள்ளத்துள் வைத்து எந்நேரமும் வழிபடுபவர்கள் சிவனடியார்கள். சிவனின் திருவடிகளைத் தம் உள்ளத்தில் வைத்திருப்பார்கள்.

**"திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே"**

எனவும் "சிவசிவ என்னச் சிவகதிதானே" என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

**அவனை ஒழிய அமரரும் இல்லை**
**அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை**
**அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை**
**அவனன்றி ஊர்புகு மாறறி யேனே** - திருமந்திரம் 6

சிவனைக் காட்டிலும் மேலான தேவர்கள் ஒருவருமில்லை. சிவனில்லாது செய்யும் அருந்தவமுமில்லை. சிவனே எத்தொழிலையும் புரிகின்றார். பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்களாலும் சிவனின்றி செய்வது ஒன்றுமில்லை. வீடுபேறு, மோட்சமும் சிவனில்லாது கிடைக்கமாட்டாது.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. கலைச்செல்வி உத்தமன் வைரவநாதன் |
| விலாசம் | : | 19, 6/3 42ஆவது லேன் - கொழும்பு - 6 |
| பிறப்பு | : | 1968.07.31 |
| தே.அ.அ | : | 687130998V |
| கல்வி | : | க.பொ.த உயர். விஞ்ஞானம் |
| பணி | : | யோகா பயிற்றுவிப்பாளர், சிவயோக சுவாமி திருவடிப்பணி |
| | | இசைத்துறை |
| | | கட்டுரைகள், செய்திகள் எழுதுதல் |

உ
சிவமயம்

# தாயினும் நல்லவன்

06



கடவுள் வாழ்த்தில் உள்ள ஐம்பது மந்திரங்களில்
"தீயினும் வெய்யன்" எனும்
மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி. இராசகுமாரி மகேந்திரராசா**
கொழும்பு

மாணிக்கச் செவ்வொளியாகிய சிவபெருமான் இன்ப இயல்பினன். அவனே உள்ளும் வெளியும் காவலாய் நிற்கின்றான். அன்பின் புகலிடமென்பதால் அவனே உடலாகிறான். அவனால் தோற்றுவிக்கப்பட்ட உலகம் மாறிக்கொண்டேயிருந்தாலும் அவன் நிலையானவன். முனிவர்களுக்கு முதல்வன். அன்பினுள்ளாய் வீற்றிருப்பவன். யாவர்க்கும் யாவைக்கும் காரணமான அடைதற்கரிய அரும்பொருள். தேவர்க்கும் மங்காத ஒளியாய்த் திகழ்கின்றான்.

சிவபெருமான் மாணிக்கச் செவ்வொளியாகவும் அன்னை மரகதப்பச்சை ஒளியுடனும் கலந்து விளங்குபவர். அம்மையே அப்பனுக்குத் திருமேனி ஆயினாள்.

> தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
> ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை
> சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்
> தாயினும் நல்லன் தாழ் சடையோனே. - திருமந்திரம் 8

### தீயினும் வெய்யன்

சிவபெருமானே தீயினுக்கும் ஒளிகொடுக்கும் செந்தீயாவான். அவனே உடலை அளித்து உடலில் அக்கினியை மிகாமல் அளவுடன் அமைத்தருளினான். பூலோகம் முதலிய ஏழுலகங்களையும் அழியாதவாறு அக்கினியை வைத்தான்.

### புனலினுந் தண்ணியன்

தண்மையான பொருள் நீர். அதனிலும் அன்பர்க்குத் தண்ணியன் இறைவன் என்பதாம். தானே மழையைப் பொழிகின்ற திருவருட்சக்தியாகவும் உள்ளான். நமக்கு அன்புடன் அருள் வழங்குவதில் தண்ணீரைவிடக் குளிர்ச்சியாகவும் இருந்துங்கூட அவனுடைய அருளின் அளவை உள்ளபடி அறிகிறவர்கள் இல்லையே என்று உருக்கத்தோடு வருந்திக் கூறுகிறார்.

**சேயினும் நல்லன்**

குழந்தையினுடைய உள்ளம் அன்புமயமானது. கணக்குப் போட்டுப் பார்த்து லாபம் கருதி வழங்குகிற அன்பு இல்லை அது. எனவே நல்ல என்ற அடைமொழியோடு சொல்லக்கூடிய அன்பு குழந்தையின் அன்பே. அந்த நல்லன்பைவிட நல்ல அன்பு இறைவன் நம்மிடம் செலுத்துகிற அன்பு. ஏனென்றால் குழந்தையின் அன்பு வயது முதிர்ந்ததும் மாறுதல் அடையும் தன்மைகொண்டது. இறைவன் அன்பு வளர்ந்து கொண்டேபோவது.

**தாயினும் நல்லன்**

குழந்தையினுடைய துயரைத் துடைக்கும் வழி குழந்தைக்குத் தெரியாது. எது வேண்டும், எது நல்லது என்று அறிந்துகொள்ள இயலாத குழந்தைக்கு அதன் இயல்பும் அதன் நலமும் அறிந்து அன்பைச் சொரிகிறாள் தாய். அந்தத் தாயன்பைவிடச் சிறந்ததொரு அன்பு இறைவனுடைய அன்பு. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து என்பர் மாணிக்கவாசக சுவாமிகள்.

**அணியன் நல் அன்பர்க்கு**

சிவன் விளங்கும் பெருவெளியில் ஆன்மா அடங்கிய விதமும் உயிரொளியும், சிவ ஒளியும் ஒன்றிய விதமும் தம் அறிவால் அறிந்து தெளிந்தவரே சிவசித்தராவர். தன் உணர்வில் தங்கி ஒப்பிலா இன்பம் ஊட்டும் உண்மையை யாரறிவார். வண்ணமலரும் வாசமும் போல அவள் அண்ணலுடன் பொருந்தி இனிதாய் வீற்றிருக்கிறாள்.

**தாழ்சடையோனே**

இத்தகைய குணங்களையும் கூறிக்கொண்டே வருகிற முனிவர், அந்தக் குணங்களுக்கெல்லாமான நிலையமாகத் திகழும் பரமேசுவரனைக் கண்முன்னே கொண்டு நிறுத்தி வழிபடுகிறார். பசும்பொன்னாற் செய்து முறுக்கிவிடப்பட்டது போன்ற அழகிய சடை முதுகிற் கிடந்து விளங்க இருந்தவன் அவன் பெயர் யாதோ எனின் நந்தி என்பது. அவனது பரிசு யாதோ எனின் என்னால் தொழத்தக்கவன் எமக்குத் தலைவன். அவனால் தொழத்தக்கவர் யாரும் இல்லாதவன் என்றவாறு.

என்னால் என ஒருமையும், எம் இறை எனப் பன்மையும் இயையக் கூறியது அவனியல்பு அறிந்து வணங்குவேன் யான். நுமக்கும் தலைவன் அவனே. உலகவரையும் உளப்படுத்திக் கூறிய கருணைத் திருவாக்காம் என உணர்க.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. இராசகுமாரி மகேந்திரராசா |
| விலாசம் | : | 183-1/B ராஜகுரு சுபமங்களாஹோல் - கொழும்பு - 6 |
| பிறப்பு | : | 1958.02.05 |
| தே.அ.அ | : | 585362344V |
| தொ.பே | : | 0775189966 - 0113150022 |
| கல்வி | : | க.பொ.த |
| பட்டம் | : | சித்தாந்தரத்தினம், திருமுறை நெறிச்செல்வர் |

உ
சிவமயம்

# உலக முதல்வன் 07



## கடவுள் வாழ்த்தில் உள்ள ஐம்பது மந்திரங்களில் "அப்பனை நந்தியை" எனும் மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திரு. கிருபன் வெள்ளைச்சாமி**
கொழும்பு

ஒரு குடும்பத்தில் அப்பன் என்றால் குடும்பத் தலைவனைக் குறிக்கும். உலகத்திற்கு அப்பன் என்றால் எல்லாம் வல்ல இறைவனையே குறிக்கும். இறைவன் உலகத்திற்கெல்லாம் தலைவனும் அப்பாவுமாவான். அப்பன் என்ற சொல்லுக்கு தந்தை, எந்தை, அத்தன் என்று வேறு சொற்களும் உண்டு. "அம்மையே அப்பா" என்றும் "அப்பனே அடியேன் ஆதரித்தழைத்தால்" என்றும் "என்னப்பன் என்னொப்பில்" என்று திருவாசகமும் "அப்பன் நீ அம்மை நீ" என்று அப்பர் பெருமானும் பாடியுள்ளார். எனவே உலகத்திற்குத் தலைவனான இறைவனை அப்பன் என்ற சொல் குறிப்பதை நாம் உணரலாம்.

நந்தி என்ற சொல்லாலும் இறைவனை அடியார்கள் அழைக்கும் வழக்கம் பயின்று வந்துள்ளது. திருமந்திரம் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் விநாயகரைக் குறிக்கும்போது, "நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை" என்று அடைமொழி கொடுத்துப் பாடப்பட்டுள்ளது. மேலும் "பிறப்பிலி நாதனை பேர் நந்தி" என்றும் "நாதர் அருள் பெற்ற நாதரை நாடிடில்" என்றும், "நந்தி அருளாலே மூலனை நாடினேன்" என்றும் "நந்தி இணையடி நான் தலைமேற்கொண்டு", "அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி" என்று பலவேறு இடங்களில் திருமந்திரத்தில் திருமூலர் கூறியுள்ளார்.

"ஆரா அமுதனை" என்ற சொற்கள், தெள்ளத் தெளிந்த அமுதம் போன்றவன் என்பதைக் குறிக்கும் எனலாம். அமுதம் என்பது தேவர்கள் அருந்தும் உணவாகும். "ஆரா அமுதன்" என்றால் நினைக்க நினைக்க எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் தேனாகக் கரும்பாக, சர்க்கரையாக இனிப்பவன் இறைவன் என்று பொருள் கொள்ளலாம். "தேசனே தேனார் அமுதமே" என்றும் "ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே" என்றும் "ஊற்றான உண்ணாரமுதே உடையானே" என்றும் "அருள் நனி சுரக்கும் அமுதே" என்றும் ஆணே பெண்ணே ஆரமுதே" என்றும் "தேனே அமுதே கரும்பின் தெளிவே" என்றும் மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் பல்வேறு இடங்களில் கூறியுள்ளார்.

ஒப்பிலி வள்ளல் - வள்ளல் என்ற சொல் வான்மழை போல் வாரி வழங்கும் தன்மையைக் குறிக்கும். முற்காலத்தில் கடை ஏழு வள்ளல்கள் பாரி, ஆய், ஓரி போன்று

இருந்தார்கள் என சங்க இலக்கியம் மூலம் அறியலாம். இறைவன் வள்ளல்களுக்கெல்லாம் வள்ளல். இறைவன் கேட்டாலும் கொடுப்பான். கேளாமலும் கொடுப்பான். கருணைக் கடல் அவன்.

ஒப்பிலி வள்ளல் இரு சொற்களில் ஒப்பிலி என்பது ஒப்பற்றவன் என்பதைக் குறிக்கும். அதாவது இறைவனை எதனோடும் ஒப்பிட்டுக் கூறமுடியாது என்பதாகும். இறைவனுக்கு எப்பொருளையும் உவமித்துச் சொல்லமுடியாது. ஒப்பிட முடியாத இறைவனை தனக்குவமை இல்லாதான் என வள்ளுவரும், "சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்று திருமூலரும், "தன்னேரில்லோன் தானே காண்க" என்று திருவாசகமும், "ஒப்பில் ஒருத்தனே போற்றி, ஒப்பில் அப்பனே போற்றி" என்றும் கூறுவது கொண்டு இறைவன் ஒப்பில்லாதவன்; நிகரற்றவன் என்பதை நாம் உணரலாம்.

தலைவன் என்ற சொல் முதல்வன் என்றும் அறியலாம். விண்ணுலகிற்குத் தலைவன் இந்திரன். பிரம லோகத்திற்குத் தலைவன் பிரமன். வைகுந்த லோகத்திற்குத் தலைவன் திருமால். ஆனால் விண்ணுலகம் மண்ணுலகம், பிரமலோகம், வைகுண்டம் முதலிய உலகங்கள் எல்லாவற்றிற்கும் தலைவன் இறைவன் ஒருவனே.

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய் என்று போற்றப்படும் இறைவன் மக்கள், தேவர், நரர்கள், மூவர் எல்லோருக்கும் ஒப்பற்ற தலைவனாவான் ; இறைவன். மேலும் ஏழுலகிற்கும் தலைவன்.

இவ்விதம் சிறப்புப் பொருந்திய இறைவனை எவ்விதமாகவேனும் எந்த முறையிலாவது வழிபடுவோமானால் இறைவன் நாம் கேட்டதையும், கேளாததையும் கொடுப்பான் என்பது திண்ணம்.

**அப்பனை நந்தியை ஆரா அமுதனை**
**ஒப்பிலி வள்ளலை உலக முதல்வனை**
**எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்**
**அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.** - திருமந்திரம் 36

எல்லாத் தேவர்களுக்கும், எல்லா உலகங்களுக்கும், மூவர்க்கும் தலைவன் இறைவனாவான். அந்த இறைவன் அமுதம் போன்றவன். தெவிட்டாத தெளிந்த தேனைப் போன்றவன். இனிமையானவன். நுண்மையானவன். ஒப்பு உவமை சொல்லமுடியாத மேலோன். அத்தகைய இறைவனை நமக்குத் தெரிந்த எவ்வகையாலும் ஏத்திப் போற்ற வேண்டும். அவ்வாறு ஏத்திப் போற்றித் துதித்து வணங்கினால் வணக்கத்திற்குத் தக்கபடி இறைவன் நமக்கு அருள் பாலிப்பான் என்று நமக்கு அறிவுரை கூறுகின்றார் திருமூலர்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கிருபன் வெள்ளைச்சாமி |
| விலாசம் | : | 227/10 நிர்மாணமாவத்தை, நாவலறோட்- நுகேகொட |
| பிறப்பு | : | 1940.01.16 |
| கல்வி | : | முதலாந்தர ஆசியர் பயிற்சி |
| தொழில் | : | உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வுநிலை) |
| பட்டங்கள் | : | தமிழ்மணி, சைவப்புலவர், கலாபூஷணம், சித்தாந்தரத்தினம் |
| ஆக்கங்கள் | : | குறிஞ்சிநாடன் கவிதைகள், கட்டுரைகள் |
| பணி | : | சைவப் பிரசங்கம், நாளிதழ்களில் கவிதை எழுதுதல், இலக்கியப் பேச்சு |

உ
சிவமயம்

# அந்தி வண்ணன் 08



கடவுள் வாழ்த்தில் உள்ள ஐம்பது மந்திரங்களில்
"அந்திவண்ணன் அரனே" எனும்
மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி. தங்கேஸ்வரி மிஸ்கின்**
கொழும்பு

அண்டசராசரங்களுக்கும் தலைவன் ஒருவனே. அவனே இறைவன். அவன் அணுவிற்குள் அணுவாகவும் அகிலத்தில் பரம்பொருளாகவும் விளங்குகின்றான். அவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் திருமேனிகளைத் தாங்கி இவ்வுலகத்தில் உள்ள சத்து, அசத்துப் பொருட்களைப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலைப் புரிந்து கொண்டிருக்கின்றான். அவன் பாலில் இருக்கும் வெண்மை நிறத்தை எவ்வாறு பிரித்து எடுக்க இயலாதோ, அதுபோல ஒவ்வொரு உயிர்களிடத்தும் கலந்திருக்கின்றான். பாரபட்சமற்ற தீனதயாளன். இதனால் அவன் பெயர் "சலமிலன் பெயர் சங்கரன்" என்று திருவருட்பயனில் கூறப்படுகின்றது.

இறைவனால் படைக்கப்பட்ட ஆன்மாக்கள் பிறவி எடுத்ததின் நோக்கம் என்ன என்பதை உணரவேண்டும். ஆன்மாக்கள் முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களின் பலனாகவே மீண்டும் மீண்டும் பிறவிகள் எடுக்கின்றன. இதனைச் சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி பல்விருகமாகி பறவையாய்ப் பாம்பாகி" என்று அழகாகப் பாடியுள்ளார். ஒருவன் தான் செய்த கர்மவினைப் பயனாக, எத்தனையோ பிறவிகளை எடுக்கின்றான். மனிதனாகப் பிறந்தவன் மும்மலங்களினால் (ஆணவம், கன்மம், மாயை) பீடிக்கப்பட்டு, காண்பவனையும், காட்சிப்பொருளையும் அறியாது துன்பக் கடலில் மூழ்குகின்றான். இந்தப் பிறவி எடுத்ததின் நோக்கம் "ஆன்மீக வழியில் சென்று இறைவனடி சேர்வது" (முத்தி) என்பதை உணர்ந்து ஒவ்வொரு செயலையும் செய்ய வேண்டும். இதற்கான வழி ஆலய வழிபாடு, தியானம், சத்சங்கங்களின் தொடர்பாடல், கர்மயோகம், பத்தியோகம் போன்றவற்றில் ஈடுபடுவதே. பிறப்பறுத்து இறைவனடி சேர வேண்டுமாயின் "கற்றாவின் மனம் போலக் கசிந்துருகி" அவனைத் தொழவேண்டும். இதனைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில்,

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"

என மனம் உருகி, அன்பு சுடர்ந்து, கண்ணீர் சிந்திக் கதறி அழுது அவன் பெயரைச் சொல்லி வணங்கினால் அவனை அடையலாம் என்று பாடுகின்றார். சூரியனது வருகையால் எவ்வாறு இருள் அகன்று வெளிச்சம் (ஒளி) கிடைக்கின்றதோ அதுபோல அவனைச் சரணடைந்தால் அக இருள் நீங்கி, ஞான ஒளியினைப் பெற்று, முத்தியினை அடையலாம்.

**"அந்திவண்ணனை அரனே சிவனே என்று**
**சிந்தைசெய் வண்ணம் திருந்தடியார் தொழ**
**முந்திவண்ணா முதல்வா பரனே என்று**
**புந்திவண்ணன் எம்மனம் புகுந்தானே"** - திருமந்திரம் 46

அவரது அழகுத் திருமேனியைக் கூறவந்த திருமூலர் மாலைவேளையில் காணப்படும் செவ்வானத்தைப் போன்ற திருமேனியை உடையவனும், எல்லா உயிர்களுக்கும் காவலனும் சங்காரம் செய்கின்றவனுமாகையால் அரனே! என்றும் முதல் வண்ணமாகிய திருநீற்றின் வெண்மை நிறத்தை, சுத்தமான படிகம் போன்ற நிறத்தை உடைய சிவனே என்றும் கூறுகின்றார். இவ்வாறான இறைவனை முதல்வனே! பரனே என்றெல்லாம் நினைந்து அவனைத் தொழுதால் ஞான சொரூபியாக எமது உள்ளத்தில் குடிபுகுந்து எமக்கருள் செய்வான்.

இறைவனையே சிந்திந்திருக்கும் வண்ணம் மனம் திருந்திய அடியார்கள், செம்மேனியனே, எப்பொருளுக்கும் இறைவனே, அந்திவண்ணா, முதல்வனே, பரனே என்று நாம் தொழப் பழமையானவனே, முதல்வனே, மேலானவனே என்று நான் தொழ, ஞான சொரூபியாய் எம்மனத்தில் எழுந்தருளி இருப்பான் என்கிறார்.

இறைபணி நிற்போர் :

**கூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று**
**பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்து நின்று**
**ஆடுவன் ஆடி அமரர் பிரான் என்று**
**நாடுவன் நான் நின்று அறிவதுதானே. - 50**

எனச் சிவன் பணியே பணியென நிற்பர்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. தங்கேஸ்வரி மிஸ்கின் |
| விலாசம் | : | முதலாவது சப்பல் லேன், கொழும்பு 6. |
| பிறப்பு | : | 1953.09.02 |
| கல்வி | : | க.பொ.த உயர்தரம் |
| பணிகள் | : | யோகா பயிற்றுவிப்பாளர் - ஆரணியப்பணிகள் |

உ
சிவமயம்

# வேதச்சிறப்பு 09



திருமந்திரம் பாயிரப் பகுதியில்
"வேதச் சிறப்பு" பற்றிய
ஒரு மந்திரச் சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
திரு. சாமித்தம்பி பொன்னுத்துரை
கொழும்பு

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல்" (2397) என்றும் திருமந்திரமாலை எனவும் தமிழ் மூவாயிரம் எனவும் போற்றப்பெறும் திருமந்திரம், வேதமும் ஆகமும் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட நூல்களாகக் குறிப்பிடுகின்றது. வேதங்கள் சைவத்தின் முதனூல்கள். இவை மனித அறிவுக்கு அப்பாற்பட்ட உயர்ந்த உண்மைகளைக் கூறுவதால், "வேதங்கள்" எனவும், மேலான மெய்யியற் சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதால் "மறை" எனவும், மனிதனால் ஆக்கப்பெறாததால் "அபௌருசேயம்" எனவும், செவிவழியாகக் கேட்கப்பட்டு வந்ததால் "சுருதி" எனவும், எழுத்து வடிவில் இல்லாமையால் "எழுதாமறை" எனவும் வழங்கப்பெற்றது.

இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்னரான வேதகாலத்தில் (கி.மு 1500-கி.மு 600) வேதத்தின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கதாகும். வேதம் நான்கு ஆகும். வேத வியாசர் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகுத்தார். "வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்பது சம்பந்தர் தேவாரம். இவ் வேதங்கள் ஒவ்வொன்றும் சங்கிதைகள் (மந்திரங்கள்), பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் என்ற நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கின்றன. அவை முறையே பிரமச்சரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் ஆகிய ஆச்சிரம நிலைகளை உணர்த்துகின்றன.

வேதங்கள், கர்மகாண்டம், உபாசனைக்காண்டம், ஞானகாண்டம் எனவும் பகுக்கப்பட்டு, ஞானகாண்டமாக விளங்கும் வேதத்தின் இறுதிப் பகுதிகளான உபநிடதங்களே மெய்யியல் ஆராய்ச்சிகளாகும். உபநிடதங்கள், வேதாந்தம் எனவும், வேதசிரசு எனவும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இவற்றில் ஞானமே முக்கிய இடம் பெறுகிறது. கிரியைகளுக்கும், வேள்விகளுக்கும் இவற்றில் இடம் இல்லை. வேதங்களுக்குத் தர்மசாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், வேதாங்கங்கள், உபதேசங்கள் என்பன துணைநூல்களாக விளங்கி வேத உண்மைகளையும், விதிகளையும் அறிந்துகொள்ளத் துணைநிற்கின்றன.

வேதகால மக்கள் இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாகக் கொண்டு அவற்றிற்குக் காலப்போக்கில் இந்திரன், அக்கினி, சூரியன், உருத்திரன், வருணன்,

உசஸ் என உருவங்களைக் கொடுத்து வழிபட்டு வந்தனர். இருக்குவேதப் பாடல்களில் தெய்வங்களை அழைத்தல், துதித்தல் வேண்டல்கள் இடம்பெற்றிருக்கின்றன. யசுர் வேதம் உலக நன்மைகளுக்காக வேள்வி செய்து வழிபடும் முறைகளைக் கூறுகின்றது. "ஸ்ரீருத்திரம்" எனப்படும் "சதருத்திரியம்" யசுர் வேதத்தில் உள்வாங்கப்பட்டுச் சைவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. சாமவேதத்தில் இருக்கு வேதப் பாடல்களே இசையோடு பாடப்படுகின்றன. வேண்டும் பொருளைக் கொடுத்தல் என்பதே "சாமம்" என்பதன் பொருள். அதர்வணவேதம், செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்து வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும், கிரியை களையும், மந்திரங்களின் பிரயோகங்களையும், உரிய கருத்துக்களையும் கூறுவதாக உள்ளது.

வேதத்தின் சிறப்புப் (பெருமை) பற்றிக் கூறவந்த திருமூலநாயனார் ஆறு மந்திரங் களில் அவற்றை நுட்பமாகவும், திட்பமாகவும் நோக்கியிருக்கிறார்.

**"வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்**
**ஓதத் தகும் அறம் எல்லாம் உளதர்க்க**
**வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற**
**வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே"** (51)

நாம் ஓதவேண்டிய நீதிகளனைத்தும் நான்கு வேதங்களிலே உள்ளன. எதுவும் தவறவிடப்படவில்லை. ஆதலால் அநுபூதிமான்களான மெய்யுணர்வாளர்கள் வாதஞ் செய்யாது பூரணத்துவம் மிக்க வேதத்தை ஓதியே வீடுபேறடைந்தனர்.

பிரமப் பொருள் விளங்குவதற்காகவும், உலக நன்மைக்காகவே அந்தணர் வேள்வி செய்வதற்காகவும், மெய்ப்பொருள் உண்மையை உணர்த்துவதற்காகவும் வேதத்தை இறைவன் அருளிச்செய்தார்.

முக்கண்ணனாகிய சிவன் சூக்கும நிலையில் நின்று ஞானயோகத்தினருக்கும், பலனை விரும்பும் இல்லறத்தார்க்கும் பலனளிப்பவனாவான். வேதமாகிய உபநிடதம், ஞானவடிவினனும், அறியவேண்டியவை ஏதுமற்ற முற்றுமுணர்ந்தவனும் வீடுபேறு அளிப்பவனுமாகிய இறைவனைக் குருவருள் நெறிநின்று அடையலாம் என்று வலியுறுத்துகிறது. எனவே வேத, வேதாந்த, வேதாகமங்கள் காட்டும் மெய்ம்மை வழியைக் கடைப்பிடித்து அருளாளனான இறைவன் திருவடி நிழலையடைந்து இறையின்பம் பெறுவோமாக.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சாமித்தம்பி பொன்னுத்துரை |
| விலாசம் | : | 42, 3/3 ருத்திரா மாவத்தை - வெள்ளவத்தை |
| பிறப்பு | : | 1945.04.04 தே.அ.அ : 450952265V |
| தொ.பே | : | 0771823038 - 0112507313 |
| கல்வி | : | B.A (E.Com) BTI, MA |
| தொழில் | : | வங்கி முகாமையாளர், எண்பார்வையாளர் (ஓய்வு) |
| பட்டங்கள் | : | சைவப்புலவர், தர்மாசிரியர், சித்தாந்தரத்தினம், திருமுறை நெறிச்செல்வர், தமிழ்ப் பட்டயச்சான்றிதழ், சமூகநலப் பணியாளர் |
| பணி | : | சமய, சமூகப் பணிகள், பன்முகப்பணிகள், JP |

உ
சிவமயம்

# பெற்ற நல் ஆகமம் 10



ஆகமச் சிறப்பு எனும் பகுதியிலுள்ள
"பெற்றநல் ஆகமம்" எனும்
மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி. இந்திராணி பொன்னுத்துரை**
கொழும்பு

சைவ சமயத்துக்குரிய முதல்நூல்களாக வேதங்களும், ஆகமங்களும் திகழ்கின்றன. சைவசித்தாந்தத்தில் இவை இரண்டும் பிரமாண நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. இதையே திருமூலநாயனார் "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்ற திருவார்த்தையால் நிரூபிக்கின்றார். வேதம் பொதுவாகவும் ஆகமம் சிறப்பாகவும் கருதப்படுகின்றன. ஆகமம் என்ற வார்த்தைக்கு பலர் பல விளக்கங்களைக் கூறுகின்றபோதிலும் "ஆ" என்பது சிவஞானம் எனவும் "க" என்பது மோட்சதானம் எனவும் "ம்" என்பது மலநாசம் எனவும் கூறுகின்ற கருத்தே பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

வேதாகமம் பெத்தநிலையிலுள்ள ஆன்மாக்களை ஈடேற்றும் வண்ணம் இறைவனால அருளப்பட்டன. ஒவ்வொரு சமயத்துக்குமுரிய ஆகமங்கள் வேறு வேறு பெயரில் அழைக்கப்படுகின்றன. இவ்வகையில் சைவ ஆகமங்கள் சிவாகமம். அவை இருபத்தெட்டு. திருமூலநாயனார் இதை

**"அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தான்**
**அஞ்சோடிருபத்து மூன்றுள ஆகமம்"** - திருமந்திரம் 57

என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவாகமங்களுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பு அதனுடைய முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறது. சிவனுடைய ஐந்து முகங்களினின்றும் இருபத்தெட்டு ஆகமங்களும் தோற்றுவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆகமப் பொருளை இறைஞானத்தால் மட்டுமே அறிய முடியும் என்பதைத் திருமூலர்,

**"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்**
**எண்ணிலி கோடி தொகுத் திடுமாயினும்**
**அண்ணல் அறைந்த அறிவறியா விடின்**
**எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே"** - திருமந்திரம் 64

என்று கூறுகின்றார்.

சிவாகமங்கள் அவரவர் பக்குவநிலைக்கு ஏற்றவகையில் பின்பற்றக் கூடிய வகையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாற்பாதங்களில் அடங்கும் வகையில் பொருளை விளக்கி நிற்கின்றன.

எனவே தொகுத்து நோக்குமிடத்து இறைவன் நூல் என அழைக்கப்படும் ஆகமம் சைவர்களின் வாழ்வில் அவரவர் பக்குவநிலைக்கு ஏற்றவகையில் ஒழுகும் வகையில் பல விடயங்களைக் கூறுவதோடு ஆலயத்துக்குரிய பிரமாண விதிகளையும் கிரியை நடைமுறைகள் பற்றிய இன்னோரன்ன விடயங்களையும் கூறி சைவசமய இலக்கியப் பரப்பில் முதன்மை பெறுகிறது.

திருமந்திரப் பாடல்

**பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்**
**உற்றநல் வீரம் உயர்சிந்தியம் வாதுளம்**
**மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரத்**
**துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே** - திருமந்திரம் 63

பொருள்:

குருபரம்பரையில் பெற்ற ஆகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்ற ஒன்பதுமாகும்.

**விளக்கம்:**

ஆகமங்களில் முக்கியமானவை இருபத்தெட்டு. அவற்றுள் இங்கு கூறிய ஒன்பது ஆகமங்களின் சாரமே ஒன்பது தந்திரங்களாகக் கூறப்பட்ட திருமந்திரமாகும். காரணம், காமிகம், வீரம், வாதுளம், சுப்பிரம் என்பன சிவபேதம் என்றும் வீரம், வாதுளம், காலோத்தரம், மகுடம் என்பன உருத்திரபேதம் என்றும் வியாமளம் தந்திரசாத்திரம் என்றும் கூறுவர்.

இந்த ஒன்பது ஆகமங்களில் சொல்லப்பட்ட பொருளையே ஒன்பது தந்திரங் களாகத் திருமந்திரம் பாடினார் என்பர்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. இந்திராணி பொன்னுத்துரை |
| விலாசம் | : | 42, 3/3 ருத்ராமாவத்தை - கொழும்பு - 6 |
| பிறப்பு | : | 1944.09.23 |
| கல்வி | : | B.A Dip. |
| தொழில் | : | பிரதி அதிபர் (ஓய்வு) |
| பட்டங்கள் | : | சித்தாந்தரத்தினம், சைவப்புலவர், தமிழ்ப் பட்டயம், சுகநலப் பணியாளர் |
| பணி | : | சமயம் கற்பித்தல், சுகநலப்பணியாளர் |

உ
சிவமயம்

# ஆகமச் சிறப்பு 11



ஆகமச் சிறப்பு எனும் பகுதியிலுள்ள
"அண்ணல் அருளால்" எனும்
மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
திருமதி. சந்திரகாந்தா இராஜேந்திரா
கொழும்பு

வேதங்களும் ஆகமங்களும் எமது பிரதான நூல்களாகும். சைவசித்தாந்தத்தில் வேதத்தைப் பொதுவாகவும் ஆகமத்தைச் சிறப்பாகவும் கொள்ளப்படுகின்றது. சைவ சமயம் சிவ சம்பந்தமுடையது. ஆழமும், அகலமும், நுட்பமுமுடையது. ஆன்மாக்களின் நன்மையின் பொருட்டு இறைவனால் அருளிச் செய்யப்பட்ட முதல் நூல்களாக இவை திகழ்கின்றன. இந்து சமயத்தின் முக்கிய அம்சங்களான சமய, தத்துவ, கலை, பண்பாடு சார்ந்த அனைத்து விடயங்களும் அடங்குகின்றன. ஆகமம் அனைத்து சைவ சமய தத்துங்களுக்கும் அடிப்படையாக அமைந்து விளங்குகிறது. அதனால் அது சிறப்பு நூல் சிவாகமம் என்று அழைக்கப்படுகிறது.

ஆகமம் என்ற சொல் பல பெயர்களைப் பெற்றிருந்தாலும் 'ஆ', 'க', 'ம' மூன்றெழுத்தும் முறையே பாசம், பசு, பதி எனப் பொருள்படும். இன்னொரு வகையில் கூறும்போது 'ஆ' என்பது சிவஞானம் என்றும், 'க' என்பது மோட்சதானம் என்றும் 'ம' என்பது மலநாசம் எனவும் பொருள்படும். ஆகவே ஆன்மாக்களின் மலத்தை நாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை வழங்குவதாகும்.

ஆகமங்கள் சைவசமயத்தின் சிறப்பு நூலாக விளங்குவதோடு, சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனைப் பற்றியே சிறப்பாகக் கூறுகின்றன. ஆகமங்கள் இறைவனால் அருளப்பட்டவை என்பதனைத் திருமுறைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். மாணிக்கவாசகர் "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்" எனவும் "மன்னுமாமலை மகேந்திரமதனிற் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" எனப் பாடுகின்றார். திருமூலர் ஆகமம் பற்றிக் கூறியதை "சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே" என்ற குறிப்புத் தெளிவுபடுத்துகிறது. திருமூலர் இறைவனால் ஆகமம் அருளப்பட்டதை "தானாய் அடியார்கள் அர்ச்சிக்கும் நந்தி உருவாகி ஆகமம் ஓங்கி நின்றானே" எனவும்

**"அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்**
**எண்ணிலி கோடி தொகுத்திடுமாயினும்**
**அண்ணல் அறைந்த அறிவறியா விடின்**
**எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே"** - 58

எனவும் கூறுகின்றார்.

சிவாகமம் அன்று தொட்டு இன்றுவரை ஒரு ஞான பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வருகிறது. சதாசிவமூர்த்தி அனந்த தேவருக்கும், அனந்த தேவர் ஸ்ரீகண்டருத்திரருக்கும், ஸ்ரீகண்டருத்திரர் திருநந்தி தேவருக்கம், திருநந்தி தேவர் சனற்குமாரருக்கும், சனற்குமாரர் முனிவர்களுக்கும், முனிவர்கள் மானுடருக்கும் உபதேசித்தனர்.

சிவாகமங்கள் அவரவர் பக்குவநிலைக்கு ஏற்றவகையில் பின்பற்றக்கூடிய வகையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களில் தனது பொருளை விளக்கி நிற்கிறது. சரியாபாதம் ஒருவனது வாழ்வியல் ஒழுக்கங்கள் பற்றிக் கூறுகிறது. கிரியாபாதம் கிரியை விதிகளைக் கூறுகிறது. யோகபாதம் பிரணாயாமம் முதலிய யோகப்பயிற்சி பற்றிக் கூறுவது. ஞானம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றிக் கூறுவது. இவ்வகையில் அவனவன் வாழ்வியல் பக்குவ நிலைக்கு ஏற்ற விதிகளைக் கூறுவதால் முக்கியத்துவம் பெறுகிறது.

சைவசமயத்தின் ஆன்மீக வாழ்வுக்கு உதவி புரியும இடமாகத் திகழும் ஆலயம், ஆலய சேவை பற்றிக் கூறுவதிலும் ஆகமம் முக்கியத்துவம் பெறுகிறது. ஆலயத்திற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து அதனைச் சமப்படுத்தி சதுரமாக்கி பண்படுத்தி ஆலயம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய கிரியைகளைக் கூறுவது கர்ஷணம். பிரதிஷ்டை என்றால் நிலை நிறுத்துதல் அல்லது ஸ்தாபித்தல் என்று பொருள்படும். ஆலயத்தையும் அதில் விக்கிரகங்களையும் ஸ்தாபித்தல் பற்றிய விதிமுறைகளைக் கூறுகிறது. பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள், உற்சவம் என்ற பெயரிலும் ஆலயத்தில் இடம்பெறும் கிரியைகளில் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் குறைகளை நீக்கச் செய்யப்படுவது பிராயச்சித்தம் என்ற பெயரிலும் இடம்பெறும்.

திருவுருவங்களை உருவாக்கும் சிற்ப நுணுக்கங்கள் பற்றியும் சிவாகமங்கள் எடுத்துக் கூறுகின்றன. இவ்வகையில் ஆகமம் கூறும் விதிக்கமைய அமைந்து விளங்கும் சிவாலயங்கள் அமைந்திருப்பதோடு, அவை கூறும் விதிமுறைக்கு ஏற்ப கிரியை நடைமுறைகளையும் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது.

தொகுத்து நோக்கில் இறையின் நூல் என அழைக்கப்படும் ஆகமம் சைவசமயிகளின் வாழ்வில் அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்ற வகையில் ஒழுகும் பல விடயங்களைக் கூறுவதோடு, ஆலயத்திற்குரிய பிரமாணவிதிகளையும் கிரியை நடைமுறைகள் பற்றிய இன்னோரன்ன விடயங்களையும் கூறி, சைவசமய இலக்கியப் பரப்பில் முதன்மை பெறுகிறது.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. சந்திரகாந்தா இராஜேந்திரா |
| விலாசம் | : | 51, 3/4, 37ஆவது ஒழுங்கை - கொழும்பு - 6 |
| பிறப்பு | : | 1944.03.31 |
| கல்வி | : | க.பொ.த உயர்தரம் |
| | | தமிழ்ப் பட்டயக்கல்வி, சித்தாந்தரத்தினம் |
| பணிகள் | : | புராணபடனம், முற்றோதல் |

உ
சிவமயம்

# குரு பாரம்பரியம் 12



திருமந்திரம் பாயிரப் பகுதியிலுள்ள
"குரு பாரம்பரியம்"
மந்திரம் பற்றிய சிந்தனை

*சித்தாந்தச் செம்மணி*
**திரு. செல்லையா நவநீதகுமார்**
கொழும்பு

குரு அறியாமையாகிய அஞ்ஞான இருளைப்போக்கும் விளக்குப் போன்றவர். எமக்கு வழிகாட்டியாக இருப்பவர் குரு. இம்மை மறுமை இன்பங்களைப் பெறுவதற்கு எமக்கு நல்ல குருநாதர் வாய்க்க வேண்டும்.

குரு வித்தியாககுரு, கிரியாகுரு, ஞானகுரு என மூவகையில் அமைவார். எமக்கு கல்வி, கலைஞானம், வித்தை போதிப்பவர் வித்தியாகுரு. வாழ்வியற் சடங்குகளை நடத்தி ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவுபவர் கிரியாகுரு. ஆலயத்திலே பாரார்த்த கிரியைகள், பூசைகள் செய்பவரும் கிரியாகுரு ஆவர். ஞானகுரு ஞானத்தை வழங்கி, அஞ்ஞானத்தைப் போக்கித் தீட்சை செய்து எமக்கு மறுமைக்கு வழிகாட்டுபவர். இவர் தீட்சாகுருவாக அமைவார்.

பெரிய ஞானியாக, யோகியாக இருந்தாலும் அவருக்கு ஒரு குரு இருப்பார். இறை அருளைப் பெறுவதற்கு குரு தேவைப்படுவார். குரு முகமாகத்தான் இறையருளைப் பெறலாம்.

குருமரபு ஒன்று உண்டு. அந்த மரபு வழியில் இன்றும் ஆதீனங்கள் உள. அந்தக் குருமரபு திருக்கயிலாயத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. ஸ்ரீகண்ட பரமசிவன் (உருத்திரன்) திருநந்திதேவருக்கு ஞான உபதேசம் செய்ய பின்னர் திருநந்திதேவர் குருவாக இருந்து உபதேசம் செய்த குருபரம்பரை திருக்கயிலாய ஞானபரம்பரையாக விரிவடைந்து சயிலாதி மரபு என்று போற்றப்படுகிறது.

இம்மரபிலே அகச்சந்தான புறச்சந்தான பரம்பரையைத் தொடர்ந்து திருவாவடுதுறை ஆதீனம் அருள் ஒளி பரப்புகின்றது. திருக்கயிலாய பரம்பரையில் திருநந்திதேவர் மரபில் தோன்றியவர் சுந்தரநாதர் என்னும் திருமூலர் ஆவார். கயிலாயத்திலே உபதேசம் பெற்ற யோகியார் தென்னாட்டுக்கு வந்தார். மூலன் உடலோடு இருந்து ஆகம ஞானத்தைத் தமிழிலே திருமந்திரமாகத் தந்தார். திருமூலரின் குரு திருநந்திதேவர். திருநந்திதேவர் குருமரபிற்கு முதற்குரு என்னும் சிறப்புடையவர்.

"அந்தணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு, நங்குரு மரபிற்கெல்லாம் முதற்குரு நாதனாகி" என திருமந்திரத்திலே குருபாரம்பரியம் பாயிரம் 67ஆம் பாடல் தொடக்கம் 72ஆம் பாடல்வரை ஆறு பாடல்களால் விளக்கப்படுகிறது.

**நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்**
**என்றிவர் என்னோ டெண்மருமாமே.** - 67

நந்தியெம்பெருமான் அருளைப் பெற்ற ஆசிரியர்மார் யாவர் என்று பார்க்குமிடத்து அவரோடு ஒத்தவர்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வர். சிவயோக முனிவர் தில்லையம்பலத்திலே ஆடல் கண்டு வணங்கிய பதஞ்சலி, வியாக்கிரபாதர், என்னோடு கூட எண்மராவர்.

இனித் தனது மாணாக்கர் பற்றிக் கூறும்போது,

**மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்**
**இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்**
**கந்துரு காலாங்கி கஞ்ச மலையனோடு**
**இந்த எழுவரும் என்வழி யாமே.** - 69

திருமந்திரமாகிய எனது இந்த நூலை வழிமுறையில் இனி உணர்த்த இருப்பவர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், தறி போன்ற உருவத்துடன் யோகத்தில் இருக்கும் காலாக்கினி, கஞ்சமலையன் என்ற இந்த எழுவரும் என் மரபினரே.

தாயுமான சுவாமிகள் தனது ஆசிரியராகிய மௌனகுருவை "மூலன்மரபில் வரு மௌனகுருவே" என விழித்துள்ளமை திருமூலர் குருமரபு தொடர்ந்துள்ளமையைக் காட்டுகிறது.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. செல்லையா நவநீதகுமார் |
| விலாசம் | : | B/2 அரச தொடர்மாடி, ஆஸ்பத்திரி வீதி, தெகிவளை. |
| கல்வி | : | M.A. சைவசித்தாந்தம் |
| பட்டம் | : | சைவப்புலவர், சைவசித்தாந்தச் செம்மணி |
| பதவி | : | திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த திருமுறை பயிற்சிமைய இயக்குநர் (இலங்கை) |

உ
சிவமயம்

# சிவமங்கைதன் பங்கனைச் சேர்ந்திருந்தேன் 13



திருமூலர் வரலாறு எனும் பகுதியில்
"சேர்ந்து இருந்தேன்" எனும்
மந்திரச் சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி. செல்வதி கதிரவேலு**
கொழும்பு

திருமூலர் சைவநாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவர். அவர் இயற்பெயர் சுந்தரநாதன்.

திருக்கயிலாயத்திலே திருநந்திதேவருடைய (சிவபெருமான்) திருவருள் பெற்ற சிவயோகிகள் எண்மருள் ஒருவர். இவர்களுக்குச் சிவபெருமான் இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளிச் செய்தார். இவர் அட்டமா சித்திகளையும் பெற்ற தவயோகி ஆவர்.

அவர் அகத்திய முனிவரைக் காணத் திருக்கயிலாயத்திலிருந்து புறப்பட்டுத் தென்னாட்டிற்கு வந்தார். காவிரி வழியாக திருவாவடுதுறைத் திருத்தலம் அடைந்து, அங்கு எழுந்தருளியுள்ள செம்பொன் தியாகேசரை வணங்கி, கோமுக்தீஸ்வர ஆலய மேற்குப் பிரகாரத்திலுள்ள படர் அரசு மரத்தின் கீழ் யோக நிட்டையில் அமர்ந்தார். ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் தமிழ் மந்திரங்களை மூவாயிரம் ஆண்டுகளில் பாடியருளினார். பின்னாளில் இம் மந்திரங்கள் கோமுக்தீஸ்வர ஆலய பலிபீடத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்து எடுக்கப்பட்டன. இதனைக் காட்டியவர் திருஞானசம்பந்தப் பெருமான் ஆவர்.

சிவாகமங்களின் கருத்துக்களைத் தமிழால் பாடும் பணியை இறைவன் தமக்கு அருளியதை, "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறுகின்றார். தான் அடைந்த இன்பத்தைப் பிறரும் அடைய வேண்டும் என்பதற்கான உபாயங்களை இனிமையாகவும் எளிமையாகவும பாடியருளியுள்ளார். இந்நூல் தோத்திரமும் சாத்திரமும் இணைந்த நூலாகும். இந்நூலானது பன்னிரு திருமுறைகளிலே பத்தாம் திருமுறை ஆகும்.

தான் யோக நிட்டையிலிருந்து சிவன் நாமங்கள் ஓதுவதை, 79ஆவது பாடலில் இவ்வாறு பாடியருளியுள்ளார்.

**"சேர்ந்து இருந்தேன் சிவமங்கைதன் பங்கனைச்**
**சேர்ந்து இருந்தேன் சிவன் ஆவடு தண்துறை..."**

திருவாவடுதுறைக் கோயில் வடமேற்கு வீதியில் திருமூலர் சமாதியுள்ளது. திருமூலரின் திருவுருவம் யோகநிலையில் அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாலயம் முக்கியமான சைவப் பெருமடங்களில் ஒன்றான திருவாவடுதுறை ஆதீனத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்ட சிறந்த கோயிலாகும். சித்தர்கள் பலர் எப்பொழுதும் தங்கியிருக்கின்றனர் என்று தலபுராணம் கூறுகின்றது. இதனால் 'நவகோடி சித்தர் தலம்' என்றும் அழைக்கப்படுகின்றது.

உமாதேவியார் பசுவின் உருவம் எடுத்து இறைவனைப் பூசிக்க, பெருமான் எழுந்தருளி அத்தேவியின் பசுவுருவத்தை நீக்கி அருளிய தலம். இதனால் இத்தலம் 'ஆவடுதுறை' என்ற திருப்பெயரால் வழங்கப்படுகிறது. இத்தலத்தில் உள்ள நந்திகேசுவரர் பதினாறடி உயரமுள்ள பிரமாண்டமானவர். பல சதுர நீண்ட செவ்வகக் கற்களால் ஆச்சரியப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளார். 'நந்தித்தலம்' என்றும் அழைக்கப்படுகிறது.

**சேர்ந்து இருந்தேன் சிவமங்கைதன் பங்கனைச்**
**சேர்ந்து இருந்தேன் சிவன் ஆவடுதண்துறை**
**சேர்ந்து இருந்தேன் சிவபோதியின் நீழலில்**
**சேர்ந்து இருந்தேன் சிவன்நாமங்கள் ஓதியே.** - திருமந்திரம் 79

உமாதேவியாராகிய சிவமங்கையை தன் இடப்பாகத்தில் கொண்டிருப்பவன் சிவபெருமான். அவனோடு, அச்சிவனோடு சிவனாக நான் குளிர்ச்சியான திருவாவடுதுறைத் திருத்தலத்தில் தவயோகத்தில் இருந்தேன். சிவனோடு சிவனாக, அவன் பேரருளில் இரண்டறக் கலந்து திருவாவடுதுறைக் கோமுக்தீஸ்வர ஆலயத்தில் உள்ள படர் அரசு மரத்தின் கீழ் நிட்டையில் அமர்ந்து சிவன் ஐந்தெழுத்தை ஓதி மெய்த்தவயோகம் புரிந்தேன்.

சிவபோதி - படர் அரசு.

**ஞானப்பொருள்**

அம்மை அப்பர் வடிவாக உள்ள இறைவனைப் பொருந்தி வழிபட்டிருந்தேன். சிவன் சீவர்களைப் பக்குவம் செய்யும் வீணாந்தண்டின் முடிவிலுள்ள சகஸ்ர தளத்தில் சேர்ந்திருந்தேன். சிவமாகிய அறிவின் நிழலில் சேர்ந்திருந்தேன். அப்போது சிவன் நாமத்தைச் சிந்தித்திருந்தேன். சிவ வியாபாகத்தில் ஒருங்கி இருந்தேன்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. செல்வதி கதிரவேலு |
| விலாசம் | : | C3, 2/4, சொய்சாபுர தொடர்மாடி - மொரட்டுவ |
| பிறப்பு | : | 1953.04.10 |
| தே.அ.அ | : | 536014195V |
| கல்வி | : | க.பொ.த (விஞ்) |
| பணிகள் | : | ஓம் கிரியா பாபாஜி ஆரணிய சேவை,<br>சிவயோக சுவாமிகள் திருவடி வழிபாடு<br>சிவத்தல யாத்திரைகள் |

உ
சிவமயம்

# என்னை நன்றாக இறைவன் படைத்தனன் 14



திருமூலர் வரலாறு எனும் பகுதியில்
"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்" எனும்
மந்திரச் சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
திரு. கந்தப்பு இறைவன்
கொழும்பு

திருமூலர் காலத்தில் நம் நாட்டில் பதினெட்டு மொழிகள் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. (பாரதியாரும் "பேசும் மொழி பதினெட்டுடையாள்" என்றுதான் பாடியிருக்கிறார்.) இவையனைத்தும் கற்றுத் தேர்ந்தவர் முனிவர் திருமூலர்.

**பண்டிதர் ஆவார் பதினெட்டுப் பாடையும்**
**கண்டு அவர்கூறும் கருத்து அறிவார் என்க!**
**பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்**
**அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே! - 59**

என்கிறார் திருமூலர்.

கலைநூற் புலவர் பயிலும் பதினெண் மொழிகளும் அண்டங்களுக்கெல்லாம் முதல்வனாகிய இறைவன் உலகத்தவர்க்கு அறத்தினை வகுத்தருளிச் செய்த வழிகளாகும். அண்டங்கள் அனைத்தையும் படைத்து அளித்து ஒடுக்க வல்ல முதல்வனாகிய இறைவன், மக்கள் பேசும் மொழிகளில் அவர்கள் எளிதில் உணர்ந்து மேற்கொள்ளத்தக்கவாறு அருளிச் செய்த அருள் நூல்களே ஆகமங்கள் என்பதாகும். திருவாசகமும், "ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்றே செப்புகின்றது. "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என்றும் "சொல்லாவாய், பொருளாவாய்" என்றும் இன்னும் பல விதத்திலும் இறைவனை ஞானிகள் வழிபடுகிற முறையில் நின்று இதை உணருதல் வேண்டும்.

திருமூலர் தென்னாடு வருவதற்கு முன்பே தமிழ், வளம்பொருந்தியே இருந்தது. ஆனால் தமிழில் ஆகமஞானம் போதிக்கும் நூல் இல்லை. அது வடமொழியில் இருந்தது. ஆகமசாரத்தைத் தமிழில் செய்த முதல் நூலாகத் திருமூலர் செய்த தமிழ் ஆகமமாகிய திருமந்திரத்தினைக் கொள்ளவேண்டும்.

அன்று அவர் பாடியருளிய "தமிழ் மூவாயிரம்" என்னும் நூலே திருமந்திரம் ஆயிற்று. இதைத் தமிழ் மந்திரம் என்றும் கூறுவர். திருமூலரைப் பற்றிய புராண வரலாற்றிலும், ஐதீகங்களிலும் நாம் உணரவேண்டிய உண்மை என்னவென்றால், மோனத்திலிருந்து எழுந்து வந்த தவமொழிகளே திருமந்திரப் பாடல்கள். பேரின்பத்தைக்

கண்ட முனிவர், அந்த இன்பத்தை வையகமும் பெறவேண்டும் என்ற கருணையில தோய்ந்து ஞானத்தை வழங்குகின்றார். இதனால் திருமூலர் அவதார புருஷர் ஆகிறார். தாம் இம் மண்ணுலகில் பிறந்ததன் நோக்கம் என்னவென்பதைத் தெளிவாக உணர்ந்தவர். பின்னை வினையைப் பிடித்துப் பிசைந்தவர். ஆகவே வினைப் பயனை அனுபவிப்பதற்காக அவர் பிறவி எடுக்கவில்லை. இறையுணர்வைத் தாம் தமிழ் வாயிலாகப் பரப்புவதற்காகவே தாம் பிறந்ததாக அவர் பறை சாற்றுகிறார்.

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"** - திருமந்திரம் 81

என்கிறது திருமந்திரம்.

தன்னை (இறைவனை) நன்றாகத் தமிழில் எடுத்து விளம்ப வேண்டும் என்ற நோக்கத்தோடல்லவா என்னைப் படைத்தான் என்று தன்னுடைய அவதார ரகசியத்தை உணர்ந்து பெருமிதமும் வியப்பும் கொள்கிறார். தவத்தின் பெருமையையெல்லாம் உணர்ந்த தவச் சக்கரவர்த்தி அவர். சிவபெருமானே அவருக்குத் "தவ பெருமான்" என்ற பட்டத்தையளித்துள்ளார்.

**"பின்னை நின்று என்னே பிறவி பெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"** - திருமந்திரம் 81

பிறவி என்பது துன்பம். நாம் செய்த கரும வினைகளை அனுபவித்து, காரணம் புரியாமல் நல்வினை, தீவினைகளை மீண்டும் மீண்டும் செய்து இப்பூவுலகில் உழன்று கொண்டிருக்கின்றோம். மீண்டும் மீண்டும் ஏன் பிறக்கின்றோம்? பிறவி தொடர்வது ஏன்? இப்படி மீண்டும் பிறப்பவர்கள் முற்பிறவிகளில் நன்றாக முயன்று தவம் செய்யாதவர்கள் தான். உண்மையை உணராமல் பின்பு தயங்கி நின்று ஏன் பிறவி எடுக்கிறார்கள்? தவம் செய்யத் தவறியவர்களுக்குத்தான் பிறவி தொடரும். ஆனால் நான் பிறந்திருக்கிறேனே! காரணம் நான் நல்ல தவம் செய்தமையினால், அப்படி நான் பிறக்கவில்லை. இறைவனால் பிறப்பிக்கப்பட்டேன். தன்னை ஏத்தி நன்முறையில் தமிழைச் செய்யுமாறு என்னைப் பெருமான் படைத்தனன் என்றும், எனக்கு நல்ல ஞானத்தை அளித்து, இறைவன் இப்பிறவியைக் கொடுத்தருளினான் என்கிறார் திருமூலர். அதாவது தமிழில் ஆகமம் செய்த பிறவி, தவத்தால் கிட்டியது என்று திருமந்திரநூல் ஆசிரியர் திருமூலர் கூறுகிறார்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கந்தப்பு இறைவன் |
| விலாசம் | : | 15 3/1, அத்தபத்து மாவத்தை - தெஹிவளை |
| பிறப்பு | : | 1950.04.03 தே.அ.அ : 500940603V |
| தொ.பே | : | 0774457537 |
| கல்வி | : | மொறட்டுவ பல்கலைக்கழக புவிச்சரிதையியல் பட்டம் |
| தொழில் | : | ஆராய்ச்சி உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் |
| பட்டங்கள் | : | சமூகநலப் பணியாளர், மூத்த சமூகசேவையாளர், டோன் மெதெட் சிகிச்சையாளர் |
| நூலாக்கம் | : | மன அமைதிக்கான சிந்தனைத் துளிகள் |

உ
சிவமயம்

# இயற்றிகழ் சோதி இறைவன் 15



திருமூலர் வரலாறு எனும் பகுதியில்
"பிதற்றுகின்றேன்" எனும்
மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திரு. தம்பு இரவீந்திரன்**
கொழும்பு

திருமந்திரம் ஒரு சித்தன் செந்தமிழில் பாடிய ஞானநூல். மூவாயிரம் பாடல்களில் முத்தான கருத்துக்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

திருமந்திர நூலானது தோத்திரமாகவும் சாத்திரமாகவும் கொள்ளப்படுகிறது. தமிழ் மந்திரமாகவும் சைவசித்தாந்தத்திலுள்ள பதி, பசு, பாசம் என்பவற்றை விளக்கி நிற்பதால் சாத்திரமாகவும் கொள்ளப்படுகிறது.

திருமூலர் சிவனை முழுமுதற் கடவுளாகவும் அவரை விட வேறு தெய்வங்கள் இல்லையென்றும் அவர் வேறு தெய்வங்களை வழிபடுவதில்லையென்றும் ஆணித்தரமாக அவரது சிறப்புக்களைத் தனது திருமந்திரத்தில் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

மக்கள் தங்கள் வாழ்வில் படுகின்ற துன்பங்களைக் கண்டு மனம் வருந்தியவர். மக்கள் எப்போதும் இன்பமுடனிருக்க வேண்டும் என்னும் நல்நோக்கத்தில் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றும் அதற்கான வழிமுறையைக் கூறுவதுமே திருமூலரின் நோக்கமாகும். மக்களின் துன்பத்துக்குக் காரணம் அவர்களின் அறியாமையாகிய இருளாகும். இதை நீக்க நல்ல கல்வியும் நல்ல ஆசிரியரும் வேண்டுமெனக் கருதினார்.

அண்டங்கள் பலவென்றும் அலைகடல் ஏழு என்றும் சொல்வர். அந்தக் கடல்களின் கரை மணல்களை எண்ணமுடியுமா? அத்துணையளவாகப் பொன்போலும் பிரகாசிக்கும் சிவபெருமான் அண்டங்களை இருக்கையாகக் கொண்டு அண்ட கோசத்திலுள்ள அணுக்களிலும் நிறைந்து விளங்குகின்றார்.

ஆன்ம ஒளியை அறிகின்ற மனம் அவ்வொளியில் தோய்ந்திட சிவன் விளங்குவான். ஆன்மசோதியில் பொருந்தியிருப்பவர் உலகெங்கும் சென்றுவரும் ஆற்றல்

பெறுவார் மட்டுமல்ல அவர்களைச் சுற்றியுள்ள வெளியிருளும் மாறும். முழுமுதற் சோதியும் முச்சுடர்களும் ஆன்மாவில் பிரகாசித்து அவை வளம் பெறச்செய்யும்.

ஆன்மாவின் ஒரு மின்னலாய் ஒளிரும் ஈசனை இடைவிடாது நினைத்திருங்கள். அவன் உள்ளத்துக்கு மட்டுமன்றி உடலுக்கும் பிராணரூபமாய் விளங்கி ஆற்றலைத் தருவான். இறைவனான சிவன் ஒளி உருவானவன் என்பதைத் திருமூலரும்,

**பிதற்றுகின்றேன் என்றும் பேர்நந்தி தன்னை**
**இயற்றுவன் நெஞ்சத்திரவும் பகலும்**
**முயற்றுவன் ஓங்கொளி வண்ணன் எம்மானை**
**இயற்றிகழ் சோதி இறைவனும் ஆமே.** - திருமந்திரம் 94

இதில் இறைவனை எப்போதும் ஏத்திப் போற்றி வணங்குவேன் என்பது உணர்த்தப்படுகிறது. நந்தி என்னும் நாமம் உடையவனை எப்பொழுதும் பிதற்றுகின்றேன். (மெய்மறந்து) இரவு பூராகவும் பகல் முழுவதும் தவம் செய்து எம்பெருமான் ஓங்கி வளர்ந்து செல்லும் ஒளி ரூபமானவர். அதாவது சுயப்பிரகாசமுடையவர். நீங்களும் முயன்று தவம் செய்யுங்கள், இறைவன் இயல்பாகவே பிரகாசித்துக்கொண்டு நாதமரபை சைவமரபை சிவமரபை வழங்குவான் என்கிறார் திருமூலர்.

சோதி வடிவானவனை இன்னுமோர் மந்திரத்தில்

**"புவனாங் கடந்தன்று பொன்னொளி மின்னும்**
**தவனச் சடைமுடித் தாமரையானே"**

என்று விழித்து வணங்குகின்றார். திருமுறைகளிலும் அருளாளர்கள், "சோதியே சுடரே சூழ் ஒளிவிளக்கே" என்றும், "ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே" என்றும், "மதிப்பவர் மனமணி விளக்கே" என்றும் "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி" என்றும் பலவாறாகச் சோதி வடிவாகச் சிவனை வழிபட்டு அருள் பெற்றமையைக் காணலாம்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. தம்பு இரவீந்திரன் |
| விலாசம் | : | 11, 4/2 நெல்சன் பிளேஸ் - வெள்ளவத்தை |
| பிறப்பு | : | 1951.10.02 |
| தே.அ.அ | : | 512762263V |
| கல்வி | : | B.A |
| தொழில் | : | வங்கியாளர் (ஓய்வு) |
| பணி | : | யோகா, திருமந்திரம், சித்தாந்தம் பயிலுநர் |

உ
சிவமயம்

# அவையடக்கம்

16



திருமந்திரப் பாயிரப் பகுதியில்
"அவையடக்கம்" பற்றிய
ஒரு மந்திரச் சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி குஞ்சரா நிமலன்**
கொழும்பு

அறிஞர்கள் கூடியிருக்கும் அவையில் தன்னடக்கத்துடன் பேசுதல், நடந்து கொள்ளுதல், சபையோர்க்கு "வழிபடுகிளவி" கூறுகை, பழைய தமிழ் மரபு. நூலின் ஆரம்பத்தில் அவையடக்கம் கூறுவது, தமிழ் நூலாசிரியர்கள் மத்தியில் காணப்படும் வழமை.

இராமாயணத்திற்கு அவையடக்கம் செய்யும்போது, பூனையானது பாற்கடலை முற்றிலும் நக்கிக் குடித்துவிட வேண்டும் என்று முயல்வதுபோல் யானும் முயன்றேன் என்று இராமாயணத்தைத் தமிழில் தரமுயன்றது தனது பேராசை என்று கூறிய கம்பன் மேலும் அவையடக்கம் என்ன என்று யான் அறியேன் அடக்கம் என்று குற்றம் தவிர்க்கும நாவை உடையவர்கள் கேட்டுக்கொள்ளுங்கள் என்று கெஞ்சி நிற்கிறார்.

"அவையடக்கம் என்பது அறியேன் இற்றாமென்று
எவையடக்கம் என்பேன் எளிதில் - அவையடங்கு
நன்மைகள் இல்லேன் நவையடக்கு நாவுடையேன்
புன் மொழியுங் கொள்வீர் பொறுத்து"

என்பது கம்பன் மொழி.

எல்லாவற்றுக்கும் மேலாக திருமூலர் அவையடக்கம் கூறுகையில் இறைவனது பெருமையையும் தன் சிறுமையையும் கூறுகிறார். புரவலரும் பாவலரும் மானிடர் முன்னிலையில் மானிடர்களுக்கே அவையடக்கம் செய்தனர். திருமூலர் இந்த இடத்தில் மேலோங்கி நிற்பதை நாம் காணமுடிகிறது. எவ்வாறு எனில் அவையடக்கம் கூறுகையில் இறைவனுக்கு அடிபணிதல், அடங்குதல் தன் சிறுமை கருதி அடக்கமாகக் கூறுகிறார் இறைவனது பெருமையை.

“ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின்றேனே” - 95

ஏகமாய், சத்தாய், சித்தாய், ஆனந்தமாய், உலக முழுவதும் தோன்றவும் ஒடுங்கவும் நிலைக்களமாக நிற்கும் அண்ணலின் மேன்மையைச், சிறப்பை, பெருமையை யான் அறியாது அவனது வியாபகத் தன்மை அறியாது, அவனது பாதாளம் ஏழினும் கீழ் இருக்கும் பாதம் மால் தேடியும் தேட ஒண்ணாத் தேவன் அவனது பாதத்தையும் அறியாது அண்ணல் பெருமை கூறத் தொடங்குகிறேன் என வேதஸ்வரத்தினில் நாத ரூபமாக விளங்கும் இறைவனை உணரமுடிகிறது என்று அண்ணலுக்கு அடக்கம் கூறுகிறார். இறைவனுக்குள் அடங்குகிறார்.

பாலும், பழமும், தண்ணீரும், விரும்புவோர் பசுவுருவும், மரவளைவும், சேற்றுக் கலப்பும் கருதாது கொள்வதுபோல் முறையுணர்வோர் பாட்டிற் குற்றம் கூறாது பயன் கொள்வர் என்பது அவையடக்கம். அவை இடத்தில் நிறைகுடமாக நின்று, பண்பு போற்றிப் பேணுதல் தான் செய்த நூலின் பெருமையை சிறுமையாகக் காட்டித் தான் பணிதல், தன்னடக்கம் காத்தல் என்பன நூலிற்குப் பெருமை கூட்டி நிற்கும்.

எங்கள் சிவபெருமானது பெருமையை அறிவார் யார். அவனது அகலத்தையும் நீளத்தையும் கொண்ட பரப்பினை யாரே அறிய வல்லார். தனக்கென நாமமும் உருவமும் இல்லாத பெரிய சுடரினது வேரினையும் அறியாது அதுபற்றிப் பேசுகின்றேன் என்று தன்னடக்கமாகக் கூறுகிறார்.

ஆர் அறிவார் என்பதற்கு சிவஞானசித்தியார் பதில் தருகிறது. பாச ஞானத்தில் அழுந்தும் மக்களால் அறிய முடியாது. எல்லாப் பற்றுக்களையும் விட்டுப் பற்றற்றவனான பதியைப் பற்றி நிற்கும் பதிஞானம் பெற்றவர்க்கே அறியமுடியும். திருமூலர் முதலான சிவயோகிகளே பதிஞானம் பெற்றவர் ஆவர். நாமும் முயன்று அட்டாங்க யோகத்தில் நின்று அறியமுடியும் என்பதாம்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. குஞ்சரா நிமலன் |
| விலாசம் | : | 46, வாசல வீதி - கொழும்பு - 13 |
| பிறப்பு | : | 1965.11.29 |
| தொ.பே | : | 0112382239 - 0778649674 |
| கல்வி | : | B.A |
| தொழில் | : | ஆசிரியர் |
| பட்டம் | : | சித்தாந்தரத்தினம், அறநெறிச்செல்வி |

உ
சிவமயம்

# தமிழ் மூவாயிரம் 17



திருமூலர் மந்திரத்தொகை எனும் பகுதியில்
மூலன் உரை செய்த "தமிழ் மூவாயிரம்"
எனும் மந்திரச் சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
திருமதி பத்மினி இராஜேந்திரா
கொழும்பு

திருக்கைலாசத்திலே சிவபெருமானது ஆலயத்திற்கு முதற்பெருநாயகராகிய திருநந்திதேவருடைய திருவருளைப் பெற்றவரும், எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்றவருமாகிய சிவயோகியர் ஒருவர் இருந்தார். அவர் அகத்திய முனிவர்பால் கொண்ட நட்பினால் அவருடன் சிலநாள் தங்குவதற்கு எண்ணி, அம்முனிவர் எழுந்தருளிய தென்நாட்டில் உள்ள பொதியமலையை நோக்கிப் புறப்பட்டார்.

திருவாவடுதுறையினை அணுகி, ஆவடுதுறை இறைவனை வணங்கிய சிவயோகியார், அத்தலத்தை அகன்று, செல்லும்போது, காவிரிக் கரையில் உள்ள பொழிலிடத்தே பசுக்கூட்டங்கள் கதறி அழுவதனை எதிரே கண்டார்.

அந்தணர்கள் வாழும் சாத்தனூரில் தொன்றுதொட்டு ஆனிரை மேய்க்கும் குடியிற் பிறந்த ஆயன் ஆகிய மூலன் என்பான், தான் எடுத்த பிறவியை, நுகர்ந்து தீர்ந்தமையால் உயிர்நீங்கி அங்கு நிலத்தில் வீழ்ந்து இறந்து கிடந்தான். மூலனால் மேய்க்கப்பட்ட பசுக்கள், உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச் சுழன்று வந்து மோப்பனவும் கதறுவனவுமாகி வருந்தின.

பசுக்கள் அடைந்த துயரத்தினைக் கண்ட சிவயோகியார், "இப்பசு மேய்ப்பான் உயிர்பெற்று எழுந்தாலன்றி, இப்பசுக்கள் துயர் நீங்கா" என எண்ணித், தம்முடைய திருமேனியைப் பாதுகாவலானதோர் இடத்தில் மறைத்து வைத்துவிட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப்பிரவேசம்) என்னும் சித்தியினால் தமது உயிரை, மூலனுடைய உடம்பில் புகுத்தித் திருமூலராய் எழுந்தார். பசுக்கள் எல்லாம் நாத்தழும்ப அவரை நக்கி மோந்தன. களிப்பு மிகுதியினால் துள்ளிக் குதித்து புல் மேயத்தொடங்கின. மாலையானதும் பசுக்கள் வழக்கம் போலத் தத்தம் வீடுகளுக்குச் சென்றன. பசுக்கள் சென்றபின் அவர் தனியே அவ்வழியில் நின்றார்.

மூலன் மனைவி அவ்விடத்திற்கு வந்து, இவரைத் தனது கணவரென நினைத்து, தொட்டு அழைக்க நெருங்கி வந்தாள். ஆனால் திருமூலர் ஆகிய சிவயோகியார், அதற்கு இசையாமல் இங்கு உனக்கு என்னுடன் தொடர்பு ஒன்றுமில்லை என மறுத்துப் பொதுமடத்தையடைந்து சிவயோகத்தில் அமர்ந்தார்.

மூலனின் மனைவி இதனை நல்லோர்பால் சென்று முறையிட்டாள். அவர்கள் அனைவரும் வந்து திருமூலர் நிட்டையில் இருப்பதைக் கண்டார்கள். அவர்கள் "பித்துற்றமயலன்று, பிறிதொரு அன்புள்ளது, சித்தவிகற்பம் களைந்த சிவயோகமே" அவர் இருக்கும் நிலையென உணர்ந்தார்கள். "பெண்ணே இனி இவர் இல்வாழ்க்கைக்கு ஏற்றவர் அல்லர்" எனக் கூறி அவளை அழைத்துச் சென்றனர்.

அவர்கள் சென்றபின் திருமூலர் நிட்டையை விட்டெழுந்து பசுக்கள் வந்த வழியே சென்று, தம் உடம்பினைச் சேமமாக வைத்த இடத்தில் சென்று பார்த்தார். கிடைக்கவில்லை. மூலனுடலிலே நின்று திருமூலராகவே விளங்கினார். சிவயோகியார் இவ்வுடற்பொறை பூண்டு, உலகிற்கு சிவாகமப் பொருளைத் தமிழில் அருள வேண்டுமென்பது சிவன் சித்தம். அதனால்தான் தன் இயல் உடல் மறைந்தது என உணர்ந்தார் திருமூலர்.

பின்பு திருவாவடுதுறையடைந்து அங்கு வீற்றிருந்து அருளும் அம்மையப்பரை வணங்கி, கோயிலின் மேற்கு மதிற்புறத்தே உள்ள அரசமரத்தின் கீழ் தேவ ஆசனத்தில் அமர்ந்து, உள்ளக்கமலத்தில் வீற்றிருந்து அருளும், அரும்பொருளாகிய சிவப்பரம்பொருளோடு இரண்டறக் கூடி ஒன்றியிருந்தார்.

ஆண்டிற்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோக நிலையில் இருந்து, மூவாயிரம் பாடல்களை அருளிச்செய்து "தமிழ் மூவாயிரம்" ஆகிய இத்திருமந்திரத் திருமுறையினை உலகிற்குத் தந்தருளினார். இதனை அவரே தனது திருமந்திரத்தில் சொல்கிறார்.

**மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்**
**ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே.** - திருமந்திரம் 99

திருமூலர் அருளிய மூவாயிரம் எண்ணிக்கையிலான இந்தச் சொற்றமிழ் மந்திரங்களையெல்லாம் கொண்ட திருமந்திரம், புவிவாழ் மாந்தர் அனைவரும் உயர்வு பெறுவதன் நிமித்தம் சற்குருநாதராகிய நந்தி எம்பெருமானுடைய திவ்வியமான கடாட்சத்தினால் அருளப்பெற்றதாகும். இதனை யாவரும் அதிகாலையில் துயில் எழுந்து, ஆசாரசீலராக பிரம்ம முகூர்த்தத்திலும் காலை வேளைகளிலும் பொருள் உணர்ந்து பக்தி சிரத்தையுடன் ஓதி வழிபட்டால், அண்ட சராசரங்களின் அதிபதியான ஈசன் திருவடியை அடைந்து இன்புறுவர்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. பத்மினி இராஜேந்திரா |
| விலாசம் | : | 16, 5/2, 55வது ஒழுங்கை - வெள்ளவத்தை |
| பிறப்பு | : | 1950.09.25 தே.அ.அ : 507692915V |
| தொ.பே | : | 0112364498 |
| கல்வி | : | A.L Science, Dip. in Home Science |
| பட்டங்கள் | : | சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர் |
| பணிகள் | : | திருவாவடுதுறைப் பயிற்சிமைய கொழும்பு செயலாளர், திருமுறை திருவாசகமுற்றோதல், சிவத்தல யாத்திரைகள், சைவநீதி விநியோகத்தர் |

உ
சிவமயம்

# வந்த மடம் ஏழும் மன்னும் 18



திருமூலர் வரலாறு எனும் பகுதியில்
"வந்த மடம் ஏழும்" எனும்
மந்திரச் சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திரு. இராமன் சசீந்திரன்**
கொழும்பு

திருமந்திரத்தில் குருமட வரலாறு என்னும் பகுதியில் நிலைபெற்ற கயிலாய பரம்பரை சன்மார்க்கமாகிய ஞானமார்க்கத்தில் வந்த மடங்கள் ஏழு. அந்த ஏழு மடங்களின் திருமடத் தலைவர் திருமூலர்.

இம் மடங்களில் முதலில் தோன்றியது திருமூலர் மடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குதான் முதலில் திருமந்திரம் உபதேசம் நடைபெற்றது என்று அறியப்படுகிறது. இவ் ஏழு திருமடங்களும் நிலைபெற்ற நன்னெறியினைப் போதிப்பனவே. இவ் ஏழு மடங்களின் தலத் தலைவர்கள் காலங்கர், அகோரர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமானந்தர், யோகதேவர், திருமூலர். இதைத்தான்,

"வந்த மடமேழும் மன்னும் சன்மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை"

என்ற திருமந்திரத்தின் முதல் இரண்டு அடிகளில் கூறியுள்ளார்.

இதில் முந்தி உதிக்கின்ற மூலன் மட வரையானது திருவாவடுதுறை சிவபெருமானின் திருவருளால் திருவாவடுதுறை படர் அரசின் கீழ் சிவயோகத்தில் அமர்ந்து அந்தி மதி புனை அரனடி நாள்தோறும் சிந்தை செய்து நம்பிரான் திருமூலநாயனார் செப்பியருளியுள்ள செந்தமிழ் ஆகமம் 'திருமந்திரம்' அல்லது 'மந்திரமாலை' ஆகும். இத் திருப்பெயர்களும் ஐந்து எழுத்தில் அமைந்துள்ளன. இதுவும் திருவருட் சிறப்பேயாகும். திருமூலருக்கு ஏழு சீடர்கள் உண்டு என்பதும் அவர் ஏழு மடங்களை ஸ்தாபித்தார் என்பதும் தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திர நூலைத் திருவாவடுதுறையில் அரச மரத்தின் அடியில் தவமிருந்துகொண்டு பாடி முடித்து தம்முடைய ஏழு சீடர்களுக்கும் புகட்டிவந்தார் என்பதனை,

"மந்திரம்பெற்ற வழிமுறை "மாலங்கன்"
"இந்திரன்" "சோமன்" "பிரமன்" "உருத்திரன்"
"கந்துரு"க் "காலாங்கி" கற்க மலையனோடு
இந்த எழுவரும் என் வழியாமே" - திருமந்திரம் 69

என்னும் மந்திரத்தின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

திருமூலர் ஒன்பது ஆகமங்களின் சாரங்களை ஒன்பது தந்திரங்களாகப் பாடினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின் இம்மந்திரத்தின் கடைசி வரிகளின்,

**"சுந்தரன் ஆகமச் சொல் மொழிந்தானே"**

என்று குறிப்பிட்டுள்ளார். நம்பிரான் மூலருக்கு தொன்மைத் திருப்பெயர் 'சுந்தரன்' என்பது ஆகும். இவையே மேற்குறிப்பிட்ட வரிகளின் மூலம் "சுந்தரன் ஆகமச் சொல் மொழிந்தானே" என ஓதப்படுதலை உணரலாம். மேலும் நாதன் என்னும் திருப்பெயர் இறைவனுடைய திருவருளால் பெற்றதாகும். அவ்வடிகளாவன,

"நந்தி அருளாலே நாதனாம் பெயர் பெற்றேன்" - 68 என்னும் திருப்பாட்டால் உணரலாம். திருமந்திரத்திரட்டு 'சுந்தர ஆகமம்' எனவும் ஒரு திருப்பெயர் உண்டு. இத் திருப்பாட்டின் மூலம் திருமூலர்தான் மந்திரங்களை உபதேசித்தார். அவரது இயற்பெயர் 'சுந்தரன்' என்பதையும் ஆவணப்படுத்துகிறது (சான்றாகின்றது). இத் திருமந்திரநூல் ஒன்றே தமிழின் 'தமிழ் வேதாகமம்' முழுமுதற் கருவூல நூலாகும். திருமூலருடைய காலமாகிய இராமாயண காலத்தில் (அஃதாவது குறிப்புகளின்படி இராமயண காலம் வருடங்கள் கி.மு 6000) இமயம் முதல் குமரி வரையும் எல்லைக்கு அப்பாலும் தமிழே பேசப்பட்டது.

மந்திரம் முழுமையாக,

**வந்த மடம்ஏழும் மன்னும் சன்மார்க்கத்தின்**
**முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை**
**தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்**
**சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே** - திருமந்திரம் 101

ஏழு திருமடங்களும் நிலைபெற்ற நன்னெறியினைப் போதிப்பனவே. அவற்றுள் சிறந்து காணப்படுவது திருமூலர் திருமடமாகும். அங்கிருந்தே ஒன்பது தந்திரமும் அவற்றிற்குரிய மூவாயிரம் திருமந்திரமும் வெளிப்போந்தன. இவற்றைத் திருமூலராகிய சுந்தரர் அருளிச்செய்தனர். அதனால் இதற்கு சுந்தர ஆகமம் எனவும் ஒரு திருப்பெயருண்டு


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. இராமன் சசீந்திரன் |
| விலாசம் | : | 245/12 - 5/1 Hill House Garden - Dehiwala |
| கல்வி | : | க.பொ.த உயர்தரம் - N.I.BM, OU.S.L |
| தொழில் | : | மலிபன் விற்பனை முகாமையாளர் மீளாய்வு |
| பணி | : | யோகா, திருமந்திரம், சித்தாந்தம் பயிலுநர் |

உ
சிவமயம்

# தானொருகூறு சதாசிவன் 19



திருமந்திரம் பாயிரப்பகுதியில் திரிமூர்த்திகள் என்னும் பகுதியில் "தானொரு கூறு சதாசிவன்" எனும் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**செல்வி கிருபாதேவி வீரசிங்கம்**
கொழும்பு

சைவசித்தாந்தக் கருத்துக்களாகிய முப்பொருள் உண்மைகளை விளக்கும் முதல் நூலாகிய திருமந்திரமாலையில், பாயிரப் பகுதியானது "கடவுள் வாழ்த்து" என்ற தலைப்புடன் தொடங்கி, "மும்மூர்த்திகளின் முறைமை" (சேட்டகனிட்ட முறை) என்ற தலைப்புடன் நிறைவு பெறுகின்றது.

பன்னிரண்டு பாடல்களைக் கொண்ட "மும்மூர்த்திகளின் முறைமை" என்ற தலைப்பானது படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்பவர்களாகிய நான்முகன், திருமால், உருத்திரன் பற்றிய செய்திகளைக் கூறினும், சிவனின் ஒப்பற்ற உயர்நிலை பற்றிய பெருமைகளே முக்கியமாகப் புலப்படுத்துகின்றது.

மூவரும் பதவிவழி ஒரு முதல்வன் ஆணையைத் தாங்கித் தொழிலாற்று கின்றவர்கள். மூவரும் உயிர்கட்கு உடம்பினைப் படைத்து, காத்து, அழித்து செய்யும் தொழிலால் ஒரேதன்மை உடையவராவர்.

இருவினைகளில் கட்டுப்படாது உலகிற்கு வித்தாக இருக்கும் சிவபரம்பொருளே மாயனாய், அயனாய், உருத்திரனாய் நின்று முத்தொழிலையும் செய்கின்றது. அச்சிவப் பரம்பொருளே ஒன்றாய், பலவாய் விரிந்து, ஐந்தொழிலையும் ஆற்றி அருள் புரிகின்றது. ஆகவே, முழுமுதற்கடவுளே மூவரோடு (பிரமா, விஷ்ணு, உருத்திரன்) ஐவராக (மூவருடன் மகேசுவரன், சதாசிவன்) உயிர்களிடத்தில் விளங்குபவன் என்ற விளக்கத்தை இங்கு உணரக் கூடியதாகவுள்ளது.

**"தானொரு கூறு சதாசிவன் எம்இறை**
**வானொரு கூறு மருவியும் அங்குளான்**
**கோனொரு கூறுடன் உன்நின் றுயிர்க்கின்ற**
**தானொரு கூறு சலமய னாமே"** - பாடல் 112

"மும்மூர்த்திகளின் முறைமை" என்ற தலைப்பில் இறுதிப் பாடலாக இத்திருமந்திரம் இடம்பெற்றுள்ளது.

சிவ முதற்பொருளின் ஒரு கூறே சதாசிவனாகிய எம் தலைவனாவான். உருவம், தொழில், பெயர் முதலியவற்றைப் பொருந்தாத சிவபெருமான் ("ஊரிலான் குணங்குறியிலான்" - கந்தபுராணம்) ஐந்தொழிலாற்றி ஆன்மாக்களின் மும்மலங்களை நீக்கி, முத்தியின்பத்தைக் கொடுக்க வேண்டும் என்ற பெருங்கருணையினால் அருவம், அருவுருவம், உருவம் என மூவகைத் திருமேனிகளைக் கொண்டருளுகின்றான். இவ்வாறு இறைவன் கொள்ளும் வடிவம் நம் உருவம் போல மாயையினால் ஆகியதன்று. சக்தியே அவனுக்கு வடிவமாய் அமைகின்றது. உருவம் கண்ணுக்குப் புலனாவது. அருவம் அவ்வாறு புலனாகாது. அருவுருவம் ஒளிப்பிழம்பாய் நிற்பது. இலிங்க வடிவமே அருவுருவத் திருமேனியாகும். (சகல நிஷ்களம்) இதுவே இறைவனின் ஒரு கூறாகிய சதாசிவனாகும்.

இதனையடுத்து நோக்கின், அட்டமூர்த்தனே உடலுள் நின்று பிராணரூபமாயுள்ள தலைவனாயுமுள்ளான். வானில் வியாபித்துள்ள பரம்பொருளே ஊனிலும் மறைந்து நின்கின்றது. உணர்வினிலே கலந்து உறைகின்றது. பக்குவமடைந்த உயிருக்கே இந்த உண்மையை உணரமுடிகின்றது.

இன்னும், இறைவனது இன்னொரு கூறு பரந்த நிலையில் சலமயமாக, அதாவது அசைவுடையதாக (ஸ்பந்தம் -Vibration) உலகில் சகலதையும் இயக்கித் தானும் உடன் இயங்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்பாடல் முழுவதனுள் உட்கிடையாக நுழைந்து பார்ப்போமாயின், அங்கு நுவலப்பட்ட நுண்பொருள், சைவசித்தாந்தத்தில் கூறப்படும் "அத்துவிதம்" என்னும் தத்துவம் என்பது எமக்குப் புலப்படும்.

இறைவன் உலகத்தோடும் உயிர்களோடும் ஒன்றுபட்டுப் பிரிப்பின்றி நிற்கும் நிலையை நாமுணரக்கூடிய வகையில் "தானொருகூறு சதாசிவன்" என்னும் பாடல் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறலாம்.

மௌனமான சத்தத்தில் சிவனை உணர்ந்த சித்தர் திருமூலர், தான் மோன நிலையிலிருந்து உணர்ந்த சதாசிவ தத்துவத்தை இவ்வாறு அழகு தமிழில் அருள் பொழியப் பாயிரப் பகுதியின் இறுதிப் பாடலாக எமக்கு அருளியுள்ளார்.

**"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"**


பெயர் : செல்வி. கிருபாதேவி வீரசிங்கம்
விலாசம் : 70A - 3/1 பாமன்கட ரோட் - வெள்ளவத்தை
பிறப்பு : 1947.03.01 தே.அ.அ : 475610164V
தொ.பே : 0777168910 - 0112365885
கல்வி : B.A, M.Phill
பதவி : அதிபர் தரம் 1 ஓய்வு
பணி : சமய சமூகப்பணி, சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர், சித்தாந்த, திருமந்திர விரிவுரையாளர்

உ
சிவமயம்

# இறைவனின் கருணை

20



திருமந்திரம் பாயிரப்பகுதியில் திரிமூர்த்திகள் என்னும் பகுதியில் "இறைவனின் கருணை" எனும் ஒரு மந்திரம் பற்றி சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி. லலிதாராணி இறைவன்**
கொழும்பு

அண்டத்திற்கு அப்பாலவனாகிய இறைவன் பரமாகாயமாகிய பெரு வெளியினின்றும் இறங்கி வந்து உயிர்களது வினைப்பக்குவத்திற்கு ஏற்பக் குருவடிவம் கொண்டு, அருளாகிய தண்மை நிலை பெற்ற திருவடியை என் தலைமேற் பாதுகாவலாக முன்வைத்து தீக்ஷை செய்து என் உள்ளத்திலும் புகுந்து நெஞ்சினை உருக்கி ஒப்பில்லாத பேரின்பத்தை விளைக்கும் சிவஞானமாகிய கண்ணினைக் காட்டி, முன்னின்று காட்சி தந்து செம்பிற் களிம்பு போல் அநாதியாய் நின்று, என்னைப் பற்றியுள்ள ஆணவமலத் தொடர்பினை அறுத்து அருள் செய்தான்.

தேவர்கள் நரை, திரை, மூப்பு, மரணத்தை வெல்ல வேண்டும் என்று பரந்தாமனிடம் சென்று உபாயம் கேட்டனர். அவர் நெடுநேரம் சிந்தித்துவிட்டு, "பாற்கடலைக் கடைந்தால் அமிர்தம் வரும். அதனை உண்டால் சாவா, மூவா நலம் பெறலாம்." என்று சொன்னார். மிக மகிழ்வோடு முப்பத்து முக்கோடி தேவர்களும் திருப்பாற் கடலுக்குச் சென்று, மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர்கள் வால் பக்கமும், அசுரர் வாய்ப்பக்கமுமாக ஆயிரம் ஆண்டுகளாகப் பாற்கடலைக் கடைந்தார்கள். அதனால் துன்பப்பட்ட வாசுகிப் பாம்பு தன்னை அறியாமல் தன் ஆயிரம் வாயினாலும் நஞ்சை உமிழ்ந்தது. தொடர்ந்து கடைந்ததால் கடலில் இருந்து ஓர் (ஆலம்) நஞ்சு தோன்றிது.

"கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந் தெழுந்த
ஆல நஞ்சுண்டவர் மிக விரிய..."

என்பது சுந்தரர் தேவாரம். பாம்பிலிருந்து ஓர் ஆலம், கடலிலிருந்து ஓர் ஆலம். இந்த இரு ஆலங்களும் அதி பயங்கரமான, கொடுமையான உஷ்ணத்துடன் பொங்கிவர அதன் வெம்மை தாங்காமல் அனைவரும் மூலைக்கு ஒருவராய் ஓடினர். இதனை அருணகிரிநாதர் கூறுவது,

"விடம் பரவி அயன் மாலோ டமரர் ஒளி கணமோட
மிடறடைய விடம் வாரி" என்பதாம்.

தொழுது பணிவார்க்குத் தோழனும் ஆவான்

**சினம் செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்**
**புனம் செய்த நெஞ்சிடைப் போற்ற வல்லார்க்குக்**
**கனம் செய்த வாள்நுதல் பாகனும் அங்கே**
**இனம் செய்த மான்போல் இணங்கி நின்றானே** (தி.ம. 41)

பொங்கி வந்த விடத்தில் இருந்து தப்பிக்க எல்லோரும் சிவனை நோக்கி கைலாயம் சென்று தம்மைக் காக்கும்படி கதறினர். கருணை வடிவான இறைவனும் தன் திருவடியில் தம் குறைகளைக் கூறிச் சரணடைந்தவர்க்கு அவர்கள் ஈடேறும் பொருட்டு அகப்பற்று, புறப்பற்று என்ற இருவகைப் பற்றும் நீக்கித் திருவடியை அடைய அருள் புரிவார். அப்படிப்பட்டவர் அந்த ஆலகாலத்தை உண்டுவிட்டால் உள்ளே இருக்கும் ஆன்மகோடிகள் எல்லாம் அழிந்துவிடும். ஆதலால் எம்பெருமான் அதை உண்ணாமலும், உமிழாமலும் கண்டத்தில் தரித்தருளினார். அதனால் எம்பெருமானுடைய கண்டங்கரியது ஆயிற்று. அதனால் மணிகண்டர், நீலகண்டர் எனப்படுகின்றார்.

**மிடறு கரியா குமார பழனி**
**விரவும் அமரர் பெருமாளே.** (திருப்புகழ்)

என்பதும் சிவபெருமானுடைய கருணைக்கு இது ஒன்று போதாதா? பரமசிவன் செக்கச் செவேலென்று இருக்கின்றார். கண்டம் கன்னங்கரேல் என்றிருக்கிறது.

பாற்கடலில் இருந்து அமுதம் கிடைக்கப்போகிறது என்ற மகிழ்ச்சியில் தேவர்கள் அன்று சிவனை மறந்து இருந்தனர். அதாவது இறைவனுடைய எல்லையற்ற குணங்களில் இயன்றவற்றை எடுத்துக் கூறி வாழ்த்த வல்ல பூர்வ புண்ணியம் உடையவர்கள் மனத்துள் விளங்கும் சோதிப்பொருளையும், செம்மனத்துள் இருந்து திளைக்கின்றயும், இறைவன் எண்குணத்தவன் என்பதையும், மறந்துவிட்டனர். அருளை வாரி வழங்கும் வள்ளலாக விளங்குகின்ற பரம்பொருளைச் சென்று வழிபட அறிவு விளக்கமுற்று, அறியாமை இருள் அகன்று தெளிவான மனநிலை உண்டாகும் என்பதாம்.

இறைவனின் ஆணைப்படி தசமி அன்று திரும்பவும் பாற்கடலைக் கடைந்து பொங்கிவந்த அமிழ்தினைப் பருகிய மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர் தேவர்கள். அப்போ அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க திரயோதசியில் நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று தன் சூலாயுதத்தைச் சுழற்றி ஆனந்தமாக அதிசய நடனம் ஆடினார். அழகிய ஒளி பொருந்திய உமாதேவியாரைத் தன் இடப்பாகம் கொண்ட இறைவன். திருத்தம் செய்த விளைநிலம் போன்ற மனத்தில் வைத்து வணங்க வல்லார்க்கும், அவரிடம் அன்பு கொண்ட அடியவர்கட்கும் தன் இனத்தோடு கூடி வாழும் மான்போல, உதவி புரிய எப்போதும் சேர்ந்து இருப்பான் என்பதாகும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. லலிதாராணி இறைவன் |
| விலாசம் | : | 15 3/1 அத்தபத்து மாவத்தை - தெஹிவளை |
| பிறப்பு | : | 1952.02.29 தே.அ.அ : 525602176V |
| தொ.பே | : | 0770167538 - 0112730205 |
| கல்வி | : | கர்நாடக சங்கீத வீணை டிப்புளோமா - யாழ். பல்கலைக்கழகம்<br>இசைக்கலைமாணி - பட்டப்பின் கல்வி டிப்புளோமா |
| தொழில் | : | ஆசிரியர் (ஓய்வுநிலை) |
| பணி | : | கிரியாபாபாஜி ஆரணிய சேவைகள், யோகா பயிற்சியளித்தல்,<br>திருமுறைமுற்றோதல், சமூகநலப் பணியாளர், மூத்த சமூகசேவையாளர் |

## இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையின் அனுசரணையுடன் மஞ்சத்தடி சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் திருமந்திரம் பயில்கின்ற திருமந்திரச் செல்வர்கள்



நா. மனோன்மணி
இணுவில்



கா. வைத்தீஸ்வரன்
இணுவில்



க. கனகராசா
கோப்பாய்



சி. நடராசா
இணுவில்



கா. தம்பிராசா
இணுவில்



கா. மனோநாயகம்
சங்குவேலி



அ. குகதாசன்
இணுவில்



ஆ. திருநாவுக்கரசு
இணுவில்



வி. மகாதேவன்
சுழிபுரம்



நி. சத்தியதேவி
கோண்டாவில்



இ. கிருஷ்ணானந்தி
வயாவிளான்



**லி. கணேஸ்வரி**
**இணுவில்**



**பொ. திலகவதியார்**
**சுழிபுரம்**



**சி. பரமேஸ்வரி**
**கிளிநொச்சி**



**கு. சிவபாலராஜா**
**நல்லூர்**



**நா. தில்லைநாதன்**
**இணுவில்**



**வை. கனகநாயகம்**
**இணுவில்**



**வை. சிறீஸ்கந்தவரோதயன்**
**இணுவில்**



**சு. கணேசமூர்த்தி**
**இணுவில்**



**ச. கஸ்தூரி**
**கோண்டாவில்**



**பு. சிறீஸ்வரி**
**சரசாலை**



**ஜெ. கோமதி**
**உடுவில்**



**க. சிவப்பிரகாசம்**
**மிருசுவில்**

# திருமந்திரம் – முதலாம் தந்திரம்
# அறிமுகக் கட்டுரைகள்

இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையில்
திருமந்திரம் பயில்கின்ற
திருமந்திரச் செல்வர்களின்
ஆக்கம்

உ
சிவமயம்

# திருமந்திரம் – முதல் தந்திரம் 21



## திருமந்திரம் முதல் தந்திரம் பற்றிய சிந்தனை.

*சைவப்புலவர்*
சு. செல்லத்துரை
தலைவர், திருமந்திரப் பணிமன்றம், கொழும்பு

திருமூலர் திருமந்திரம் முதல் தந்திரத்தில் இருபத்து நான்கு உட்பிரிவுகள் உள்ளன. இந்தப் பிரிவுகள் யாவற்றையும் தொகுத்துக் காண்போமானால், திருமூலர் உபதேசம் என்னும் பகுதியில் தனது ஞான அனுபவத்தை முதற்கண் நமக்குக் குறிக்கோளாகக் காட்டுகின்றார். பின்பு அந்தக் குறிக்கோளை அடைவதற்குச் சாதனமாக முதலில் நம்மிடம் அமைய வேண்டுவது ஒழுக்கமே - நல்லொழுக்கமே என்று வற்புறுத்திக் கூறுகின்றார்.

ஆகவே இந்த முதல்தந்திரச் செய்தி நம் அனைவரையும் இயற்கையும் செயற்கையுமாகிய சூழ்நிலைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டு உள்ளும் புறமும் தூய்மை எய்தி அறிவடையுமாறு ஆணையிடும் பகுதியாகும் என நாம் கொள்ள வேண்டும். இந்த நல்லொழுக்கமாகிய அடிப்படை அமையாமல் மேல்வரும் தந்திரங்களில் கூறப்படும் அறிவும் அனுபவமும் அடைதல் இயலாது என்பதை உறுதியாக உள்ளத்தில் கொள்ளவேண்டும்.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது நீதிநூல். ஆகவே உயிர் உய்தி பெறுவதற்கு ஒழுக்கப் பேறே அடிப்படை என்பது தெளிவு. இதனாலேதான் நீதிநூல் முறையில் நின்று ஒழுக்கநெறியைப் பல உபாயங்களால் உரைக்கின்றார்.

கடவுள் பற்றிய கருத்தே இல்லாதவர்களும், சமுதாயத்துக்கும் வாழ்வுக்கும் இத்தகைய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தே ஆகவேண்டியுள்ளதைத் தெரியலாம். இந்த நோக்கோடுதான் கடவுள் கொள்கை இல்லாத சமண, பௌத்த சமயங்கள் தத்தம் கொள்கைகளை உருவாக்கிக் கொண்டன.

ஆதலால் இத்தகைய விழுப்பம் வாய்ந்த ஒழுக்க நெறியில் நில்லாது எம் சித்தாந்தத் துறையில் படிந்து குருவருளும் திருவருளும் சிவப்பேறும் அடையலாம் என்பது வீணேயாகும். "இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்பது நீதிநூல்.

ஒழுக்க நெறியே பேரின்ப வீடளிக்கும் பெற்றி உடையது. ஐம்புல அடக்கமே ஒழுக்க நெறிக்கு உறுதுணையாவது பற்றியே 24 ஒழுக்க நெறிகளை முதலில் கூறுகின்றார்.

## அற ஒழுக்க வாழ்வு

"இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை முறைப்படி வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டே ஆகும்" என்பது நாவலர் பெருமான் வாக்கு.

இறைவனை முறைப்படி வணங்கவேண்டுமாயின் அறவாழ்வு வாழவேண்டும். தமிழில் எழுந்த பழந்தமிழ் நூல்களில் பொதுவாகவும் பதினெண்கணக்கு நூல்களான திருக்குறள், நாலடியார், இனியவை நாற்பது, இன்னா நாற்பது, ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி முதலான நூல்களில் சிறப்பாகவும் அற ஒழுக்கம் பற்றிச் சொல்லட்பட்டிருக்கிறது. பிற்கால இலக்கியங்களான நீதிநூல்களும் அற ஒழுக்கம் பற்றி இலகுதமிழில் சொல்கின்றன.

எமக்குக் கிடைக்கின்ற தமிழ் நூல்களில் காலத்தால் முந்தியதான திருமூலர் திருமந்திரத்தில் முதலாம் தந்திரம் முழுவதும அறவாழ்வு பற்றியே சொல்கிறது. நாவலர் பெருமான் வாக்கின்படி அறவாழ்வு வாழ்பவருக்கே முத்தியின்பம் சித்திக்கும் என்பதற்கேற்ப அறவாழ்வைப் பற்றியும் அதன்மேல் முத்தியின்பம் பெறுதற்குரிய வழிகளையும் கூறுவது திருமந்திரம்.

முதல் தந்திரத்தில் அறவாழ்வைப் பற்றிச் சொல்லிவிட்டு ஏனைய எட்டுத் தந்திரங்களிலும் முத்தி பெறுவதற்குரிய நெறிகளைப் படிக்கிரம முறையில் திருமூலர் சொல்கின்றார். உலகப் பொது அறநூலாகிய திருக்குறள் கூட மனிதன் பெறவேண்டிய உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் சொல்லிவிட்டு வீட்டின்பத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அதற்குக் காரணம், "வீட்டின்பம்" "சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின் சொல்லா தொழிந்தார்" என உரையாசிரியர் நச்சினார்க்கினியார் கூறுகின்றார்.

ஆனால் திருமூலர் திருமந்திரமே மனிதனுக்குரிய அறவாழ்வு பற்றிச் சொல்லி முத்திக்குரிய வழிகளையும் கூறும் ஞானநூல் ஆகும் பெருமை பெற்றது.

வீட்டின்பமாகிய முத்தி பெறுவதற்கு அறவாழ்வு எனப்படும் தூயவாழ்வு வாழ்தல் வேண்டும். உதாரணமாகப் பசுப்பால் பூரண சத்துள்ள உணவுப்பொருள். அதில் மனிதனுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் உள்ளன. அதைச் சுத்தமான பாத்திரத்தில் எடுத்துப் பயன்படுத்தினால்தான் பயன்தரும். அசுத்தமான பாத்திரத்தில் வைத்தால் பால் அசுத்தமாகிப் பழுதாகி அதிலுள்ள சத்துக்களும் கெட்டு பல நோய்களுக்கும் காரணமாகித் தீங்கு விளைவிக்கும்.

அதேபோல முத்தியின்பம் பெறுவதற்கு முயல்பவன் தூய பாத்திரமாக இருக்க வேண்டும். மனிதனைத் தூய்மைப்படுத்துவது அறவாழ்வே ஆகும். ஆதலால்தான் திருமூலர் திருமந்திரத்தில் உள்ள ஒன்பது தந்திரங்களில் முதல் தந்திரத்தில் ஒழுக்க நெறிபற்றிச் சொல்கின்றார். நாம் அதனையுணர்ந்து அறவாழ்வு வாழவேண்டும் என்பதற்காகவே இந்த நூலில் அறநெறி பற்றிய திருமந்திரக் கட்டுரைகள் சிந்தைக்கு விருந்தாகத் தரப்படுகின்றன.

# உபதேசம் – பதி, பசு, பாசம் 22



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "உபதேசம்"
பற்றிக் கூறும் முப்பது மந்திரங்களில்
ஒருமந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திரு. கார்த்திகேசு தம்பிராசா
இணுவில்

முதல் தந்திர உபதேசத்தில் பரம்பொருள் பரமஆகாயத்தை விட்டிறங்கி, மண்ணுலகை அடைந்து ஆன்மாக்களின் வினைக்கு ஈடான திருமேனி தாங்கி தண்மை பொருந்திய திருவடிகளை ஆன்மாக்களுக்குப் பாதுகாவலாக வைத்து உள்ளத்துள் திருவருள் புகச்செய்து, கல்மனதைக் கரைத்து ஒப்புவமை கூறமுடியாத பேரானந்தப் பெருவெள்ளம் பெருக்கெடுத்தோட மயக்கம் என்னும் பாசத்தளைகளை அறுத் தெறிந்தான். "விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு" என்னும் மந்திரம் 113 இன் மூலம் கூறப்பட்டுள்ளது.

ஆன்மாவின் வாழ்நாளை இறைவன் கருவிலேயே தீர்மானிப்பார். தனு, கரண, புவன, போகம் என்பவற்றைக் கொடுத்து வினையை நீக்கி அருளுவார். மன அழுக்கு மறைந்து பதியை நாடப் பாசம் விலகும். இதனை "பதி அணுகில் பசு, பாசம் நிலாவே" என்ற மந்திரத்தின் கூற்று மூலம் அறியலாம். சூரியக்கல் முன்வைத்த பஞ்சானது சூரிய ஒளி சூரியக் கல்லினூடாகப் பட்டால்தான் எரியும். நேரில் பஞ்சில் பட்டாலும் எரியாது. இதே போன்று இறையயொளி குருமூலம்தான் கிடைக்கும். பாசவினை அகற்றும். ஐம்பொறிகள் வாயிலாக உண்டு, உணர்ந்து, நுகர்ந்து, கேட்டு, கண்டு மகிழ்வதான செயல்களில் ஈடுபட்டு அறிவானது அறிகின்றபோது நல்வழி காட்டி அருளுபவன். ஞானாசிரியனாகவரும் சிவபெருமானே. "மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய்", "மரகத மாடமாய்", சிவனும் சக்தியும் பொன்னம்பலத்தில் ஆடும் ஆனந்த நடனம் காணப்பெற்றோர் புண்ணியம் செய்தோரே. ஆமையைப் போல் ஐம்புலன் அடக்கின் குருவருள் மூலம் திருவருளைப் பெறலாம்.

"மண்ணொன்று கண்டீர்" என்ற 143ஆம் மந்திரம் கூறும், மண் ஒன்று, ஒரே தன்மையுடையது. அதனால் ஆன இரண்டு பாத்திரங்களில் ஒரு பாத்திரம் தீயினால் சுடப்பட்டு உறுதியாக இருந்தது. மற்றையது பச்சைமண் சுடப்படாதிருந்தது. அது மழை பெய்து தண்ணீரில் கரைந்து மீண்டும் மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்டது.

இதேபோல்தான் உலகில் வாழும் உயிர்கள் நிலையும் "தனித்திரு, துதித்திரு" என்ற மந்திரத்திற்கமைய நெஞ்சால் தொழுது நினைவால் வழிபட்டுச் சிவன் (ஞான போதம்) என்னும் பரம்பொருளின் பாதங்களைப் பற்றினால் பாவவினை அகலும்.

யாக்கையானது மேற்கூறிய கலங்கள் இரண்டின் தன்மையை ஒத்தது. யாக்கை நிலையாமையுடையது. அழிந்து போவது. ஆன்மா செய்த பாவ புண்ணியமே உயிருடன் கூட வருவது. உயிரோடும் யாரும் கூட வரார் என்ற உண்மை "ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு" என்ற மந்திரத்தின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. போன உயிர் மீண்டும் வராது. இதுவே மரணம். மூச்சடங்கப் பேச்சடங்கும் முடியுடை மன்னருக்கும் முடிவு இதுதான். எனவே நிலையில்லா யாக்கையில் உயிர் இருக்கும்போதே நன்னெறி வழிநின்று இறையொளி பெறின் நரகம் நீங்கச் சுவர்க்கம் கிடைக்கும்.

**பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்**
**பதியினைப்போல் பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்று அணுகாப் பசு பாசம்**
**பதி அணுகிற் பசு பாசம் நிலாவே. - 115**

சிவன் என்றும் 'சீவன்' என்றும் 'தளை' எனவும் கூறப்படும் மூன்று பொருள்களில் சிவனைப் போன்று உயிரும் பாசமும் மிகவும தொன்மையானவை. உயிர்த்தன்மையும், தளை அல்லது பந்தமும் சிவனைச் சென்றடையா. சிவன் உயிரிடம் விளங்கினால், உயிர்த்தன்மையும் தளையும் நீங்கும். ஆன்மா ஈடேற்றம் பெறும்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கார்த்திகேசு தம்பிராசா |
| விலாசம் | : | மஞ்சத்தடி முன்வீதி, இணுவில் கிழக்கு - இணுவில். |
| பிறப்பு | : | 1939.12.18 தே.அ.அ : 193935302084 |
| தொ.பே | : | 0212241856 |
| கல்வி | : | ஆசிரியர் பயிற்சி |
| தொழில் | : | ஆசிரியர் - கமம் |
| பணிகள் | : | கோண்டாவில் வடமேற்கு முதியோர் சங்கப் பொருளாளர் |
| | | சுகவாழ்க்கைப் பேரவை - இணுவில் - பொருளாளர் |

உ
சிவமயம்

# யாக்கை நிலையாமை

**23**



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "யாக்கை நிலையாமை"
பற்றிக் கூறும் இருபத்தைந்து மந்திரங்களில்
ஒருமந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி. பரமேஸ்வரி சிவனொளிபாதம்.**
**கிளிநொச்சி**

இவ்வுடலானது நிலையில்லாதது என்பதை எம்மில் எத்தனை பேர் சிந்தித்துச் செயற்படுகின்றோம். எமது உடலானது ஒரு மட்கலத்திற்குச் சமனானது என்று உதாரணம் கூறினாலும், மட்கலம் உடைந்தால் வறுப்பதற்கு ஓடாகப் பயன்படுத்தலாம்; ஆனால் இவ்வுடலின் உயிர் பிரிந்தால் என்ன செய்யமுடியும்? செத்த மாட்டின் தோலினால் செருப்புத் தைக்கலாம்; செத்த மனிதனால் என்ன செய்யலாம்? எம் கண்முன் யாக்கை நிலையாமையை எத்தனை சம்பவங்கள் உணர்த்தினாலும் தாமரை இலையின் மேல் தண்ணீர் போல எம்மில் எத்தனை பேர் வாழுகின்றோம்? "செத்த பிணத்தைச் சுற்றி இனிச்சாம்பிணங்கள் கத்துங்கணக்கென்ன காண்" என்ற பட்டினத்தடிகளின் கூற்றுக் கமைவாகவே ஆண்டாண்டுதோறும் அழுது புலம்புகின்றோமே! அரசனானாலும் ஆண்டியானாலும் நிலையாமையை எதிர்கொள்ள வேண்டியவர்களே. நிலையாமையை மறந்து வாழும் மனிதரின் மதியை என்னென்பது?. "வினைப்போகமே இத் தேகங்கண்டாய் வினைதானொழித்தால் தினைப்போதும் நில்லாது" என்ற பாடலடிகளும் சிந்திக்கத் தூண்டுகின்றன.

உலகிலே பிறந்த நாட்தொடங்கி இறக்கின்ற காலம்வரை வாழும் காலம் என்று எமது மதியீனம் கணக்கிடுகின்றது. எமதுயிரை அறுக்கின்ற வாள் போன்று ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் உணருகின்றோமா? இதனையே வள்ளுவர் பெருமான் "நாள்என ஒன்று போற்காட்டி உயிர் ஈரும் வாளது உணர்வார்ப் பெறின்" என்ற குறளினால் விளக்கினார். பிறப்பு இறப்பு உயிருக்கு மாறி மாறி வரும் என்பதை "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்றார். மழை பொழியும்போது நிலத்திலே எழுகின்ற நீர்க்குமிழியானது கணப்பொழுதேனும் தங்கியிருக்காதது போலவே எமதுடலும் உயிரும் சேர்ந்திருக்கும் காலம். எனவே நாளை நாளை என்று காலந்தள்ளிப் போடாமல் இயம நியம காரியங்களில் ஈடுபடுவோம்.

அப்பர் பெருமானும் பல தேவாரப் பதிகங்களில் நிலையாமையைப் பற்றி உணர்த்துவதோடு நின்றுவிடாமல் நிலைத்து வாழவும் பாடியுள்ளார். "நிலைபெறுமா

றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா" என்றழைத்து வழிகூறுகின்றார். பல்லவ மன்னனால் நீற்றறையில் அடைக்கப்பட்டபோது "மாசில் வீணையும்" என்று தொடங்கும் பதிகத்தின் 4ஆம் பாடல் "நடலை வாழ்வு கொண்டென் செய்தீர் நாணிலீர்; சுடலை சேர்வது சொற்பிரமாணமே; கடலின் நஞ்சமுதுண்டவர் கைவிட்டால்; உடலினால் கிடந்தூர் முனிபண்டமே" என யாக்கை நிலையாமையின் தன்மையை எவ்வளவு தெளிவாக உள்ளம் கொள்ள வைக்கின்றார்.

முதற் சித்தராகவும் அறுபத்துமூவரில் ஒருவராகவும் விளங்குகின்ற திருமந்திரம் தந்த திருமூலர் நிலையாமை பற்றிப் பல பகுதிகளாகப் பாடினாலும் யாவுக்கும் நிலைக்களன் இவ்வுடம்பு என்பதனால் யாக்கை நிலையாமையை முதற்கண் வைத்து 25 பாடல்களினால் தெளிவு படுத்துகின்றார்.

கணப்பொழுதில் யாக்கை மறைந்த ஒரு காட்சியைக் காட்டுகின்றார். எல்லா வசதியும் படைத்த ஒரு செல்வந்தர் மனைவி மக்களுடன் மகிழ்ந்து இருக்கின்றார். அவர்கள் அவருக்குப் பிடித்த உணவைச் சமைத்து வைத்திருக்கிறார்கள். எல்லாரும் சேர்ந்து கதைத்துப் பேசிச் சந்தோஷமாகச் சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டு முடிந்ததும் ஆறுதலாயிருந்து ஊர்ப்புதினங்களைக் கதைக்கிறார்கள். திடீரென அவருக்கு இடப்பக்க நெஞ்சு வலிக்கிறது. கொஞ்ச நேரம் படுத்தால் சுகமாகிவிடும் என்று படுக்க வைக்கிறார்கள். படுத்தவர் படுத்தவர்தான் பின் எழவேயில்லை.

இதோ அவர் கூறும் மந்திரம்!

**அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடி யாரொரு மந்தணம் கொண்டார்**
**இடப்பக்கமே சிறை நொந்தது என்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. - 148**

இந்தச் செய்தியின் மூலம் மெய் என்று பெயர் சொல்லும் இந்த உடல் பொய்யானது என்பதைச் சொல்லிப் பொய்யான இந்த உடல் இருக்கும்போதே மெய்யான இறைவனை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றார்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. பரமேஸ்வரி சிவனொளிபாதம் |
| விலாசம் | : | 7/1 உபதபாலக வீதி, திருவையாறு - கிளிநொச்சி |
| பிறப்பு | : | 1949.12.14 தே.அ.அ : 194984902282 |
| தொ.பே | : | 0770529771 |
| கல்வி | : | க.பொ.த |
| தொழில் | : | ஆசிரிய ஆலோசகர் (சைவசமயம்) |
| கல்விப்பட்டம் | : | திருமுறை நெறிச்செல்வர் |
| கௌரவபட்டம் | : | கரைஎழில், கலைக்கிளி, மனிதநேயர் |
| பணிகள் | : | கிளி/ சைவமங்கையர் கழக ஸ்தாபகத் தலைவர், சைவப் பிரசங்கம், அறநெறி வளவாளர் |

உ
சிவமயம்

# செல்வம் நிலையாமை 24



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "செல்வம் நிலையாமை" பற்றிக் கூறும் ஒன்பது மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி திலகவதியார் பொன் குணரத்தினம்**
சுழிபுரம்

**"பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை**
**அருளிலார்க்கு அவ்வுலகமில்லை"**

என்றனர் ஆன்றோர். வாழ்வின் நான்கு குறிக்கோள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் அறத்தைச் செய்யவும், இன்பத்தைத் துய்க்கவும், பொருள் அத்தியாவசியமானது. ஊர் பேர் தெரியாத ஒருவனைக்கூட உலகத்தவரால் மதிக்க வைப்பது செல்வம். சிறந்த அறிவாளி கூட வறுமையிலிருந்தால், எவ்வளவு உயர் கருத்துக் கூறினாலும், பிறர் ஏற்றுக்கொள்ளார். இது உலக இயற்கை. இதனையே ஔவையாரும்,

**"இல்லானை இல்லாளும் வேண்டாள்**
**ஈன்றெடுத்த தாய் வேண்டாள்**
**செல்லாது அவன் வாயிற் சொல்"**

என்றார். செல்வம் இன்மை மிகக் கொடியது. இது இம்மை, மறுமை இரண்டையும் அழிக்கும்.

**"இன்மை என ஒருபாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்"** - என்றார் வள்ளுவர்.

மேலும், **"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையே**
**இன்மையின் இன்னாதது"** - என்றார்.

ஔவையாரும் **"கொடிது கொடிது வறுமை கொடிது**
**அதனினும் கொடிது இளமையில் வறுமை"** என்றார்.

இந்த வறுமையானது, நற்பண்புகளைக்கூட நீக்கிவிடும். இதனையே ஔவையாரும் - "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்றார். மானம், உயர் குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, தவம் போன்ற நற்குணங்களைக்கூட நீக்கிவிடும் இந்த வறுமை. முன்னைய பிறவிகளில் நாம் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்பவே இப்பிறவியில் எமக்குத் தனு, கரண, புவன, போகங்கள் அமைகின்றன.

செல்வம் - 'செல்வோம் - செல்வோம்' என வருவது. வறுமையும் 'தரித்திரோம் - தரித்திரோம்' என வருவது. சுழலும் சக்கரம் போன்றும், இரவு-பகல் போன்றும் செல்வம் வரும் போகும். நிலையற்றது. நிரந்தரம் போன்று எமக்குக் காட்டி மறைந்து போகும். எனவே, அத்தகைய செல்வம் எம்மிடம் சேரத் தொடங்கும்போதே, நிலைத்து நிற்கக்கூடிய அறச்செயல்களைச் செய்ய அதனைப் பயன்படுத்தவேண்டும். இது வங்கிக் கணக்குப் போன்று பொறுத்த கட்டத்தில் எம்மைக் காக்கும். "தர்மம் தலைகாக்கும்" என்பர். இதனையே திருக்குறளில்,

**"அன்றறிவாம் என்னாது அறம் செய்க அஃதொருவன்**
**பொன்றுங்கால் பொன்றாத்துணை"** என்று கூறப்படுகிறது.

மேலும், **அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குவ ஆங்கே செயல்" -** என்றார்.

தேன் வண்டுகள், நீண்ட தூரம் பறந்து சென்று பூக்களின் மணத்தை நுகர்ந்து, அவற்றிலுள்ள தேன்துளிகளைச் சொட்டுச் சொட்டாக எடுத்து வந்து, மரக்கிளையிற் தேனடையிற் சேர்த்து வைக்கும். தேன்வேட்டைக்கு வரும் வலிமை உடைய வேடர்கள், அத்தேன்கூட்டைக் கண்டதும், தேனீக்களைத் துரத்திவிட்டுத் தேனைக் கவர்ந்து கொண்டு போய்விடுவார்கள். தேனீக்களும் அவர்களுக்குக் காட்டிக்கொடுத்தது போற் கொடுத்துவிட்டு, ஏமாற்றத்திற் பறந்து சென்றுவிடுகின்றன. இவ்வாறே, ஒருவர் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்த செல்வமும், பிறராற் கவரப்பட்டுவிடும் என்று, திருமூலர் முதலாம் தந்திரம், மூன்றாம் அதிகாரம் 171ஆவது பாடலிற் குறிப்பிடுகிறார்.

**"ஈட்டிய தேன் பூமணம் கண்டு இரதமும்**
**கூட்டிக் கொணர்ந்து ஒரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரத்திட்டு அது வலியார் கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்டவாறே"** - என்றார். - 171

ஆகவே, அரிய மானிடப் பிறவி பெற்ற நாம், பொருட்செல்வம் நிலையற்றது என்ற உண்மையை உணர்ந்து, பெற்றுக்கொண்ட செல்வத்தைப் பகிர்ந்து, அறங்களைச் செய்து, பெறற்கரிய அழியாத பெரும் செல்வமான இறையருளைப் பெற்று, யமதூதுவர் வரும்போது, அஞ்சாது, இறையொளியிற் திளைத்திருப்போமாக.


| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி. திலகவதியார் பொன்குணரத்தினம் | | |
| விலாசம் | : சுழிபுரம் மத்தி - சுழிபுரம் | | |
| பிறப்பு | : 1959.03.09 | தே.அ.அ | : 595690315 V |
| தொ.பே | : 0772772127 - 0765871954 | | |
| கல்வி | : இசைக்கலைமாணி | | |
| தொழில் | : இசை ஆசிரியர் | | |
| கல்விப்பட்டம் | : இசைக்கலைமாணி டிப்புளோமா, சித்தாந்தரத்தினம், திருமுறை நெறிச்செல்வர் | | |
| பணிகள் | : அறநெறி ஆசிரியர் | | |

உ
சிவமயம்

# இளமை நிலையாமை 25



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "இளமை நிலையாமை"
பற்றிக் கூறும் பத்து மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திரு. குமாரசாமி சிவபாலராஜா**
**நல்லூர்**

இளமை மாறும் இயல்புடையது. மனிதர்களின் இளமைக் காலமானது முப்பது (30) வயதுடன் முடிவடைகிறது என்பது சான்றோர் வாக்கு. செல்வம் நிலையானது அல்ல; எமது உயிர் நிலையானதல்ல. இவை இரண்டாலும் பயன் பெறுவதற்கு இளமை தேவை. உயிரோடு வாழ்ந்து செல்வத்தை அனுபவிப்பதற்கு இளமைக் காலமே உகந்தது. இளமை போய் முதுமையடைந்துவிட்டால் செல்வத்தை அனுபவிக்க முடியாது. செல்வச் செருக்கினால் அல்லது இளமைச் செருக்கினால் நாம் சிவனை மறந்துவிடுதல் கூடாது என்பதை திருமூலர் தன் திருமந்திரம் என்னும் பனுவலில் தெளிவு படுத்தியுள்ளார். எனவே இளமையில்தானே சிவனை அடைய முயலுங்கள். முப்பது ஆண்டுக்குள் ஆன்மக் கலையை அறிந்தவர் விண்ணுறுவார்; அறியாதவர் வினையுட்பட்டு அழிவர்.

**"நரை வரும் என்றெண்ணி நல்லறிவாளர்**
**குழவியிடத்தே துறந்தார்." -** நாலடி நானூறு 11

துறத்தல் நல்ல செயல்; சிவனையடையும் வழி ஆயினும் முதுமை வந்தால் அதைச் செய்ய முடியாதே என எண்ணிய நல்லறிவாளர், தமது குழந்தைப் பருவத்திலேயே துறந்தார். மூன்று வயதில் ஞானப்பால் உண்ட சம்பந்தர் "முன்னடைந்தான் சம்பந்தன்" என மகிழ்ந்து பாடினார்.

அறுபது (60) வயதின் பின்னர் ஒருவருக்கு மனமாற்றம் உண்டாகாது என்பது இன்றைய உளவியலாளர் கருத்தாகும். இதுவும் இங்கு கவனிக்கத் தக்கது.

**"முப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொரு பொருளைத்**
**தப்பாமல் தன்னுள் பெறானாயின்** என ஔவையார் கூறுவதும் காண்க.

மெய்ப் பொருளைப் பெறுதல் முப்பதாண்டுக்குள் உண்டாகவில்லையெனின், பின்னர் உண்டாதல் அரிது. மனிதன் நூறு வயது வரை அல்லது அதற்கு மேலும் வாழலாம் என்பது பொது முறைமையன்று. அவர் முப்பதாண்டு வாழ்நாளே சிவனை

அடைவதற்குரிய வழியாகும் என்பது திருமூலர் கருத்து. முப்பது வயதுக்கு மேல் வாழ்வோர் கூற்றுவன் வந்த பின்னர் துயருறுதல் நாம் இறைவனை அடையவில்லையே என்னும் கருத்தாகும். அது கழிவிரக்கமேயாகும். அத்துடன் அறியாமையுமாகும். "பலரும் முதுமை வந்த பின்னர்தான் இறப்பர்" - என்னும் கட்டளையின்மையால் இளமையிலேயே சிவனை அடைய முயற்சிக்க வேண்டும்.

**"அன்றறிவாம் என்னாது அறம் செய்க" - குறள் 36.**

இனி திருமந்திரம் 177:-

**கிழக் கெழுந்தோடிய ஞாயிறு மேற்கே**
**விழக் கண்டும் தேறார் விழியிலா மாந்தர்**
**குழக் கன்றுமூத் தெருதாய்ச் சிலநாளில்**
**விழக் கண்டுந் தேறார் வியனுல கோரே. - 177**

திசைகள் நான்கினுள் கிழக்குத் திசையில்தான் சூரியன் உதிக்கிறது. சூரியோதயக் காட்சி மனிதவாழ்வின் ஆனந்தமான இளம் பருவமாகும். பின்னர் காலைப் பொழுதாகும். அதன் பின் மதிய நேரமாகும். மதியம் கடந்து மாலை நேரமாகி, அந்தி சாய்ந்த பின்னர் மேற்கு வானில் சூரியன் தன் பொன்னிற வானத்தில் மறைந்து கொள்கிறான். சூரியன் உதித்தலுக்கும் மறைதலுக்கும் இடைப்பட்ட கால முற்பகல் வேளையில் எமது இளமை தங்கியுள்ளது. இவ்வேளையே நாம் சிவனையடைவதற்குரிய பருவ வயதாகும் என்பது இங்கே உதாரண முகத்தால் விளக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, பசுக் கன்று ஒன்று பின்னர் முதுமையடைந்து எருது ஆகிப் பின்னர் வயதில் மூத்து இறந்து விடுகின்றது. இதையும் மனிதர்கள் நேரில் பார்த்த பின்னரும் இளமை நிலையிலது என்பது பற்றிச் சிந்திப்பதில்லை. தேறார் - என்பது தெளிவடையார். விளியில்லா மாந்தர் - அறிவற்ற மக்கள்.

இளமை நிலைக்கும் என்னும் தவறான கருத்து மக்களிடம் காணப்படுவதாக இங்கு மறைமுகமாக உணர்த்தியுள்ளார்.

இதனால் உலகோரது அறியாமை கூறுதல்போல் ஆண்டுதோறும் இளமை கழிந்து செல்லுதல் கூறப்பட்டுள்ளது.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குமாரசாமி சிவபாலராஜா |
| விலாசம் | : | 74 செல்லர் வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம் |
| பிறப்பு | : | 1951.03.19 தே.அ.அ : 510794087 V |
| தொ.பே | : | 0773201074 |
| கல்வி | : | G.C.E A/L, Dip. in Pub. Health |
| தொழில் | : | S.P.H.I, R.D.H.S அலுவலகம் |
| கௌரவம் | : | ஆன்மீக எழுத்தாளர் - சந்நிதியான் ஞானச்சுடர் - பொன்னாடை |
| பணிகள் | : | சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பயிற்சிச் சான்றிதழ் பரிந்துரைஞர் |

உ
சிவமயம்

# உயிர் நிலையாமை – உயிர் உடலில் நிலையாமை 26



திருமந்திரம் முதல் தந்திரம் "உயிர் நிலையாமை" எனும் பகுதியிலுள்ள பத்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**செல்வி கஸ்தூரி சற்குணநாதன்**
**கோண்டாவில்**

உயிர் எனப்படுவது இந்த உடலின் வேறுளது. இந்த உடலை இயக்கிக் கொண்டு உடலில் வாழ்கிறது. உயிர் முன்பு செய்த நல்வினை தீவினைகளின் பயனை அனுபவிப்பதற்காக இறைவனால் தனு, கரண, புவன, போகங்கள் வழங்கப்படுகிறது. உயிர் தனக்கு இறைவனால் தரப்பட்ட உடம்பில் இருந்துகொண்டு தன்வினைப் போகங்களை அனுபவிக்கின்றது. எவ்வளவு வினைப் போகங்களை அனுபவிப்பதற்காக உடம்பு கொடுக்கப்பட்டதோ அவ்வளவும் அனுபவித்து முடிந்தவுடன் உடம்பு இறந்துவிடும். உயிர் உடம்பைவிட்டுத் தன் சூக்கும தேகத்துடன் சென்றுவிடும்.

இதைப் பட்டினத்தாரின் "வினைப்போகமே இந்தத் தேகம் கண்டாய், வினை முடிந்தால் தினைப் போதளவும் அது நில்லாது" என்பதிலிருந்து அறிய முடிகிறது. தாயினுடைய கருமுட்டையில் தந்தையின் உயிர்அணு சேர்ந்து கரு உருவாகின்ற போதிலேயே அந்த உயிருக்குரிய வாழ்வு தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது என்பது திருமூலர் கருத்து ஆகும். இதனைத் திருமந்திரம் இரண்டாம் தந்திரத்தில் கர்ப்பக்கிரியை எனும் பகுதியில்,

**இன்புறுகாலத்து இருவர் முன்பு ஊறிய**
**துன்புறு பாசத்துயர் மனை வானுளன்**
**பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்**
**அன்புறு காலத்து அமைத் தொழிந்தானே.** - 453

எனும் மந்திரத்தில் தெளிவாகக் கூறுகின்றார். எனவே கொண்டுவந்த வினையை அனுபவித்து முடிக்கும்வரைதான் அந்த உடலில் உயிர் நிற்கும். முடிந்ததும் அந்த உயிர் உடலைவிட்டுப் போய்விடும். இதனையே செத்துப்போனார் என்று சொல்கின்றோம். சாவது உடல்தான், உயிர் சாவதில்லை. உயிர் அநாதியானது என்றும் உள்ள பொருள். அது தான்செய்த, செய்கின்ற வினைகளை அனுபவித்தற்கேற்ற உடம்புகளில் பிறந்தும் இறந்தும் வினையிலே பற்றற்ற நிலை வர இறைவன்

திருவடியில் சேர்ந்து பேரின்பத்தில் திழைத்திருக்கும். உயிர் நிலையாமை என்பது உயிர் உடலில் நிலைத்து நில்லாமை என்பதேயாகும்.

இதனைத் திருமூலர் ஒரு சுவையான செய்திமூலம் விளக்குகின்றார்.

நல்லதோர் விளைநிலம். அதனை ஐந்து பேர் சேர்ந்து பராமரித்து வந்தார்கள். நல்ல விளைச்சல் விளைந்தது. அதனைக் காணிக்காரனுக்கு அனுபவிக்கக் கொடுத்தார்கள். ஒருநாள் திடீரென அவர்களை அனுப்பிவைத்த முதலாளியிடமிருந்து அழைப்போலை வந்தது. ஐவரும் உடனே அந்த விளைநிலத்தை விட்டுப் போய்விட்டார்கள். விளைநிலம் பாழ் நிலமானது. அதன் சொந்தக்காரனும் அதனை விட்டுப் போய்விட்டார். இது திருமூலரின் மறைபொருள் கூற்று மந்திரம் எனப்படும்.

அந்த விளைநிலம்தான் உடம்பு. அதனைப் பராமரித்தவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்ட படைத்தலைச் செய்யும் பிரமனும் காத்தலைச் செய்யும் விஷ்ணுவும் அழித்தலைச் செய்யும் உருத்திரனும் மறைத்தலைச் செய்யும் மகேஸ்வரனும் அருளலைச் செய்யும் சதாசிவனுமாவர். ஒப்பந்தகாலம் முடிவடைந்து வாருங்கள் என்று கட்டளை ஓலை அனுப்பினார் சிவன். உடனே அவர்கள் தொழிலை விட்டுப் போக விளைநிலமான உடல் செத்தது. அதன் சொந்தக்காரனான உயிர் உடலைவிட்டுப் போய்விட்டது.

**ஐவர்க்கு ஒரு செய் விளைந்து கிடந்தது**
**ஐவரும் அச் செய்யைக் காத்து வருவர்கள்**
**ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்**
**ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டார்களே.** - 188

உயிரின் நிலையாமையை எடுத்துக்காட்டு உவமை மூலம் திருமூலர் உணர்த்துவது எத்தனை உவப்பாக இருக்கிறது.


பெயர் : செல்வி கஸ்தூரி சந்குணநாதன்
விலாசம் : R.D.S. வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
பிறப்பு : 1983-10-02
தே.அ.அ : 837760747V
தொ.பே : 0776771247
கல்வி : க.பொ.த
பட்டம் : சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்
பணி : சமயப்பிரசாரகர் பயிற்சி

உ
சிவமயம்

# கொல்லாமை 27



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "கொல்லாமை"
பற்றிக் கூறும் இரு மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி மனோன்மணி நாகராசா**
**இணுவில்**

திருமூலர் தந்த தமிழ் மந்திரமே திருமந்திரமாலை. திருமூலரினால் மூவாயிரம் ஆண்டுகள் தவத்தில் திளைத்து ஆண்டுக்கு ஒரு மந்திரமாகத் தந்தவையே இத் திருமந்திரங்கள். இவற்றில் உபதேசம் குருவானவர் தன் சீடனுக்குக் கூறும் நன்மொழியிலிருந்து கள்ளுண்ணாமை வரையுள்ள இருபத்திநான்கு உட்பொருட்களைக் கொண்டு ஒரு மனிதன் வாழ்க்கையில் ஒழுக்கமுள்ள மனிதனாக வாழ்தல் பொருட்டு எடுத்து இயம்புவதே முதல் தந்திரமாகும். இம் மந்திரத்தைச் சாத்திரமாகவும் தோத்திரமாகவும் கைக்கொள்ளலாம். தமிழில் தோன்றிய முதல் சர்த்திர நூலும் திருமந்திரமாகும்.

**கொல்லிடு குத்து என்று கூறியமாக்களை**
**வல்லடிக் காரர் வலிக்கயிற்றினால் கட்டிச்**
**செல்லிடு நில்என்று தீவாய் நரகிடை**
**நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே. - 198**

**பொருள் விளக்கம்:**

உயிர்கள்மாட்டுக் கருணையின்றியும் இரக்கமின்றியும் "கொல்" என்றும் "குத்து" என்றும் கொலை மேற்கொள்பவராகிய விலங்குக்குணம் உடைய அறிவிலி மாக்களை கூற்றுவனின் தூதுவர்கள் இறுதிக்காலத்தே வந்து பாசக்கயிற்றினால் பிணைத்தும் இணைத்தும் இழுத்துச் செல்வர். நரகத்தில் நில் என அதட்டியும் பற்றி எரிந்திடும் தீக்குழியில் "கிட" என்றும் கூறித்தள்ளி வதைப்பர். எமனின் தூதுவர்கள் ஏவலினால் எம்மைப் பொல்லாத் துன்பத்தினாலேயே கொல்வர்.

**கொல்லாமை (கொலை செய்யாமை)**

நாம் சிறு உயிரினங்களை அச்சுறுத்தவோ அல்லது அவற்றைக் கொல்லவோ முயலக்கூடாது. எல்லாமே உயிரினங்கள், கடவுள் ஒவ்வொரு வடிவங்களில் படைக்கிறான் என விவரம் அறிந்தவர் கூறுவர். சில சிறுவர்கள் சிறு பராயத்தில் பூச்சி புழுக்களைக் கண்டால் அச்சுறுத்துவர். அவர்களுக்கு அப்பருவத்திலே நாங்கள் கொலை செய்யக்கூடாது எனச் சொல்லிக் கொடுக்கிறோம்.

எல்லாமே உலகில் உயிரினங்கள்தான்.

திருவாசகத்தில்,

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி**
**பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்**
**வல்ல அசுரராகி முனிவராய்த் தேவராய்**
**செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்**

புல்லில் இருந்து தேவர் வரை உயிர்களைக் குறிப்பிடுகிறது. எக்காரணம் கொண்டும் எவ்வுயிரையும் கொல்லாதிருத்தல் நன்மை பயக்கும். விலங்கிலும் மனிதகுணம் உண்டு. மனிதரிலும் விலங்குக் குணம் உள்ளவர் உளர்.

திருக்குறளில் - 321,

கொல்லாமை பற்றி வள்ளுவர் பத்து (10) குறள் பாடியுள்ளார். அதில் ஒன்று பின்வருமாறு:

**அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாம் தரும்.**

அறச்செயல் எனத் தனி ஒன்றினைச் சொல்ல வேண்டுமாயின் அது எவ்வுயிரையும் கொல்லாமைதான். கொல்லும் செயலோ அனைத்துத் தீவினைகளும் ஒன்று சேர்ந்தால் போன்றது.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. மனோன்மணி நாகராசா |
| விலாசம் | : | மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு - இணுவில் |
| பிறப்பு | : | 1940.05.08 |
| தே.அ.அ | : | 4062928822 V |
| தொ.பே | : | 0771180138 |
| கல்வி | : | க.பொ.த - நெசவு ஆசிரிய பயிற்சி |
| தொழில் | : | நெசவு போதனாசிரியர் |
| பட்டம் | : | திருமுறை நெறிச்செல்வர் |

உ
சிவமயம்

# புலால் மறுத்தல் 28



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "புலால் மறுத்தல்"
பற்றிக் கூறும் இரு மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திரு. விஸ்வலிங்கம் மகாதேவன்
சுழிபுரம்

**"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன."** - 2358

பொது நூலாகிய வேதமும் சிறப்பு நூலாகிய ஆகமமும் சிவனால் உரைக்கப்பட்டு உபதேசம் செய்யப்பட்ட உண்மை நூல்கள் ஆகும். இதிலே சிவாகமங்கள் இருபத்தெட்டினுள் (28) ஒன்பது (9) ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழில் ஒன்பது தந்திரங்களில் வகுக்கப்பட்ட மூவாயிரம் (3000) பாடல்களைக் கொண்ட திருமந்திரம் தனது தோத்திர சாஸ்திர இரு தன்மைகளாலும் பன்னிரு திருமுறைகளில் பத்தாவதாய் சைவசித்தாந்தம் கூறிய முதல் தமிழ்ச்சைவநூல் என்ற பெருமை பெற்று விளங்குகின்றது.

**"நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்"**

என்பதிலிருந்து திருமூலர் சிவனாம் தன்மை பெற்ற நிலையிலிருந்து திருமந்திரத்தை அருளிச் செய்துள்ளார் என்பது தெளிவு. இதிலே முதலாவது தந்திரம் காரணாகமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது 24 உப உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த உப தந்திரப்பிரிவுகள் அறநூல்கள், நீதி நூல்களிலே கூறப்பட்ட ஒழுக்க நெறிகளை எடுத்தியம்புகின்றன. அதாவது அநித்தியப் பொருட்களின் நிலையாமையையும், இயம நியமங்களாகக் கூறிப் பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்தலுக் கான முக்கியத்துவத்தை முன்மொழிகின்றன. திருமூலதேவர் இதன்மூலம் ஒழுக்க சீலமான ஒரு சமூகத்தை எதிர்பார்த்து அவர்களுக்கே பிறவிப்பிணியில்லாக், கடவுளை அடைவதற்கான வழி முறைகளைக் கடைப்பிடிப்பது பூரண வெற்றியளிக்குமெனக் கருதி, இவற்றை முதல் தந்திரத்திலேயே அறிமுகம் செய்தருளினார். இங்கே புலால் என்பது இறந்த உயிரினங்களின் உடற்பகுதியாகும். அவற்றை உண்ணாமை விரதம் கொள்ளுதல், புலால் மறுத்தல் என்னும் தலைப்பின்கீழ் வெளிக்கொணர்கிறார். ஏனைய நீதிநூல்களிலும் குறிப்பாக திருக்குறள் என்னும் 5ஆம் வேதமாகக் கருதப்படும் பொய்யா மொழியிலும் புலால் மறுத்தல் வற்புறுத்தப்பட்டுள்ளமை நோக்கற்பாலது. "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்று கூறிய வள்ளுவ

நாயனார் அதற்கு மேலாகச் சென்று அம்மனிதர்களுக்கு இறைவனுடைய திருவருள் தன்னும் கிட்டாது என வலியுறுத்துகின்றார்.

**"தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிதுஊன் உண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்"**

இவற்றுக்கெல்லாம் மேலாக பிற உயிர்களின் உடலை, அதாவது புலால் உண்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அடையும் நரக வேதனை துன்பங்களை எல்லாம் திருமூல நாயனார் இருபாடல்களில் நந்திமேல் ஆணையிட்டு வற்புறுத்தியுள்ளமையை காணக் கூடியவாறு உளது.

**"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை** (புலையர் = புலான் உண்போர்)
**எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே"** - திருமந்திரம் 199

**விளக்கவுரை:-**

அப்புலாலை விரும்பியுண்ணும் மக்கட் பிறப்பினை இழிவாம் கொடுவிலங்கினும் இழிவாகப் பேசுவர். அப் புலையர்களை அத்தகையார் பலரும் காணும்படி இயமன் தூதுவர் கொண்டுபோவர். கொண்டுபோய் இடிபோல் முழங்கி அஞ்சும்படியாகப் பற்றி, என்றும் நீங்காப் பெருந்துன்பம் தரும் கொடிய நரகத்தீயில் தள்ளுவர். தள்ளி மல்லாக்கக் கிடத்துவர், என்றும் துன்புறும்படி எங்கும் செல்லவொட்டாது தடுத்து நிறுத்துவர். அப்புலால் உண்பவர்க்கு இம்மையிலும் பொல்லாததேயாகும். என்னை? அவ்வூண் நல்ல உள்ளத்தைத் தாராதாகலான் என்க.

மேலும் சைவசித்தாந்த நோக்கில் பார்க்கில் உயிரினங்கள் அனைத்தும் சிவனுடைய பிள்ளைகளாகும். அவரே அவற்றுக்கு தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்துச் சிவகதி அடைவதற்கு ஐந்தொழில்களைச் செய்து காத்து வருகின்றார். அப்படியிருக்க இன்னுமொரு உயிரின் தனுவை அதாவது புலாலை உண்பது என்பது சகோதரத்தின் உடலை உண்பதற்கு ஒத்ததாகும். அறத்துக்கு ஒவ்வாதது.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. விஸ்வலிங்கம் மகாதேவன் |
| விலாசம் | : | "வைகுந்தம்" வழக்கம்பரை - சுழிபுரம் தொ. பே : 0726011163 |
| பிறப்பு | : | 1948.05.27 தே.அ.அ: 481480809 V |
| கல்வி | : | B.A. M.Ed (English), DITE, Sp. Trained - Eng, சித்தாந்தரத்தினம் |
| கௌரவபட்டம் | : | கலைமாமணி, சிவநெறிச் செல்வர், ஆசிரியதிலகம் |
| தொழில் | : | ஆசிரிய ஆலோசகர் ஆங்கிலம், பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளர் |
| பணிகள் | : | ஆன்மீகப் பிரசங்கம், பட்டிமன்றம், நேர்முக வர்ணனை |
| நூல் ஆக்கம் | : | வாழ்வின் வசந்தம், கல்வி, முகாமைத்துவம் (தமிழ், ஆங்கில கவிதை) |

உ
சிவமயம்

# பிறன்மனை நயவாமை

## 29



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "பிறன்மனை நயவாமை" பற்றிக் கூறும் மூன்று மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.


*திருமந்திரச்செல்வர்*
திரு. கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம்
மிருசுவில்


"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ணமாட்டாமல்"
ஈச்சம் பழத்துக்கு இடருற்றவாறே" - திருமந்திரம் - 201

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே" என்பது அன்புடைய இல்லத்தரசியான மனைவி வீட்டில் இருக்கவே எனப் பொருளைத் தரும். அதாவது "ஆத்த" என்ற சொல் புனைந்த, கட்டிய, தாலி கட்டிய என்ற கருத்துக்களைத் தரும். தாலி அணிந்து,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" யாக இல்லற வாழ்க்கையில் துணைவி இருக்க, வேறிடம் துணை வேண்டி அலைய வேண்டிய அவசியமில்லை என்ற அறிவுரை கூறப்படுகின்றது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாக வாழ்வதற்கே ஒருவனும் ஒருத்தியுமாய் அம்மை அப்பன் அருளால் இம்மை வாழ்க்கைக்கு துணைவியாகக் கிடைப்பதே "ஆத்த மனையாள்" ஆவாள். தூய இல்லறத்தைப் பேணும் பொருட்டு ஊரார், உறவினர், உற்றார், பெற்றார், சான்றோர், ஆசான், தெய்வம், அக்கினி சான்றாகப் பொற்றாலி புனைந்து கைக்கொண்ட ஆத்தமனையாளைக் கைவிட்டுப் பிறன்மனை நயப்பவனுக்கு உய்தி கிடையாது.

"காத்த மனையாளைக் காமுறும் காளையர்" என்னும் தொடர் பிறன்மனைக் காவலில் உள்ள மற்றவர் உரிமையான பிறன்மனைவியை அடைய விரும்பும் இளைஞர்கள் என்பதான பொருளைத் தரும். தன் கற்பையும் தன்னையும் கணவனையும்

காத்து இருவரின் புகழ் நீங்காமல் தன் கடமைகளில் தவறாமல் நடப்பவளே காத்த மனையாள் ஆவாள். அதனை

**“தற்காத்து தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்”** எனத் திருக்குறள் கூறுகின்றது.

“காய்ச்ச பலாவின் கனி உண்ணமாட்டாமல் ஈச்சம்பழத்துக்கு இடருற்றவாறே” என்ற பாடல் கூறுவதுபோல் இன்னல் படுவார்கள்.

வாழை, மா, பலா என்ற முக்கனிகளில் வாழை அறப்பகுதியாகவும், மா பொருட் பகுதியாகவும், பலா இன்பப்பகுதியாகவும் கொள்வது ஒரு மரபு ஆகும். பலாப்பழம் செம்மையுறக் காய்த்து நன்கு கனிந்தால் அது நுகரும்போது மட்டற்ற சுவையுடையதாக இருந்து இன்பம் நல்கின்றது. வீட்டில் இருக்கும் இத்தகு சிறப்புடைய பலாக்கனியை நுகரமாட்டாது காட்டிலே காணப்படும் ஈச்சம் பழத்தை நுகரச்செல்வது எத்தகைய இழிவுச் செயலாகும். அன்றியும் ஈச்சம்பழத்தைப் பறிக்கும்போது ஈச்சமரத்தில் முள் குத்தும். அது காலகதியில் வேதனையைத் தரும். இது காத்த மனையாளைக் காமுறுபவர் அடையும் கேட்டிற்கு ஒப்பாகும்.

தனது மனையாள் இருக்கப், பிறனது காத்த மனையாளை ஆசைப்படுதல் தன் குடும்பத்தையும் கெடுத்துப் பிறன் குடும்பத்தையும் கெடுத்த பாவத்துக்கும் பழிக்கும் ஆளாவான். தவறான சிறிய இன்பத்துக்கு ஆசைப்பட்டுத் தன் சந்ததிக்கே மாறாத பழியைத் தேடி வாழ்நாள் முழுவதும் பெரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டிவரும் என்பதைத் திருமூலர் உணர்த்துகிறார்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கணபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் |
| விலாசம் | : | உசன், மிருசுவில் |
| பிறப்பு | : | 1954-02-10 |
| தே.அ.அ | : | 540417423V |
| தொ.பேசி | : | 0772242006 |
| கல்வி | : | B.A ஆசிரியர் (ஓய்வுநிலை) |
| பட்டம் | : | சித்தாந்தரத்தினம் |
| பணி | : | திருமுறை ஓதல், புராணபடனம் |

உ
சிவமயம்

# மகளிர் இழிவு

30



**திருமந்திரம் முதல் தந்திரத்தில் "மகளிர் இழிவு" பற்றிக் கூறும் ஐந்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.**

*திருமந்திரச்செல்வர்*
**திரு.சுப்பையா கணேசமூர்த்தி**
**கொக்குவில்**

எல்லாச் சமய தத்துவங்களும் அறவாழ்க்கையையும் இறை உணர்வையும் எடுத்தியம்புகின்றன. அறவாழ்க்கையை மேற்கொள்ளாது எவரும் இறை உணர்வை அடைய முடியாது. இதனாலன்றோ திருமூலர் திருமந்திரத்தில் முதலாவது தந்திரத்தில் உள்ள 224 பாடல்கள் மூலம் 24 தலைப்புக்களில் அறவாழ்க்கை வாழ்வதற்கான அறவொழுக்கத்தைப்பற்றி விரிவாக விளக்கியுள்ளார்.

இந்த 24 அறவொழுக்கங்களில் 9ஆவதாக அமைந்துள்ள "மகளிர் இழிவு" அதாவது பொதுமகளிர் குணநலன்களைப் பற்றித் திருமூலர் விபரித்துள்ள கருத்துக்களை ஆராய்வோம்.

"மகளிர் இழிவு" பற்றி திருமந்திரப் பாடல் 204 தொடக்கம் 208 வரையிலான ஐந்து பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதனைப் போன்றே திருவள்ளுவரும் திருக்குறள் பொருட்பால் 92ஆவது அதிகாரத்தில் "வரைவின் மகளிர்" என்ற தலைப்பின் கீழ் பத்து குறள்களில் தெளிவுபடுத்தியுள்ளார்.

திருமூலர் அவர்கள் திருமந்திரத்தில் ஐந்து பாடல்களிலும் பொதுமகளிரை ஆடவர் நாடுதலினால் அவர்களுக்கு ஏற்படும் சிறுமை பற்றியும் அதைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது என்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றியும் விபரித்துள்ளார்.

மகளிர் இழிவுபற்றி திருமந்திரப்பாடல் 204இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தினை ஆராய்ந்துகொள்வோம்.

**"இலை நல ஆயினும் எட்டி பழுத்தால்**
**குலைநலவாம் கனி கொண்டு உணல் ஆகா**
**முலை நலம் கொண்டு முறுவல் செய்வார் மேல்**
**விலகுறு நெஞ்சினை வெய்து கொள்ளீரே"** -திருமந்திரம் 204

எட்டி மரமானது இலை முதலியவற்றால் அழகுடைதாக இருப்பினும் குலை குலையாக பழுத்திருக்கின்ற அதன் பழங்களை யாரும் உண்ணமாட்டார்கள். காரணம் அப்பழத்தின் நச்சுத்தன்மையாகும். அப்பழம் கசப்புச் சுவையைத் தந்து துன்பம் தரக்கூடியதொன்றாகும். அதுபோல் முலையழகைக் கொண்டு புன்முறுவல் பூக்கின்ற விலைமகளிர் மேல் ஆடவர் செல்லும் நாட்டத்தை விலக்குக எனத் திருமந்திரப் பாடல் விபரிக்கிறது. மேலும் விலைமகளிர்மீதுள்ள நாட்டம் கொடிய துன்பத்தைத் தரும். தம் உடல் அழகால் இளைஞர் உள்ளத்தைக் கவரும் பொதுமகளிர் எத்தகைய அழகுடையவராயினும் இழிந்தவரேயாவர் எனவும் அவர்களால் துன்பமே ஏற்படும் எனவும் விபரிக்கிறார்.

பொதுமகளிர் ஆடவரைப் பொருள் இருக்கும்வரையே போற்றுவர் என 206ஆவது பாடல் மூலம் திருமூலர் விபரிக்கிறார். பொருள் அற்றவர் என்றால் போ வெளியே என விரட்டியடிக்கவும் செய்வார் எனவும் குறிப்பிடுகிறார். இதனையே திருவள்ளுவரும் 911வது குறட்பா மூலம் தெளிவுபடுத்துகிறார்.

**"அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்ந்தொடியார்**
**இன்சொல் இழுக்குத்தரும்"** - குறள் 911

ஒருவனை அன்பு பற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிரது இன்சொல் பின்பு கேட்டினைத் தரும் எனவும் குறிப்பிடும் திருவள்ளுவர் பொதுமகளிர் ஆடவரை எஞ்ஞான்றும் நெஞ்சத்து அன்பினால் விரும்பாராய்ப் பொருளையே விரும்பிச் செல்லும் ஆய்ந்தொடிப்பரத்தையர் எனக் கடிந்து விபரிக்கின்றார்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சுப்பையா கணேசமூர்த்தி |
| விலாசம் | : | 87/06 வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு - கொக்குவில் |
| பிறப்பு | : | 1944.03.15 |
| தே.அ.அ | : | 440754341V |
| தொ.பே | : | 0772459262 - 0212241452 |
| கல்வி | : | B.A, Dip. in Yoga For Human Excellence |
| தொழில் | : | கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ஓய்வு)<br>கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு உறுப்பினர் (வடக்கு மாகாணம்) |

உ
சிவமயம்

# நல்குரவு

31



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "நல்குரவு" பற்றிக் கூறும் ஐந்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.


*திருமந்திரச்செல்வர்*
**திருமதி சத்தியதேவி நிரஞ்சன்**
கோண்டாவில்


திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் தவத்தில் மூழ்கி இறைவனோடு கலந்த நிலையில் தந்தவையே திருமந்திர மாலையான முத்துக்களாகும். திருவென்றால் கண்டோரால் விரும்பக்கூடிய மந்திரம் நினைப்பதைச் சிந்திக்க வைப்பது. கற்றோரால், கண்டோரால் விரும்பிச் சுவைத்து அனுபவிக்கக் கூடியதே இம்மந்திரம். வாழ்வியலில் ஒரு மனிதன் எப்படியெல்லாம் அறவாழ்க்கை வாழவேண்டும் என்று முதல் தந்திரத்தில் இருபத்திநான்கு உட்பொருள்களைக் கொண்டு விளக்குகின்றது. உபதேசம் குருவினது ஆசியுடன் பக்குவநிலைப்பட்ட மாணவனுக்கு உரைத்தலிலிருந்து கள்ளுண்ணாமை அறநெறியில் நிற்றல் பொருட்டு ஒழுக்கசீலரைப் பற்றிச் சொல்கிறது. இதனை நயம்படச் செவிமடுத்துத் திறம்படக் கற்போமாயின், பூர்வஜென்ம புண்ணியத்தின் பயனைப் பெறலாம்.

வறுமையின் நிலைமையைப் பற்றி ஐந்து மந்திரங்களில் தெளிவுற விளக்குகிறார் திருமூலர்.

**புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை**
**அடையப் பட்டார்களும் அன்பிலர் ஆனார்**
**கொடையில்லை கோளில்லை கொண்டாட்டம் இல்லை**
**நடையில்லை நாட்டில் இயங்குகின்றார்கட்கே" -** மந்திரம் - 209

உடுக்கப்பட்ட ஆடையும் கிழிந்து வளமான வாழ்க்கை வற்றி வறுமை சூழ்ந்தது. புடவை மானத்தைக் காக்க வல்லதுபோல பொருளும் ஒருவனுடைய மானத்தைக் காக்க வல்லதே. பொருள் இல்லாது ஒழிந்தால் தேடிவந்து உண்டு மகிழ்ந்த உறவினரும், அன்பற்ற அயலராகித் தொலைவே சென்றனர். கொடுத்து உதவுபவர்களும் இல்லாமல் போயினர். வறுமையாளனுக்கு எவர் கொடுப்பார். கூடி மகிழ யாரும் இலர். கொண்டாட்டமும் இல்லை. நாட்களும் நகர்ந்து போனது. நடையும் தளர்ந்து இல்லாமல் வறுமையே தனித்துத் துணையாக நின்று வறுமையே நிலவுகின்றது.

வறுமையின் நிமித்தமாக நேற்று என்னைக் கொன்று தீர்த்த பசி இன்றும் வருமோ என வயிற்றுக்குச் சோறு தேடி அலைவதைப் போன்ற துன்பம் வேறு எதுவுமில்லை. வயிறு அறிந்திருக்குமா வறுமையின் கொடுமையை. கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கும், மயக்குறும், திடுக்குறும் வறுமையின் நிலை.

**"நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்**
**துன்பங்கள் சென்று படும்"**

வறுமையே துன்பம். அத்துன்பத்துள் மேலும் பல துன்பங்கள் ஒன்றாக வந்து விளையும்.

**கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்**
**எல்லாரும் சென்று அங்கு எதிர் கொள்வர் – இல்லானை**
**இல்லாளும் வேண்டாள் மற்று ஈறெடுத்த தாய்வேண்டாள்**
**செல்லாது அவன் வாயிற் சொல்.**

(நல்வழி) - 34

கல்வி அறிவு இல்லாதவனேயானாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் (கையில் பொருட்கள் இருப்பின்) எல்லோரும் சென்று எதிர் கொண்டு அழைப்பார்கள். பொருள் இல்லாதவனை மனைவியும் விரும்பமாட்டாள், பெற்ற தாயும் விரும்பமாட்டாள். அவன் கூறும் சொல்லுக்கு மதிப்பு இராது. படிப்பு இல்லாவிட்டாலும் கையில் பணம் இருக்குமானால் எல்லோரும் மதிப்பர். சென்று எதிர்கொள்வர். படித்தவராயினும் பொருள் இன்றேல் ஒருவரும் மதிக்கமாட்டார்கள். அவன் வாய்ச்சொல் சபை ஏறாது. (ஏழை சொல் அம்பலம் ஏறாது) என்னதான் ஆய்ந்தாய்ந்து நல்ல சொல்லை வல்லமையோடு சொன்னாலும் சபை ஏறாது.

ஆதலால் வறுமையாகிய நல்குரவைப் போக்கிச் செழுமையாக வாழ முயல வேண்டும். அறவாழ்வுக்கு அதுவே அடிப்படையாகும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. சத்தியதேவி நிரஞ்சன் |
| விலாசம் | : | புகையிரதநிலைய வீதி, கோண்டாவில் மேற்கு - கோண்டாவில் |
| பிறப்பு | : | 1973.07.19 |
| தே.அ.அ | : | 197370101917 |
| தொ.பே | : | 0772537426 |
| கல்வி | : | க.பொ.த - திருமுறைநெறிச் செல்வர், சித்தாந்தரத்தினம் |
| பணி | : | சமய சமூகப்பணிகள், திருமுறை ஓதல் |

உ
சிவமயம்

# அக்கினி காரியம் – தீ ஓம்புதல் 32



திருமந்திரம் முதல் தந்திரம் "அக்கினி காரியம்"
பகுதியிலுள்ள பத்து மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி கோமதி ஜெயநாதன்**
**உடுவில்**

அக்கினிகாரியம் என்பது அந்தணர்க்கு வகுத்த வேதவிதிப்படி தீ ஓம்புதல் ஆகும். குற்றமில்லாத மேன்மையான வானத்தில் வாழும் தேவர்களும் நிலத்தில் வாழும் மாந்தரும் திசைகளில் வாழ்பவர்களும் திசைகளுக்குரிய திக்குப்பாலகர்களும் வேதத்தை முதலாகக் கொண்டு அந்தணர் வேள்ளி செய்யின் நலம் பெறுவார்கள்.

இந்த உண்மையை ஞானசம்பந்தப் பெருமான் திருத்தில்லைப் பதிகத்திலே உள்ள தேவாரத்தில்,

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம்மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே

எனக் கூறுகின்றார். வேதத்திலே கற்றுக்கொண்டபடி அக்கினிகாரியம் செய்வதால் துன்பம் வராதவண்ணம் பற்று அற்றவர்கள் ஆகிய வேதியர்கள் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள பெருமான்மீது பற்று வைத்தால் பாவம் வராது விலகும் என்பதால் அக்கினிகாரியம் செய்யும்போது அந்த அக்கினி சிவசோதி எனப் பற்று வைத்துச் செய்யவேண்டும் என்பது பெறப்படுகிறது.

வேள்வியினைச் செய்யும் வேதமோதும் அந்தணர் சுவர்க்கத்தை விரும்பி அக்கினிகாரியம் செய்து தானம் கொடுத்து உணவை உட்கொள்வர். அவர்கள் தங்கள் விதியைத் தாங்களே நிச்சயம் செய்யும் மெய்ந்நெறியை உணர்ந்தவர் என்பதும் திருமூலர் கருத்து ஆகும். ஓம அக்கினி சிவசொரூபம். ஆகவே ஓமம் ஆகிய அக்கினி காரியத்தைச் செய்கின்றபோது சிவனை நினைந்தே செய்யவேண்டும். சிவனை மறந்து செய்யும் அக்கினி காரியத்தால் தீங்கே விளையும். இதற்குச் சான்று தக்கன் யாகம் ஆகும்.

தக்கன் சிவனை மறந்து சிவநிந்தனையாகச் செய்த யாகத்தால் அவன் மட்டுமல்ல அந்த யாகத்தில் பங்குகொண்ட பிரமா முதலான தேவர்கள் யாவருமே 108 யுககாலம் சூராதி அவுணர்களால் தேவலோகத்தையும் இழந்து துன்பப்பட்டார்கள் என்பது கந்தபுராணத்தின் மூலம் நாம் அறிந்த செய்தியாகும்.

திருமூலர் அக்கினி காரியம் பற்றிய தனது திருமந்திரங்களில் ஒன்றில்,

**ஒண் சுடரான உலப்பிலி நாதனை**
**ஒண் சுடராகி என்உள்ளத் திருக்கின்ற**
**கண் சுடரோன் உலகுஏழும் கடந்தஅத்**
**தண் சுடர்ஓமத் தலைவனும் ஆமே.** - 221

என்று இந்த உண்மையைக் கூறுகின்றார்.

இதன் பொருள்:

ஒளி வடிவு ஆனவனும், அழிவில்லாத தலைவனும் ஒளிமிக்க சுடராகி என் உள்ளத்தில் எழுந்தருளி இருக்கின்ற கண்ணொளியானவனும், ஏழு உலகங்களையும் கடந்த அக்குளிர்ந்த சுடராகியவனும் ஆகிய சிவன் ஓமத் தலைவனுமாவான். எனவே சுடர்ப் பொருளாகிய சிவனே ஓமத்துக்குரிய தலைவன் ஆவான்.

இந்த உண்மையை "ஒளிவளர் விளக்கு" என்றும், "சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே" என்றும் திருமுறைகள் சிவனை ஒளிவடிவாகப் போற்றுகின்றன.




| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. கோமதி ஜெயநாதன் |
| விலாசம் | : | உடுவில் தெற்கு, சத்தியபுரம் - சுன்னாகம் |
| பிறப்பு | : | 1976-10-02 |
| தே.அ.அ | : | 767283601 V |
| தொ.பே | : | 0770748179 |
| கல்வி | : | க.பொ.த |
| தொழில் | : | நெசவுக் கைத்தறி |

உ
சிவமயம்

# அந்தணர் ஒழுக்கம் 33



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "அந்தணர் ஒழுக்கம்" பற்றிக் கூறும் பதினான்கு மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திரு. அம்பலவாணர் குகதாசன்**
**இணுவில்**

திருமந்திரத்தில் பாயிரமும் ஒன்பது தந்திரங்களும் உள்ளன. தந்திரம் என்பது இந்நூலைப் பொறுத்தவரையில் நூலின் உட்பிரிவு ஆகும். இயல், கதை, சருக்கம் என்பவை போல் "தந்திரம்" நூலின் உட்பிரிவு ஆகும்.

யாக்கை நிலையாமை முதல் கள்ளுண்ணாமை வரை 24 பிரிவுகளில் வலியுறுத்தப்படுகிறது. எனவே அந்தணர் ஒழக்கம் என்பது அந்தணர் ஒழுகும் முறை பற்றிக் கூறுகின்றது. அதாவது அந்தணர் பிறவியை ஒழிக்கும் தொழில் பூண்டவர் ஆவர். இதனையே

**"அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்**
**செந்தழல் ஓம்பி முப்போதும் நியமம்செய்**
**தம்தவ நற்கருமத்து நின்று ஆங்கு இட்டுச்**
**சந்தியும் ஓதிச் சடங்கு அறுப்போர்களே"** - திருமந்திரம் 224

மேற்கூறியது போல அந்தணரான அறவோர் பிறவியை ஒழிக்கும் தொழில் பூண்டவர் ஆவர். அக்கினி காரியம் (வேள்வித் தீ ஓம்புதல்) கூறியவாறு அக்கினி காரியம் செய்து மூன்று வேளைகளிலும் தமக்கு உரிய தவமான நல்ல செயலைத் தவறாமல் செய்துவிட்டு மாலைக்கடன் களையும் செய்து முடிப்பர்.

அறுதொழில் - பிறப்பை அறுக்கும் செயல்; செந்தழல் ஓம்பி - வேள்வித் தீயை வளர்த்து; சடங்கு அறுப்போர் - சடங்கைச் செய்பவர்.

மேலும் முடிவான உபநிடதத்தின் உண்மையை அறியும் விருப்பத்துடன் "தத்துவமசி" என்ற மூன்று சொற்களின் முடிவான ஓங்காரத்துள் பொருந்தி, நாதம் கடந்ததாயும், உபநிடதத்தின் உச்சியாயும் விளங்கும் தலைவனை இதுதான் முடிவு என்று எண்ணாமல் முப்பதத்தையும் கடந்து துரிய நிலையில் விளங்குவார்கள்.

எல்லா உயிர்களிடத்தும் கருணை உள்ளம் கொண்ட அரிய வேதமுடிவான சிவத்தை இடைவிடாமல் நினைப்பவர்கள் அந்தணர். அவர் அடைவது வளமான பூமி. அது வளம் குன்றுவதும் இல்லை. அந்த நாட்டின் மன்னனும் நல்லவன் ஆவான். அந்நாட்டு அந்தணர் காலை மாலை ஆகிய இரண்டு வேளையும் ஆகுதி செய்வார்கள்.

மேற்கூறிய கருத்துக்களுக்கு இணைவாகவே திருவள்ளுவரும் அந்தணர் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுகையில்,

**அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டு ஒழுகலான்.** - திருக்குறள் 30

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் - எல்லா உயிர்கள் மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டு ஒழுகுவான்; அந்தணர் என்போர் அறவோர் - அந்தணரென்று சொல்லப்படுபவர் துறவறத்தில் நின்றவர் (பூணுதல் விரதமாகக் கோடல்) "அந்தணர்" என்பது அழகிய தட்பத்தினை உடையார் என ஏதுப்பெயர் ஆகலின் அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாது என்பது கருத்து. அவ்வாறு ஆணையுடையார் ஆயினும் உயிர்கள்மாட்டு அருள் உடையார் என்பது இதனால் கூறப்பட்டது.) - பரிமேல் அழகர் உரை.

இதனால்தான் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும்,

**"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக"** எனப் பாடினார்.

எரி ஓம்பி இறைவனை எண்ண அகப்பற்றும், புறப்பற்றும் விட்டு நீங்கும். அகங்காரம், மமகாரம் ஒழியும் - மனம் வேறு எதிலும் செல்லாது தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமாவைப் போல புண்ணியத்தை விரும்பியே ஆகுதி செய்யப்படும். அவியை உண்ணவே பிரணவம் பொருந்தும். அந்தணர் இந்நிலை எய்தி ஆகுதி ஓம்பி அறுதொழில் செய்வர் எனத் திருமூலர் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. அம்பலவாணர் குகதாசன் |
| விலாசம் | : | "சண்முகபவனம்", இணுவில் மேற்கு - இணுவில் |
| பிறப்பு | : | 1952.09.09 |
| தே.அ.அ | : | 521924292V |
| தொ.பே | : | 0210241381 - 0756874380 |
| கல்வி | : | B.Com (Special), P.G.D in Pub. Admin, F.I.B (வங்கியியல் பட்டதாரி)<br>Dip.In Yoga For Human Excellence |
| தொழில் | : | மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர், ஓய்வுநிலை,<br>(துணைப் பேராசிரியர் பயிற்சி (மனவளக்கலை) |
| பணிகள் | : | சர்வதேச அரிமாக்கழகம்<br>இணுவில் அறிவாலயம் (பொருளாளர்) |

உ
சிவமயம்

# இராசதோஷம் - அரசகுற்றம் 34



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "இராசதோஷம்" பற்றிக் கூறும் பத்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திரு. வைத்திலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன்**
**இணுவில்**

திருமந்திரம் சைவத் திருமுறைகளுள் பத்தாந் திருமுறையாக விளங்குகிறது. இதனை அருளிச் செய்தவர் திருமூலர் ஆவார். இதனை அருளிய நோக்கத்தை,

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

என்று திருமூலர் கூறுகின்றார்.

திருவாவடுதுறையில் உள்ள படர் அரசமரத்தின் கீழ் அமர்ந்திருந்து தவம் செய்கையில் ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல் கொண்டதாக அருளிச் செய்தார். திருமந்திரம் பாயிரமும் ஒன்பது தந்திரங்களும் கொண்டது. முதல்நூல் நான்கு தந்திரங்களும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பற்றியும் மிகுதி ஐந்து தந்திரங்களும் வீட்டுப்பேறு, வீட்டுப்பேற்றுவழி, வழிபாடு, வழிபாட்டுறுதி, வாழ்வு ஆகியன பற்றி எடுத்தியம்புகிறது.

இங்கு நல்லாட்சி செய்வதற்கு நல்லமைச்சர்கள் அவனது அவையில் இருக்க வேண்டும். அவர்களின் ஆலோசனைப்படி நன்றாக அரசாள வேண்டும்.

**"தேறான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**மாறா இடும்பை தரும்"**

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க ஒருவனை நன்றாக ஆராய்ந்தறிந்து அமைச்சராக்கிய பின் அவர்மீது அவநம்பிக்கை கொள்ளலாகாது.

அரசன் மக்களைக் காப்பது அவனது கடமையாகும். ஆயினும் குற்றம் செய்பவரைத் தண்டித்துத் திருத்துதலும் அவனது கடமையாகும். குற்றவாளிகளைத் தண்டிக்கும்பொழுது அவர்கள் செய்த குற்றம் பற்றி நன்கு விசாரிக்க வேண்டும். இதன்போது அமைச்சர்களின் ஆலோசனை இன்றியமையாததாகும்.

ஓர் அரசன் பசுக்களையும், மாதர்களையும், அறம் செய்கின்ற பெரியோர்களையும், வானவர்களால் வழிபடப்பெறும் திருவேடந் தாங்குகின்ற முனிவர்களையும், ஞானிகளையும் காப்பாற்ற வேண்டியவனாவான். அவ்விதம் அவன்

செயற்படாதவிடத்து இம்மையிலும் இடர்பட்டு, மறுமையிலும் நரகத்தில் வீழ்ந்து அல்லலுறுவான். இதனைப் பின்வரும் திருமந்திரத்தின் வாயிலாக அறியலாம்.

"ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத்தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கும் மீளாநரகமே" - 243

இவ்வாறே மன்னன் நல்லாட்சி செய்வதற்கும் பல வழிமுறைகளையும் தர்மத்தையும் கைக்கொள்ள வேண்டியவனாக உள்ளான்.

மன்னன் ஒவ்வொரு நாளும நன்னெறியைக் கடைப்பிடித்து அரசாட்சி செய்தல் வேண்டும். இல்லாவிடில் நாட்டில் வளம் குன்றும், மக்கள் அறியாமை உள்ளவர்கள் ஆவார்கள், செல்வமானது நாள்தோறும குறைவடைந்து செல்லும்.

ஒருவன் தான் கொண்ட வேடத்திற்குரிய நெறியில் ஒழுகவேண்டும். இல்லையெனில் பயன் ஏதும் இல்லை. தாம் கொண்ட வேட நெறியில் நில்லாதவரை தண்டனை வழங்குதல் மூலம் அந்நெறியில் நிற்கவைப்பின் அது இரண்டு தரப்பினருக்குமே சிறப்புடையதாகும். அதாவது இரு திறத்தாரும் வீடுபேறடையலாம்.

அறியாமை என்ற மாசு நீங்கப்பெறாதவர்கள் குடுமி வைத்து, பூணூல் அணிவதால் பயன் இல்லை. இதனால் மன்னவனும் பெருமையில்லாதவன் ஆவான். எனவே வேடத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தறிந்து ஆடம்பரத்திற்காக அணிந்த பூணூலையும், குடுமியையும் களைந்து விடுதல் மன்னனுக்கும் நாட்டிற்கும் நல்லதாகும்.

சடை, குடுமி, பூணூல் ஆகியவற்றைத் தரித்து ஞானிகள் போலத் தம்மைக் காட்டுபவர்களை உண்மையான ஞானிகளைக் கொண்டு சோதனை செய்து அவர்களுக்கு ஞானம் கைவரச் செய்தல் நாட்டிற்கு நன்மையை உண்டாக்கும்.

மன்னன் தானும் நன்னெறியில் ஒழுகி அறவாழ்வு வாழவேண்டும். அவ்வாறே மக்களையும் ஒழுக வைக்க வேண்டும். ஏனெனில் மக்கள் செய்யும் நல்வினை, தீவினை ஆகிய செயல்களில் ஆறிலொரு பகுதி மன்னனையே சாரும்.

பிறநாட்டைக் கைப்பற்றவும், தனது நாட்டைப் பிறர் அபகரிக்காது இருக்கவும் மன்னன் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேற்படி வழிமுறைகளைப் பின்பற்றி அரசன் கோன்முறை அரசு செய்வானாயின் மாதம் மும்மாரி பொழிந்து சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகனின் அருட்பார்வையால் எங்கும் சுபீட்சம் நிறைந்து குறைவிலாது உயிர்கள் வாழ்வாங்கு வாழும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. வைத்திலிங்கம் ஸ்ரீஸ்கந்தவரோதயன் |
| விலாசம் | : | துரை வீதி, இணுவில் தெற்கு - இணுவில் |
| பிறப்பு | : | 1953.11.06 தே.அ.அ : 533112471 V |
| தொ.பே | : | 0777682265 |
| கல்வி | : | க.பொ.த உயர், சித்தாந்தரத்தினம் |
| தொழில் | : | வங்கியாளர் (ஓய்வுநிலை) |
| பணிகள் | : | கணேசன் கருணை நிதியம் - தலைவர்<br>இணுவில் அறிவாலயம் - செயலாளர் |

உ
சிவமயம்

# வானச்சிறப்பு

35



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "வானச்சிறப்பு" பற்றிக் கூறும் இரு மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திரு வைத்திலிங்கம் கனகநாயகம்**
**இணுவில்**

இவ்வானச்சிறப்பு பற்றி திருமூலநாயனார் தனது பாடலொன்றில் பின்வருமாறு கூறுகிறார் (248, 249ம் பாடல்களில்),

அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாமே. - 248

அமுதத்தைப் போல் நீர் தருகின்ற மழை பொழிவதால், அதன் நீர்ப் பெருக்கின் மூலம் பாரில் பல அறுசுவையைக் கொடுக்கக்கூடிய மரம், செடி, கொடி, புல், பூண்டுகள் தோன்றும் எனக் கூறுகிறார். அதாவது காயாகவும், கனியாகவும், இளநீராகவும், பூவாகவும், விதையாகவும், இலையாகவும், தண்டுகளாகவும், கிழங்கு வகைகளாகவும் உண்டாகிச் சகல உயிரினங்களையும் வாழவைக்கும். இன்னும் சித்தர்கள், முனிவர்கள் போன்ற நுண்மதி நிலையடையக்கூடியவர்கள் உண்ணும் மூலிகையான காஞ்சிரை முதலிய செடிகளும் உண்டாகும் எனக் கூறுகிறார்.

மேலும் வானச் சிறப்புப்பற்றி கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் "வான்முகில் வழாது பெய்க" எனவும் அப்படி மழை பெய்வதால் நாடு வளம் பெறும் எனவும் மேலும் மன்னன் சிறப்பான ஆட்சி செய்வான், உயிர்கள் அனைத்தும் உணவுப் பஞ்சமின்றி நிறைவாக வாழும் நான்கு வகைத் தர்மங்கள் மேலோங்கும், தான தர்மங்கள் சிறப்புறும், மேன்மையான சைவநீதி உலகெங்கும் விளங்கும் எனவும் கூறுகிறார்.

திருவள்ளுவர் தனது அறத்துப்பாலில் இரண்டாவது அத்தியாயத்தில் முதலாவது குறளில் மழை நிலையாக நிற்பதில் உலகம் நடைபெறுகிறதென்றும், அதனால் வாழும் உயிர்கள் மழையை அமிர்தம் எனப் போற்றுகின்றன என்றும் தொடர்ந்து வரும் குறட்பாக்களில் உண்பதற்குரிய பொருள் விளைவதற்குச்

காரணமாகவும், தானும் ஓர் உணவாகி நிற்கின்றமையையும் பார்க்கலாம். மேலும் வானம் பொய்த்து மழை பெய்யாவிட்டால் பசிப்பிணி தாண்டவமாடும் எனக் கூறுகின்றார். இன்னும் மழை பெய்யாவிட்டால் உழவுத் தொழில் நடைபெறாது, மழை பெய்யாமல் நின்று கெடுப்பதும், மீண்டும் மழை பெய்து கொடுப்பதும் பயிரை விளைவிப்பதும் மழையேயாகும். ஆகாயத்திலிருந்து மழைத்துளி பூமியில் விழாதுவிடின் இயற்கையாக முளைக்கும் புல் பூண்டுகள் முளைக்கமாட்டாது. கடல்நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மேலெழுந்து மீண்டும் குளிர்ந்து மழையாகப் பெய்யாவிட்டால் பெரும் சமுத்திரம்கூட தன் வளத்தை இழக்கும் எனவும் கூறுகிறார். அடுத்து வானம் வரண்டுபோனால் கடவுளுக்குச் செய்யும் பூசை வழிபாடுகள்கூட சிறப்பாக நடைபெறாது எனவும் ஆலயங்களில்கூட பூசை பிரார்த்தனைகள் நடைபெறாது எனவும் கூறுகிறார். அத்துடன் வானம் பொய்த்தால் தானம், தவம் ஆகிய இரண்டு தர்மங்களும் நடைபெற வாய்ப்பில்லையாகும் எனவும் மேலும் இவ்வுலகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நீரின்றி நடைபெறாது. அதுபோல அற ஒழுக்கங்களும் உலகத்தில் இயங்காது. எனவே வானச்சிறப்பு இருந்தால்தான் உலகம் ???? வாழும் என்பது புலனாகின்றது.

இக்கருத்துக்கள் எல்லாவற்றையும் திருமூலரின் இம்மந்திரம் ஒன்று திரட்டிக் கூறுகின்றது எனலாம்.

இன்னொரு மந்திரம் (249)

**வரையிடை நின்றிழி வானீர் அருவி**
**உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறு**
**நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்**
**கரையில்லை எந்தை கழுமணி யாறே. - 249**

சிரசாகிய மலையினின்றும் பெருகிவரும் ஒளிமயமான ஆகாய கங்கையை உரைப்பதற்கு உரையில்லை. அது மன மண்டலத்து அன்பினால் ஊறும். பிருதுவிக் கலப்பு இன்மையால் நுரை இல்லை, அழுக்கில்லையாதலின் தெளிந்த தன்மையுடை நீர், எந்தையாகிய பாவங்களைப் போக்குகின்ற ஆற்றுக்குக் கரையில்லை. அது உலக உயிர்களை வாழ்விக்கும்.


| | |
|---|---|
| பெயர் | : திரு. வைத்திலிங்கம் கனகநாயகம் |
| விலாசம் | : வட்டுவினி லேன், இணுவில் மேற்கு - இணுவில் |
| பிறப்பு | : 1948.08.01 |
| தே.அ.அ | : 482143156 V |
| தொ.பே | : 0778257641 |
| கல்வி | : க.பொ.த (உயர்), ஆசிரிய பயிற்சி |
| தொழில் | : ஆசிரியர் (S.L.T.S 1) (ஓய்வு) |
| பட்டம் | : திருமுறை நெறிச் செல்வர், சித்தாந்தரத்தினம், சுகநலப் பணியாளர், மனவளக்கலை |
| பணி | : திருமுறை ஓதல், பொதுநல சேவை |

உ
சிவமயம்

# தானச்சிறப்பு

36



திருமந்திரம் முதல் தந்திரத்தில்
"தானச்சிறப்பு" பற்றிக் கூறும்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திருமதி கிருஷ்ணானந்தி இராஜேந்திரன்
வயாவிளான்

வினைப்பயனால் வந்த இந்தப் பிறவியும் வாழ்வும் பெரிய கடல். இதில் நாம் திளைத்துக்கொண்டு இருக்கின்றோம். இந்தப் பிறவித் துயர்க்கடலை விட்டொழிய நமக்குத் தோணிபோல உதவ இரண்டு வழிகள் இருக்கின்றன. நாமும் நமது சுற்றத்தாரும். எல்லையற்ற புகழுடையவனான பரம்பொருளின் திருவடித் துணை கொண்டு துறவு நிலையிலே நின்று மேற்கொள்ளும் தவம் மற்றும் இல்லத்திலே இருந்து செய்யும் தருமங்கள் என்னும் இரண்டுமே அவை. அறிவு, ஆக்கம் இரண்டையும் அருளிச் செய்பவர் குன்றாத புகழுடைய பரம்பொருளான சிவபெருமான். நடுவுநிலை தவறித் தீமை செய்பவர்கள் இன்பம் அடைய ஒருபோதும் விடமாட்டான். "காயமே இது பொய்யடா இது காற்றடைத்த பையடா". காயமாக உள்ளபோது "சிவம்" காற்றுப் போய்விட்டால் அது "சவம்". காய உடம்பு உள்ளபோதே உரியவர்களுக்கு ஒன்றைத் தரவும் இல்லாதவர்களுக்கு இயன்றதைக் கொடுத்துதவ நினையுங்கள். ஒரு பிடி அரிசியாவது தினமும் உங்களை விட ஏழை எளியவர்களுக்குக் கொடுத்துதவிப் பின் நீங்கள் உண்ணுங்கள். இப்படி முற்பிறப்பில் கொடுத்துதவி வாழாதவர்கள் இன்று இவ்வுலகில் பிச்சை எடுப்பவர்கள்.

பற்று, பந்தம், பாசம் இவற்றை விட்டொழிந்த ஞானிகளுக்கு உண்ண உணவழிப்பதே மேலான தருமம் என்று நீதிநூல்கள் கூறுகின்றன. இப்படியிருக்கும் பல நூல்களைத் தந்து, அறிந்து, அறிவுப் புகழ்வீச இருப்பதாகச் சொல்லும் மனிதர்கள் அப்படிப்பட்ட ஞானிகளைப் பார்த்தறிந்து ஆறு, குளக்கரைகளில் தியானத்தில் ஈடுபட்டு இருப்பவரை அழைத்து வந்து உணவு உண்ணச் செய்யுங்கள். அந்த ஈகையே உங்களுக்கு உற்ற உயிர்த் துணையாக அமையும். பிரதிபலன் பாராது நல்லறச் செயல்களைச் செய்யத் தெரியாதவர்கள் சிவப்பரம்பொருளின் திருவடி நினைத்துப் போற்றும் பக்தி வழியை அறிய மாட்டார்கள். இவர்கள் சிவலோகத்தின் நிழலைக்கூட தரிசிக்க முடியாதவர்கள்.

எட்டிப்பழம் மிகவும் கசப்பானது. உண்பவர் உயிரையும் கொல்லும் என்பர். இப்படிப்பட்ட எட்டிமரம் பழுத்தால் என்ன? அந்த மரத்தின் காய்கள் பழுத்துப் பெரிய பழங்களாகித் தரையெல்லாம் கிடந்தால் என்ன? யாருக்கும் இதனால் ஒரு பயன்

இல்லை. இதுபோன்றதுதான் அறத்தோடு கூடிய புண்ணிய செயல்களைச் செய்யாதவர்கள் செல்வம். அது யாருக்கும் பயன்படாது. வட்டிக்குப் பொருளைத் தந்து வட்டி பெற்று இவ்வுலகில் செல்வத்தைச் சேர்த்து வைப்பவர்கள் செல்வத்தின் பயனறியாப் பாதகர் ஆவார்.

இருமல், இரத்தம் குறைவதால் வருகின்ற நோயான இரத்தச்சோகை, ஈளை, சளி சம்பந்தமான காசநோய், வெப்பு கணச்சூடு, உஷ்ணத்தால் உண்டாகும் உபாதைகள் எல்லாம் தருமம் செய்யாதவர்களைத் தேடி வரும் நோய்கள். உயிரை அச்சுறுத்தும் இடி மின்னல் தாக்குதல், கழுத்துக்கட்டி, பிளவை ஆகிய நோய்கள் தருமம் செய்து வாழ்பவர்களைச் சேரமாட்டா. திருமந்திரம் 250ஆவது பாடலில்,


**ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.** (திருமந்திரம் -250)

எல்லோருக்கும் கொடுத்து உண்ணுங்கள் வேண்டியவர் வேண்டாதவர் என்று வேறுபாடு பார்க்காதீர்கள். வரும் விருந்தை எதிர்பார்த்து காத்திருந்து பிறகு நீங்கள் உண்ணுங்கள். முன் சமைத்த மிகுதியான பழையதைப் பாதுகாத்து வைக்காதீர்கள். ஆசை அதிகம் உடையவர்களே அவசரம் அவசரமாக சாப்பிடாதீர்கள். ஆற அமர இருந்து உண்ணுங்கள். தனியாக இருந்து சாப்பிடாதீர்கள். காகங்கள்கூடத் தம் இனத்தைக் கூவி அழைத்து கூட்டமாக இருந்து உண்ணுவதை உணருங்கள்.

எல்லா உயிர்களிலும் ஈசன் இருக்கின்றான் என்ற உண்மையை உணர்ந்து பிரதிபலன் பாராது தானங்களைச் செய்தும் அன்பும் இரக்கமும் கொண்டு பரம்பொருளின் திருவடி நிழலைக் காணும் பெரும் பேற்றைப் பெறுவீராக.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. கிருஸ்ணானந்தி இராஜேந்திரன் |
| விலாசம் | : | பலாலி வீதி, வயாவிளான் தெற்கு - வயாவிளான் |
| | | 16/1, பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு - சுன்னாகம் |
| பிறப்பு | : | 1964.11.06 தே.அ.அ: 646631033 V |
| தொ.பே | : | 0773683272 - 0716274988 |
| கல்வி | : | க.பொ.த (உயர் விஞ்) தொழில் : அறநெறி ஆசிரியர் |
| பட்டங்கள் | : | சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர், தமிழ்ப் பட்டயக்கல்வி |
| பணி | : | திருமுறை, புராணமுற்றோதல், |
| | | வயாவிளான் சமூகநல அமைப்பு செயலாளர் |

# அறம் செய்வான் திறம் 37



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "அறம் செய்வான் திறம்" பற்றிக் கூறும் ஒன்பது மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திரு. ஆறும்பிள்ளை திருநாவுக்கரசு
இணுவில்

பண்பட்ட நிலத்திலே பயிர் வளரும் - அதுபோல நல்லொழுக்கமுள்ள பண்பட்ட மனதிலே இறை உணர்வு தோன்றும் என ஆறுமுகநாவலர் கூறியுள்ளார். அந்நிலையடையும் வழியாக நல்லொழுக்கத்தைத் திருவள்ளுவர், திருமூலர் போன்ற ஞானிகள் அருளியுள்ளனர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்". - 131

இங்கு வள்ளுவர் ஒழுக்கம் எல்லோருக்கும் சிறப்பைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரினும் மேலானதாகப் பேணிப் பாதுகாக்கப்படும் என்கிறார். மேலும் மற்றொரு குறளில் "தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" என்றார்.
அத்துடன்

"செய்த்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்" - 466

இங்கு வள்ளுவர் செய்யக்கூடாதவற்றைச் செய்தலும் செய்யத்தக்கவற்றைச் செய்யாது விடுதலும் கெடுதலை விளைவிக்கும் என்று கூறியுள்ளார். இதனையே திருமூலரும் இயமம், நியமமென முறையே தீயன செய்யாதிருத்தல், நல்லனவற்றைச் செய்தல் முத்திக்கு வித்தெனக் கூறியுள்ளார். இதனையே ஔவையாரும் "புண்ணியம் ஆம் பாவம் போம்" என்றார். மேலும் இதனைத் திருமூலர் தனது திருமந்திரத்தின் முதலாந் தந்திரத்தில் கூறியுள்ளார். இது காரண ஆகமத்தின் கருத்துடன் ஒத்திசைகின்றது. இதில் காணப்படும் இருபத்திநான்கு பிரிவுகளில் அறஞ்செய்வான் திறம் என்பதும் ஒன்றாகும்.

"அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே" - 253

மேற்படி தலைப்பின் கீழ் அமைந்த ஒன்பது மந்திரங்களில் ஒன்றான இம்மந்திரத்தினை நோக்குவோம்.

பொருள் இல்லாத வறியார் பொருள் உடையவர் கொடுக்க உண்ணும் அதுவே அதைக் கொடுத்தவர்க்கு அறமாகி நிலைபெறும் என்பதை, நூல்களால் அறிந்த அறிவுச் செயல்களில் மணக்கப் பெறுபவரே மக்களாக மதிக்கப்பெறுவர். ஆயினும் அவ்வறிவைப் பெற்றும் சிலர் நீர் வேட்கையுடையார் பலரும் பெரிய நீர் நிலையாகிய கடலை நோக்கிச் செல்லாது) சிறிய கிணறு, குளங்களைத் தேடிச் சென்று உண்ணும் செயலின் தன்மையை அறிதல் இல்லை.

குறிப்பு:-

**"அறுநின்றார் உண்ணும் ஊணே அறம்"**

**"செல்வத்துப் பயன் ஈதலே"**

என அறிந்து வறியவர்க்கு ஈவர்.

இதனையே வள்ளுவரும்,

**"வறியார்க் கொன்றீவதே ஈகை, மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரதுடைத்து"**

எனப் பகன்றுள்ளார்.

அதாவது ஏழைகட்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே ஈகை என்னும் அறச்செயலாம். மற்றையோர்க்குக் கொடுப்பதெல்லாம் கடன்கொடுக்கும் தன்மையை உடையது. "கூவல் குளத்தினில்" என்பது கிணற்றிலாதல், குளத்திலாதல் எனும் பொருளுடையது. கடல்நீர் பெரிதாயினும் நீர்த்தாகமுடையார் அவற்றிடத்தே செல்லாமை போலப் பெருஞ்செல்வராயினும் ஈயாதாரிடத்தில் இரக்கச் செல்லார். அதனால் அப்பெருஞ் செல்வத்தால் சிறிதும் பயன்பெறார் என்பதும் கூவலும், குளமும் சிறியவேயாயினும் நீர்த்தாகமுடையார் அவற்றிடத்தே சென்று நீர் அருந்தல் போலச் சிறிய செல்வமுடையாரிடத்தில் இரவலர் சென்று தாம் வேண்டியன பெறுவர். அதனால் அச்சிறு செல்வரே புகழும், அறமும் உடைய பயன் பெறுவர் என உணர்ந்து ஈகை உடையாராக வேண்டும் என்று பின்னிரண்டடிகளிலும் உணர்த்தப்பட்டது.

இதனால் அறிவுடை மக்களாயின் செல்வத்தின் பயன் அறஞ்செய்தலேயாகும் எனக் கூறப்பட்டது. இங்ஙனமாக அறஞ்செய்தல் மூலமான ஒழுக்கநெறி பற்றி நின்று உய்தி பெறுவோம்.


| | |
|---|---|
| பெயர் | : திரு. ஆறுப்பிள்ளை திருநாவுக்கரசு |
| விலாசம் | : வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு - இணுவில் |
| பிறப்பு | : 1947.04.23 தே.அ.அ : 471133248 |
| தொ.பே | : 0777197200 - 0212241446 |
| கல்வி | : க.பொ.த (உயர்), A.I.B (SL) |
| தொழில் | : முகாமையாளர் - மக்கள் வங்கி (ஓய்வு) |
| பட்டம் | : சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர் |
| பணி | : இணைப்பாளர் - திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த திருமுறைப் பயிற்சிமையம் - இணுவில், சர்வதேச அரிமாக்கழக உறுப்பினர் |

உ
சிவமயம்

# அறம் செய்யான் திறம் 38



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "அறஞ்செய்யான் திறம்" பற்றிக் கூறும் பத்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திருமதி கணேஸ்வரி லிங்கேஸ்வரன்
இணுவில்

அறம் மனு முதலிய நூல்களில் "விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும்" ஆகும். அறம் செய்வதனால் இம்மை, மறுமை, வீடுபேறு மூன்றினையும் பெற்றுக்கொள்ளலாம். அறஞ்செய்யாதவர்களுக்கு இப்பேறு கிட்டுவதில்லை.

**எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன**
**ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்**
**வட்டி கொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்**
**பட்டிப் பதகர் பயன் அறியாரே.** பாடல் - 260

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள் நச்சுமரம் பழுத்திற்று" என்பராகின், எட்டி மரத்தின் பெரிய பெரிய பழங்கள் பழுத்து நிலத்தில் வீழ்ந்து கிடந்தன. ஆனால் அது பயன் படாமையால் ஒருவராலும் அப்பழங்கள் தொடப்படுவது இல்லை. அதுபோல "நல்லறம் செய்யாதார் செல்வமும் ஒருவர்க்கும் பயன்படுவதில்லை. பொன்னாசையினால் கடும் வட்டி வாங்கிச் செல்வத்தை மேலும் மேலும் ஈட்டியதோடமையாது வஞ்சனைக் குணங்களால் பிறர் பொருள்களைக் கவர்ந்து செய்யவேண்டிய அறத்தினையும் உணரமாட்டார்கள். அதனால் கிடைக்கும் பாவச்செயலையும் அறியமாட்டார்கள். அவர்கள் (பாதகர்) பதகர் எனக் கருதப்படுவார்கள்.

எடுத்துக்கொண்ட விடயம்: துன்பத்தில் இருக்கும் மக்களுக்கு அறஞ்செயான் திறம் எடுத்து வைக்கப்படும்.

ஔவையாரால் அருளிச் செய்யப்பட்ட கொன்றைவேந்தனில் "விருந்திலோர்க் கில்லை, பொருந்திய ஒழுக்கம்" விருந்தினரை உபசரித்தல் இல்லாதவருக்கு தாம் பொருந்திய இல்லறம் இருந்ததாயினும் இல்லாததற்கு சமனாகும் எனக் கூறுகின்றார். மேலும் நல்வழி எனும் நூலில் "புண்ணியமாம் பாவம் போம்" எனும் பாடலில் இன்பத்துக்குக் காரணம் புண்ணியமும் துன்பத்துக்குக் காரணம் பாவமுமாதலிற்

பாவத்தை ஒழித்து புண்ணியத்தைச் செய்யும்படி கூறுகின்றார். மேலும் "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்" எனும் பாடலில், நீதி தவறாத நல்வழியில் நின்று கொண்டு முறைமையோடு சற்பாத்திரங்களாயுள்ளவருக்குக் கொடுத்தவரே உயர்வாகிய சாதியார் எனவும் கொடாதவர் இழிவாகிய சாதியார் எனவும் கூறுகின்றார்.

திருவள்ளுவப் பெருந்தகை அறத்தை வலியுறுத்தியும் அறஞ்செய்யான் இயல்பினையும் கூறுகின்றார். எல்லாப் பேற்றிலும் சிறந்தது வீடுபேறு கிடைத்தலாகும். வீடுபேறு, செல்வம் கிடைக்க வேண்டுமாயின் அறஞ்செய்யும்படி கூறுகின்றார். ஒருவனுக்கு அறஞ்செய்வதிலும் மேம்பட்ட ஆக்கம் வேறு எதுவுமில்லை. அதனை மயக்கத்தால் மறப்பதால் வரும் கேடும் இல்லை. எனவே அறம் செய்யும்படி கூறுகிறார். பிறர்மேல் பொறாமை, அவா, வெகுளி, இனியசொல் பேசாமல் கடுமையான சொற்களைப் பேசுதல் என்பன அறமாகாது. நாள்தோறும் அறம் செய்ய வேண்டுமென்பதையும் இது உயிர் உடம்பைவிட்டு நீங்கிய பின்னும் நின்று துணை செய்யும் என்பதாகும். அறத்தால் வருவதே ஒருவருக்கு இன்பமாகும். ஏனைய செயல்களால் வருவது இன்பம் போலத் தோன்றினாலும் துன்பமாகவே முடியும். இதனால் புகழும் அழியும். எனவே ஒருவர் செய்ய வேண்டியது அறமே ஒழிக்க வேண்டியது தீவினையே ஆகும்.

"இட்டார் பெரியோர், இடாதோர் சிறியோர்" எனும் ஔவையார் பாடலில் கூறப் படுவது பொருள் வளம் இல்லாதவர்களுக்கு, பொருள் வளம் உடையவர்கள் அவர்கள் நிலை அறிந்து கேட்காமலேயே உதவி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாத பெரியோர் சிறியவர்களாகவே கருதப்படுவார்கள்.




| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. கணேஸ்வரி லிங்கேஸ்வரன் |
| விலாசம் | : | "நவேந்திரகிரி", இணுவில் மேற்கு - இணுவில் |
| பிறப்பு | : | 1956.08.20 |
| தே.அ.அ | : | 567333906 V |
| தொ.பே | : | 0783013830 - 0213737593 |
| கல்வி | : | க.பொ.த (உயர்), பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| தொழில் | : | ஆசிரியர் (ஓய்வு) |
| பட்டம் | : | திருமுறைநெறிச் செல்வர் |

உ
சிவமயம்

# அன்புடைமை

39



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "அன்புடைமை"
பற்றிக் கூறும் பத்து மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திரு. நாகலிங்கம் தில்லைநாதன்**
**இணுவில்**

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் உள்ள ஒன்பது தந்திரங்களுள் முதலாவது தந்திரத்திலே மனிதரை ஒழுக்க சீலமுள்ளவர்களாக உருவாக்குவதற்கு உரியவற்றை நிரைப்படுத்திக் கூறப்படுகிறது. அதில் இருபத்து நான்கு வரைமுறைகள் கூறப்பட்டுள்ளன. அதில் பதினெட்டாவதாக அமைந்திருப்பது அன்புடைமை என்னும் அதிகாரமாகும். இந்த அதிகாரத்திலே அன்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை வரையறுத்துப் பத்துப் பாடல்கள் உள்ளன. அவை எல்லாம் அன்பு வேறு சிவம் வேறு அல்ல அன்பே சிவம் என்பதை அறிவுறுத்துகிறது. திருவாசத்தில் மாணிக்கவாசகர் சிவபெருமானை "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே" எனப் பாடுகிறார். அருளாளர்கள் எல்லாரும் மக்கள் ஒழுக்க சீலமுள்ளவர்களாக வாழவேண்டும் என்பதற்காக பல நீதிமொழிகளைக் கூறியுள்ளார்கள். அந்தவகையிலேயே திருமூலரும் திருமந்திரத்திலே தான் பெற்ற இறைஇன்பம் இந்த உலக மக்களும் அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் "நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின் ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே" எனப் பாடுகிறார்.

இதன் பொருள்:-

நான் இறைவனைப் பற்றி நினைந்து அடைந்த இன்பத்தை இவ்வுலகமும் அடைவதாக. ஆகாயத்தை இடமாய்க் கொண்ட அறிவு சொரூபமான சிவத்தைப் பற்றிச் சொல்லப்போனால் அது உடலைப்பற்றிய உணர்வாயுள்ள மந்திரமாகும். அவ்வுணர்வை அடிக்கடி முயன்று பற்றிக்கொண்டால் சிவம் வந்து உங்களிடம் பொருந்தும் (தி.ம-85). இவ்வாறாகத் திருமூலர் அன்புடைமையில் முதல் தரும் பாடல் அன்பைப் பற்றிக் கூறுகிறது.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே. (தி.ம - 270)

அறிவிலார் அன்பு சிவம் இரண்டென்பர் - அனுபவமில்லாதவர் அன்பாகிய சக்தியும் சிவமாகிய அறிவும் இரண்டு பொருளென்பர். அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார் - அன்பின் முதிர்வினால் சிவமாகிய அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தோர், தாழ்ந்தோராகிய எல்லோரும் உணர்வதில்லை. அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் - அன்புதான் சிவத்தை விளங்கும்படி செய்கியது என்பதை எல்லோரும் உணர்ந்தபின். அன்பே சிவமாய் அமர்ந்திருந்தார் - அன்பே வடிவமாய் சிவமாந்தன்மை எய்தினார்.

அன்பின் முதிர்வே சிவம். "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என் அன்பே" என்ற மாணிக்கவாசகர் பாடலை உதாரணமாகக் கூறலாம். மேலும் இறைவன் ஆன்மாக்களின்மேல் கொண்ட அன்பினால் பிரபஞ்சத்தைப் படைத்து ஆன்மாக்களுக்கு அருள் செய்துள்ளார். அந்த இறைவனிடம் நாம் அன்புடையோராய் இருக்க வேண்டும். இறைவன் இன்பம் படைத்தலாவது வேண்டுவார்க்கு வேண்டுவதை தானே அறிந்து ஈதல் ஆகும். இதையே மாணிக்கவாசகர் தமது குழைத்தபத்தில் "வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ" எனப் பாடுகிறார். பிரதி உபகாரம் கருதாத அன்பே சிறந்த, உயர்ந்த அன்பு. இறைவனிடமும் அத்தகைய அன்பையே நாம் செலுத்தவேண்டும். தன்னலம் கருதாத உயர்ந்த அன்பு எது என்பதை மணிவாசகர் மூலமாக அறிகிறோம். மாணிக்கவாசகர் உவமிக்க முடியாத அன்பாக கண்ணப்ப நாயனாருடைய அன்பைக் குறிப்பிடுகிறார். அந்த அன்பைப் பற்றிய் பாடிய பாடல்

**"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணைச்**
**சுண்ணப் பொன்நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி"**

மேலும் "அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை புரைபுரை கனிய" என்று அன்பு பற்றிப் பாடுகிறார். போதி மாதவனும் அன்பைப் பற்றி உயர்வாகப் போதித்துள்ளார்.

தன்னலங் கருதாத அன்புடையோர் ஈற்றில் சிவமேயாவர் என்பதற்குக் கண்ணப்பரே தக்க சான்று ஆகும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. நாகலிங்கம் தில்லைநாதன் |
| விலாசம் | : | பாப்பாதோட்ட வீதி, இணுவில் மேற்கு - இணுவில்<br>C/o அ. சொர்ணலிங்கம் |
| பிறப்பு | : | 1943.03.07 தே.அ.அ : 19430670012 |
| தொ.பே | : | 0544901819 |
| கல்வி | : | க.பொ.த |
| தொழில் | : | வர்த்தகம் |
| பட்டம் | : | பாலபண்டிதர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர்,<br>மனவளக்கலை - பிரமஞானம் |
| பணி | : | திருமுறை ஓதல், புராணப்படிப்பு |

# அன்பு செய்வாரை அறிவான் சிவன் 40



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "அன்பு செய்வாரை அறிவான் சிவன்" பற்றிக் கூறும் பத்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திரு. கந்தையா கனகராசா
கோப்பாய்

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்பது திருவள்ளுவர் வாக்கு. அவர் தனது குறளில் கூறும்போது அன்பை யாராலும் அடைத்து வைக்கமுடியாது. அது கட்டுக்கடங்காது அன்புடையோர் சிந்தும் ஆனந்தக் கண்ணீர் அவரது அன்பின் ஆழத்தை அறிய வைக்கும். இவ்வாறு அன்புடைமை எனும் அதிகாரத்தில் முதற் பாடலிலேயே கூறிவைத்துள்ளார். அன்புடைமையின் எதிர்வினையே அன்பில்லாமை.

அன்பில்லாமை என்பது ஒரு வேண்டாப் பொருளாகவே பார்க்கப்படுகின்றது. ஔவையார் ஓரிடத்தில்,

"காணக் கண்கூசுதே கை எடுக்க நாணுதே
அன்பிலாள் இட்ட அமுது"
என்கிறார்.

அன்பின்பாற் பட்டதுதான் இல்லற வாழ்க்கை. அன்போடு எதைக் கொடுத்தாலும் அது சுவையாகவிருக்கும். அன்பில்லா மனதோடு அமிர்தத்தைக் கொடுத்தாலும் அது நஞ்சாகத்தான் தெரியும். ஆன தன்மையினால்தான் கூறுகின்றார்கள். "அன்புக்குமுண்டோ அடைக்கும் தாழ்" என்று. அன்புதான் இன்ப ஊற்று இவ்வுலகு அன்பு என்ற சொல்லினால் கட்டுண்டு கிடக்கின்றது. அஃதில்லையேல் எல்லாமே சிக்கிச் சிதறிவிடும்.

எல்லா மதங்களுமே அன்பைத்தான் போதிக்கின்றன. இன்றைக்கு மதங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்றன. காரணம் ஒன்றோடு ஒன்றுக்கு அன்பில்லை. ஒன்றை ஒன்று நேசிக்கத் தவறிவிட்டது. இதனால் மனித இனம் சீரழிந்து கொண்டிருக்கின்றது.

ஔவையார் தான் பெற்ற அனுபவத்தின் மூலம் ஒரு பாடலைத் தந்துள்ளார்.

**"இருந்து முகம் திருத்தி ஈரோடு பேன்வாங்கி**
**விருந்து வந்ததென்று விளம்ப**
**ஆடினாள் ஓடினாள் ஓடிப்பழமுறத்தால்**
**சாடினாள் ஓட ஓடத்தான்"**

அன்பில்லாமைக்கு இதைத்தவிர வேறு நல்ல உதாரணம் இல்லை என்றே சொல்லலாம். கணவனானவன் தனது மனைவிக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் யாவற்றையும் அன்போடு செய்தும் மனைவியிடம் அன்பில்லாத தன்மையை இப்பாடல் சிறப்பாகக் கூறுகின்றது. அன்பில்லாத இல்வாழ்க்கை பிறருடைய நகைப்பிற்கிடமாகும் என்பதையும் இப்பாடல் மறைமுகமாகக் கூறத்தவறவில்லை.

இவ்வாறெல்லாம் கூறும்போது எமக்கிடையே ஒரு கேள்வி எழவும் செய்கின்றது. அதாவது எல்லாவற்றையும் கூறிய திருமூலர் அன்பில்லாமை பற்றி கூறவில்லையோ எனும் கேள்விக்கு அவர் தனது 280வது மந்திரத்தில் நல்ல விடை தந்துள்ளார்.

**"இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்**
**உகந்து அருள் செய்திடும் உத்தம நாதன்**
**கொழுந்தன்பு செய்தருள் கூறவல்லார்க்கு**
**மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே" - 280**

அன்பினைப் பொருட்படுத்தாது வன்சினமாய்த் திரிவாரையும் அன்பினால் பெற்று மென்மையான எல்லோராலும் விரும்பும் மனதையுடையவராய், அயலவர்க்கு நல்லவனாய் வாழ்வாரையும், அவரவர் செய்கைகளை அறிந்து இறைவன் துன்ப இன்பங்களை அளிப்பான். அத்தகைய உள்ளன்போடு அருள் செய்யும் பரம்பொருள் தன்மீது அன்பு செய்பவர்களை அறிவான். அவர்கள் அனைத்துயிர்கள் மீதும் அன்புடையவராய் ஒழுக வல்லார்க்கும் அன்பு செய்வான் இறைவன். இகழ்ந்து அன்பினைப் புறக்கணித்து பெற்றது மெய் அன்பல்ல என்று இவ்வுலகில் மன்னுயிர்கள் நல்ல வண்ணம் வாழ வகை கூறியுள்ளார் திருமூலர்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கந்தையா கனகராசா |
| விலாசம் | : | "வசந்தம்", கோப்பாய் வடக்கு - கோப்பாய் |
| பிறப்பு | : | 1953.01.23 தே.அ.அ : 530232352 V |
| தொ.பே | : | 0779905874 - 0212231140 |
| கல்வி | : | M.Ed |
| தொழில் | : | அதிபர் தரம் I (ஓய்வுநிலை) |
| பட்டம் | : | சுகநலக் கல்வியாளர் |
| பணி | : | சர்வதேச அரிமாக்கழக உறுப்பினர் |
| | | சுகவாழ்க்கைப் பேரவை - யாழ் கிளை - தலைவர் |

உ
சிவமயம்

# கல்வி

41



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "கல்வி" பற்றிக் கூறும் பத்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திருமதி சிறீஸ்வறி புஸ்பராசா**
சாவகச்சேரி

கல்வி கல் என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது கல்லுதல், தோண்டுதல் எனப் பொருள்படும். கொடுக்கக் கொடுக்கக் குறையாது. வெந்தணலால் வேகாது. கள்வர் கொள்ளை கொள்ளமுடியாது. இவ்வாறான பெருமையும் புனிதத்தன்மையும் கொண்ட கல்வியின் தார்ப்பரியங்களை இலக்கியங்கள், திருமுறைகள், இலக்கணங்கள், ஞானிகள், கற்றறிந்த பெரியோர்கள், கவிஞர்கள், புலவர்கள் மற்றும் அறுநூல்கள், பழமொழிகள், முதுமொழிகள் எனப் பல்வேறு வகையினரும் கல்வியின் மேன்மையையும் சிறப்பினையும் எடுத்துக் கூறியுள்ளனர்.

கல்வியானது புறத்திலிருந்து அகத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஐம்பொறிகள் இதற்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன. கல்வி என்பது அறிவு. இந்த அறிவினை இந்தப் பூமியில் சிருட்டிக்கப்பட்ட அனைத்து உயிர்களுக்கும் இறைவன் தருந்தருளியிருக்கிறான். இதனைத் தொல்காப்பியம் (27-28 பாடல்) "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே..." என்ற பாடலில் மெய், வாய், மூக்கு, கண், செவி முறையே புல் மரங்கள், சங்கு சிப்பி நத்தை, கறையான் எறும்பு, நண்டு தேனீ, விலங்கு பறவை மற்றும் மனிதனுக்கு அடிப்படை அறிவினைப் பிறப்பிலேயே புகட்டி சிருட்டித்திருக்கிறான் எனக் கூறுவதில் மெய்யியல் சிறப்புண்டு.

**கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லாதவர்**

- என்று கல்வி கற்காதவன் இழிவைக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

நாலடியார் "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல கல்வியழகே அழகு" என்று சிறப்பிக்கின்றது.

விவேகானந்தர் பிரபஞ்சத்திலுள்ள அறிவு முழுவதும் நிரம்பிய பெரிய நூல்நிலையம் உனது உள்ளத்தில் அடங்கியிருக்கிறது. அது உன்னுடைய

உள்ளத்தை ஆராய்வதற்குத் தேவையான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மற்றும் மதம் ஒன்றுதான் கல்வியின் உச்சாரம் என்று நான் கருதுகிறேன். ஆன்மீக ஞானத்தைப் போதித்தால் அதன் பின்னர் உலகறிவும் நீங்கள் விரும்புகின்ற மற்றைய எல்லா அறிவும் தொடர்ந்து வரும் என ஆன்மீகக் கல்வியின் சிறப்பினைக் கூறுகிறார்.

ஔவையார் ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம், என்றும் இனியவை நாற்பது, பிச்சை புகினும் கற்கை நன்றே எனவும், இளமையில் கல்வி சிலையில் எழுத்து, கல்வி இருளை நீக்கி ஒளியைத் தருவது மனிதனுக்கு எச்செல்வம் இருந்தாலும் கல்விச் செல்வமே நல்வழி காட்டும். அறியாமையை நீக்கி அறிவினைப் புகட்டும், மெய்யுணர்வைத் தரும், இம்மைக்கும் மறுமைக்கும் வழி சமைக்கும் என்பது தெளிவாகிறது.

மேலும் திருமந்திரம் முதலாவது தந்திரம் கல்விப் பகுதியில் பத்துப் படால்களில் பின்வரும் பாடலை நோக்கின்,

**நிற்கின்ற போதே நிலையுடையான் கழல்**
**கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்**
**சொற்குன்றலின்றித் தொழுமின் தொழுதபின்**
**மற்றொன்றிலாத மணிவிளக்காமே. - 292**

காலமுண்டாக என்பதுபோல இளமைக்காலத்து அறிவு ஆற்றல் ஆள்வினையுடைமை, முதலியன தளர்ச்சியின்றி கிளர்ச்சியாக இருக்கும். அதுவே தொழுதற்கு வாய்ப்புடைய காலமென்றும், ஒருபடித்தாய் மாறா நிலையுடையதாய் நிற்பவன் சிவன். அவன் திருவடியினைச் சேர்ப்பிக்கும் மெய்யுணர்வுக் கல்வியினைக் காலம் போக்காது ஓவாது, விரைந்து கற்றலைச் செய்ம்மின். கற்றலென்பது கற்றபடி அவன் திருத்தொண்டினை அருளால் புரிவது.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. சிறீஸ்வரி புஸ்பராசா |
| விலாசம் | : | பருத்தித்துறை வீதி, சரசாலை - சாவகச்சேரி |
| பிறப்பு | : | 1965.04.08 தே.அ.அ : 196559902863 |
| தொ.பே | : | 0779625988 |
| கல்வி | : | B.Ed |
| தொழில் | : | ஆசிரியர் |
| பட்டம் | : | திருமுறைநெறிச் செல்வர் |
| நூல்கள் | : | தரம் - 3, 4 சைவசமயக் கட்டுரைத் தொகுப்பு |
| பணிகள் | : | சத்தியம்மன் ஆலய நிர்வாக உறுப்பினர் |

உ
சிவமயம்

# கேள்வி கேட்டமைதல் 42



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "கேள்வி கேட்டமைதல்" எனும் பகுதியிலுள்ள பத்து மந்திரங்களில் ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திரு. ஆறும்பிள்ளை திருநாவுக்கரசு
இணுவில்

நிலையற்ற உலகில் பதி, பசு, பாசம் நிலையானதென்பது முடிந்த முடிவை வெளிப்படுத்தும் சைவசித்தாந்தத்தின் கூற்றாகும். இதில் பசுவாகிய ஆன்மா பாசத்தால் பீடிக்கப்பட்டு நன்மை, தீமை செய்து அதன்மூலம் பல்வேறு பிறப்புக்கள் எடுத்து இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றது. இவ்வாறு பீடிக்கப்பட்ட பாசம் நீங்க உயிர்கள் மானிடப் பிறப்பெடுத்தல் வேண்டும். இதனையே "புவனியில் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி இவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்றார் மாணிக்கவாசகர். இப்புவியில் மானிடராகப் பிறத்தற்கும், பிறந்து சிவனடி அடைதற்கும் சிவனருள் வேண்டும். இதனாலேயே ஔவையாரும் மானிடராகப் பிறத்தலரிது என்றார். மேலும் மணிவாசகர் அவனருளாலே அவன்தாள் வணங்கி என்றார்.

மேலும் சிவனை அறியும் வழிகளாகக் காண்டல், கருதல், உரை ஆகிய அளவைகளைச் சிவஞானசித்தியார் கூறுகின்றது. வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிடதத்தை அருகில் இருந்து கேட்கவேண்டும். அதேபோல் சிவன் புகழ் கேட்கப்படல் பற்றி அப்பர்

"செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ"

என்றார். மணிவாசகரோ கோயில் மூத்த திருப்பதிகத்தில் "உன் திருவார்த்தை விரிப்பார் கேட்பார் மெச்சுவார்" என்றார்.

மேலும் நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்ற நந்தியைக் (குருவாகக் கொண்ட) சுந்தரன் ஆகிய திருமூலர், "தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்" என்றார். இத்தகைய பொழுது மனமொன்றிக் கேட்கவேண்டும். இதனை உமாபதி சிவாசாரியார்,

"பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேல் பூசை
கரப்பருந்த நாடும் கடன்"

என்றார். ஞான நூல்களைக் கேட்கும்பொழுது பரபரப்பு இன்றிக் கேட்பீர்களாக. அல்லாவிடின் உறியில் உள்ள பாற்குடத்தின் மேல் நிற்கும் பூனை சுவரில் ஓடும் கரப்பான் பூச்சியைத் தாவித்தின்ன முயற்சித்துப் பாய்ந்து இரண்டையும் இழந்த நிலைக்கு ஒப்பாகும்.

மேலும் இதுபற்றித் திருமூலர் கூறிய பத்து மந்திரங்களில் ஒன்றை நோக்குவோம்.

**தேவர் பிரான்தனைத் திவ்விய மூர்த்தியை**
**யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்**
**ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்**
**ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே. - 301**

சிவபிரானை உள்ளவாறு உணர்ந்தோர் யாவர் என்பதனை முன்னே அறிந்து பின்னர் அவர்பால் கற்றலையும் கேட்டலையும் செய்யுங்கள். கற்றும், கேட்டும் அறிந்தபின் சிந்தித்துத் தெளியுங்கள். ஏனெனில் கற்றுக் கேட்ட பின்னர் சிந்தித்துத் தெளிந்தவரே சிவனைப் பெற்று உயர்ந்து நின்றனர்.

யாதொரு பொருளாயினும் அதனை வல்லாரிடத்தே கற்றலும் கேட்டலும் செயற்பாலதல்லது பிறரிடத்தகாது என்பதும் கல்வி கேள்விகட்குப் பின்னர் செய்யத்தக்கவை இவை என்பதும் கூறப்பட்டன. திருவள்ளுவரும் "ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்லே கேட்கப்பாற்று" (415) என்றார். "கற்றபின் நிற்க அதற்குத் தக" (குறள் 391) என்பது கல்வியின் பகுதியானாற் போலக் கேள்வியோடு இயைபுடையனவும் இங்கு கேள்வியின் பகுதியாயின.


| | |
|---|---|
| பெயர் | : திரு. ஆறுப்பிள்ளை திருநாவுக்கரசு |
| விலாசம் | : வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு - இணுவில் |
| பிறப்பு | : 1947.04.23  தே.அ.அ : 471133248 |
| தொ.பே | : 0777197200 - 0212241446 |
| கல்வி | : க.பொ.த (உயர்), A.I.B (SL) |
| தொழில் | : முகாமையாளர் - மக்கள் வங்கி (ஓய்வு) |
| பட்டம் | : சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர் |
| பணி | : இணைப்பாளர் - திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த திருமுறைப் பயிற்சிமையம் - இணுவில், சர்வதேச அரிமாக்கழக உறுப்பினர் |

உ
சிவமயம்

# கல்லாமை

# 43



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "கல்லாமை"
பற்றிக் கூறும் பத்து மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திரு. காசிலிங்கம் மனோநாயகம்**
மானிப்பாய்

"கல்லாமை" பற்றி திருமூலர் பத்து திருமந்திரப் பாடல்களால் விளக்கியுள்ளார். கல்லாமை என்பது "கல்வி மற்றும் சிவானுபவங்கள் பெறாமை" என்பதைக் குறிக்கும். சிவ அனுபவம் கற்றல், கல்வி எனப்பட்டது. "கற்றிலனாயினும் கேட்க" என்பது திருமந்திர வரிகள். கற்றவர்களே கேட்பார்கள். கேட்காமல் விடுபவர்கள் கல்வியால் அறிவு அற்றவர்கள்தாம் என்பது விளக்கம். "படிக்காமையால் வரும் இழிவு" என வள்ளுவரும் கூறுகிறார்.

**கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லாது இருக்கப் பெறின்** - குறள் 403

தாம் கல்லாமையைத் தாமே அறிந்து கற்றார் அவையின்கண் ஒன்றையும் சொல்லாது அடங்கி இருப்பதாயின் கல்லாதவரும் மிக நல்லவராவர். அறிவு, ஞானம் பெறுவதற்காக படித்தல் பற்றிய விளக்கமே வள்ளுவரால் முன்வைக்கப்பட்டது. ஆனால் திருமூலர் தனது யோக நூலில் கல்வி கற்றும் பின் சிவானுபவம் பெறாமை என்பதையே விளக்கியுள்ளர்.

**"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி** - குறள் 356

**"கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்"** - சம்பந்தர்

"திருவருள் பெறுதல் கல்வியாலே" என்பது உண்மையாகும். கண்ணப்ப நாயனார் வேடுவராக வாழ்ந்தமையால் எவ்வித கல்வியறிவும் கற்றவரல்ல. ஆனால் அவருக்குக் கிடைத்த திருவருள், அவர் முற்பிறவியில் கற்ற கல்வியால் என்பதை நாம் அறிய வேண்டும். முற்பிறப்புக் கல்வி, இப்பிறப்பிலும் எழு பிறப்பிலும் நமக்குதவும்.

**"ஒருமைக் கண்தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"** - குறள் 298

கல்லாமை என்பது ஒரு குற்றமேயன்றி அது குணமல்ல என்பதைத் தெளிவாகக் கல்லாதோர் மெய்நெறியை அறிவதில் தடுமாற்றமடைவர். ஏனெனில் மெய்நெறியை பலவாறாகக் காண்பர். சிவன் எங்கும் நிறைந்துள்ளார் என்பது உண்மையேயாயினும் கல்லாதோர் அவனை அடையும் நெறியை அடைய மாட்டார்கள்.

**கல்லாதவரும் கருத்தறி காட்சியை**
**வல்லாரெனில் அருட் கண்ணான் மதித்துளோர்**
**கல்லாதார் உண்மை பற்றிநிற்பர் கற்றோருங்**
**கல்லாதார் இன்பங் காணு கிலாரே.** - திருமந்திரம் 310

ஆசானிடம் போய் முறைப்படி கற்காமல் பண்டைய தவத்தால் கருத்தில் தெய்வக் காட்சியை உணர்வாராயின் அவர்கள் இறைவன் அருளால் அனுக்கிரகம் பெற்றவராவார். இத்தகையவர் உலகைப் பற்றாமல் சிவத்தைப் பற்றி நிற்பர். முறையாகக் கல்வி கற்றவரும் கல்லாதவராய்க் கருதப்பட்டவர் பெற்ற சிவானுபவத்தைப் பெறுவதில்லை. எனவே உண்மை அனுபவம் இல்லாதவர் கல்லாதவர்.

கல்லாதவர் இறைநெறி நிற்கும் ஆற்றல் பெறமுடியாது. இறைநெறி தவறின் வினைத் துன்பங்களுக்கு ஆளாக வேண்டி வரும். சிவநெறியில் நிற்கும் திறம் பற்றிய படிப்பறிவு இவர்களுக்கு இல்லை. சிவபெருமானை உள்ளத்தில் இருத்தித் தியானிக்கவும் முடியாது போனதே. இவை எல்லாம் மறந்து உலக அனுபவத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் துர்ப்பாக்கியம் கல்லாமையால் எற்பட்ட தவறாகத் தெரிகிறது.




| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. காசிலிங்கம் மனோநாயகம் |
| விலாசம் | : | சங்குவேலி வடக்கு - மானிப்பாய் |
| பிறப்பு | : | 1934.11.02 |
| தே.அ.அ | : | 348071183 V |
| தொ.பே | : | 0779591298 |
| கல்வி | : | S.S.C, H.S.C |
| தொழில் | : | P.H.I (ஓய்வு) |
| பட்டம் | : | சுகநலப் பணியாளர் |
| பணி | : | நாயன்மார்கட்டு இராசராசேஸ்வரி அம்மன் - தலைவர் |

உ
சிவமயம்

# நடுவு நிலைமை

44



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "நடுவு நிலைமை"
பற்றிக் கூறும் நான்கு மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
**திரு. கார்த்திகேசு வைத்தீஸ்வரன்**
**இணுவில்**

மனிதர்களாகிய எமக்கு இருவகையான வாழ்வு உண்டு. ஒன்று உலகியல் வாழ்வு, மற்றையது ஆன்மீக வாழ்வு. உலகியல் வாழ்வில் அறஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து அகமும் புறமும் தூயராக வேண்டும். புறவாழ்வு உலகியல், அகவாழ்வு ஆன்மீகம்.

புறவாழ்வு அறவொழுக்கத்தில் நடுவுநிலை தவறாது வாழவேண்டும். நடுவு நிற்றல் என்றால் பக்கம் சாராது நீதிநெறியில் நிற்றல் ஆகும். நீதிநெறி தவறாது வாழ்பவர் அகமும் புறமும் தூயவராகி ஆன்மீக வாழ்வுக்குத் தகுதி பெறுவர். ஆன்மீக நெறியில் நிற்பவர் தவம், செபம் முதலான படிநிலைகளில் உணர்ந்து இறுதியில் சிவகதி சேர்வர். நடுவுநிலை என்பதை நாம் புறவாழ்விலும், அகவாழ்விலும் வைத்து நோக்கு வோம். புறவாழ்வில் வள்ளுவர் சொல்வதுபோல சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல அதாவது தராசுகோல்போல ஒருபக்கமும் சாராமல் நீதிநெறியில் நிற்றல். இந்த இருவகை வாழ்வையும் திருமூலர் பெருமான் ஒருமந்திரத்தில் வைத்து உணர்த்துவதைக் காணலாம்.

**நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை**
**நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை**
**நடுவு நின்றார் நல்ல தேவருமாவர்**
**நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே.** - 320

புறவாழ்வில் நடுவு நிலைமை தவறாமல் அறவழியில நிற்பவர்க்கே ஞானம் கிட்டுமே அன்றி மற்றவர்க்குக் கிட்டாது. நடுவு நிலையில் நின்றவர்க்கு நரகத் துன்பமும் இல்லை. அவர்கள் உயர்ந்த தேவநிலையும் எய்தப் பெறுவர். தவம், யோகம் போலவே நடுவு நிலைமை தவறாதிருப்பதும் உயர்ந்த ஞான மார்க்கம் என்பதறிந்து நானும் அவ்வழி நின்றேன்.

அகவாழ்வு ஆகிய ஆன்மீக வாழ்வில் சிவயோகமே சிவகதியைத் தரும். அதற்குரிய வழி நமது உடலுக்குள்ளேயே உள்ளது. நடுவாகிய சகஸ்ரதளத்தில் விளங்கும் ஒளியை அறிந்து நில்லாதவர்க்கு ஞானம் கிட்டாது.

சிவயோக நெறியில் சகஸ்ரதளத்தில் நிற்றல்பற்றிச் சிந்திப்போம். அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டமாகிய நமது உடலிலும் உள்ளன. நமது உடலினுள்ளே ஆறு ஆதாரங்கள் சூக்குமமாக இருக்கின்றன. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவாகும்.

மூலாதாரம் முள்ளந்தண்டின் அடியில் மூலத்தில் உள்ள சக்கரம்; சுவாதிட்டானம் அதற்கு மேல் பால் உறுப்புகளுக்கு நேராக இருக்கும் சக்கரம்; மணிபூரகம் தொப்பூழுக்கு நேராக இருக்கும் சக்கரம்; அநாகதம் இதயத்துக்கு நேராக இருக்கும் சக்கரம்; விசுத்தி கழுத்தில் கண்டத்துக்கு நேராக இருக்கும் சக்கரம்; ஆக்ஞை நெற்றியில் புருவநடுவில் இருக்கும் சக்கரம். இந்த ஆறு ஆதாரங்கள் எனப்படும் சக்கரங்களுக்கு மேலே உச்சியில் இருப்பது சகஸ்ரதளம் ஆகும்.

இந்த ஆறு சக்கரங்கள் ஆகிய ஆறு ஆதாரங்களுக்கும் சூக்குமமான வடிவங்களும் அதிதெய்வங்களும் உளர். இவை உச்சியில் இருந்து மூலாதாரம் வரை செல்கின்ற நடுநாடியில் இணைக்கப்பட்டுள்ளன.

மூலாதாரம் : நாலு இதழ் தாமரை மலர் வடிவுடையது. அதிதெய்வம் விநாயகர்.

சுவாதிட்டானம் : ஆறு இதழ் தாமரை வடிவினது. அதிதெய்வம் பிரமா.

மணிபூரகம் : பத்து இதழ் தாமரை வடிவினது. அதிதெய்வம் விஷ்ணு.

அநாகதம் : பன்னிரண்டு இதழ் தாமரை வடிவினது. அதிதெய்வம் உருத்திரன்.

விசுத்தி : பதினாறு இதழ் தாமரை வடிவினது. அதிதெய்வம் மகேஸ்வரன்.

ஆக்ஞை : இரண்டு இதழ் தாமரை வடிவினது. அதிதெய்வம் சதாசிவன்.

இந்த ஆறு ஆதாரங்களுக்கும் மேலே உள்ள சகஸ்ரதளம் ஆயிரம் இதழ் தாமரை மலரைக் கவிழ்த்து வைத்தது போன்ற வடிவினது. அதிதெய்வம் சிவன்.

சிவயோகத்தில் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியைப் பிராணாயாமம் ஆகிய மூச்சுப்பயிற்சியின் மூலம் எழுப்பி நடுநாடி ஊடாக ஆறு ஆதாரங்களிலும் நிறுத்தி, அவ்வத் தெய்வங்களை வழிபட்டு மேலே மேலே உள்ள சக்கரங்கள் ஊடாக உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் சிவஒளியைக் கண்டு இன்புற்று இருத்தல் சிவயோக நெறி நின்று ஞானம் அடைதல் எனப்படும். இதுவே நடுவுநிலையில் ஆன்மா நின்று சிவத்துடன் கலத்தல் ஆகும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கார்த்திகேசு வைத்தீஸ்வரன் |
| விலாசம் | : | மஞ்சத்தடி, இணுவில். 7, அல்பேட் பிளேஸ், தெகிவளை. |
| பிறப்பு | : | 1933-08-20 |
| தொ.பே | : | 0773179715, 0112-717401 |
| கல்வி | : | S.S.C |
| தொழில் | : | சுகாதாரக் கல்வியாளர் (ஓய்வுநிலை) |
| பட்டம் | : | சமூகநலப் பணிச்செம்மல், சித்தாந்தரத்தினம் |
| பணி | : | உளநலக் கல்வியாளர், சுகவாழ்க்கைப் பேரவைச் செயலர். |
| நூல் | : | சுகவாழ்வு சம்பந்தமான 25 நூல்களின் ஆசிரியர். |

உ
சிவமயம்

# கள்ளுண்ணாமை

45



திருமந்திரம் முதல் தந்திரத்தில் "கள்ளுண்ணாமை"
பற்றிக் கூறும் பதின்மூன்று மந்திரங்களில்
ஒரு மந்திரம் பற்றிய சிந்தனை.

*திருமந்திரச்செல்வர்*
திரு. சின்னத்துரை நடராசா
இணுவில்

சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தினை அருளியவர் திருமூலநாயனார். திருமந்திரம் தமிழ் ஆகமம் என்று அழைக்கப்படுகின்றது. "தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்கு திருமந்திரம்" என ஒரு முதுமொழியும் உண்டு. ஆனால் திருமந்திரம் சாத்திர நூலாக மட்டுமல்லாது தோத்திர நூலாகவும் மிளிர்வதைப் பல திருமந்திரப் பாடல்களின் ஊடாக அறியமுடிகின்றது. கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை எடுத்ததன் பலன் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என திருமூலர் தமது பாடலில் குறிப்பிடுகின்றார். திருமூலர் அட்டமா சித்திகள் பெற்ற ஒரு தவயோகி. இவர் அருளிய 3000 பாடல்களும் எளிமையானவை இனிமையானவை. படிக்கச் சுவையானவை. பயன் தருபவை. இம்மைக்கும் மறுமைக்கும் உதவுபவை. பன்னிரு திருமுறைகளில் மந்திரம் என்று போற்றப்படும் சிறப்பு திருமந்திரத்திற்கு மட்டுமே உண்டு.

அரிசி முதலியவற்றை கழுவிய கழுநீரைக் குடித்துப் பழகிய ஆவினங்கள் தாகம் தாங்காது தமது உடல் வருந்தினாலும் வேறு பிறநீரைத் தேடி அருந்துவதற்கு விரும்பாத் தன்மைபோல ஒழுக்கதினின்றும் நீங்கியவர் வாழ்வுக்கு வளமை அளிக்கும் சிவானந்தமாகிய மதுவை அருந்தாது கேடு விளைவிக்கும் தன்மையை உடைய மதுவை உண்டு கெடுவர் என்று கள்ளுண்ணாமையில் 324வது பாடலிலும், உள்ளத்தைச் சிவனிடம் செலுத்திப் பேரின்ப நிலையை உண்டாக்கும் சிவானந்த மதுவை உண்ணாமல் அதைக் கைவிட்டு கேடு விளைவிக்கும் மதுவினை அருந்திச் சிவபிரானின் சிந்தனை இல்லாது நிற்பதும், இருப்பதும், கிடப்பதும் மிகவும் கீழான செயல் என 325ஆவது பாடலிலும் விளக்குகின்றார். "குடி குடியைக் கெடுக்கும்" என்பார்கள் அதுபோலவே வள்ளுவப் பெருந்தகையும்,

**"உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்"** (குறள் 922)

கள்ளுண்பவர்கள் எவ்வளவு பெறுதற்கரிய அறிவைப் பெற்றிருப்பினும் சான்றோர்களினால் விலங்குகளாகவே மதிக்கப்பெறுவர் என்பதாகும்.

**காமமுங் கள்ளும் கலதிகட்கே ஆகும்**
**மாமலமுஞ் சமயத்துள் மயலுறும்**
**போமதியாகும் புனிதன் இணையடி**
**ஓமய ஆனந்தத் தேறல் உணர்வு உண்டே. - 326**

எனும் பாடல் மூலம் காமம், கள் என்பவை எல்லாம் கீழ்மக்களுக்கே ஆகும். ஆணவ மலமும், சமயத்தை உள்ளபடி உணராமல் மயக்கத்தை உண்டாக்கும் கெடும் அறிவு உண்டாகும். எம்பெருமானின் திருவடி இணைப்பினால் பெறும் பிரணவமயமான சிவானந்தத் தேன் மயக்கத்தைப் போக்கும் உணர்வு உள்ளது என்பது இப்பாடலின் பொருளாகும்.

ஓர் இனத்தை அடையாளப்படுத்துவது அந்த இனத்தின் பண்பாடேயாகும். பல்லாயிரக் கணக்கான இனங்கள் வாழும் உலகத்தில் தமிழர்களாகிய நாம் எங்கள் இனத்தின் தனித்துவத்தை அடையாளத்தை நிலைபெறச் செய்வதற்கு எங்கள் பண்பாட்டைக் காக்க வேண்டும். சிறப்பாக எமது உடை, உணவு, உபசரிப்பு முறை, உறவாடும் முறை, பெரியோரைக் கனம் பண்ணுதல், நமது சடங்குகள், விழாக்கள், ஒழுக்கமுறைகள் என அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது. செய்யவேண்டிய அறச் செயல்களைச் செய்து செய்யக்கூடாத மறச் செயல்களைச் செய்யாமல் அறவாழ்வு வாழ வேண்டும். எனவே வாழ்வை அழிக்கும் கீழான செயலை விலக்கி கள்ளுண்ணாமையைக் கடைப்பிடித்து அட்டமா சித்திகளும் கைவரப்பெற்று உண்மையான ஞானத்தில் ஆனந்தம் அடைவோமாக.

"நன்றும் தீதும் பிறர் தரவாரா" "தாம்தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார்"


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சின்னத்துரை நடராசா |
| விலாசம் | : | மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு - இணுவில் |
| பிறப்பு | : | 1942.03.03 தே.அ.அ : 420631537 V |
| தொ.பே | : | 0773713864 - 0212242160 |
| கல்வி, தொழில் | : | விவசாய டிப்புளோமா - குண்டசாலை, காணி அதிகாரி (ஓய்வுநிலை) |
| பட்டங்கள் | : | சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர், சமூகநலப் பணியாளர் |
| கௌரவபட்டம் | : | சிவநெறிச் செம்மல் |
| பணிகள் | : | 1)செயலாளர் - சுகவாழ்க்கைப் பேரவை யாழ் கிளை |
| | | 2)செயலாளர் - கோண்டாவில் வடமேற்கு முதியோர் சங்கம் |
| | | 3)உறுப்பினர் - கோண்டாவில் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் |
| | | 4)தலைவர் - பாண்டியன்குளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை |
| | | 5)உறுப்பினர் - நல்லூர் ப.நோ.கூ. சங்கம் பொதுச்சபை |

உ
சிவமயம்

# ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான உள்ளம் 46



திருமந்திரத்தில் "உள்ளம் பெருங்கோயில்"
எனக்கூறும்
மந்திரம் பற்றிய சிந்தனை

*திருமந்திரச்செல்வர்*
திரு. கார்த்திகேசு வைத்தீஸ்வரன்
சுகநலக் கல்வியாளர் – கொழும்பு

எமது உடலைச் சீராகப் பேணுவதன்மூலம் நாம் மனநிறைவாக வாழலாம். நாம் அனைவரும் மனமகிழ்ச்சியாக வாழவே விருப்புடையோம். இந்த நிலைமை நாணயத்தின் முன்பக்கமாகில், அதன் மறுபக்கம் ஆரோக்கியமாக எமது உடம்பு அமைதல் ஆகும். ஆரோக்கியமான உடலில்தான் மனநிறைவான உள்ளத்தைப் பேண முடியும். 'Healthy mind is a healthy body' ஆலயத்தின் கருவறை என்னும் கோயிலில் மூலமூர்த்தி பிரதிட்டை செய்யப்பட்டு இருப்பதைக் காண்கிறோம். அதேபோன்று எமது உடல் என்னும் ஆலயத்தில் இருதயம் என்னும் கோயில் அமைந்து இருப்பதைக் குறிப்பிடலாம்.

### உடலின் மூச்சே உயிர்ப்பு ஆகும்

குழந்தை பிறக்கும்போது அதன் முதல் மூச்சு சம்பவிக்கிறது. இறுதி மூச்சு வரும்போது ஆன்மா உடலைவிட்டுப் பிரிகிறது. நாம் உயிர்வாழும் காலம் முழுவதும் தொடர்ந்து மூச்சை விட்டுக்கொண்டே இருக்கிறோம். இந்நிகழ்வில் பிரபஞ்சத்தில் இருக்கும் பிராணவாயுவும், பிராணசக்தியும் இம்மூச்சினூடாகவே எம்மை அறியாது உட்சென்றுகொண்டு இருக்கின்றன. அதேவேளை நாம் சுவாசித்த கரியமிலவாயு வெளியேற்றப்பட்டுக்கோண்டே இருக்கிறது. நாம் சுவாசித்த பிராணவாயு உடலின் சகல கலங்களுக்கும் இரத்தத்தின் ஊடாகச் சேர்க்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. நாம் ஆழமாக மூச்செடுத்து விடும்போது எம்மை அறியாது அமைதியடைகிறோம். யாவருடனும் உணர்வு பூர்வமாக நடந்துகொள்ள முடிகிறது.

### மூச்சின் பெருமை

ஓய்வின்றிச் செபிக்கும் சக்திக்குப் 'பிராணர்' என்று பொருள் உண்டு. சித்தர்கள் நூலிற் தரப்பட்ட தகவல்களின்படி மனிதனின் ஆயுள் 120 ஆண்டுகள் ஆகும். இதன் கணக்கு ஒரு நாளைக்கு (24 மணிநேரத்தில் 1440 நிமிடங்கள்) சுவாசத்தின் அளவு 24600 ஆகக்கொண்டு ஒரு நிமிடத்தில் (21600/1440=15) பதினைந்து சுவாசம் செய்யும் எடுக்கும் நேரம் (60/15) நான்கு வினாடிகளாகும். இவ்வடிப்படையில் சராசரி ஆரோக்கியமான மனிதனின் ஒரு சுவாசநேரம் நான்கு வினாடிகளாகும்.
(ஆதாரம்:- அகத்தியர் யோகஞானத்திறவுகோல் - ஸ்ரீசக்தி சமனன். பக்கம் - 77)

இயல்பாக நிமிடம் 18 முறைகள் சுவாசிக்கும் நாம் 12-15 முறைகள் வரை பயிற்சி மூலம் அமைத்துக்கொள்ள முடியும். ஆனால் மனப்பதட்டம், கோபாவேசம், கவலை, பயம், பதகளிப்பு, நெஞ்சுபடபடப்பு, கைகால் நடுக்கம் முதலான வேளைகளில் சுவாசம் தீவிரம் அடைவதை உணரலாம். இவ்வேளைகளில் 30 முறைகளுக்கு மேலாகவும் சுவாசிக்கும் நிலைமை ஏற்படலாம். நாம் அமைதி பேணி, ஆழமாகச் சுவாசித்தல், நாம உச்சாடனம், தியானம், ஜெபம், பிராணாயாமம் முதலானவைகளைக் குருவின் வழிகாட்டலில் கடைப்பிடிப்போமானால் எம்மை அறியாது அமைதியடைவதை உணரலாம்.

**ஊன்உடம்பு ஆலயம்**

உள்ளம், மனம் கருவறை. ஊன் உடம்பு ஆலயம். ஆருயிர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாக விளங்குகிற பரம்பொருளைச் சென்று வழிபட வெளிவாசல் கோபுர வாசல் வாய். அறிவு விளக்கமுற்று, அறியாமை இருளகன்று, தெள்ளத்தெளிவான மனநிலை வாய்க்கப்பெற்றவர்க்கு உயிரே வழிபட்டு வணங்கத்தக்க சிவலிங்கம். உடலில் பொருத்தப்பட்டுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களும் ஐந்து பெரிய மணிவிளக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**உள்ளம் பெரும் கோவில்**

**"உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப்புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே"** - திருமந்திரம் 1823

எம் வாழ்க்கை குதூகலமாக அமைவதற்கு ஆரோக்கியம் அவசியம். பஞ்சபூதங்களாலான உடலைப் பேணுதல் அவசியம். இதன்மூலம் ஆரோக்கியமான மனநிலையை மேம்படுத்தலாம். இந்நிலைமை மனத்திருப்தியுடன் அமைதி பேணி எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளப் பேருதவியாக அமைகின்றது.

உள்ளமாகிய மனமண்டலம் சிவனுறையும் கருவறையாகும். ஊனாலாகிய உடம்பு ஆன்மாவின் ஆற்றலாக வைத்துள்ள இடமாகும். வள்ளலாகிய சிவனைச் சென்று வழிபடுவதற்கு வாய் கோபுரவாசல் ஆகும். நன்றாக அறிந்து தெளிவு பெற்றவர்க்குச் சீவனே சிவலிங்கம். இவ்வாறு அறிந்து வழிபடுபவர்க்கு வஞ்சனை செய்யும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் பெரிய ஒளிபொருந்திய விளக்காகும். சீவனே சிவத்துடன் பொருந்தியபோது பெருஞ்சோதியாக அமையும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கார்த்திகேசு வைத்தீஸ்வரன் |
| விலாசம் | : | மஞ்சத்தடி, இணுவில். 7, அல்பேட் பிளேஸ், தெகிவளை. |
| பிறப்பு | : | 1933-08-20 |
| தொ.பே | : | 0773179715, 0112-717401 |
| கல்வி | : | S.S.C |
| தொழில் | : | சுகாதாரக் கல்வியாளர் (ஓய்வுநிலை) |
| பட்டம் | : | சமூகநலப் பணிச்செம்மல், சித்தாந்தரத்தினம் |
| பணி | : | உளநலக் கல்வியாளர், சுகவாழ்க்கைப் பேரவைச் செயலர். |
| நூல் | : | சுகவாழ்வு சம்பந்தமான 25 நூல்களின் ஆசிரியர். |

உ
சிவமயம்

# THIRUMANTHIRAM 47

Thirumanthiraselvar
**Visva. Mahadevan**

The word "Thirumanthiram" is a combination and derivation of the two words 'Thiru' and 'Manthiram'. The word 'Thiru' has more than twenty six meanings in Thamil and noramly it refers to divine. And the word 'Manthiram' has much more powerful meaning than any other words in Thamil having the meaning that it guards one who believes or thinks of it. Therefore the word 'Thirumanthiram' itself means that it totally guards or protects the person who thinks or believes it with a great majestic divine power.

Thirumanthiram, under the background of 'Saiva sithantha' was written by Saint Thirumoolar who had been living at Mount Kailas in the Himalayan mountain range in total perfect silence for five thousand years by his own name Saint Suntharanathar. Then he had been sent by God Siva to perform a divine task on the earth. That is to portray Sivahamams in pure Thamil which had already been in Sanskrit only.

Out of twenty-eight Sivahamams he had considered very important nine Sivahamams and organized them under nine 'Thanthirams' means chapter or lesson. He wrote three thousand holy divine stanzas altogether, while meditating under a Bo-tree at Thiruvavaduthurai. During these long periods Saint Suntharanathar's soul had been living within the body of Moolan who had been a shepherd. That was a great miracle because of his super-natural power, known as 'Sithu'.

In short, his holy divine stanzas deal with different aspects such as Sivam, Divine Love, Divine Joy, Humanization, Life, Divine Beauty, Walk within, Silence and Divine Grace. The third thanthiram or chapter is an entirely excellent and different one when compared with the other Saiva Religious books because it deals with Ashtanga Yogam - Hatha Yogam. It is the best among nine yogas which is hard to expound.

'Where the Science ends
there the Religion begins
Science without Religion is Blind
But, Religion without Science is Lame only"

Albert Einstein - President of Scientists


திருமந்திர ஆர்வலர்
சைவப்புலவர் சு. செல்லத்துரை
அவர்களின்
திருமந்திரக் கட்டுரைகளும்
கலை ஆக்கங்களும்

திருமந்திரப் பணிமன்றத்தினர் 18-11-2018இல் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடத்திய திருமந்திர உரை, இசை ஒலிப்பேழை வெளியீட்டு விழாக் காட்சிகள்





உ

சிவமயம்

# திருமூலர் காட்டும் சிவநெறி

எமது சமயம் சைவசமயம், எங்கள் முழுமுதற் கடவுள் சிவபெருமான்; சிவசம்பந்தமுடையது சைவம், இது சிவநெறி எனவும்படும், ஆன்மாக்கள் சைவசித்தாந்த நெறி நின்று அகப்புற வழிபாடு செய்து சிவனுடன் இரண்டறக் கலந்து, சாயுச்சிய முத்தி பெறுவதே வாழ்வின் பயனாகிய பேரின்பப் பேறு. இந்நிலையே வீடுபேறு, முத்திப்பேறு, சிவகதி எனவும் சொல்லப்படும்.

சைவசமயத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் வடமொழியில் உள்ள வேதசிவாகமங்களும், தமிழ்மொழியில் உள்ள பன்னிரு திருமுறைகளும், சைவசித்தாந்த சாத்திரங்களும் ஆகும். வடமொழி வேதசிவாகமங்களின் உட்பொருளையே திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் தமிழிற் கூறுகின்றன. இது பற்றியே திருமுறைகள் தமிழ் வேதம் எனவும் தமிழ் ஆகமம் எனவும் போற்றப்படுகின்றன.

சைவத்திருமறைகள் பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாக உள்ளது திருமந்திரம். இதுவே சைவத் திருமுறைகள் எல்லாவற்றிலும் காலத்தால் முந்தியது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்திய மூவாயிரம் ஆண்டு காலத்தில் ஆண்டுக்கு ஒன்றாக அருளிச் செய்யப்பட்ட மூவாயிரம் மந்திரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது திருமந்திரம் என்பது பெரியோர் முடிவு.

திருமூலர் நந்தியெம்பெருமானாகிய சிவபெருமானின் அருள் பெற்று மூவாயிரம் தமிழ் எனும் திருமந்திரத்தைப் பாடினாரென்றும், இதனைத் தினமும் காலையில் கருத்தறிந்து ஓதி வழிபட்டால் ஞால முதல்வனாகிய சிவபெருமானை அடைய முடியும் என்றும் திருமூலரே,

**மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்**
**ஞால முதல்வனை நண்ணுவரன்றே.**

என்று கூறுகின்றார்.

இது தமிழ் மந்திரம் எனவும், தமிழ் ஆகமம் எனவும், மூவாயிரம் தமிழ் எனவும் போற்றப்படுகின்றது. அத்துடன் ஏனைய திருமுறைகள் எல்லாம் தோத்திரங்களாக இருக்க இது தோத்திரமாகவும் சாத்திரமாகவும் விளங்குகின்றது. வேத ஆகம, அறநூல்களின் கருத்துக்களையெல்லாம் மந்திர வடிவில் தரும் தனிச்சிறப்புக்கும் உரியது. சைவசமயத்தைப் பற்றிய எல்லாக் கருத்துக்களையும், முழுமையாகத் தரும் தனிப்பெரும் நூலாக உள்ளது திருமந்திரம் எனின் மிகை இல்லை.

சைவம், சிவநெறி, சிவபெருமான், சைவசித்தாந்தம், சிவகதி, சாயுச்சிய முத்தி முதலான சைவம் சார்ந்த சொற்களையும், அவை பற்றிய தத்துவ விளக்கங்களையும் முதன்முதலில் தமிழிற் கூறிய காலத்தால் முந்திய மூத்த நூலாகத் திருமந்திரமே விளங்குகின்றது. உதாரணத்துக்குச் சிலவற்றைக் காண்போம்.

சைவப்பெருமைத் தனி நாயகன் நந்தி, தெய்வச் சிவநெறி சன்மார்க்கம், தேடித் திரிந்து சிவபெருமான் என்று, சைவம் சிவனுடன் சம்பந்தமாவது, சிவசிவ என்கிலர் தீவினையாளர். சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை, சிவகதியே கதி, சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்திக்கும் என்பன போன்ற பல தொடர்களையும், விளக்கங்களையும் திருமந்திரத்தில் காணலாம்.

பின்வரும் மந்திரத்தில் சைவம், சிவநெறி, குருநெறி, சன்மார்க்கம் எனும் சொற்கள் இடம் பெற்றிருப்பதையும் இம்மந்திரப் பொருள் அதற்கு விளக்கம் அளிப்பதையும் காணமுடிகிறது.

**சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி**
**உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு**
**தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய**
**வையத்து உள்ளார்க்கு வகுத்து வைத்தானே.** - 1559

என்பது அந்த மந்திரம்.

இதன் பொருள் சைவசமயத்துக்குப் பெருமை தேடித்தரும் ஒப்பற்ற பரம்பொருள் ஞானத் தலைவனாகிய நந்தியெம்பெருமான் எனும் சிவன். அவன் ஆன்மாக்கள் கடைத்தேறுவதற்குச் சொல்லிவைத்த குருஉபதேசமாகிய ஞானநெறி ஒன்று இருக்கிறது. அதுதான் தெய்வச் சிவநெறியாகிய சன்மார்க்க நெறியாகும். இந்தப் பூமியில் உள்ளவர்கள் அதனை மேற்கொண்டு வாழ்வின் பயனாகிய முத்தியின்பத்தைப் பெற அந்த நன்நெறியை வகுத்து வைத்துள்ளான் எனக் கூறுகின்றது இந்த மந்திரம்.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும், சிவசம்பந்தமுடையது சைவம் என்பதையும்,

**சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்**
**சைவம் தனைஅறிந்தே சிவம் சாருதல்**
**சைவம் சிவன்தன்னைச் சாராமல் நீங்குதல்**
**சைவம் சிவானந்தம் சாயுச்சியமே.** - 1512

எனும் மந்திரம் சொல்கிறது.

சைவசமய நெறியாவது சிவனுடன் சேர்ந்திருத்தல்; சைவம் என்பது சைவ நெறிமுறை அறிந்து சிவனோடு கூடியிருத்தல். சைவம் என்பது சிவப்பரம்பொருளோடு தாம் ஒன்றிக் கலந்து இருக்கிறோம் என்ற உணர்வுமற்று, அந்த நினைப்பையும் விட்டொழிந்து இருத்தல். இப்படிச் சிவத்தோடு சிவமாகக் கலந்து சிவசிந்தனையில் சிவானந்தம் பெற்றுப் பரம்பொருளோடு இரண்டறக் கலந்து நிற்றலே சாயுச்சியநிலை அடைதலாம்.

அதுமட்டுமல்லாமல் பாசஞானத்தில் அழுந்தும் ஆன்மா எப்படிப் பசுஞானம் பெற்றுப் பின் பதிஞானம் சித்திக்கச் சாயுச்சிய முத்தி பெறுகிறது எனும் சைவசித்தாந்தச் செம்பொருளையும், இம்மந்திரம் தெட்டத்தெளிவாகச் சொல்வதையும் காணமுடியும்.

முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதையும் எவ்விடத்தில் அவனைப் பணிந்தால் பணிபவர் உள்ளத்தைக் கோயிலாகக் கொள்வான் என்பதையும் பின்வரும் மந்திரம் உணர்த்துகிறது.

நாடும் நகரமும் நற்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின், பாடிப்பணிமின், பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே. - 1445

நாடுநகரங்கள் எல்லாம், நல்திருக்கோயில்கள் இருக்கின்ற இடங்கள் எங்கு என்று தேடிப்போய் அங்கெல்லாம் இருக்கின்ற சிவப்பரம்பொருளைக் கண்டு சிவபெருமானே என்று பணிந்து போற்றிப் பாடுங்கள், பாடிப்பரவி வணங்கி நில்லுங்கள். இப்படி வணங்கிப் பணிந்தால் பணிபவர் உள்ளமே கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவான் பரம்பொருள் என இம்மந்திரம் கூறுகின்றது.

அதுமட்டுமல்லச் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையையும் திருமந்திரம் சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுதற்கு முன்னே கூறிவிட்டது. முப்பொருள்கள் பதி, பசு, பாசம் எனும் மூன்று. அவை மூன்றும் அநாதியான உள்பொருள் என்பதை,

பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகில் பசுபாசம் நிலாவே. - 115

என்கின்றது மந்திரம்.

பதி, பசு, பாசம் என்று சொல்லப்படும் மூன்றில் இறைவனைப் போலவே உயிர்களும், அவற்றைப் பற்றியிருக்கும் பந்த பாசங்களும் அநாதியானவை. தலைவனாகிய சிவனை ஆன்மாக்கள் அணுகுவதில்லை. காரணம் அவற்றைப் பற்றியுள்ள பாசங்களாம். ஆனால் இந்த ஆன்மாக்கள் தலைவனாகிய பதியை நெருங்கினால் அவற்றைப் பீடித்துள்ள பாசங்கள் நில்லாது விலகிப்போம் எனும் சைவசித்தாந்த உண்மையை இம்மந்திரம் சொல்கிறது.

சித்தாந்த நெறி நின்று இறைவனைத் தொழுதால் சீவன் முத்தி சித்திக்கும். வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தம். இது காட்டும் பொருள் சிவமே எனப் பின்வரும் மந்திரம் உணர்த்துகிறது.

சித்தாந்தத்தே சீவன்முத்தி சித்தித்தலால்
சித்தாந்தத்தே நிற்போர் முத்திசித்தித்தவர்
சித்தாந்தத்தே வேதாந்தம் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே. - 2394

சித்தாந்த வழிநிற்கும் சீடர்களுக்குத் திருவடிப் பேரின்பமாகிய முத்தி கிட்டுதலால் சித்தாந்த நெறி நிற்போர் முத்தி இன்பம் பெற்றவர் ஆவார். சித்தாந்தம், வேதாந்தம் என்ற இந்த இரண்டும் உயர்ந்த பரம்பொருளாகிய சிவத்தைப் பற்றியதாதலால் சித்தாந்தம், வேதாந்தம் எனும் இரண்டுமே சுட்டுவது சிவனின் காட்சியையே எனும் இம்மந்திரக் கருத்து மிக உயர்வானதாகும்.

இக்கலியுகத்தில் சைவம் என்றும், சிவநெறி என்றும், சைவசித்தாந்தம் என்றும், சிவபெருமான் என்றும் சொல்லுவதற்குக் கூச்சப்படுபவர்களையும், தமது சமயத்தின் பெயர் எது

எனத் தெரியாது தடுமாறுபவர்களையும் பரவலாகக் காண்கின்றோம். இவர்கள் திருமூலரின் திருமந்திரத்தைப் படிப்பார்களேயானால் தமது அறியாமையைப் புரிந்துகொண்டு தெளிவு பெறுவர்.

அதுமட்டுமல்ல உங்கள் சமயத்தை அறிய எந்த நூல் இருக்கிறது?

**கிறீத்தவத்தை அறியப் பைபிள் இருக்கிறது;**
**இஸ்லாத்தை அறிய குர்ஆன் இருக்கிறது;**
**பௌத்தத்தை அறியத் திரிபீடகம் இருக்கிறது;**
**சைவத்தை அறிய என்ன இருக்கிறது?**

என்று கேட்போர்க்குச் சைவத்தை அறிய எங்கள் தமிழில் திருமந்திரம் இருக்கிறது படித்துப் பாருங்கள்; சைவத்தின் மேன்மை தானே தெரியும் என்று சொல்லத் தோன்றுகிறது.

சைவத்தை அறிய மிகத் தொன்மையான ஆழமான அகலமான நுண்ணிய கருத்துக் களஞ்சியமாயுள்ள திருமந்திரத்தைப் படித்து வாழ்வின் பயனைப் பெறுவோம்!

(01.04.2011 ஒலிப்பதிவு)

## திருமந்திர யாப்பு

“சைவசமயத்துள் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் செந்தமிழ்ப் பாடல்களால் அறிவுறுத்த எண்ணி திருமூலர்

நாற்சீராட்டி நான்கு கொண்ட கலிவகை யாப்பினால் இத்திருமந்திர மாலையை அருளிச் செய்தார். ஒற்று நீக்கி எழுத்து எண்ணுங்கால் அடிதொறும் பன்னிரண்டு எழுத்தும், ஈற்றடி நேரிசையினைக் கொண்டு தொடங்கியதாயின் பதினோர் எழுத்துப் பெற்றுறு வெண்டளை பிழையாது வருவது இத்திருமந்தி யாப்பாகும்.

செப்பலோசை தழுவிய இக் கலிப்பாவகை திருமூலர் திருமந்திரத்தில் தான் முதன்முதற் காணப்படுகின்றது. எனவே இதனைத் திருமந்திர யாப்பு என வழங்குதல் தகும்”

(சுவாமி விபுலானந்தர் - யாழ்நூல் பக். 231)

உ
சிவமயம்

# அட்டாங்க யோகம்

அட்டாங்க யோகமானது சாதனையினாலே உணரத்தக்கது. அதனை அறிவு பூர்வமாக விளக்குவதோ விளங்குவதோ சாத்தியமாகாது. எனினும் ஓர் அறிமுகச் சுருக்கமாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

நாம் முற்பிறப்புகளில் செய்த புண்ணியத்தின் பேறாகவே இந்த உயர்ந்த மனிதப் பிறப்பு எமக்குக் கிடைத்துள்ளது. இந்தப் பிறப்பினுடைய அருமையை மெய்கண்ட சாத்திரம் சிவஞான சித்தியார்,

**"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்**
**தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்**
**ஊழ்பெறல் அரிது"**

என்கின்றது. செல்வத்தில் மயங்காமல், வறுமையால் வாடாமல், பணிவும் இன்சொல்லும் உடைய சைவராய்ப் பிறத்தல் முன்செய்த புண்ணியப் பேறேயாகும்.

இவ்வித உயர்ந்த புண்ணியப் பிறப்பைப் பெற்ற நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்,

"இந்தச் சரீரம்" எமக்குக் கிடைததது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என உணர்த்துகின்றார்.

நாம் எப்படி இறைவனை வழிபாடு செய்து, முத்தியின்பம் பெறலாம் என்பதை எமது சைவசாத்திரங்கள் ஒன்றுக்கு ஒன்று உயர்வான நான்கு படிநிலைகளில் வைத்து உணர்த்துகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு படிநிலைகள் ஆகும்.

புறச்சரீரத்தினால் இறைவனுக்குத் தொண்டு செய்து வழிபடுவது சரியை என்றும், புறச்சரீரத்தினாலும், அகத்தினாலும் வழிபடுவது கிரியை என்றும், அகத்தினால் (மனத்தினால்) வழிபடுவது யோகம் என்றும், அறிவினால் வழிபடுவது ஞானம் என்றும் சொல்லப்படும்.

இவை ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்தவை என்பதை தாயுமான சுவாமிகள் தனது பராபரக் கண்ணியில்,

**"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்பு, மலர், காய், கனிபோல் அன்றோ பராபரமே"**

சரியையை மொட்டாகவும், கிரியையை மலராகவும், யோகத்தைக் காயாகவும், ஞானத்தைக் கனியாகவும் காட்டுவதைக் கொண்டு இவ்வுண்மையை உணரலாம்.

அண்டம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனைப் பிண்டமாகிய இவ்வுடலுக்குள் கண்டு வழிபட்டு முத்தியின்பத்தைப் பெறுதலே யோக வழிபாடாகும். இதனைத் திருமூலர் சுவாமிகள்,

**"உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்.**
**உடம்பினை இருந்து ஓம்புகின்றேனே"**

என்கின்றார். அப்பர் சுவாமிகள்,

**"தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டுகொண்டேன்"**

என்கின்றார்.

எனவே எமது உடம்பினுக்குள்ளே இறைவனைக் கண்டு பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்குரிய வழியைத் திருமூலர் சுவாமிகள் அனுபவத்தில் கண்டு தனது திருமந்திரத்தில் காட்டுகின்றார். அதனை அட்டாங்கயோகம் என எட்டுப் படிநிலைகளில் வைத்து விளக்குகின்றார். அவை 1) இயமம், 2) நியமம், 3) ஆசனம், 4) பிராணயாமம், 5) பிரத்தியாகாரம், 6) தாரணை, 7) தியானம், 8) சமாதி என்பவையாகும். இவை படிநிலையில் முன்னையது சித்தித்தாலே முறையே பின்னையது. கைகூடும் நிலை ஏற்படும். யோகத்துக்குரிய இந்த எட்டு உறுப்புக்களையும்,

**இயம, நியமமே, எண்ணிலா ஆதனம்,**
**நயமுறு பிராணாயாமம், பிரத்தியாகாரம்,**
**சயமிகு தாரணை, தியானம், சமாதி**
**அயமுறு அட்டாங்க மாவதுமாமே**

எனத் திருமந்திரத்தில் (552) குறிப்பிடுகின்றார்.

**இயமம்:**

இயமம் ஆவது தீயனவற்றைச் செய்யாது ஒழுகுதல். இது ஏனைய யோக உறுப்புகளுக்கு அடித்தளமானது. உடலும் உள்ளமும் துயதாதற்கு இயமம் இன்றியமையாதது. இதனை,

**கொல்லான், பொய்கூறான், களவிலன், எண்குணன்,**
**நல்லான், அடக்கம் உடையான், நடுச்செய்ய**
**வல்லான், பகுந்துண்பான், மாசிலான், கட்டகாமம்**
**இல்லான், இயமத்திடை நின்றானே.** (554)

என்பார்.

இயமநெறி நிற்போன் ஓர் உயிரையும் கொல்லாதவனாயும், பொய் சொல்லாதவனாயும், திருடாதவனாயும், ஆராய்ச்சி உள்ளவனாயும், நல்லவனாயும், பணியுடையவனாயும், நீதி வழுவாதவனாயும், பகிர்ந்து கொடுத்து உண்பவனாயும், குற்றம் இல்லாதவனாயும், மதுவும் காமமும் இல்லாதவனாயும் இருத்தல் வேண்டும். இந்தப் பத்துக் குற்றங்களும் இல்லாது தூய்மையானவனே இயமநெறி நிற்போனாவான்.

**நியமம்**

நியமமானது நல்லனவற்றைச் செய்து ஒழுகுதல், தூய்மை, கருணை, சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, வாய்மை, உறுதியுடையவனாதல், காமம், களவு, கொலை ஆகியவற்றைத்

எனக்காணல் ஆகிய பத்துக் குணங்களையும் உடையவனாயிருத்தலே நியமமாகும். இதனைத் திருமந்திரம்,

**தூய்மை, அருள், ஊண்சுருக்கம், பொறை, செவ்வை**
**வாய்மை, நிலைமை வளர்த்தலே மற்றிவை**
**காமம், களவு, கொலையெனக் காண்பவை**
**நேமி ஈரைந்து நியமத்தன் ஆமே.** (556)

என்கின்றது. இத்துடன் மேலும் பத்துப் புண்ணியச் செயல்கள் செய்பவனாயும் இருத்தல் வேண்டும்.

தவம், செபம், மகிழ்வு, தெய்வநம்பிக்கை, கொடை, சிவவிரதம், முப்பொருள் உண்மை கேட்டல், வேள்வி, சிவபூசை, சோதிதரிசனம் என்பவையே அப்பத்துப் புண்ணிய செயல்களுமாகும்.

**தவம், செபம், சந்தோசம், ஆத்திகம், தானம்,**
**சிவன்தன் விரதமே, சித்தாந்தக் கேள்வி**
**மகம், சிவபூசை, ஒண்மதி, சொல்ஈர் ஐந்து**
**நிவம்பல செய்யின் நியமத்தனாமே.** (557)

என்பது திருமந்திரம். ஆகவே நியமநெறி நிற்போர் மேற்சொன்ன பத்து நற்குணங்களும் பத்து நற்செயல்களும் உடையோராய் இருத்தல் வேண்டும். இந்த இயமமும் நியமமும் உடையோரே மூன்றாவது அங்கமாகிய யோக ஆசனம் செய்யத் தகுதியுடையோராவர். ஏனையோர் செய்வது வெற்று ஆரவாரமேயாகும். உண்மைப் பயன் இலது.

### ஆசனம்

யோகம் செய்வதற்கு முன் யோகியின் உடல் இருக்கவேண்டிய ஆசனமுறை இதுவாகும். இவை 126க்கு மேற்பட்டனவாகும். இவற்றில் எட்டு ஆசனங்கள் முக்கியமானவையாகும். அவை சுவத்திகம், பத்மாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காசனம், கோமுக ஆசனம், வீராசனம், சுகாசனம், சௌத்திராசனம் என்பவையாகும். இவற்றில் பத்மாசனமே மிகப் பொருத்தமானதாகும். விரிவஞ்சி இந்த ஒன்றைப் பற்றிய விளக்கம் மட்டுமே இங்கு தரப்படுகின்றது.

இரண்டு கால்களையும் முயற்சியால் தொடையின் மேல் சேர்த்து, இரண்டு தொடையின் மத்தியிலும், இரண்டு கைகளையும் மலர்ந்த பாவனையில் வைத்து, மூக்கு நுனியில் கண்பார்வையை அசைவற நிறுத்தி உடல் நிமிர்ந்து உட்கார்ந்து மூலவாயுவை எழுப்பி இருத்தல் பத்மாசனம் எனப்படும். (பத்மம் - தாமரை) மலர்ந்த தாமரை போன்று இருத்தலால் பத்மாசனம் எனப்பட்டது. இவ்வாசனத்தில் இருந்துகொண்டு யோகத்தைச் செய்தல் வேண்டும்.

### பிராணாயாமம்

பிராணனை (மூச்சை)க் கட்டுப்படுத்தல் ஆகும். ஆசனம் போன்று பிராணாயாமமும் பலவகையானது. சாதகனுக்குப் பொருத்தமான ஓர் ஆசனத்தில் இருந்துகொண்டு பிராணாயாமம் செய்தல் வேண்டும். இது மூச்சுப் பயிற்சி எனவும் சொல்லப்படும். தக்ககுருவின் வழிகாட்டலுடன்தான் பிராணாயாமம் செய்யப்படவேண்டும்.

இடப்பக்க மூக்குத்துவாரத்தால் பதினாறு மாத்திரைப் பொழுது காற்றை உள் இழுத்து (பூரகம் செய்து) அறுபத்து நான்கு மாத்திரைப் பொழுது காற்றை உள்ளே நிறுத்தி (கும்பகம்) முப்பத்திரண்டு மாத்திரைப் பொழுது வலது மூக்குத் துவாரத்தால் மெல்ல விடுதல் (ரேசகம் செய்தல்) வேண்டும். மாற்றிச் செய்தால் பாதகமாகும்.

**ஏறுதல் பூரகம், ஈரெட்டு வாமத்தால்**
**ஆறுதல் கும்பகம், அறுபத்து நாலதில்**
**ஊறுதல் முப்பத்திரண்டதில் ரேசகம்**
**மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே.** - (568)

ஒரு மடங்கு நேரம் பூரகம் செய்து, நான்கு மடங்கு நேரம் கும்பகம் செய்து, இரண்டு மடங்கு நேரம் ரேசகம் செய்தல் உத்தமம். குருவருளால் இவ்விதம் காற்றை அடக்கியிருந்தால் இளமையோடு, உடல் மென்மையுடையவனாய், யமபயம் இன்றி இருக்கலாம்.

### பிரத்தியாகாரம்

புறத்தே செல்லும் மனத்தை உள்ளே நிறுத்திப் பழகுதலே பிரத்தியாகாரமாம். அட்டாங்க யோகத்தில் முதல் நான்கு அங்கங்களான இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன பூர்வபட்சம் எனவும், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன உத்தரபட்சம் என்றும் கொள்ளப்படும்.

மனத்தை உள்முகமாகத் திருப்பி இருந்தால் பரம்பொருள் ஆகிய சிவனை அகத்தில் உணர்ந்திருக்கலாம். குருமுகமாக இதற்குரிய மந்திரமாய ஹம்ச மந்திரத்தால் மனத்தை உள்ளுக்கிழுத்துப் பழகவேண்டும். மூலாதாரத்திலுள்ள குண்டலினியில் மனத்தைச் செலுத்திப் பின் இதயத்தில் மனத்தை நிறுத்திப் பழகவேண்டும். பின் கண்டத் தானத்தில் நிறுத்திப் பழகிப் பின் சுழுமுனைத் தானமாகிய புருவமத்தியில் நிறுத்த வேண்டும். இவ்விதம் பயின்றால் உச்சித்தானம் ஆகிய பிரமரந்திரத்தில் சிவனொளியைக் காணலாம். சிவனை நாடும் சிந்தையைப் பற்றிக்கொண்டால் இறவாத் தன்மை பெறலாம்.

**கண்டு கண்டுள்ளே கருத்துற வாங்கிடிற்**
**கொண்டு கொண்டுள்ளே குணம்பல காணலாம்**
**பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை**
**இன்று கண்டிங்கே இருக்கலுமாமே.** (578)

என்பது திருமந்திரம்.

### தாரணை

தாரணையாவது தரிக்கச் செய்தல், பிரத்தியாகாரப் பயிற்சியால் உள்ளுக்கிழுத்த மனத்தை நிலைபெறச் செய்தல். இவ்விதம் இருந்தால் பிரமரந்திரத்துக்கு மேல் சிரசில் விளங்கும் சிற்சபையில் ஒலியோடு கூடிய சோதியைத் தாரணையில் காணலாம். மூலாதாரத்தில் உள்ள சிவஒளியை எழுப்பிச் சக்தியோடு சேர்த்து சிரசின் உச்சியிற் கண்டு சாவாது இன்புற்றிருக்கலாம். தத்துவங்கள் எல்லாம் ஒடுங்கித் தற்போதத்தோடு தரித்து நிற்றலே தாரணையாம்.

அரித்த உடலை ஐம்பூதத்தில் வைத்து
பொருத்த ஐம்பூதம் சத்தாதியில் போந்து
தெரித்த மனாதி சத்தாதியில் செல்லல்
தரித்தது தாரணை தற்பரத்தோடே. (597)

## தியானம்

தியானம் என்பது இடைவிடாது நினைந்திருத்தல். இடையீடு பட்டு எண்ணுவது தாரணை, இடையீடுபடாது எண்ணுவது தியானம். இரு கண்களையும் சேர்த்து மனத்தைப் பொருத்தி இருந்தால் சிதாகாசப் பெருவெளியில் சோதிப் பொருளாய சிவத்தைக் காணலாம். உயிருக்கு உயிராக விளங்கும் சிவனைச் சிந்தையுள் வைத்துத் தியானம் செய்யவேண்டும். கண்பார்வையை மூக்கு நடுவில் கீழ்த்துவாரங்கள் உள்ள பக்கத்தில் செலுத்தியிருக்க வேண்டும்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை, மனைக்கு அழிவில்லை
ஓட்டமும் இல்லை, உணர்வில்லை, தானில்லை
தேட்டமும் இல்லை, சிவனவனாமே. (604)

## சமாதி

சமாதியாவது உயிரும் இறைவனும் ஒன்றி நிற்றல். இயமமாகிய தீச்செயல்களை விலக்கி, நியமமாகிய நல்ல செயல்களைச் செய்து, உடலை நிலைப்படுத்தி, யோகம் செய்வதற்குரிய ஆசனத்தில் இருந்து, மூச்சுப்பயிற்சி மூலம் பிராணனைக் கட்டுப்படுத்தி, புறத்தே செல்லும் மனத்தை உள்ளே இழுத்து, நிறுத்தித் தாரணை செய்து, இடைவிடாது சிவனை நினைத்திருத்தல் ஆகிய தியானம் செய்தால் இவ்வுடலுள் உயிர் இறைவனுடன் ஒன்றி நிற்றலாகிய சமாதிநிலை கைகூடும்.

கற்பனையற்றுக் கனல்வழியே சென்று
சிற்பனை யெல்லாம் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதியோடுற்றுத்
தற்பர மாகத் தகுந்தான் சமாதியே. - (628)

உ

சிவமயம்

# புலனடக்கம்

நாம் வாழும் உலக விவகாரங்களை நாம் புலன்களைக் கொண்டு அறிகின்றோம். அறிவது நமது உடல் அல்ல. இந்த உடலுள் இருக்கும் உயிரே அறிகின்றது. இது ஓரறிவு உயிர்கள் முதல் ஆறு அறிவு உயிர்களாகிய மனிதர்வரை எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும். இறைவன் உடலைப் படைக்கும்பொழுதே அந்த உடலுள் இருக்கும் உயிர் அறிவதற்குரிய அறிகருவிகளாகிய பொறிகளையும் உடலில் பொருத்திவிடுகின்றான். அவ்விதம் பொருத்தப்பட்டுள்ள அறிகருவிகளே எமது மெய்வாய்கண்மூக்குச் செவி என்னும் ஐந்து பொறிகளுமாகும். இவற்றின் செயற்பாடுகளையே புலன்கள் என்கின்றோம்.

மெய்யாகிய உடல் மூலம் தொட்டு உணர்கின்றோம். இதனை ஊறு என்போம். வாயாகிய பொறியின் மூலம் சுவைத்து அறிகின்றோம். கண்ணாகிய பொறியின் மூலம் பார்த்தும், மூக்கின் மூலம் மணந்தும், செவியின் மூலம் கேட்டும் அறிகின்றோம். இது எப்படி நிகழ்கிறது என்பது சுவையான செய்தியாகும்.

இந்த உலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களின் பரிணாமத்தால் உருவானது. எமது உடலும் பஞ்சபூதங்களால் ஆனதுதான். ஆதலால்தான் இந்த உலகத்துக்கும் எமது உடலுக்கும் இடைவிடாத நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. உடலில் உள்ள அறிகருவிகளாகிய புலன்கள் எந்நேரமும் உலகுடன் தொடர்புபட்டுக்கொண்டே இருக்கின்றன. அறிதலுக்கென்றே புலன்களுடன் பூதங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

கண் பார்க்கின்றது. அது பார்ப்பதற்கு அதனுடைய புலன் எனும் தன்மாத்திரையாகிய ஒளி உதவுகின்றது. இந்த ஒளி தீயில் இருக்கிறது.

காது கேட்கிறது. அது கேட்பதற்குரிய புலன் எனும் தன்மாத்திரை ஆகிய ஓசை உதவுகிறது. இந்த ஓசை ஆகாயத்தில் இருக்கிறது.

மூக்கு மணந்து அறிகின்றது. மூக்கு மணப்பதற்குரிய தன்மாத்திரையாகிய புலன் எனும் (மணம்) நாற்றம் உதவுகிறது. இந்த நாற்றம் நிலத்தில் இருக்கிறது.

நாக்கு சுவைத்து அறிகிறது. நாக்கு சுவைப்பதற்குரிய புலன் என்னும் சுவை ஆகிய தன்மாத்திரை நீரில் இருக்கிறது.

தோல் தொட்டு அதாவது ஸ்பரிசித்து அறிகிறது. தோல் தொட்டு அறிவதற்குரிய தன்மாத்திரையாகிய புலன் எனும் ஊறு எனும் பரிசம் காற்றில் இருக்கிறது.

எனவே பஞ்சபூதங்களின் மூலக்கூறுகள் எங்கள் உடலில் உள்ள அறிகருவிகளாகிய பொறிபுலன்களில் பொருத்தப்பட்டிருக்கும் நுட்பத்தை நாம் அறிய முடிகிறது.

நிலத்தின் மூலக்கூறு ஆகிய நாற்றம் மூக்கு நுனியிலும், நீரின் மூலக்கூறு ஆகிய சுவை நாவின் நுனியிலும், தீயின் மூலக்கூறு ஆகிய ஒளி கண்ணின் மணியிலும், காற்றின் மூலக்கூறு

ஆகிய பரிசம் தோல்புரையிலும், ஆகாயத்தின் மூலக்கூறு ஆகிய ஒலி எனும் ஓசை செவிப்பறையிலும் பொருத்தப்பட்டு இருப்பதைக் காண்கின்றோம். புலன்களுக்கிடமான பொறிகளைக் கண்களால் காணமுடியும். பொறிகளின் தன்மாத்திரைகளான புலன்களைக் கண்ணால் காணமுடியாது. இவற்றைத் தொகுத்து நோக்கினால்,

நிலத்தின் குணமாகிய நாற்றம் மூக்கு நுனியிலும்
நீரின் குணமாகிய சுவை நாக்கு நுனியிலும்
தீயின் குணமாகிய ஒளி கண்மணியிலும்
காற்றின் குணமாகிய பரிசம் தோல்புரையிலும்
ஆகாயத்தின் குணமாகிய ஒலி செவிப்பறையிலும்

பொருத்தப்பட்டிருப்பதை அறியலாம்.

எனவேதான் எந்நேரமும் புலன்களுக்கும் பூதங்களுக்குமான தொடர்பு இருந்து கொண்டு இருக்கிறது. இத்தொடர்புகளைத் தடை செய்தல்தான் புலனடக்கம் எனப்படுகிறது.

பஞ்சபூதங்களாலான உலகில் பஞ்சபூதங்களாலான உடலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அவற்றின் தொடர்பை இலகுவில் தடை செய்துவிட முடிவதில்லை.

கண் பார்த்துக்கொண்டுதான் இருக்கும். காது கேட்டுக்கொண்டுதான் இருக்கும். மூக்கு மணந்துகொண்டுதான் இருக்கும். நா சுவைத்துக்கொண்டுதான் இருக்கும். இவற்றை அறிகின்ற உயிர் இந்த உடம்பினுள் இருக்கும்வரை இவை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். உயிர் உடலைவிட்டு வெளியேறினால் இவையெல்லாம் வெறும் சடமாகிவிடும். ஆதலால் இவற்றை இயங்காமல் செய்தாலும் இவை சடமாகிவிடும்.

புறக்கருவிகளாகிய மெய்வாய்கண்மூக்குச் செவி என்பவை மட்டுமல்ல அந்தக் கரணங்கள் எனும் அகக்கருவிகளான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவையும் அறிதலைச் செய்து கொண்டிருக்கின்றன. புறக்கருவிகள் கொடுக்கின்ற அறிவை அகக்கருவிகள் செயற்படுத்திக்கொண்டு இருக்கின்றன. எனவேதான் அடக்கம் செய்யும்போது அந்தக் கரணங்களையும் அடக்க வேண்டும். மனம்தான் இவை எல்லாவற்றையும் இணைத்துக் கொண்டிருக்கின்றது.

எனவே புலனடக்கம் பற்றி எமது தத்துவஞானிகள் அருளாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிதல் மூலம் நாம் தெளிவு பெறலாம்.

பெரும் சித்தரான திருமூலர் சுவாமிகள் தனது திருமந்திரத்தில் 2033 ஆவது பாடலில்,

**அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்**
**அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை**
**அஞ்சும் அடக்கில் அசேதனமாம் சென்று**
**அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே.**

என்கிறார்.

அதாவது,

புலனடக்கம் வேண்டும். எனவே புலன்களை அடக்குங்கள் அடக்குங்கள் என்று ஓயாது கூறுகிறவர்கள் அறிவற்ற மூடர்கள். ஐம்புலன்களையும் அடக்கியவர்கள் வானுலகத்

தேவர்களிலும்கூட யாரும் இல்லை. ஐம்புலன்களையும் அடக்கிவிட்டால் பிறகு உடம்பு உணர்வேதும் இல்லாத உணர்ச்சியற்ற மரக்கட்டை சடம்போல ஆகிவிடும் என்பதால் ஐம்புலன்களையும் அடக்காமலே சிவனருளைப் பெறும் ஞானம் நான் பெற்றேன். அடக்கா அறிவு என்பது புலனை அடக்காமலே அப்புலன்களைச் சிவசிந்தனையில் செலுத்தும் ஞானம் கைவரப்பெற்றேன் என்கிறார்.

இதனை இன்னுமோர் மந்திரத்தில் மிக எளிதான உவமைமூலம் விளக்குகின்றார்.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தில் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே. - 2290**

என்பது மந்திரம்.

சிறந்த மரத்தினால் செய்யப்பட்ட அழகிய யானை உருவைப் பார்க்கின்றபோது உண்மையான யானையைப் பார்ப்பது போன்ற உணர்வு உண்டாகின்றதேயன்றி அது செய்யக் காரணமான மரம் பற்றிய நினைவு மனத்தில் வருவதில்லை. யானை உருவமானது மரத்தை மறைத்தது. ஆனால் அது மரம் என்று உணர்ந்து அதன் வகைகளை எண்ண முற்படும்போது யானை மறந்துபோகிறது. மரமே மனதில் நிற்கிறது. யானையானது மரத்தில் மறைந்தது, இதுபோலவே இந்த உலகையும் இதில் இயங்கும் ஐம்பெரும் பூதங்களையும் கண்டு, அதில் லயித்து இருக்கும் ஆன்மாக்களின் அறிவில் இவற்றை எல்லாம் இயக்கியருளும் பரம்பொருள் பற்றிய எண்ணம் உண்டாவதில்லை. இதுவே பார்முதல் பூதம் பரத்தை மறைத்த நிலை. ஆனால் பார்முதல் பூதம் அனைத்துக்கும் காரணமான அவற்றை இயக்கும் பரம்பொருள் நினைவு மனத்தைப் பற்றிவிட்டால் அந்தப் பரநினைவில் பார்முதல் பூதம் மறைந்துபோகும். இதுவே பார்முதல் பூதம் பரத்தில் மறைந்தது என்பதன் விளக்கம். எனவே புலன்களூடான மனத்தை உலக விவகாரங்களில் செலுத்தாமல் பரம்பொருளினிடத்தே செலுத்தவேண்டும். அதுவே புலனடக்கத்தின் வழியாகும்.

இதற்காகவே நம் சைவசமய ஞானிகள் குறிகுணம் எதுவுமில்லாத சொரூப லட்சணமான இறைவனுக்குக் குறிகுணம் உள்ள தடத்த லட்சணத்தை வகுத்துத் தந்துள்ளார்கள். புலன்களை இறையறிவில் செலுத்துவதற்கு உபகாரமான இறைவன் திருவுருவில் புலன்களைச் செலுத்தவேண்டும். அவ்விதம் செலுத்தினால் புலனறிவின் மூலம் இறையருளைப் பெறலாம் என்பதைத் தன் அனுபவத்தில் கண்ட அப்பர் சுவாமிகள் தான் பாடிய திருவங்கமாலை மூலம் எம்மை வழிப்படுத்துகின்றார்.

**"தலையே நீவணங்காய் - தலை**
**மாலை தலைக்கணிந்து**
**தலையாலேபலி தேருந் தலைவனை தலையே"**

**"கண்காள் காண்மின்களோ - கடல்**
**நஞ்சுண்ட கண்டன்றன்னை...",**

**"செவிகாள் கேண்மின்களோ - சிவன்**
**எம்மிறை செம்பவள**
**எரிபோல் மேனிப்பி ரான்றிறம்...",**

"மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை…",

"வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்றன்னை…",

"நெஞ்சே நீநினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை…"

எனப் பாடிப் பாடி பஞ்சப் புலன்களையும் பரம்பொருளிடம் வழிப்படுத்தியதால்,

"தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்."

என்று தான் பெற்ற இன்பத்தைக் கூறுகின்றார்.

இதேபோன்ற ஓர் அனுபவத்தைத் தில்லையிலே சுந்தரர் கண்ட காட்சியைச் சேக்கிழார் சுவாமிகள் காட்டுகிறார். ஐம்புலன்களையும் கண்ணின் வழி இறைவனிடம் செலுத்தி அந்தக்கரணங்கள் நான்கையும் சிந்தையின் வழி செலுத்தி முக்குணங்களையும் சாத்வீகத்தின் வழி செலுத்திப் பெருமான் ஆடும் ஆனந்த நடனத்தைக் கண்டு பேரானந்தம் கொண்ட காட்சியை,

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

என்பதை இப்பாடலில் காண்கின்றோம்.

ஆதலால் புலன்களை அடக்க வேண்டும் அடக்க வேண்டும் என்று அலையாமல் திருமூலர் சுவாமிகள் சொன்ன வழியில் புலன்களை இறைவனிடம் செலுத்தி அப்பர் கண்ட இறையனுபவத்தை, சுந்தரர் கண்ட பேரானந்தத்தைப் புலன்களூடாகப் பெற முயற்சிப்போம். அப்பர் சுவாமிகள் சொற்படி,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதித்து"

இறையின்பம் காண்போம்

உ

சிவமயம்

# திருமூலரின் மறைபொருள் கூற்றுக்கவியின்பம்

புலவர்கள் தாம் செய்யும் கவிதைக்குப் பலவித அழகுகளைப் புனைவார்கள். நேரே பொருளைச் சொல்வதிலும் பார்க்கச் சொல்லும் முறையில் பலவித அழகுகளைப் புனைந்து பாடும்போது அதற்கு ஒரு கவர்ச்சியும் நயமும் இருக்கும். ஒரு குழந்தையைச் சாதாரணமாகப் பார்ப்பதிலும் பார்க்க அழகிய அணிகலன்களைப் பூட்டிப் பட்டுச் சட்டையைப் போட்டுப் பொட்டு வைத்துப் பார்க்கும்போது அந்தக் குழந்தை எவ்வளவு கவர்ச்சியாய் எழிலாய் இருக்குமோ அதே போன்றதுதான் அணிநலம் சேரப்பாடும் கவிதையுமாகும்.

கவிதைக்குரிய அணிநலங்களிலே பலவகையுண்டு. அதை வகைப்படுத்தும் தண்டி அலங்காரம் என்னும் ஒரு தனி இலக்கணநூலே இருக்கின்றது என்பதை எல்லோரும் அறிவர்.

நாம் இங்கு ஒரு புதுவிதமான அணிநலம் பொதிந்த செய்யுள் நயத்தைப் பார்ப்போம். இந்தச் செய்யுளைச் சாதாரணமாகப் படித்துப் பார்க்கும்போது அது ஒரு வேடிக்கையான செய்தியைச் சொல்வதுபோல இருக்கும். ஆழ்ந்து பார்த்தால் அதுவும் புலவன் சொல்லும் விளக்கத்தைப் பார்த்தால் வியப்பு வரும். ஆகா இதற்குள் இத்தனை ஆழமான பொருள் இருக்கிறதா என்ற ஆச்சரியமும் மனநிறைவும் வரும். அந்த அணிதான் மறைபொருள் கூற்று அணி எனப்படும். இதோ ஒரு திருமந்திரப் பாடலைப் பார்ப்போம்,

**வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது**
**புழுதியைத் தோண்டினேன் பூசணிபூத்தது**
**தொழுது கொண்டோடினர் தோட்டக்குடிகள்**
**முழுதும் பழுத்தது வாழைக்கனியே.**

பாடலைப் படிக்க வேடிக்கையாக இருக்கிறதல்லவா இதைச் சற்று விரித்துப் பார்ப்போம்.

ஒரு தோட்டச் சொந்தக்காரன் பயிர் செய்வதற்காகத் தனது தோட்டத்தைக் கொத்துவித்தான். அதற்கெனப் பல தொழிலாளர்களையும் அங்கு குடியமர்த்தினான். அவர்கள் அவன் சொன்னபடி வேலைகளை ஒழுங்காகச் செய்தனர். தோட்டம் கொத்திப் பண்படுத்தி எருவிட்டு நீர்பாய்ச்சவும் ஒழுங்கு செய்யப்பட்டது. தோட்டக்காரன் தோட்டம் முழுவதும் கத்தரி நட முடிவுசெய்தான். அவன் எண்ணப்படி கத்தரி விதைகள் தோட்டம் முழுவதும் நடப்பட்டது. நீர் பாய்ச்சப்பட்டது. சில நாட்களால் தன் தோட்டம் எப்படி இருக்கிறது என்று பார்க்கத் தோட்டக்காரன் அங்கு போனான். தோட்டத்தைப் பார்த்தான். அவனுக்குத் தலை சுற்றியது. காணாததைக் கண்டவனாகத் திகைத்தான்.

கத்தரி விதை நட்ட இடத்தில் பாகல் முளைத்து வளர்ந்து காய்த்திருந்தது. என்ன சங்கதி என்று கத்தரி விதை நட்ட புழுதியைத் தோண்டிப் பார்த்தான். மறுபக்கத்தில் பூசணி முளைத்துப் படர்ந்து பூத்திருந்தது. நாலா பக்கமும் திரும்பிப் பார்த்தான். வாழைகள் குலை தள்ளி நின்றன. அவனுக்கு திகைப்பாய் இருந்தது. தோட்டக் குடிகளைக் கூப்பிட்டு இது என்ன நடந்தது என்று கேட்டான். அவர்கள் ஐயையோ நாம் ஒன்றும் அறியோம். நாம் நீங்கள் தந்த கத்தரி விதையைத்தான் நட்டு நீர் பாய்ச்சினோம். எல்லாம் இப்படி கிடக்கிறது. இதென்ன விபரீதம் நாமறியோம். எங்களை விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டுத் தோட்டத்தை விட்டு ஓடிவிட்டார்கள். அவர்கள் ஓடியபின் தோட்டக்காரன் நாலு பக்கமும் பார்த்தான். வாழைகள் எல்லாம் கனிந்து பழுத்துச் சொரிந்தன. தோட்டக்காரன் எடுத்துச் சுவைத்துச் சுவைத்து உண்டு மகிழ்ந்தான். இந்தக் காட்சிதான் இப்பாடலில் எமக்கு வெளிப்படையாகத் தெரிகிறது.

இதன் உள்ளே என்ன செய்தி சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பாடிய புலவரிடம் கேட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். இதைப் பாடியவர் சாதாரண புலவர் அல்ல, திருமந்திரம் தந்த திருமூலர். இதில் ஞானம் பெறுவதற்குரிய யோகவழிபாட்டின் போது நிகழும் செயல்களையும் பெறும் பயனையும் கூறுகின்றார். அவர் தரும் விளக்கத்தைப் பார்ப்போம்.

வழுதலை என்பது கத்தரி. வழுதலை வித்து என்பதன் மறைபொருள் சிவயோகப் பயிற்சி, பாகல் முளைத்தது என்பதன் மறைபொருள் கசப்பான மனஅதிர்வு என்பது, புழுதியைத் தோண்டினேன் என்பதன் மறைபொருள் மனதை ஆராய்ந்தேன் என்பதாகும். பூசணி பூத்தது என்பதன் மறைபொருள் தலை உச்சியின் உள்ளே மஞ்சள் நிறமான பொன்வண்ண சிவஒளி தெரிந்தது. தோட்டக்குடிகள் என்பது எமது உடலை இயக்கும் கரணங்கள். தொழுது கொண்டோடினர் என்பது செயலற்று அடங்கினர், வாழைக்கனி என்பதன் மறைபொருள் முத்தி சித்தித்தது என்பதாகும்.

இதன் உட்பொருள் நான் மனதை அடக்கி யோகவழிபாட்டில் ஈடுபட்டேன். யோகம் சித்தித்தவுடன் மனதில் இனந்தெரியாத அதிர்வு அலைகள் தோன்றின. யோகத்தைத் தொடர்ந்தேன் சகஸ்ராரம் என்னும் தலை உச்சியின் உள்ளே சிவஒளிக் காட்சி தெரிந்தது, அந்த அளவில் பொறிபுலன்கள் அந்தக்கரணங்கள் எல்லாம் அடங்கின, முத்திப்பேறு கனிந்தது. பேரின்பத்தை நுகர்ந்து இன்புற்று இருந்தேன் என்பதாகும்.

நேரே செய்யுளில் வெளிப்டையாக இந்தக் கருத்தைப் பாடினால் மனதுக்கு இதமாயிருக்காது கவர்ச்சியும் அழகும் இருக்காது. இவ்விதம் தோட்டத்தில் நடக்கும் ஒரு சுவாரஸ்யமான காட்சிபோல மனதில் நடைபெறும் அகக் காட்சியைச் சொல்லும் முறை நயக்கத்தக்கதல்லவா.

உ
சிவமயம்

# திருமூலர் வில்லிசை

சைவப்புலவர் சு. செல்லத்துரை

## காப்பு

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசை பாட வில்லிசை பாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே.

## வேறு

வாணி சரஸ்வதியே சரஸ்வதியே
நல்வாக்குத் தாருமம்மா - அம்மா
நல்வாக்குத் தாருமம்மா - அம்மா
நல்வாக்குத் தாருமம்மா.

வசனம்:- திருமந்திர விழாக்காண வந்திருக்கும்
சிவநேயச் செல்வர்களே
ஆன்றோர்களே சான்றோர்களே
அத்தனை பேர்க்கும் எங்கள்
அன்பான வணக்கம் சொன்னோம்.

உதவி 1 : ஆமா நீங்கள் ஆர் என்று சொல்லவில்லையே

முதல்வர் (பாட்டு) :

நாடிலங்கை மாநகரில்
நல்லதமிழ் பாடவல்லார்
கூடிவளர் இணுவிலிலே
கூடிவந்து கற்பவர்நாம்

உதவி 2 : கூடிவந்து கற்பவர் என்றால், என்ன கற்கிறீர்கள்?

முதல்வர் (பாட்டு) :

சுகவாழ்க்கைப் பேரவையின்
திருமந்திர வகுப்பினிலே
எங்கெங்கோ இருந்துவந்து
இங்குகற்கும் மாணவர்நாம்
திருமூலர் கதை சொல்ல
வில்லெடுத்தோம் கேட்டிடுவீர்.

உதவி 1 : இப்பதான் உங்களைப் பற்றி விளங்கிச்சுது.
திருமந்திரம் தந்த திருமூலர்கதை பாடப்போறீங்கள்.

உதவி 2 :

திருமூலர்கதை சொல்லவந்த நீங்களும்
அதைக் கேட்கவந்த நாங்களும்
உண்மையிலை புண்ணியம் செய்தவங்கள்தான்
பாடுங்கோ கேட்போம்.

முதல்வர் (பாட்டு):-

(நந்தவனத்திலோர் ஆண்டி மெட்டு)
கயிலை மலையிலோர் சித்தன்
காலாதி காலமாய்ச் சிவனை வணங்கி
சிவயோகியாகி மலர்ந்தான் - அந்த
சிவயோகி திருமூலர் ஆனகதை சொல்வோம்.

சுந்தரநாதன் என்பான்பேர்
சிந்தை அடக்கித் தியானம் இருந்தே
அட்டாங்க யோகம் பயின்று - அவன்
அட்டமா சித்தியும் கைவரப் பெற்றான்.

உதவி 1: ஆமா அட்டாங்கயோகம் என்றால் என்ன?

உதவி 2 : எனக்குத் தெரியும்.

உதவி 1:- (பாட்டு)

இயமம் நியமமே எண்ணிலா ஆசனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறு அட்டாங்க மாவதுதானே.

உதவி 2 : எனக்கொன்றும் விளங்கேல்லை
நீங்கள் விளக்கமாகச் சொல்லுங்கோ.

முதல்வர் வசனம்:-

அதாவது
இயமம் என்றால்? - பாவச்செயல்களைச் செய்யாமை
நியமம் என்றால்? - புண்ணியங்களைச் செய்தல்
ஆசனம் என்றால்? - யோகம் செய்வதற்கு இருக்கவேண்டிய இருக்கை
பிராணாயாமம் என்றால்? - மூச்சுப்பயிற்சி
பிரத்தியாகாரம் என்றால்? - மனத்தை உள்ளே நிறுத்திப் பழகுதல்
தாரணை என்றால்? - மனத்தை அடக்குதல்
தியானம் என்றால்? - இடைவிடாமல் இறைவனை நினைத்து இருத்தல்
சமாதியென்றால்? - இறைவனும் உயிரும் ஒன்றாதல்

உதவி 1: அப்பாடா, இப்படிச் செய்ய யாராலை முடியும்?

முதல்வர் : திருமூலரால் முடிந்தது.

உதவி 1: அப்ப இவர்களும் இதெல்லாம் படிக்கிறார்களோ?

முதல்வர் : ஆமாம் அதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறார்கள்.
கதையைக் கேளும் எல்லாம் விளங்கும்.

பாட்டு : **தென்நாட்டில் பொதிகை மலைவாழ்**
**தன் நண்பன் அகத்திய முனிவரைக் காண**
**வான்வழி வருகின்றபோது - அங்கு**
**தான்கண்ட காட்சியால் உள்ளம் பதைத்தான்**

உதவி 1: அதென்ன காட்சி?

உதவி 2 : பாட்டு நல்லாயிருக்குப் பாட்டிலை சொல்லுங்கோ.

முதல்வர் : (வேறு சந்தம்)
**சாத்த னூரில் மாடுமேய்ப்பான்**
**மூலன் என்பான் இறந்ததனால்**
**மாத்துயரம் கொண்ட அந்தப்**
**பசுக்களெல்லாம் கதறினவே.**

வசனம் : சாத்தனூர் என்னும் ஊரிலே பசுக்களை மேய்த்து வந்த இடையன் மூலன் என்பான் விதிவசத்தால் திடீரென வீழ்ந்து இறந்துவிட்டான்.
அதைக் கண்ட பசுக்கள் கதறி அழுதன.

உதவி 2 : ஐயோ பாவம். அப்ப இனிப் பசுக்களின் கதி?

முதல்வர்:- (பாட்டு)

கதறியழும் பசுக்களது
கவலையினைப் போக்கிடவே
மூலன் உடலினுள்ளே யோகி புகுந்தெழுந்தான்
பசுக்கள் துயர்தீர வீட்டினிலே விட்டுவந்தான்

கணவனைக் காத்திருந்த
மூலன் மனைவி வந்து
தாமதமேன் ஆனதையா தவியாய்த் தவித்துவிட்டேன்
வாருமையா வாருமையா வந்துபசி தீருமையா.

வசனம் : என்று வரவேற்றாள். அவரோ, "நான் யாரோ நீ யாரோ எனக்கும் உனக்கும் ஒரு தொடர்புமில்லை" என்று சொல்லிக்கொண்டு திரும்பிப் போனார்.
அவள் கதறி அழுதாள்.

பாட்டு : (சோகம்)

என்கணவா என்துரையே
என்னைவிட்டு எங்கு போறீர்
உன்னை நம்பி வாழ்ந்திருக்கும்
என்னைவிட்டுப் போகலாமோ

வசனம்:-

என்று இரந்து அழுதாள். ஊரவர்கள் வந்து கூடினார்கள். அங்கு வந்த பெரியோர்கள் அவள் நிலையைப் பார்த்து இவர் இனி உனக்கு உதவார். இவர் தெய்வநிலை அடைந்துவிட்டார் என்று சொன்னார்கள்.

சிவயோகியார் தான் முன்பு வைத்துவிட்டுவந்த உடலைத் தேடித் திருவாவடுதுறைக்கு வந்தார். உடலைக் காணவில்லை.

உதவி1: அப்ப அந்த உடல் எங்கு போயிருக்கும்?

முதல்வர்:- (பாட்டு)

**தன்உடலை வைத்துவந்த திருவாவடுதுறையில்**
**அங்கதனைக் காணாமல் திகைத்திருந்த போதினிலே**
**சிவயோகியே இனிநீ மூலன் உடலிலிருந்து**
**ஆகமத்தைத் தமிழினிலே மந்திரமாய் பாடுஎன**

வசனம்: அசரீரி ஒன்று கேட்டது. அதைச் சிந்தித்தார்.

பாட்டு: **சிவபெருமான் வாக்கதெனச் சிந்தை தெளிந்ததனால்**
**திருவாவடுதுறையில் படர்அரச மரத்தடியில்**
**சிவயோகியாகத் தியானத்தில் இருந்துவிட்டார்**
**தவமிருந்து ஆண்டொன்றில் கண்விழித்துப் பாடினார்.**

உதவி: "சிவாகமத்தைத் தமிழில் பாடு" என்ற சிவன் வாக்குப் பலித்ததோ?

முதல்வர்: பலித்தது. முதல் மந்திரம் இறைவணக்கமாக வந்தது.

பாட்டு: **ஒன்றவன்தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்**
**சென்றனன் தானிருந்தான் உணர்ந் தெட்டே.**

என்று பாடினார் இப்படியே சிவயோகத்திலிருந்து ஆண்டுக்கு ஒருமுறை கண்விழித்து ஒருமந்திரம் பாடுவார். இப்படியே மூவாயிரம் ஆண்டு தவம் செய்து மூவாயிரம் மந்திரங்களைப் பாடினார்.

உதவி 2: மூவாயிரம் வருஷம் மூவாயிரம் மந்திரமா?

முதல்வர்: ஆமாம் அப்படியேதான்.

பாட்டு: மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவரை நண்ணுவ ரன்றே.

உதவி 1: இந்தத் திருமந்திரத்தைத்தான் இங்கு எல்லாரும் படிக்கிறீர்களோ? இதைப் படிக்கிறதாலை என்ன பயன்?

முதல்வர்: அதுதான் சொன்னேனே - காலையில் எழுந்தவுடன் கருத்தறிந்து ஓதினால் சிவபெருமான் திருவடி சேரலாம்.

மூவாயிரம் ஆண்டு தவமிருந்து மூவாயிரம் திருமந்திரங்களைப் பாடித்தந்த திருமூலர் ஒரு ஐப்பசிமாத அச்சுவினி நட்சத்திரத்திலே சிவகதி சேர்ந்தார்.

பாட்டு : **திருமூலர் தந்த திருமந்திரத்தை நாம்**
**ஒருமனதாய்க் கற்றிடுவோம்**
**உயர்வுபல கண்டிடுவோம்**
**பிறவிப் பயன் பெறுவோம்**
**பேரின்பம் பெற்றிடுவோம்.**

(வேறு சந்தம்)
**விருப்புடனே வந்திருந்து**
**வில்லுப் பாட்டுக் கேட்டவர்கள்**
**எல்லோருக்கும் எங்களது வணக்கம் - எங்களை**
**மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்.**

வணக்கம் - வணக்கம் - வணக்கம்



உ
சிவமயம்

# திருமூலநாயனார் கதாப்பிரசங்கம்

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

திருச்சிற்றம்பலம்

நமபார்பதி பதயே - அரகர மகாதேவா

பாட்டு:- ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நன்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மெய்யன்பர்களே உங்கள் எலலார்க்கும் என் இனிய வணக்கம்.

நான் இப்போது உங்களுக்குத் திருமூலநாயனார் கதையைக் கதாப் பிரசங்கமாகச் சொல்ல வந்துள்ளேன்.

பாட்டு:- தென்னாட்டில் பொன்னி என்னும்
காவிரிக் கரையினிலே
நன்மக்கள் கூடிவாழும்
சாத்தனூர் எனுமூரில்

திருவாவடுதுறைக்கு அண்மையாகவுள்ள சாத்தனூரிலே மூலன் என்பான் ஒருவன் மாடு மேய்த்து வந்தான். அவன் ஊரிலுள்ளவர்களின் பசுக்களைச் சேர்த்துச் சாய்த்துக் கொண்டுபோய் நல்ல புல்லிலே மேயவிடுவான். பசுக்களைத் தன் பிள்ளைகள் போல நேசிப்பான். சிறு பிள்ளைகளை அழைத்து,

பாட்டு:- அம்மா அம்மா என்றழைக்கும் அருமைப் பசுவைப் பார்தம்பி
இம்மா நிலத்தில் அம்மாபோல் எமக்குத் தெய்வம் பசுதம்பி
எல்லாருக்கும் அமுதம்போல் இனிய பாலைத் தந்திடுமே
எல்லாத் தெய்வமும் கொலுவிருக்கும் இனிய கோயில் பசுதம்பி.

என்று சொல்லிப் பசுக்களைக் கும்பிடச் சொல்வான். இப்படியாகத் தினமும் பசுக்களை மேய்த்து வரும் காலத்தில் ஒருநாள் திடீரென மயக்கமடைந்து

இறந்துவிட்டான். அவன் இறந்ததைக் கண்ட பசுக்கள் எல்லாம் ஓடிவந்து அவனைச் சுற்றிநின்று மணந்து பார்ப்பதும், நக்குவதுமாகக் கலக்கமடைந்தன.

பாட்டு:- வெம்பியே கதறிச் சோர்ந்தும்
மெய் நடுக்குற்று வீழ்ந்தும்
விம்மியே கத்திக் கத்தி
வேதனைக் காற்றாதாகி
மூலனைப் பார்த்துப் பார்த்துத்
தவியாகத் தவித்த தந்தோ.

இவ்விதம் பசுக்கள் மூலனுடலைச் சூழ்ந்து நின்று கதறியபோது கயிலாயத்திலிருந்து பொதியமலைக்குச் சென்ற தவமுனிவர் அதனைக் கண்டார். அவ்விடம் வந்தார். தெய்வப் பசுக்கள் வருந்துவதைக்காண அவரால் தாங்கமுடியவில்லை. எப்படியும் பசுக்களின் துன்பத்தை நீக்கவேண்டும். அதற்குவழி மூலனை எழுப்புவதுதான் எனத் துணிந்தார். அவர் சித்தரல்லவா. தான் பெற்றிருந்த அட்டமா சித்தி மூலம் தன் உடலைப் பாதுகாப்பாக ஓர் இடத்தில் வைத்துவிட்டுத் தன் உயிரை மூலன் உடலுள் புகுத்தினார்.

பாட்டு:- மூலன் உயிர்பெற்றெழுந்தான்
முன்னரைப் போலவே நின்றான்
மூலனைக் கண்ட பசுக்கள்
மோந்து நக்கிக் குதித்து
வாலைத் தூக்கித் துள்ளி
வழமை போலவே மேய்ந்தன.

மாலையானதும் பசுக்கள் தத்தம் வீடுநோக்கிச் சென்றன. அவற்றின் பின்னால் மூலன் உடலிற் சென்ற தவமுனிவர் பசுக்களை அவரவர் வீடுகளிலே சேர்த்தார். ஒரு பசு தொடர்ந்து சென்றது. அதன் வீட்டு வாசலிலே குழந்தையுடன் காத்து நின்ற பெண் ஆவலுடன் அவரை வரவேற்றாள்.

பாட்டு:- இத்தனை தாமதம் ஏன்நாதா - நான்
ஏங்கிப் பதைத்துப் போனேன் நாதா
உள்ளே வாருங்கள் என்நாதா - பசிக்கு
உணவை அருந்துங்கள் என்நாதா

என்று கையிலே பிடிக்கப் போனாள். அவரோ கையை உதறிவிட்டு,

பாட்டு:- நீயாரோ நான்யாரோ பெண்ணே - உன்னை
நானறியேன் என்னை நீயறியாய்போ
வந்தவழியிலே போகிறேன் - இதோ
உன்வழியில் நீயும் போய்விடு

என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவள் கதறி அழுதாள். ஊர்ப் பெரியவர்கள் வந்து பார்த்துவிட்டு அவர் இனி உனக்கு உதவார் என்று சொல்லிப் போய்விட்டார்கள்.

மூலன் உடலில் வந்த தவமுனிவர் தான் தன் உடலை வைத்த இடத்தில் போய்ப் பார்த்தார். உடலைக் காணவில்லை. திகைத்து நின்றார். நான் பசுக்களுக்கு உதவப் போய் என் உடலைப் பறிகொடுத்தேனே சிவனே இது என்ன திருவிளையாடலோ அறியேன் என்று அவ்விடத்தில் நின்ற ஓர் அரச மரத்தின் அடியில் தியானத்தில் இருந்துவிட்டார். அப்போது அவருக்கு ஓர் அசரீரி கேட்டது.

"முனிவனே, உன் உடலை நானே மறைத்தேன். நீ மூலன் உடலில் இருந்து என் சிவாகமங்களைத் தமிழ் மந்திரமாகப்பாடு. இனி நீ திருமூலன் என்றே அழைக்கப்படுவாய்"

அசரீரியைக் கேட்ட முனிவர் அப்படியே தவத்தில் இருந்துவிட்டார். தியானம் கலைந்தவுடன்,

**சிவசிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவசிவ என்றிடத் தேவருமாவர்**
**சிவசிவ என்னச் சிவகதிதானே.**

எனப் பாடத்தொடங்கினார். ஆண்டுக்கொருமுறை கண்விழித்து ஒருமந்திரம் பாடுவார். இப்படியே மூவாயிரம் ஆண்டுகள் மூவாயிரம் திருமந்திரங்களைப் பாடினார். இதனை அவரே,

**மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது.** எனப் பாடினார்.

சைவசமய நூல்களில் காலத்தால் முந்தியது திருமந்திரமாகும். இதில்தான்,

**சைவம் சிவனோடு சம்பந்தமாவது என்றும்**
**சிவனோடொக்கும் தெய்வம்; தேடினும் இல்லை என்றும்**
**யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை என்றும்**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை என்றும்**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடியென்றும்**
**புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு என்றும்**
**வேதமோடாகமம் மெய்யாம் இறைவன்நூல் என்றும்**
**உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன் என்றும்**

சைவவிழுமியங்கள் எல்லாவற்றையும் பாடியுள்ளார். நாமும் திருமந்திரத்தைப் படித்துச் சிவனருள் பெறுவோம்.

**வாழிய வாழியவே திருமந்திரம் வாழிய வாழியவே**
**வாழிய வாழிய வாழிய வாழிய வாழியவே.**

# திருமந்திரம் வினாவிடை – I

01. திருமந்திரத்தை அருளிச் செய்தவர் யார்?
திருமந்திரத்தை அருளிச் செய்தவர் திருமூலநாயனார் ஆவர்.

02. எவ்விடத்திலிருந்து அருளிச் செய்தார்?
திருவாவடுதுறை செம்பொற்தியாகேஸ்வரர் ஆலயத்தின் மேற்குப் புறமாக இருந்த படர் அரசமரத்தின் நிழலில் இருந்து திருமந்திரத்தினை அருளிச் செய்தார்.

03. எவ்வளவு மந்திரங்களை எவ்வளவு காலத்தில் அருளிச் செய்தார்?
மூவாயிரம் மந்திரங்களை மூவாயிரம் ஆண்டுகள் அருளிச் செய்தார்

04. திருமூலர் எனப் பெயர் வரக் காரணம் யாது?
மூலன் என்ற பெயரை உடைய இடையனின் உடலில் புகுந்ததன் காரணத்தால் மூலன் என்ற பெயர் வரக்காரணமாயிற்று.

05. பூர்வீகப் பெயர் யாது?
இவரது பூர்வீகப் பெயர் சுந்தரநாதன் என்பதாகும்.

06. திருமந்திரத்தின் மறுபெயர் என்ன?
தமிழ் ஆகமம், தமிழ் மந்திரம், மூவாயிரம் தமிழ்

07. திருமந்திரம் எத்தனை பகுதிகளைக் (தந்திரம்) கொண்டது?
திருமந்திரம் ஒன்பது தந்திரங்களை கொண்டது

08. அதற்குக் காரணம் யாது?
ஒன்பது ஆகமக் கருத்துக்கள் ஒன்பது தந்திரமாக உள்ளன.

09. திருமந்திரம் சைவத்திருமுறைகளில் எத்தனையாவது?
திருமந்திரம் சைவத்திருமுறைகளில் பத்தாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

10. திருமுறைகளில் இதற்குரிய சிறப்பு யாது?
திருமுறைகளில் சாத்திரமாகவும், தோத்திரமாகவும் கூறப்படுவதே இதற்குரிய சிறப்பாகும்.

11. திருமந்திரத்தினை திருமூலர் பாடினார் என்பதற்கு சான்று கூறுக.
இதனை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் பாடலடி அமைந்துள்ளது.

"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது"

12. திருமந்திரத்தின் நூற்பயன் யாது?
திருமந்திரத்தின் நூற்பயனை திருமூலரே காலை எழுந்து கருத்தறிந்தோதிடின், ஞாலத் தலைவனை நண்ணுவா் எனக் கூறியுள்ளார்.

13. முப்பொருள் உண்மைபற்றி திருமந்திரம் கூறும் தொடக்கத்தைக் கூறுக?
பதி பசு பாசம் எனப்பகர் மூன்றின்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி - தி.மந். 115

14. திருமூலர் வரலாறு எந்தப் புராணத்தில் உள்ளது?
பெரியபுராணத்தில் உள்ளது.

15. திருமூலர் வரலாற்றை திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி நாயனார் எப்படிக் கூறுகின்றார்?
"நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்" எனக் குறிப்பிடுகிறார்.

16. திருமூலர் குருபூசை தினம் எது?
ஐப்பசி மாதத்தில் வரும் அச்சுவினி நட்சத்திர தினமாகும்.

17. திருமந்திரத்தினைத் தமிழ் ஆகமம் என அழைப்பது ஏன்?
ஒன்பது ஆகமங்களின் பொருளை ஒன்பது தந்திரங்களாகத் தமிழில் தந்ததால் தமிழ் ஆகமம் என அழைக்கப்படுகிறது.

18. அட்டாங்க யோகங்கள் எவை?
(1) இயமம், (2) நியமம், (3) ஆதனம், (4) பிரணாயாமம், (5) பிரத்தியாகாரம், (6) தாரணை, (7) தியானம், (8) சமாதி ஆகிய எட்டும்.

19. இயமம் என்றால் என்ன?
இயமம் என்பது செய்யக் கூடாதவற்றைச் செய்யாதிருத்தல் ஆகும். அதாவது கொல்லாமை, பொய் சொல்லாமை, திருடாமை முதலான செயல்களைக் கடைப்பிடித்தல்.

20. நியமம் என்றால் என்ன?
நியமம் என்பது செய்யத்தக்கவற்றை முறைப்படி செய்தல் ஆகும். அதாவது தூயதன்மை, அருள், ஊண்சுருக்கம், பொறுமை, நேர்மை, உண்மை, உறுதியுடைமை ஆகியவற்றை வளர்த்தலும் இயமத்தில் உள்ளவற்றைக் கடைப்பிடித்தலும் நியமங்களாகும்.

21. சைவசமயத்தின் பெயர்வரக் காரணம் யாது என திருமூலர் கூறுகிறார்?
சைவம் சிவனுடன் சம்பந்தமாவது எனத் திருமூலர் கூறுகிறார்.

22. திருமந்திர ஏடுகள் எங்கிருந்து எடுக்கப்பட்டன?
திருமந்திர ஏடுகள் திருவாவடுதுறை கோயில் பலிபீடத்தின் கீழ் இருந்து தோண்டி எடுக்கப்பட்டன.

23. திருமந்திரம் புதைந்து கிடந்த இடத்தைக் காட்டியவர் யார்?
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். திருவாவடுதுறையில் தமிழ் மணக்கிறது எனக் கூறி, புதைக்கப்பட்டிருந்த இடத்தைக் காட்டினார்.

24. திருமூலரின் சமாதி எங்குள்ளது?
திருவாவடுதுறையில் உள்ள ஆலயத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது.

25. சிவனைக் குறிக்க திருமூலர் சொல்லும் பெயர் யாது?
நந்தி என்பதாகும்.

26. திருமந்திரச் செய்யுள் யாப்பு யாது?
கலிப்பா ஆகும்.

27. அதன் விளக்கம் யாது?
நான்கு அடிகளைக் கொண்டதாய் ஒவ்வோர் அடியும் நான்கு சீர்கள் உடையதாய் வெண்டளை தழுவி வருவது.

28. ஒவ்வொரு மாத அச்சுவினி நட்சத்திரத்திலும் திருமூலருக்குக் குருபூசை நடக்கும் இடம் எது?
திருவாவடுதுறை கோமுத்தீஸ்வரர் கோயிலின் வடமேற்கு வீதியில் உள்ள திருமூலர் கோயிலில் நடக்கிறது.

29. திருமந்திரத்தை இசை உரை ஒலிப்பேழையாக வெளியிட்டுவரும் நிறுவனம் எது?
திருமந்திரப் பணி மன்றம் - கொழும்பு

உ

சிவமயம்

# திருமந்திரம் வினாவிடை II

*01. திருமந்திரத்தை திருமூலர் அருளிச்செய்தார் என்பதற்குச் சான்று கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே." - 99

*02. சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"சிவனொடொக்குந் தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப்பர் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே." - 05

*03. மனித உடலே ஆலயம் எனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளித் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் களாமணி விளக்கே." - 1823

*04. எங்கள் சமயம் சிவநெறி - அதை வகுத்தவர் சிவன் எனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே." - 1278

*05. பதிபசுபாசம் அநாதியானவை எனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"பதிபசுபாசம் எனப் பகர் மூன்றின்
பதியினைப் போற் பசுபாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாசம் நிலாவே."

*06. திருமந்திரம் நூற்பயன் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே." - 99

07. கோயிற்பூசைகள் தடைப்பட்டால் என்ன தீமைகள் உண்டாகும் எனக்கூறும் மந்திரத்தைக் கூறுக.

“ஆற்றரு நோய்மிகும் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோயில் களெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.” - 517

08. மானுடர் யாக்கை வடிவு இவையெனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.

“மானுடர் யாக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் யாக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் யாக்கை வடிவு சதாசிவம்
மானுடர் யாக்கை வடிவு திருக்கூத்தே.” - 1726

09. இலங்கையைச் சிவபூமி எனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.

“மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலை வனத்தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுமுனை இவை சிவபூமியே.” - 2747

10. உடம்பினுள் இறைவன் உள்ளான் எனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.

“உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.” - 725

11. அட்டாங்கயோக உறுப்புக்களைக் கூறும் மந்திரத்தைக் கூறுக.

“இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிரணாயாமம் பிரத்தியாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவதுமாமே.” - 552

12. இயமம் இவையெனக்கூறும் மந்திரத்தைக் கூறுக.

“கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லானியமத் திடையில் நின்றானே.” - 554

13. நியமம் இவையெனக் கூறும் மந்திரத்தினைக் கூறுக.

“தூய்மை அருளூண் சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங்களவு கொலையெனக் காண்பவை
நேமியீரைந்து நியமத் தனாமே.” - 556

*14. பக்திவழி பத்தையும் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"தவம், செபம், சந்தோஷம், ஆத்திகம் தானம்
சிவன்தன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகம் சிவபூசை ஒண்மதி ஈரைந்து
நிவம்பல செய்யின் நியமத்தனாமே." - 357

*15. திருவடி ஞானப்பயன் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குஞ்
திருவடி ஞானஞ் சிறைமலம் மீட்குந்
திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே." - 1598

*16. குருவழிபாடு பற்றிக் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே." - 139

*17. திருமூலர் திருவாவடுதுறையில் இருந்தே திருமந்திரம் பாடினார் என்பதற்குச் சான்றாகும் மந்திரத்தைக் கூறுக.*

"சேர்ந்திருந்தேன் சிவமங்கை தன்பங்கனைச்
சேர்ந்திருந்தேன் சிவனாவடு தண்டுறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலிற்
சேர்ந்திருந்தேன் சிவன் நாமங்கள் ஓதியே." - 79

*18. ஒன்றே குலம் எனக் கூறும் மந்திரத்தைக் கூறுக.*

"ஒன்று குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே." - 2104

*19. திருமந்திர காப்புச் செய்யுளைக் கூறுக.*

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே."

*20. திருமந்திர கடவுள் வாழ்த்தைக் கூறுக.*

"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. - 01

உ
சிவமயம்

# திருமந்திரம் பிறந்த கதை
## ஆடலும் பாடலும்

(நந்தவனத்திலோர் ஆண்டி - மெட்டு)

1. கயிலை மலையிலோர் சித்தன்
காலாதி காலமாய்ச் சிவனை நினைந்து
சிவயோகியாகி மலர்ந்தான் - அந்த
சிவயோகி திருமூலர் ஆனகதை சொல்வோம்.

2. சுந்தர நாதன் என்பான் பேர்
சிந்தை அடக்கித் தியானம் இருந்தே
அட்டாங்க யோகம் புரிந்து - அவன்
அட்டமா சித்தியும் கைவரப் பெற்றான்.

1. தென்னாட்டில் பொதிகை மலை வாழ்
தன்நண்பன் அகத்திய முனிவரைக் காண
வான்வழி வருகின்ற போது - அங்கு
தான்கண்ட காட்சியால் உள்ளம் பதைத்தான்

(வேறு சந்தம்)

2. சாத்த னூரில் பசு மேய்ப்பான்
மூல னென்பான் இறந்த தனால்
மாத் துயரம் கொண் டந்தப்
பசுக் கூட்டம் கதறினவே.

1. கதறியழும் பசுக்களது
கவலையினைப் போக்கிடவே
மூலன் உடலினுள் யோகி புகுந்தெழுந்தான்
பசுக்கள் துயர்தீர அவற்றின் மனைவிட்டு வந்தான்.

(வேறு சந்தம்)

2. தன்னுடலை வைத்த திருவாவடு துறையில்
அங்கதனைக் காணாமல் தவித்திருந்த போதினிலே
"சிவயோகியே இனிநீ திருமூலன் உடலிலிருந்து
ஆகமத்தைத் தமிழில் திருமந்திரமாய்ப் பாடு".

1. சிவபெருமான் வாக்கதெனச் சிந்தை தெளிந்ததனால்
திருவாவடுதுறையில் படர்அரச மரத்தின் கீழ்
மூவாயிரமாண்டு மூலன் தவமிருந்து
மூவாயிரம் திருமந்திரத்தைப் பாடினரே.

(வேறு சந்தம்)

1-2 மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

வணக்கம்.

## பத்திவழி பத்து

தவம், செபம், சந்தோஷம், ஆத்திகம், தானம்
சிவன்தன் விரதமே. சித்தாந்தக் கேள்வி
மகம், சிவபூசை, ஒண்மதி ஈர்ஐந்தும்
நிவம் பல செய்யின் நியமத்தன் ஆமே.

மந்திரம் 557

உ
சிவமயம்

# திருமூலர் திருமந்திரப் பொன் மொழிகள்


| | | | |
|---|---|---|---|
| 01. | சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை | - | 05 |
| 02. | நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் | - | 85 |
| 03. | ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை | - | 95 |
| 04. | மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் | - | 99 |
| 05. | தந்திரம் ஒன்பது சார்பு மூவாயிரம் | - | 101 |
| 06. | மந்திர ஆகமச் சொல் மொழிந்தானே | - | 101 |
| 07. | சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர் | - | 125 |
| 08. | தெளிவு குருவின் திருமேனி காண்டல் | - | 139 |
| 09. | கொலையே களவு கள் காமம் பொய் கூறல் மலிவான பாவம் | - | 250 |
| 10. | அந்தணர் ஆவோர் அறு தொழில் பூண்டுள்ளோர் | - | 224 |
| 11. | வேதாந்தம் ஆவது வேட்கை ஒழித்திடல் | - | 229 |
| 12. | நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம் | - | 230 |
| 13. | கல்லா அரசனும் காலனும் நேரொப்பர் | - | 238 |
| 14. | ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின் | - | 250 |
| 15. | பார்த்து இருந்து உண்மின் | - | 250 |
| 16. | யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே | - | 252 |
| 17. | அன்பே சிவம் | - | 270 |
| 18. | சிவன் பணி கேட்பவர் தேவரும் ஆவர் | - | 302 |
| 19. | கல்லாத மூடர் கருத்தறியாரே | - | 317 |
| 20. | நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை | - | 320 |
| 21. | நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை | - | 320 |
| 22. | கள் உண்ணும் மாந்தர் கருத்தறியாரே | - | 328 |
| 23. | முப்புரமாவது மும் மலகாரியம் | - | 343 |
| 24. | உடம்பார் அழியின் உயிரார் அழிவர் | - | 725 |
| 25. | உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன் | - | 725 |
| 26. | அரகர என்ன அறும் பிறப்பு அன்றே | - | 916 |
| 27. | தற்பரம் கண்டுள்ளோர் சைவசித்தாந்தரே | - | 1421 |

| | | | |
|---|---|---|---|
| 28. | சன்மார்க்க சாதனம் சுத்த சைவர்க்கே | - | 1427 |
| 29. | சித்தர் சிவஞானம் சென்று எய்துவோர்களே | - | 1446 |
| 30. | சித்தம் சிவன் அருளால் சிவம் ஆகுமே | - | 1455 |
| 31. | ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை | - | 1467 |
| 32. | ஞான பீடகமே நற்குரு பாதமே | - | 1476 |
| 33. | சைவம் சிவத்துடன் சம்பந்தமாகுதல் | - | 1512 |
| 34. | சிவகதியே கதி | - | 1536 |
| 35. | திருவடி ஞானம் சிவம் ஆக்குவிக்கும் | - | 1598 |
| 36. | திருவடி ஞாகம் சிவலோகம் சேர்க்கும் | - | 1598 |
| 37. | திருவடி ஞானம் சிறை மலம் மீட்கும் | - | 1598 |
| 38. | திருவடி ஞானம் திண் முத்தி சித்தியே | - | 1598 |
| 39. | சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே | - | 1644 |
| 40. | மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம் | - | 1726 |
| 41. | உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் | - | 1823 |
| 42. | புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு | - | 1828 |
| 43. | ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் | - | 2104 |
| 44. | தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை | - | 2355 |
| 45. | வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் | - | 2397 |
| 46. | சித்தர் சிவத்தைக் கண்டவர் | - | 2526 |
| 47. | சிவ சிவ என்றிடத் தீவினை மாளும் | - | 2716 |
| 48. | சிவ சிவ என்னச் சிவகதிதானே | - | 2716 |
| 49. | மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் | - | 3046 |
| 50. | அகத்துக் கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம் | - | 2944 |



உ



திருமந்திரப் பணிமன்றம் – கொழும்பு
இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையின்
அனுசரணையில்

# திருமந்திர விருந்து விழா அழைப்பு

காலம் : நிகழும் விகாரி வருடம் ஆடி மாதம் 26ஆம் நாள்
2019–08–11 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம்

இடம் : இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டபம்

**முன்னிலை :**
**நல்லை ஆதீனம் சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
**சித்தாந்தரத்தினம் சிவஸ்ரீ சி. குமாரராசக் குருக்கள் அவர்கள்**

**தலைவர் :**
**கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்**
(தலைவர், திருமந்திரப் பணிமன்றம் - கொழும்பு)

**இனிய விருந்தினர்கள் :**
**உடுவை. தில்லைநடராசா அவர்கள்**
**செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள்**
**பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் அவர்கள்**
**கலாநிதி கந்தையா சிறீகணேசன் அவர்கள்**

*சிறப்பு நிகழ்ச்சிகள்*

- ★ திருமந்திரக் கலை விருந்து
- ★ "திருமந்திர விருந்து" மலர் வெளியீடு
- ★ திருமந்திர இசை, உரை ஒலிப்பேழை அறிமுகம்
- ★ திருமந்திரச் செல்வர் விருது வழங்கல்

தமிழர்களின் காலத்தால் முந்திய கலைஞானக் களஞ்சியமான திருமூலர் திருமந்திரத்தின் சிறப்பைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்திட வருக வருக என்று உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில்.

**விழாச் சபையினர்**

# நிகழ்ச்சி ஒழுங்கு

காலை 9.00 மணி

கொடிக்கவி பாடி விடைக்கொடி ஏற்றுதல்

மங்கல ஆலத்தி வரவேற்பு

திருமூலர் நாயனாருக்கும் திருமந்திரத்துக்கும் பூசை வழிபாடு :
சிவஸ்ரீ சி. குமாரராசக் குருக்கள் அவர்கள்

மங்கல விளக்கு ஏற்றுதல் : சைவச் சான்றோர்

திருமந்திரப் பணிமன்றக் கீதம் இசைத்தல் :
திருமந்திரக் கலைஞர்கள்

வரவேற்புரை : திருமந்திரச் செல்வர் சி. நடராஜா அவர்கள்
(செயலாளர், இணுவில் சுகவாழ்க்கைப் பேரவை)

ஆசி உரை : நல்லை ஆதீன சுவாமிகள்

தலைமை உரை : தலைவர்

திருமந்திரக் கலை விருந்து - திருமந்திரச் செல்வர்கள்

- ⋆ திருமூலர் புராணம் - புராண படனம்
- ⋆ திருமூலர் கதாப்பிரசங்கம்
- ⋆ விநாடிவினாப் போட்டி
- ⋆ திருமந்திரம் சொல்லல் போட்டி
- ⋆ திருமந்திர அந்தாதிப் போட்டி
- ⋆ வில்லுப்பாட்டு - திருமந்திரம் பிறந்த கதை

சிற்றுரை : **கபாலத்தில் சுரக்கும் அமிர்தங்கள் – திருமந்திர விளக்கம்**
மனவளக்கலைப் பேராசிரியர்
Dr. க. பாலசுப்பிரமணியம் அவர்கள்

திருமந்திர இன்னிசையும் உரையும் : திருமந்திரப் பணி மன்றத்தினர்

*இசை* - சங்கீதவித்துவான் வை. கணேசலிங்கம் அவர்கள் (செயலாளர்)
*உரை* - சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் (தலைவர்)
*மிருதங்கம்* - வித்துவான் வை. வேனிலான் அவர்கள் (உபதலைவர்)
*வயலின்* - வித்துவான் ச. திவாகரன் அவர்கள் (உபதலைவர்)
*மந்திரஇசை* - சங்கீதபூஷணம் த. ஹம்சானந்தி அவர்கள் (உறுப்பினர்)

திருமந்திர விருந்து - 1 மலர் வெளியீட்டுரை :

கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

திருமந்திர இசை உரை ஒலிப்பேழை அறிமுகவுரை :

உடுவை. தில்லை நடராசா சிங்காரம்பிள்ளை அவர்கள்
காப்பாளர், திருமந்திரப் பணிமன்றம் - கொழும்பு

திருமந்திர விருந்து - 1 மலரும், ஒலிப்பேழையும்
முதன்மைப் பிரதி வழங்குதல்.

திருமந்திரச் செல்வர் விருது வழங்கல் உரை :

பேராசிரியர், கலாநிதி இ. விக்கினேஸ்வரன் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)

திருமந்திரச் செல்வர் விருது வழங்கலும்
திருமந்திரக் கலைஞர் கௌரவிப்பும்

மதிப்பீட்டு உரை :

கலாநிதி. கந்தையா சிறீகணேசன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
இணைப்பாளர், ஆங்கில மொழி கற்பித்தல்,
யாழ். பல்கலைக்கழகம்)

மகிழ்வுரை : திருமுறைச் செல்வர் கெ. தவராசா அவர்கள்
(செயலாளர் - விழாச்சபை)

திருமந்திர வணக்கம்

பிற்பகல் 1.00 மணி : மாகேஸ்வர பூசை

விழா ஒழுங்கு - நெறியாள்கை
திரு. ந. ஞானசூரியர் அவர்கள்
திரு. த. தேவிகபாலன் அவர்கள்

மலரும் ஒலிப்பேழையும் மண்டபத்தில் ரூபா 1000.00

# பெரிது உவந்து நன்றி சொன்னோம்

சைவப் பெருநெறி சேர்
தத்துவத்தின் உட்பொருளைத்
தெய்வத் தமிழ்மொழியில்
மந்திரமாய்ப் பெற்றவர்நாம்

பெற்றதமிழ் மந்திரத்தின்
பெரும்பயனை நுகராமல்
வெற்றுநூல் கற்றேநாம்
வீணேநாள் போக்குவதோ

நாளும்நாம் மந்திரத்தின்
நற்பொருளைக் கற்றுணர்ந்து
வாழ்வின்பயன் பெற்றிடுவோம்
வாருமென வரவழைத்து

திருமந்திரத்தை என்றும்
தித்திப்பாய்க் கற்றிடவே
அருமருந்தாய் அமுதமுமாய்
அனைவருக்கும் விருந்தாக்க

இசைவகுத்தும் உரைதொகுத்தும்
இனியகலை வடிவமைத்தும்
திசையுவக்கும் மலர்புனைந்தும்
திவ்ய ஒலிப்பேழைதந்தும்

அரியபெரும் பங்களித்தோர்
அத்தனைபேர் தங்களுக்கும்
பெரிதுவந்து நன்றி சொன்னோம்
போற்றிடுவோம் மந்திரத்தை

**விழாச் சபையினர்**

## சைவப்புலவர் சு. செல்லத்துரையின் நூல்கள்

01. கலைவாணி இசைப்பாடல் - கீதம்
02. சித்திரத் தேரில் சிவகாமி அம்மை - பாடல்
03. வாக்கும் வாழ்வும் - வானொலிப்பேச்சு
04. காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும்
05. வள்ளல் ஏழூர் - சிந்துநடைக்கூத்து
06. ஆனந்த மாலை - பாடல்
07. அண்ணா பொன் ஏடு - வரலாறு
08. வாழ்வாங்கு வாழ்தல் - வானொலிப்பேச்சு
09. அரங்கப்படையல் - முத்தமிழ் நூல்
10. சிவநெறி - ஐரோப்பிய சிவநெறிக்கழகப் பாடநூல்
11. ஐயனார் புராண உரை
12. கல்வளை அந்தாதி - உரைவிளக்கம்
13. பஞ்சபுராணம் - உரை
14. மங்கல மனையறம்
15. மங்கலத் திருமணம்
16. சிவகாமி தமிழ் - கவிதை
17. இன்பத்தமிழ் - வானலையில் வந்தவை
18. வாடாமல்லிகை - வரலாறு
19. பத்தினித் தெய்வம் - நாடகம், வில்லிசை
20. இறந்தபின் எங்கள் நிலை - வினாவிடை
21. நற்சிந்தனைகள் 50 - வானலையில் வந்தவை
22. வில்லிசைப் பாடல்கள்
23. திருமந்திர விருந்து - 1
24. கலையும் வாழ்வும் - நூலாசிரியரைப் பற்றியது

## பண்டிதர் சி. அப்புத்துரையுடன் இணைந்து எழுதியவை

01. தொடக்கும் தொடர்பும்
02. அபரக்கிரியை விளக்கம்
03. பூப்புனித நீராட்டல்
04. திருமணக் கிரியைகள்

ISBN978-624-5150-00-7
9 786245 150007